
# தாமஸ் வந்தார்



க.நா.சுப்ரமண்யம்

# தாமஸ் வந்தார்

## க நா சுப்ரமண்யம்

# பொருளடக்கம்


அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

## க நா சுப்ரமண்யம் (1912 – 1988)

க.நா.சு. எனப்படும் கந்தாடை நாராயணசாமி சுப்ரமண்யம் தஞ்சை வலங்கைமானில் பிறந்தவர். எழுத்தாளராக வாழ்வது என்ற முடிவை இளம் வயதிலேயே தேர்ந்து கொண்டு வாசிப்பிலும் எழுத்திலும் நிறைவடைந்தார்.

க.நா.சு. படைப்புகளில் சர்மாவின் உயில், வாழ்ந்தவர் கெட்டால், ஒரு நாள், பொய்த் தேவு, அசுரகணம், கோதை சிரித்தாள், தாமஸ் வந்தார் முதலான பல நூல்கள் முக்கியமானவை. தமிழ் இலக்கியம் உலக இலக்கியத்துக்கு நிகராக நிற்க வேண்டும் என்ற கவலையில், பல உலக இலக்கியங்களைத் தமிழுக்கு மொழியாக்கம் செய்தார்.

சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, விமர்சனம் முதலான பல துறைகளிலும் தரமாக இயங்கிய க.நா.சு. தன் காலத்துக்கு மேலான பல பரிசோதனை முயற்சிகளைச் செய்திருக்கிறார்.

நவீன இலக்கிய முயற்சிகளுக்கான சங்கமாகச் செயல்பட்ட மணிக்கொடியின் முக்கிய அங்கத்தினர் இவர்.

1986 ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி பரிசு பெற்றார். தமிழக அரசின் விருது, குமாரன் ஆசான் விருது போன்றவற்றால் கௌரவிக்கப்பட்டார். 1988ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி தில்லியில் மறைந்தார்.

## அத்தியாயம் 1

இன்றைக்கு ஆயிரத்துத் தொள்ளாயிரம் அல்லது முப்பது, ஐம்பது நூறு ஆண்டுகள் முன்னோ, பின்னோதான் திருவள்ளுவர் வாழ்ந்தார் என்று நிச்சயமாகச் சொல்ல இயலுமா?

அதெப்படி நிச்சயமாகச் சொல்ல இயலும்? திருவள்ளுவர் என்று ஒரு மனிதர் உயிருடன் வாழ்ந்திருந்தார், அவர் திருக்குறளை எழுதினார், என்பது ஒன்றுதான் நிச்சயமாகத் தெரிகிறதே தவிர, எப்போது, எங்கே வாழ்ந்தார், எப்படி எழுதினார், அவர் என்ன சமயத்தவர், அவர் எப்படிப்பட்ட படிப்புள்ளவர் என்பதெல்லாம் நிச்சயமாகத் தெரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அப்படியும் திருவள்ளுவர் ஆண்டு என்றும், அவர் மைலாப்பூரில் இருந்தார் என்றும், அவருக்கு வாசுகி அம்மையார் என்னும் ஒரு உத்தம ஸ்திரி

மனைவியாக வாய்த்திருந்தார் என்றும், கதை சொல்கிறார்களே... இதெல்லாம்?

வெறும் கதைகளாகத்தான் இருக்க முடியும். ஒன்றும் நிச்சயமாகத் தெரியாத இடத்தில், சமயத்தில், மனம் போனபடி இட்டு நிரப்பிச் சொல்வது என்பது ஒரு மனித யுக்தி; இதில் ஒன்றும் தவறில்லை.

தவறில்லைதான். ஆனால், அது உண்மையாகி விடுமா?

உண்மை என்பதுதான் என்ன? சாதாரணமாக எல்லோரும் ஏற்றுக் கொள்வதையே உண்மை என்று நம்பி விடுவது நமக்கும் நல்லது, பிறருக்கும் நல்லது, சமூகத்துக்கும் நல்லது என்று தோன்றுமானால் ஏற்றுக் கொண்டு விடுகிறோம்.

சரித்திரத்துக்குப் பதிலாகக் கதைகளை ஏற்றுக் கொள்வது இந்திய மரபாக வந்துள்ளது என்றும் தோன்றுகிறது அல்லவா?

சரித்திரம், கதை, புராணம், நாவல் என்பதெல்லாம், எல்லோரும் சௌகரியத்தை அனுசரித்து ஏற்றுக் கொண்ட ஒருவிதமான உண்மை தானே? உண்மை என்று சொல்வதற்குப் பதிலாக, பொய்தானே என்று கேட்கத்தான் வந்தேன். மாற்றிக் கொண்டேன். சரித்திரத்தை உண்மை என்று பூரணமாக நம்புவதும், கதை, புராணம் என்று ஏற்றுக் கொள்வதும் கூட ஒரு மரபுதானே?

அந்த மரபுப்படிப் பார்த்தால், இன்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் – ஐம்பது நூறு ஆண்டுகள் முன் பின்னாகவும் இருந்திருக்கலாமே! திருவள்ளுவர் என்று ஒருவர் மைலாப்பூர் என்கிற பிரதேசத்தில் வசித்தார் என்று ஏற்றுக் கொள்ளலாமே! வேறு எந்த சமயத்தில் வேறு எங்கே அவர் வாழ்ந்தார் என்பது தெரியாத சமயத்தில், இந்த ஆண்டுக் கணக்கையும், இடக் கணக்கையும் ஏற்றுக் கொள்வதில் தவறில்லையே? நிச்சயமாகத் தெரியவில்லை – ஆனால், இப்படியிருக்கலாமோ என்று தோன்றுகிறது என்று திடமாகச் சொல்லலாம்.

திருவள்ளுவர் எந்தக் காலத்தைச் சேர்ந்தவர், எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவில்லை. எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்றாவது தெரிகிறதோ?

அதுவும் இல்லை. ஹிந்துக்களில் சைவர்கள், வைணவர்கள், மற்றும் பல பிரிவினர்கள் மற்றும் ஜைனர்கள், ஏன் தீவிரவாதிகள் கூட அவரைச்

சொந்தம் கொண்டாடுகிறார்கள். ஆனால், மொத்தத்தில் அவர் ஜைனராக இருக்கலாமோ என்று யூகிக்க அதிக இடம் இருப்பதாகத் தோன்றுகிறது.

எப்படி?

திருக்குறளில் முதல் குறளில் வருகிற ஆதிபகவன்", பின்னால் வருகிற "மலர்மிசை ஏகினான் இதை எல்லாம் வைத்து அவர் ஜைனர்தான் என்று பொதுவாக, வையாபுரிப்பிள்ளை முதலியவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாமும் அப்படியே ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் தோன்றுகிறது.

அது மட்டும் போதுமா?

அது மட்டும் இல்லை. திருவள்ளுவரின் பிரபஞ்சத்தில் நீதிக்கு உள்ள பெருமையையும், அஹிம்சை நிலையையும் வைத்தும்கூட அவர் ஜைனர் என்று சொல்லலாம். கொன்ற உயிர்களைச் சாப்பிடுகிற மனிதர்கள் உள்ள வரையில் மிருகங்களைக் கொல்லும் பழக்கம் இருக்கும் என்று ஒரு குறளில் சொல்லுகிறார். அது அந்தக் காலத்து ஜைனர்கள், பௌத்தர்களை மடக்க உபயோகித்த ஒரு வாதம். அதேபோல அவர் ஜைனர்கள் உத்தமமாகக் கருதிய உழவுத் தொழிலை மேன்மையாகக் கருதினார் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. பௌத்த மதத்தைச் சேர்ந்தவரல்ல என்பதை ஒப்புக்கொண்ட பிறகு, பௌத்த தருமத்துக்கும் ஜைன தருமத்துக்கும் பொதுவான பல கருத்துக்களை அவர் ஏற்றுக்கொண்டு விவரித்திருப்பது காரணமாகவும் அவரை ஜைனராகக் கருத இடமிருக்கிறது.

திருவள்ளுவரைக் கீழ்க்குலத்தவராக வருணிக்கும் ஒரு வழக்கம் இருக்கிறதே!

ஜைனராக இருந்தாலும் கீழ்க்குலத்தவராக வருணிப்பதற்கு இடம் இருக்கிறதில்லையா? வள்ளுவர் குலத்தைச் சேர்ந்தவர் என்று நம்பப்படுகிறது. எந்தக் காரணம் கொண்டு என்று தெரியவில்லை.

அவர் நூலில் கிறிஸ்துவக் கருத்துக்கள் சில இடம் பெற்றிருக்கின்றன. அதனால் அவரைக் கிறிஸ்துவராகக் கருதலாம். குறைந்த பட்சம் அவர் கிறிஸ்தவக் கருத்துக்களை அறிந்தவராக இருக்கலாம் என்று எண்ண வேண்டியதாக இருக்கிறது என்று ஜி.யூ.போப் என்பவர் சொன்ன பிறகு கிறிஸ்துவர்கள் சொல்வது வழக்கில் இருந்து வந்திருக்கிறது.

எந்த விதத்தில், எப்படி என்ன காரணத்தினால் அவர் கிறிஸ்துவக் கொள்கைகளை அறிய நேர்ந்திருக்க முடியும்? அந்தக் காலத்தில்

எக்காரணத்தினாலாவது தாழ்ந்த குலத்தவர்களாகக் கருதப்பட்டவர் கள், மதம் மாறுகிற பிரச்னை இருந்ததா?

ஏசு கிறிஸ்துவே தன் உடனடிச் சீடர்களை உலகம் பூராவும் கிறிஸ்துவர்களாக மாற்றும் பணியில் ஈடுபடச் சொல்லிப் பணித்தார் என்பதுதான் கிறிஸ்துவ சரித்திரம். கிறிஸ்துவராக இந்தியர்களை மாற்றும் பணி ஸெயின்ட் தாமஸ் என்பவருக்குத் தரப்பட்டதாக பைபிள் சொல்வதாகச் சொல்கிறார்கள். எந்த ஆதாரத்தில் அப்படிச் சொல்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அப்போஸ்தலர்கள் என்று சொல்லப்பட்ட ஏசுவின் பதினோரு சிஷ்யர்களும் உலகைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு உலகின் பல பகுதிகளிலும் கிறிஸ்துவ நற்செய்தியைப் பரப்ப முயன்றார்கள். இது சரித்திர உண்மையாகவே தெரிகிறது.

அப்படி இந்தியாவுக்கு வந்த பதினோரு அப்போஸ்தலர்களில் ஒருவரான ஸெயின்ட் தாமஸ் என்பவர் திருவள்ளுவரைச் சந்தித்து, அவருக்குக் கிறிஸ்துவக் கொள்கைகளை எடுத்துச் சொல்லியிருக்கவும் கூடுமோ ?

அப்படி நேர்ந்திருக்கக் கூடாது, முடியாது என்று யார் சொல்ல முடியும்? நேர்ந்திருக்கலாமோ என்று எண்ணலாம். அதற்கு மாறாக சில மஹோன்னதமான கிறிஸ்துவக் கருத்துக்கள் திருவள்ளுவருக்குத் தாமாகவே தெரிந்திருக்கலாம் என்றும் வைத்துக் கொள்ளலாம். அப்படி உதித்திருக்க முடியாது என்று யாருமே நிச்சயமாகச் சொல்ல இயலாது.

பின் திருவள்ளுவரும் ஸெயின்ட் தாமஸூம் சந்தித்திருப்பதற்கான சாத்தியக் கூறுகள் என்னென்ன? நம்புவதற்கு ஒரு ஆதாரம் தேவையில்லையா?

தேவைதான். அப்போஸ்தலர் தாமஸ் என்பவர் முதலில் கி.பி. 40 வாக்கில் இந்திய வடமேற்குப் பகுதியில் அரசன் கொண்டாபெர்னஸ் என்பவர் ஆதரவில் கிறிஸ்துவப் பிரச்சாரம் செய்ததாகவும், பின்னர் கொண்டாபெர்னஸ் இறந்தபிறகோ அல்லது முடி துறந்த பிறகோ ஆதரவில்லாமல் அப்பகுதியிலிருந்து வெளியேறி, கேரளாவில் மதப்பிரசாரம் செய்துவிட்டு, கி.பி.50க்குச் சற்று முன்னோ , பின்னோ , மீனவர்களிடையே மதப் பிரச்சாரம் செய்து கொண்டே அந்த மீனவர்கள் படகிலே இந்தியக் கீழ்க்க ரையோரமாக, கி.பி. 52, 54, 55 சமயத்தில் மைலாப்பூர் கடற்கரை வந்தடைந்ததாகவும், அங்கும் பிரசாரம் செய்து பலரைக் கிறிஸ்துவ மதத்துக்கு மாற்றியதாகவும், கடைசியில் 56, 57க்குப் பின்னால், அனேகமாக 62, 63ல் ஒரு பிராமணனால் கொல்லப்பட்டு, உயிர் துறந்து 'மார்டீர்' பதவி பெற்றதாகவும் கிறிஸ்துவர்களிடையே ஒரு மரபுக் கதை பரவலாக வழங்கி வருகிறது.

பிராமணன் அவரைக் கொன்றிருப்பானா என்று கேட்கத் தோன்றலாம் ஒரு சாராருக்கு.

எதிர்ச்சாரர்கள் இன்றுள்ள வேகத்தில் பிராமணன்தான் கொன்றிருப்பான் – மற்ற எல்லோரும் அன்பு வழி வந்தவர்கள் என்று சொல்லலாம். கதை நிஜமா, பொய்யா என்று தெரியாது. ஆனால் பரங்கிமலை (Saint Thomas Mount) – (Saint Thomas Cathedral) ஸெயின்ட் தாமஸ் ஆலயம் முதலியனவெல்லாம் இந்தக் கதை உண்மையென்று நம்பப்பட்டதன் ஆதாரங்களைக் காட்டுகின்றன. அவை இன்று இருப்பதனால், அன்று ஸெயின்ட் தாமஸ் மைலாப்பூர் வந்திருக்கலாமோ என்று எண்ண ஒரு ஆதாரம் ஏற்படுகிறது.

அப்படி ஸெயின்ட் தாமஸ் மைலாப்பூர் வந்து சேர்ந்திருந்தால், திருவள்ளுவர் அவர் பிரசங்கங்களைக் கேட்க வாய்ப்பு ஏற்பட்டு இருக்கலாமோ?

மதமாற்றத்துக்காக ஸெயின்ட் தாமஸ் செய்த பிரசங்கங்களை அவர் கேட்டிருக்கலாம்தான். ஏனெனில் ஸெயின்ட் தாமஸ் போன்ற மதமாற்ற நம்பிக்கையுள்ளவர்களுக்கு ஹிந்துக்களில் அந்தக் காலத்தில் கீழ்க்குலத்தவர்கள் என்று கருதப்பட்டவர்கள் மட்டுமே அகப்பட்டார்கள். செல்வமும், செல்வாக்குமுள்ள மேற்குலத்தோர் சிலரும் அவர் சொல்வதைக் காதில் போட்டுக் கொண்டிருக்கலாம். இவர்கள் தங்கள் மதத்தின் போக்கிலும், நடத்தையிலும் சற்று அசிரத்தையும், குரோதமும் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும். ஆனால், ஒரு விதத்தில் ஞானியாக விளங்கிய திருவள்ளுவர், அவர் காலத்திலேயே அவர் சூழ்நிலையிலேயே, ஒரு வித புகழும், பெருமையும் கூடியவராகத்தானே இருந்திருக்க வேண்டும்? அப்படிப்பட்டவர் ஸெயின்ட் தாமஸைச் சந்திக்கப் போயிருப்பாரா?

பின் எப்படி அவர்கள் சந்தித்திருக்கக் கூடும்?

அதைப் பற்றி யோசிக்கும் முன் இன்னொன்றும் யோசிக்க வேண்டும் நாம். திருவள்ளுவர் ஜைனரோ என்னமோ, நமக்கு நிச்சயமாகத் தெரியாது. ஜைனராக இருக்கலாம் என்று எண்ண இடம் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அவர் மத பூர்வமான ஜைனக் கருத்துக்களை மீறி, மனுஷ்யத்வம், ஒரு சர்வஜன சம்மதமான கொள்கைகளைத் தன் நூல் மூலம் உலகுக்கு உபதேசிக்க முற்பட்டவர். இப்படிப்பட்டவரை உலகம் பூராவும் கிறிஸ்துவக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளச் செய்ய முயலும்

உபதேசியார் சந்தித்திருந்தால், இவர், அவர் மனசை மாற்ற முயற்சி செய்திருப்பார் என்று ஓரளவுக்கு எண்ண இடம் இருக்கிறது இல்லையா?

வேடிக்கையான விஷயம்தான் இது. அவர்கள் இருவரும் மதமாற்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தால், யார் வெற்றி பெற்றிருப்பார்கள்? இதில் வெற்றி, தோல்வி முக்கியமல்ல; அந்தச் சந்திப்பும், அந்தச் சந்திப்பின் விளைவுகளும்தான் முக்கியம் என்று இன்று நமக்குத் தோன்றுகிறது.

இரண்டு பேரும், உரம் உள்ள மனம் பெற்றவர்கள். ஸெயின்ட் தாமஸ், அவநம்பிக்கையுள்ள தாமஸ் என்று பெயர் பெற்று, சந்தேகிக்கும் தாமஸ் என்கிற பெயருடன் இந்தியாவுக்கு அப்போஸ்தலராக வந்தவர். இந்தச் சந்தேகம், அவநம்பிக்கை, ஏசுவின் மறுபிறப்புப் பற்றி மட்டும்தான் அவருக்கு ஏற்பட்டது என்றாலும், அவருக்கென்று ஒரு மனம் இருந்தது என்பது தெரிகிறது. இரண்டு ஞானிகளும் எப்படிச் சந்தித்து என்ன பேசிக்கொண்டிருப்பார்கள் என்று கற்பனையில் காண்பது ஒரு சுவாரசியமான விஷயமாகத் தோன்றுகிறது.

அதெல்லாம் சரி, அவர்கள் எப்படி, எந்தச் சந்தர்ப்பத்தில் சந்தித்திருப்பார்கள்?

வாதூலன் என்று யாரோ ஒருவன் வள்ளுவரின் ஆளாகக் இருந்து அவர்கள் இருவரும் சந்தித்ததையும் பேசிக்கொண்டதையும் பற்றிச் சொல்கிறான். கேட்போமா?

யார் இந்த வாதூலன்?

யாரோ ஒருத்தன். உன்னையும், என்னையும் போல ஒருத்தன். நீயும், நானும் இருந்தோம் என்று ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு யாராவது நம்புவார்களா என்ன? நம்மைப் போல அவன் ஒருத்தன். இந்தக் கதையைச் சொல்லத் தேவைப்படுகிறான்.

அவன் மூலம் உன் பார்வையில்தானே கதை நடக்க வேண்டும்? ஆனால், அதில் தவறென்ன? சொல்லுகிறவன் பார்வையொன்று. படிப்பவன் – கேட்பவன் காண்பவன் பார்வையொன்று. இரண்டுமாகக் கலந்து ஏற்படுகின்ற ஒரு ஒட்டுமொத்தமான பார்வை எல்லாந்தானே உண்டு இதில்?

வாதூலனைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

அவனே சொல்லுவான் – கேட்போம்.

இதையும் நம்ப வேண்டுமா?

எதையும் நம்பத்தான் வேண்டும். உலகில் நாம் நம்ப மறுக்கும், ஆனால், நம்ப வேண்டிய பலப் பல விஷயங்கள் இருக்கின்றன என்பது தெரிந்ததுதானே.

## அத்தியாயம் 2

என் பேர் வாதூலன்.

எனக்கு ஏன் வாதூலன் என்று பேரிட்டு அழைக்கிறார்கள் என்பது பற்றி நான் பல சமயங்களில் சிந்தித்துப் பார்த்ததுண்டு. வாதூலா என்றும், வாதூ என்றும், தம்பி வா என்றுமே சுருக்கி அழைப்பவர்கள் உண்டு .

எந்த உருவத்திலுமே இந்தப் பெயர் எனக்குப் பிடிக்கவில்லை.

வாதூல மகரிஷி என்று ஒருவர் இருந்தார். அவர் வழியில் வந்தவன் நான் என்பது ஒரு காரணம். வாதூல மகரிஷி என்று ஒருவர் உயிருடனிருந்தாரா என்பதே தெரியவில்லை. வேத உபநிஷத மற்றும் ஆதாரபூர்வமான அங்கீகரிக்கப்பட்ட ரிஷி மூலங்கள் எதிலும், அவர் பெயர் தெரிய வருவதாக எனக்குத் தெரியவில்லை . அவர் வம்சத்தில் வந்ததனால் எனக்கு வாதூலன் என்று பெயர் வைத்ததாக என் அப்பா சொல்கிறார். என் அப்பாவுக்கு அப்படியாக அறிவு போதாது என்பது என் நினைப்பு.

பிராமணனாகப் பிறந்தவன் என்று என்னைப் பற்றி இதற்குள் நீங்கள் அனுமானித்திருப்பீர்கள். கோத்திரம், வம்சம் என்பதைப் பெரிதுபடுத்துபவர்கள் பெரும்பாலும் பிராமணர்களே என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

பிறப்பினால் மட்டும் பிராமணத்துவம் வந்து விடுகிறதா என்கிற கேள்வியைப் பல தீர்க்கதரிசிகளும் மற்றவர்களும் கேட்டிருக்கிறார்கள். உபநிஷத் உண்டாக்கிய மகரிஷிகள், சமயவாதிகள், தீர்த்தங்கரர்கள் என்று சொல்லப்படுகிற ஜீன முனிபுங்கவர்கள், கௌதம புத்தர் எல்லோருமே இந்தக் கேள்வியைக் கேட்டுப் பல விதமான பதில்களையும் சொல்லியிருக்கிறார்கள்.

என் அப்பாவை நான் கேட்டேன். இந்தக் கேள்விக்கு அவரிடமிருந்து பதில் வரவில்லை . கோபம்தான் வந்தது.

அவரையே பிராமணர் என்று ஏற்றுக் கொள்ள எனக்கு மனசு வரவில்லை. என்னை எப்படி பிராமணன் என்று ஏற்றுக் கொள்வது?

"ஏண்டா, இப்படி யார், யாருடனோ சேர்ந்து கொண்டு, வேத அப்பியாசம் செய்வதை விட்டு விட்டு, ஊர் சுற்றி மனம் போனபடி அலைகிறாயே? நீ எப்படி உலகில் பெயர் எடுத்து வாழப் போகிறாய்?" என்று அப்பா கேட்கிறார் பதிலுக்கு.

அவர் 'யார் யாரோடோ சுற்றிக்கொண்டு' என்று சொல்லும்போது யாரைச் சுட்டிச் சொல்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

எனக்கு ஒரே ஒரு ஆப்த நண்பன்தான் இந்தச் சுற்று வட்டத்திலேயே இருக்கிறான். அவன் ஏதோ கீழ்க்குலத்தில் பிறந்தவனாம்! என் பெயரை, என் கோத்திரத்துக்காக வைத்த மாதிரி, அவன் பெயரை, அவன் குலத்துக்காக வள்ளுவன் என்று வைத்திருக்கிறார்கள். அவனைத் தவிர, எனக்கு உற்ற நண்பர்கள் வேறு யாரும் இங்கே இல்லை . அவனோடு இருப்பதும், அளவளாவுவதும், மக்கள் முகங்களில் எத்தனை விதம் தான் உண்டு என்று பார்க்கிற மாதிரி பார்த்துக் கொண்டு, சந்தை, கடைத்தெரு, ஜனங்கள் வாழும் இடங்கள் எல்லாம் சுற்றி வருவதும்தான் என்னுடைய முழுநேர அலுவலாக இரண்டு மூன்று ஆண்டுகளாகவே ஏற்பட்டு விட்டது. அதில் நிறைவு காணுகிறேன் நான்.

எப்படி இந்த நட்பும், பிணைப்பும் ஏற்பட்டது என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இவன் – இந்த வள்ளுவன் – என்னைவிட ஐந்தாறு வயது மூத்தவன். எனக்கோ எழுத்து வாசனையே கிடையாது. ஏதோ அப்பா சொல்லிக்கொடுத்த மந்திரங்களையும் , ஸ்லோகங்களை யும் மனப்பாடமாக, சத்தம் தவறாமல் சொல்லுவேன். அர்த்தம் தெரியாது. ஆனால், வள்ளுவனுக்கோ எல்லா ஸ்லோகங்களும், மந்திரங்களும் எப்படியோ தெரிந்திருக்கிறது. அது மட்டுமில்லை. அர்த்தமும் தெரிகிறது. இதை நான் என் அப்பாவிடம் சொன்னபோது என்ன சொன்னார் தெரியுமோ. "பாவி! அவன் சண்டாளன். மந்திரம், சம்ஸ்கிருத ஸ்லோகங்கள் கற்றுக்கொண்டு அதற்கு அர்த்தமும் சொல்கிறானா? அவன் உருப்பட மாட்டான்–அவனோடு சேர்ந்த நீயும் உருப்பட மாட்டாய்'' என்றார்.

எனக்கு என் அப்பா சொல்கிற அர்த்தத்தில் "உருப்பட வேண்டும்" என்கிற ஆசையில்லை. இதைப் பற்றிக் கவலைப்படாமலே நான் வள்ளுவனுடன் சுற்றிக் கொண்டிருக்கிறேன்.

நானும் அவனும் தெருவோடு போகும்போது, தெரிந்தவர்கள் யாராவது பார்த்தால் அவனைத்தான் பிராமணன் என்றும், என்னை அப்பிராமணன் என்றும் கருதுகிறார்கள். இதில் எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. உண்மையில் அறிவினாலும், அடக்கத்தினாலும், மனத்தெம்பினாலும்,

மற்றும் பழக்கங்களினாலும், அவனைத்தான் நானும் பிராமணன் என்று ஏற்றுக் கொள்கிறேன். வள்ளுவன் பிராமணன் என்கிற வார்த்தையைச் சொல்வதில்லை. அந்தணன் என்று சொல்லுவான். குலத்தினால் அல்ல; ஒழுக்கத்தினால் உயர்ந்தவனே அந்தணன் என்று என் நண்பன் சொல்கிறான்.

என் தாத்தா ஒழுக்கங் கெடாதிருந்ததாகச் சொல்கிறார்கள்; அது எனக்குத் தெரியாது. என் அப்பா சகல விதங்களிலும் ஒழுக்கங் கெட்டவர். முக்கியமாக, பிறன் மனை விழைவதில் அவருக்கு ஈடு அவரேதான். பிற பெண்மணிகளை மயக்கும் சக்தி ஒன்று அவரிடம் எப்படியோ இருக்கிறது.

இந்தச் சக்திக்குப் பயப்படாத ஆண்கள் சிலர் – அவரால் வசீகரிக்கப்பட்ட சில பெண்மணிகளின் புருஷர்கள் – அவர் மேல் கை வைத்ததும் உண்டு. என் அப்பாவுடைய அம்மா சாகும் தறுவாயில் கூட என்னைக் கூப்பிட்டு, "உன் அப்பா மாதிரி திரியாதே வாதூலா! அது ஒன்றுதான் நான் வேண்டிக் கொள்வது" என்று சொன்னாள், அவள் மூச்சு நிற்குமுன்.

ஏன் மனிதர்கள் பிறக்கிறார்கள்? ஏன் சாகிறார்கள்?

இந்தக் கேள்வியை நான் என் அப்பாவிடம் கேட்டேன்.

"ஏன் என்று யார் சொல்ல முடியும்? ஏன் என்று ஒரு கேள்வி கேட்கக்கூடாது. விதி: கடவுள் விதித்த விதி" என்றார் அப்பா.

எனக்குத் திருப்தி ஏற்படவில்லை.

இதே கேள்வியை மறுநாள் நான் வள்ளுவனைக் கேட்டேன். "மனிதன் பிறக்கும்போதே, சாவை நோக்கி அடி எடுத்து வைக்க ஆரம்பித்து விடுகிறான். காலம் [ன்] என்று பயனையும், காலத்தையும் நாம் சொல்கிறோம். சாவு எப்போது வந்தாலும், அதைப் பற்றித் துயரப்பட்டுக் கொள்ளாத வகையில் வாழவேண்டும். நீ பிறந்ததனாலான பயன் மற்றவருக்குத் தெரியவேண்டாம். உனக்கும் தெரிய வேண்டும் என்கிற அவசியம் இல்லை ."

இதுவும் ஒருவிதத்தில் திருப்தி தராத பதில்தான். ஏன் என்ற கேள்விக்குப் பதில் இல்லை. ஆனால், சாவு, பிறப்பு இரண்டுக்குமே ஓரளவில் அர்த்தம் தருகிற மாதிரியும் இருந்தது.

"என் அப்பா விதி என்கிறார்'' என்றேன்.

"விதி என்றும் உண்டு. வாழ்வின் தரத்தையும், போக்கையும், சாவின் தரத்தையும், சாவை மீறுகிற தரத்தையும் நிர்ணயிப்பது விதிதான்'' என்றான் வள்ளுவன்.

எனக்கு எப்போதுமே என் நண்பன் வள்ளுவன் வார்த்தைகளால் நிர்மாணிக்கப்பட்ட, வேறு எதுவும் உண்மையல்லாத, ஒரு உலகில் வசிக்கிறான் என்கிற எண்ணம் உண்டு. அவன் பேச ஆரம்பித்தால் வாயில் அழகான வார்த்தைகள் வருகின்றன. எல்லா வார்த்தைகளுமே எனக்கும் தெரிந்தவைதான். சம்ஸ்கிருத ஸ்லோகங்கள், மந்திரங்கள் தவிர வள்ளுவனுக்குத் தமிழ் மொழியும் மிகவும் அழகாக வருகிறது. எங்கே கற்றுக்கொண்டான்? எப்படி? எப்போது? அந்தக் கேள்வியை அவனிடமே கேட்டேன்.

சுலபமாக, கோபித்துக் கொள்ளாமல் பதில் சொன்னான். "என் தாயார் பேசுவதைக் கேட்டுக் கேட்டு எனக்குத் தமிழ் வருகிறது. ஏலாதி நாயனாரிடம் நான் சம்ஸ்கிருதம் கற்றுக் கொண்டேன். சமீப காலமாக மைலாப்பூரில் வசிக்க வந்திருக்கும் யூதவியாபாரி ஸெகியல் இடம் ஹீப்ரு மொழியும் அவர்கள் பழக்க வழக்கங்கள் பற்றியும் விசாரித்துக் கொண்டிருக்கிறேன். ஸெகியல் வீட்டுக்குத்தான் இப்போது போய்க் கொண்டிருக்கிறேன்; நீயும் வேண்டுமானாலும் வா'' என்றான் வள்ளுவன்.

ஸெகியல் வீட்டுக்கா? வள்ளுவனை அந்தப் புதிய மாளிகைக் குள்ளே போக விடுவார்களா, என்ன? நான் வெளியே இருந்து ஆச்சரியத்துடன் பார்த்திருக்கிறேன். பெரிய புதிய மாளிகை. பகலில் எந்நேரமும், போவோரும் வருவோருமாக வாசல் நிறைந்திருக்கும். வாசலில் எப்போதும் நாலைந்து வஸ்தாதுக்கள் காவல் காத்து நிற்கின்றனர். பலதேசத்து விற்பனைப் பொருள்கள், பலவும் விலையுயர்ந்தவை, பலவிதமான மூட்டைகளாக வந்திறங்கிய வண்ணமும் வெளியேறிய வண்ணமும் இருக்கின்றன. ஒரு நாளில் பதினைந்து முதல் முப்பது நாழிகை நேரம் வரையில் கடலில் ஒரு நாள் மிதந்து வந்து, அழகாக வரிசையாக நின்ற படகுகளில் ஒரு பாதியாவது ஸெகியலுக்குச் சொந்தம் என்று சொன்னார்கள். இரண்டு மூன்று பெரிய நங்கூரம் பாய்ச்சி நின்று, விரித்த திரைகள் காற்றுக்கொண்டு உந்த ஓடும் கப்பல்களும் அவருக்குச் சொந்தமெனக் கூறப்பட்டதை நான் கேட்டிருக்கிறேன்.

இத்தனைக்கும் அவர் இந்த ஊருக்கும், வியாபாரத்துக்கும் புதியவர் என்றும், வந்தபோது சொல்ப பணத்துடன்தான் வந்தார் என்றும், வேறு பல தேசங்களில் உள்ள உறவினர்கள், சக ஹீப்ரேயர்கள் உதவியால் பொருள்களை வாங்கி, விற்று லாபம்கண்டு, ஓரிரு ஆண்டுக் குள்ளாகவே

கோடீசுவரராகி விட்டார் என்றும் ஊரில் பெருமளவில் வதந்தி உண்டாகியிருந்தது. வரும்போது அவர் தனியாகத்தான் வந்தார். ஆனால், இப்போது குடும்பத்துடன் இருக்கிறார். அவருக்கு மூன்று பெண்கள், இரண்டு பிள்ளைகள். பெண்கள் மூக்கும், முழியுமாக மிகவும் அழகாக இருக்கிறார்கள் என்றும், பிள்ளைகள் இருவரும் நல்ல உயரமாக, ஹீப்ரேயர்களுக்கே உரிய முகபாவத்துடனும், நடவடிக்கைகளுடனும், ஊரில் முக்கியப் புள்ளிகளாகிக் கொண்டிருக்கின்றனர் என்றும் எனக்குத் தெரியும். ஒரு பிள்ளையின் பெயர் – மூத்தவன் – டேவிட். இரண்டாவது பிள்ளையின் பெயர் தெரியாது. அதேபோல ஒரு பெண்ணின் பெயர் தெரியும். கடைக்குட்டி மிரியம். மிகவும் தைரியசாலி. யாருடன் என்ன பேசுவது என்றில்லாமல் எல்லோருடனும் சுலபமாகப் பேசுவாள். பெண்கள் வண்டியோட்டிப் போவது இந்தப் பகுதியில் சர்வ சாதாரணம். ஊர் வழக்கத்தை ஓட்டின இரண்டு குதிரைகளை ஒரு வண்டியிற் பூட்டி அவள் தனியாக, யாரையோ எங்கிருந்தோ அழைத்து வர ஒருநாள் போகும்போது, மாடன் என்கிற ஊர்ப் போக்கிரி, பதினாறு வயதுப் பெண் தனியாக இருப்பது நல்ல தருணம் என்று கருதி, அவள் வண்டியை மடக்கி நிறுத்தி ஏதோ சொல்லியிருக்கிறான். மிரியமுக்கு அவன் தமிழ் புரிந்ததோ இல்லையோ – எண்ணம் புரிந்தது – குதிரைச் சவுக்காலேயே அவனைக் கீழே வீழ்த்தி – ரத்தக் களறி ஆக்கிவிட்டாள். அதற்காக அவளைப் பாராட்டாதவர்கள் ஊரில் இல்லை. இந்தச் சம்பவத்தினால் ஸெகியலுக்கு அவர் ஐசுவரியத்தினால் ஏற்பட்ட செல்வாக்கை விட அதிகமான செல்வாக்கு ஊராரிடையே ஏற்பட்டு விட்டது. மிரியத்தின் தகப்பன் என்கிற பெயர் பெருமையாக நிலைத்து விட்டது.

முக்கியமாக மிரியம் என்கிற பெண்ணை வெளியே எந்தச் சந்தர்ப்பத்தில் பார்த்தாலும் வாதூலன் என்கிற எனக்கு என் இதயப் படபடப்பு அதிகரிப்பது போல இருக்கும். ஒரு விதத்தில் இறந்துபோன என் பாட்டியைப் பார்ப்பது போலவும் இருக்கும். வள்ளுவனின் மனைவியைப் பார்க்கும்போது வேறுவிதமான ஒரு படபடப்பு ஏற்படுகிறது. வாசுகியை, மிரியமுடன் ஒப்பிட்டு அழகி என்று சொல்ல இயலாது. ஆனால், அவள் முகத்திலும், கண்ணிலும், பேச்சிலும், மனத்திலும், சுற்று வட்டத்திலும் ஒரு அமைதியைப் படைத்துவிடும் திறன் அவளுக்கு உண்டு. அதேபோல, ஆனால், அதற்கு நேர்மாறாக ஒரு ஆரவாரமான படபடப்பைப் படைக்கும் சக்தி மிரியமுக்கு இருப்பதாக எனக்குத் தோன்றியது.

இது எனக்கு மட்டும்தானா தெரியவில்லை. கேட்டால் வள்ளுவன் பதில் தருவான். ஆனால், கேட்க ஏதோ கூச்சமாக இருக்கிறது.

மிரியமுக்கும், எனக்கும் எந்த விதத்திலும் தொடர்போ, சம்பந்தமோ ஏற்படக்கூடிய நிலைமை வராது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. நான் மிகமிக ஏழைப் பிராமணப் பையன். பிராமணன் என்று சொல்பவனுக்கு வேண்டிய கல்வி கூட இல்லாதவன். மிரியம் வேறு தேசத்தவள்; வேறு பழக்க வழக்கங்கள், அநாசாரங்கள் – அதாவது நம் நோக்கில் – உள்ள பெண். தவிர பணக்கார வீட்டுப் பெண். விரலசைத்தால் ஆயிரம் வாலிபர்கள் தொடருவார்கள்.

இருந்தும், இரண்டொரு சந்தர்ப்பங்களில் அவள் என்னைக் கவனித்திருக்கிறாள் என்று நினைக்கவே தோன்றுகிறது. அது எனக்கு நிறைவு தருகிற விஷயமாகவே இருக்கிறது.

அன்று – சமீபத்தில்தான் – வள்ளுவன் என்ன சொன்னான்?

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்றானே – அது உண்மையாக இருக்கலாமோ? என் படபடப்பு அன்புதானா? எனக்கே தெரியவில்லை .

இப்பொழுது மிரியம் இருக்கும் மாளிகைக்குப் போவோம் என்கிறான், என் தோழன். இது ஒரு புது ஆரம்பமாக அமையுமோ? அப்படியும் ஆகலாமோ என்று ஆசை உந்துகிறது.

ஆனாலும் பயமாகவும் இருக்கிறது. ஏதாவதொன்றை நினைத்து எதையாவது செய்து, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, அவமானப்படும்படி நேர்ந்துவிட்டால், என்ன செய்வது, ஓரளவுக்கு பிராமணர்கள் துணிவுள்ளவர்கள்தான். எதற்கும் அஞ்சாமல் செயல் செய்வதில் மனமுள்ளவர்கள்தான். அந்த அளவுக்கு நானும் பிராமணன்தான். துணைக்கு வள்ளுவனும் இருக்கிறான். சமாளித்துக் கொள்ளலாம்.

"நானும் வரலாமா உன்னுடன்" என்று வள்ளுவனைக் கேட்டேன்.

"வரக்கூடாது என்று யார் சொன்னது? அப்படி யாராவது சொன் னால் பார்த்துக்கொள்ளலாம். வரவேண்டும் என்று உனக்கிருந்தால் வா. அன்னியனைப் பற்றி அவநம்பிக்கைப் படுவது நமது ரத்தத்தில் ஊறிப்போன ஒரு விஷயம். ஆனால், ஸெகியல் அன்னியன் அல்ல. சில ஜாதியினருக்கு, அதுவும் குறிப்பாகச் சில மனிதர்களுக்கு, எந்த இடத்தில் எந்த தேச வர்த்தமானத்திலும் அன்னியப்படாமல் இருக்கிற ஒரு தன்மை இருக்கிறது. ஹீப்ரேயர்களுக்கு – அவர்கள் தங்களை யூதர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள் – இந்தத் தன்மை சற்று அதிகமாக இருக்கிறது. ஸெகியலிடம் இது விசேஷமாகக் காணக் கிடக்கிறது" என்றான் வள்ளுவன்.

"நீ அவனோடு பேசிப் பார்த்திருக்கிறாயா?" என்றேன்.

"அவனோடு, அது தவறு; வயதில் ரொம்பப் பெரியவர் அவர். அனுபவம் மிக்கவர். அதனால் அவர் என்றே ஸெகியலை நினைக்க எனக்குத் தோன்றுகிறது. அவரோடு மட்டுமல்ல; அவர் மனைவி, அவர் பெண்கள், பிள்ளைகள், வேலையாட்கள் இவர்களுடனும் பேசியிருக்கிறேன். இந்த ஊரில் எனக்கு உகந்த முதல் நண்பர்களாக, அந்தக் குடும்பத்தினரை நான் நினைக்கிறேன்."

"எனக்கு சங்கோஜமாகத் தான் இருக்கிறது'' என்றேன்.

"ஸெகியலுடைய மூன்றாவது பெண் சென்ற ஞாயிறன்று நான் அவர்கள் வீட்டில் இருந்தபோது உங்கள் நண்பர் என்று என்னை விளித்து உன்னைப் பற்றிக்கூட விசாரித்தாள்."

"அப்படியா? மிரியம் விசாரித்தாளா? உண்மையாகவா? அவர்களில் அந்த அளவுக்குப் பெண்களுக்குச் சுதந்திரம் இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

அவள் பெயரை நீ தெரிந்து வைத்திருக்கிற மாதிரி, உன் பெயரை அவள் தெரிந்து வைத்திருக்கிறாள். ஆனால், அசட்டுத்தனமாக ஏதாவது செய்து விடாதே! அவள் மிகவும் சுதந்திரமான, ஒரு தனி மனமும், துடிப்பும் உள்ள பெண். அவள் பல விஷயங்களைப் பற்றி என்னைக் கேட்கிற கேள்விகளைப் பார்த்தால் அவள் எந்த அளவிற்குப் பல விஷயங்களைப் பற்றி சிந்தித்து வைத்திருக்கிறாள் என்பது தெரியும். சில சமயம் அவள் கேள்விகளுக்கு பதில் சொல்ல, நான் திணறுவதுண்டு'' என்றான் வள்ளுவன்.

"நல்ல படிப்புப் படித்தவளா?"

"படிப்பு என்றில்லை. சிந்திக்கும் திறமை சிலபேருக்கு இருக்கிறது. கல்வி கற்றவர்களுக்கு சில சமயம் மனக்கேணி மேலும் மேலும் ஊறுவதுண்டு. சில சமயம்தான் அது நேருகிறது. பலருக்குக் கல்வி சிந்தனைக்கு முற்றுப்புள்ளியாக அமைந்து விடுகிறது. கல்வியில்லாதவர் கள் சிலர் நன்கு சிந்திக்கவும் அறிந்திருக்கிறார்கள். நான் எழுதப் படிக்கத் தெரியாதிருந்தவன் தானே?" என்று கேட்டான் வள்ளுவன்.

"பல விஷயங்களை நீ கேட்டே அறிந்து கொண்டிருக்கிறாயே! உன்னைக் கல்வியறிவில்லாதவன் என்றும் – எழுதப் படிக்கத் தெரியாவிட்டால்கூட – நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். நான் எழுதப் படிக்கத் தெரியாதவன்தான். ஆனால், எனக்கு ஒன்றும் உன்..."

"உன்னைப் பற்றியே உனக்கு ஒரு அவநம்பிக்கை இருப்பது உன் வளர்ச்சிக்கு ஒரு அஸ்திவாரமாகவே அமையலாமே! கற்றுக்கொள்வது எங்கே, எந்த இடத்தில், யாரிடமிருந்து, என்ன கிடைக்கிறது என்பதைப் பொறுத்தது. காதையும், மனத்தையும், திறந்து வைத்துக் கொள்ள வேண்டும். கண்டதையும், கேட்டதையும் தொடர்ந்து சிந்திக்க வேண்டும், மிரியம் என்கிற அந்தப் பெண் கண்டதும், கேட்டதும் சொல்பமே. ஆனால், சிந்திக்கத் தெரிந்து வைத்திருக்கிறாள்" என்றான் வள்ளுவன்.

"நான் சிந்திக்கத் தெரிந்த ஒருவனுக்கு நண்பனாக இருக்கிறேன். அதுவே ஆபத்தில் முடியும் போல இருக்கிறது. அப்பா நான் கண்டவனுடன் சுற்றுகிறேன், என்கிறார்'' என்றேன்.

"அதோடு நிறுத்திக் கொள்கிறாரே என்று நீ மகிழ்ச்சியடையலாம். மற்ற பிராமணத் தகப்பனார்கள், தடை சொல்லுவதோடு நிறுத்தாமல், உன்னை அடைத்து வைத்துவிட்டு, என் காலையே உடைத்து விடுவார்கள். பிராமணப் பையனைக் கெடுக்கிறவன்'' என்று கூறிக் கலகலவென்று நகைத்தான் வள்ளுவன்.

## அத்தியாயம் 3

நாங்கள் இருவரும் பேசிக்கொண்டே ஸெகியலின் மாளிகையை அடைந்து விட்டோம்.

வள்ளுவனைக் கண்ட – வாசலில் நின்ற உஸ்தாதுக்களின் தலைவன் முன் வந்து "வாங்க அய்யா! அரை நாழிகைக்கு முன்னர் தான் எஜமான், நீங்கள் வந்து விட்டீர்களா என்று விசாரித்தார்" என்று சொன்னான்.

"நான் இன்று வருவதாகத் தெரிவிக்கவில்லையே. என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாரா என்ன?" என்று சொல்லிக் கொண்டே வள்ளுவன், என்னுடன், தலைவனையும் அவன் ஆட்களையும் தாண்டி உள்ளே போனான்.

வாசற்படியைத் தாண்டி பிரம்மாண்டமான கூடத்திற்கு ஏற்றபடியே வாசற்படியும் பூரணமாகத் திறந்து வைத்திருந்ததால் ஒரு நாலு குதிரை வண்டியை உள்ளே ஓட்டுவதற்கேற்ற மாதிரி விசாலமானதாக இருந்தது. ஆனால், அன்று ஏதோ யூதர்களின் விசேஷ தினமானதினால், சுத்தமாக ஆள் நடமாட்டம் இல்லை. வியாபாரம், போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது போலும்.

"இந்த உஸ்தாதுக்கள் நம்ம பக்கத்து ஆட்களில்லை போல இருக்கிறதே!" என்று கேட்டேன்.

"நம்ம பக்கத்து ஆட்களில்லை. யூதர்களின் நாட்டிலிருந்து, அக்கம் பக்கத்துப் பிரதேசத்திலிருந்து அடிமைப்பட்டவர்கள் அவர்கள். அவர்களை விலை கொடுத்து வாங்கி, அவர்களை விடுவித்து, சுதந்திரம் தந்து, தன் வேலைக்காரர்களாக வைத்துக் கொண்டிருக்கிறார் ஸெகியல்" என்றான் வள்ளுவன்.

"இல்லை, அவன் மிகவும் சுத்தமாகத் தமிழ்ப் பேசுகிறானே என்று கேட்டேன்."

"இரண்டு, மூன்று மாதங்களாக அவன் என்னிடம் தமிழ் கற்றுக் கொள்கிறான்'' என்றான் வள்ளுவன்.

"ஓ!", என்றேன். எத்தனை காரியங்கள் தான் இந்த வள்ளுவன் செய்கிறான்! என்னால் ஒரு காரியத்தைப் பூரணமாகச் செய்யக்கூடப் பொழுதிருப்பதாகத் தெரியவில்லையே என்று சிந்தித்தேன். உபயோகமான வாழ்வு வாழ வள்ளுவனிடம் கற்றுக்கொள்ள வேண்டும், இன்றுள்ள உயிர் வாழும் ஒவ்வொருவரும், என்று எனக்குத் தோன்றியது.

அதற்குள் உள்ளறை ஒன்றிலிருந்து எங்கள் வருகையைக் கவனித்துவிட்ட மிரியமே விசாலமான கூடத்தை அழகாகக் கடந்து வந்து, கை கூப்பித் தமிழ் முறையில் வணக்கம் தெரிவித்து விட்டு, "வாங்க! வாங்க! என் தகப்பனார் உங்களோடு பேச வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்" என்றாள்.

மிரியம் நடந்து வருகிற அழகை நான் கவனித்ததுடன், அந்தப் பெரிய கூடத்தில் ஏதேதோ அலுவல்களில் ஈடுபட்டிருந்த மற்றவர்களும் கவனித்தார்கள் என்பதைக் கவனித்தபோது எனக்குச் சற்று பொறாமையாகவே இருந்தது. அவள் எனக்காக மட்டும் நடந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அது சாத்தியமா? சாத்தியமாகாதோ என்றும் உடனேயே தோன்றியது.

"பெரியவர் உனக்காகக் காத்திருக்கிறார் என்றால், வள்ளுவா, நீ மட்டும் போய்ப் பேசி விட்டு வா. நான் இங்கேயே காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"ரகசியமான விஷயம் எதுவும் வள்ளுவருடன் பேசுவதற்காக என் தகப்பனார் காத்திருக்கவில்லை. ஏதோ ஊரிலிருந்து நீளமான கடிதம் வந்தது. ஏதாவது

மத சம்பந்தமான விஷயமாக இருக்கும். எங்க அப்பாவுக்கு மற்றவருடன் பேசுவதைவிட அதிகமான அளவில் வள்ளுவருடன் தரும, மத சம்பந்தமான விஷயங்களில் பேசப் பிடிக்கும். எனக்கே வள்ளுவரின் சில கொள்கைகளாவது பிடிக்கின்றன" என்று சொல்லிவிட்டு சிரித்தபடியே. போன வாரம் நாம் பேசிக்கொண்டிருந் தோமே, உணவுப் பழக்கங்கள் பற்றி நான் உங்களைப் போலவே சைவ உணவு மட்டும்தான் அருந்துவது என்று தீர்மானித்துவிட்டேன்."

"என் நண்பன் எப்பவுமே சைவம்தான்" என்றான் வள்ளுவன்.

அதைப் பற்றி எனக்கென்ன என்று கேட்பது போல என்னை நிமிர்ந்து பார்த்தாள் மிரியம். "என் அப்பாவும், அம்மாவும் பரிஹாஸம் செய்கிறார்கள். சைவ உணவு மட்டும் சாப்பிட்டு வந்தேனானால் என் துடுக்குத்தனமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும் என்கிறான் என் அண்ணா ."

"துடுக்குத்தனம் இல்லாமல் மிரியம் ஏது?'' என்றான் வள்ளுவன்.

மிரியமும் கலகலவென்று அதை ஆமோதிப்பதுபோல நகைத்தாள். பின்னர், "உங்கள் நண்பர் ஊமையா? ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே!" என்றாள்.

"அவன் என்னைப் போல வார்த்தை வீரனில்லை" என்றான் வள்ளுவன்.

"இல்லை. குதிரைச் சவுக்கு எங்காவது கைக்கெட்டக்கூடிய தூரத்தில் இருக்கப் போகிறதே என்று பயமாக இருந்தது!" என்றேன்.

"தப்பான எண்ணங்களை வளர்த்துக்கொண்டு வந்தால் குதிரைச் சவுக்குக்கும் பயப்பட வேண்டியதுதான்'' என்றாள் மிரியம் தைரியமாக, என்னை நேரே ஊடுருவிப் பார்த்துக்கொண்டே.

இந்தப் பெண் பொல்லாதவள்தான். ஜாக்கிரதையாக இருந்து கொள்ளவேண்டும் என்று எண்ணினேன். பிராமணப் பையனுக்கு – என்னைப் பையன் என்று எண்ணுவது தவறுதான் இருந்தாலும் துணிவு சில சமயங்களில், சில விஷயங்களில் தான் வரும்.

மிரியம் முன்னே செல்ல, வள்ளுவனும் நானும் அவளைப் பின் தொடர்ந்தோம். வலது பக்கத்துக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்ற மிரியத்தைப் பின்தொடர்ந்து சச்சதுரமான வடிவத்தில் இருந்த ஒரு விசாலமான அறையை அடைந்தோம். அறையின் மூன்று பக்கங்களிலும் சுவரையொட்டி மரத்தாலான விசுப் பலகைகள் போடப்பட்டிருந்தன. நல்ல

தேக்கு மரத்தாலானவை. வெள்ளியிலான தாமரைப் பூக்கள் நான்கு பக்கங்களிலும் விசுப் பலகையை அலங்கரித்தன. நாலாவது பக்கத்தில் சுவரையொட்டி விசு பலகைகளைப் போலவே ஒரு முழ உயரமிருந்த ஒரு பலகை போடப்பட்டிருந்தது. பலகையிலோ, விசுப் பலகைகளிலோ, யாருமில்லை .

"அப்பா இங்கேதான் உட்கார்ந்திருந்தார். உள்ளே போயிருப்பார். நான் போய்க் கூட்டிக்கொண்டு வருகிறேன். நீங்கள் இருவரும் உட்கார்ந்திருங்கள்'' என்று சொல்லிவிட்டுப் போனாள் மிரியம்.

"தமிழுக்கே அவள் பேசும்போது அழகு கூடுகிற மாதிரி எனக்குத் தோன்றுகிறது," என்றேன் நான்

"நீ கல்யாணமாகாதவன். இப்படியெல்லாம் பேசினால் வாசுகி ஏன் என்று கேட்க ஆரம்பித்து விடுவாளே!'' என்றான் வள்ளுவன்.

"அண்ணியைப் போல மிரியம் கூட ஆக முடியாது," என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போது, சற்றும் நான் எதிர்பாராத விதமாக வாசுகியே உள்ளே வந்து விட்டார். அவருடன் பேசிக்கொண்டு வந்தது மிரியத்தின் மூத்த சகோதரிகளில் ஒருத்தராகத்தான் இருக்க வேண்டும்.

"மிரியத்துக்கும் அவள் அண்ணாவுக்கும் தமிழ்ச் சொல்லித் தர வந்தவளை– உங்களைக் கூட்டிவரச் சொன்னார் பெரியவர். பாதிப் பாடத்தில் விட்டு விட்டுக் கிளம்பினேன். நீங்களே வந்து விட்டீர்கள். நல்லதாகப் போச்சு'' என்றார் வாசுகி.

"என்ன பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாய்?" என்று விசாரித்தான் வள்ளுவன்.

"ஏதோ எனக்குத் தெரிந்தது!" என்று எளிமையாகப் பதில் சொன்னார் வாசுகி,

"வாசுகிக்குத்தான் நீங்கள் உங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லித் தந்திருக்கிறீர்களே! தனக்குத் தெரிந்ததை நன்றாகவும் எடுத்துச் சொல்லத் தெரிகிறது வாசுகிக்கு. இந்தச் தேசத்திலே கல்வி என்பதும் அதற்கும் அப்பால் ஞானம் என்பதும் சர்வ சாதாரணமாக, எதிர்பாராத இடங்களிலெல்லாம் கிடைக்கிறது" என்றார் வாசுகியுடன் வந்த அம்மையார்.

அம்மையார் என்றுதான் சொல்ல வேண்டும், வாசுகி அண்ணியாரைவிட இரண்டு, மூன்று வயதாவது மூத்தவராக இருப்பார். உடம்பில், வதனத்தில், உருவத்தில் தாய்மைக் களை தெரிந்தது.

நான் சொன்னேன். இருந்தும் வள்ளுவனும் அண்ணியும் கல்வி கற்கத் தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட குலத்தைச் சேர்ந்தவர்கள்." அப்படிச் சொன்ன பிறகு ஏன் அப்படிச் சொன்னோம் என்றும் தோன்றியது. ஆனால், சொல்லியாகி விட்டது. நாக்கைக் கடித்துக் கொண்டு பயனில்லை.

அந்த அம்மையார் சொன்னார் "அதுவும் ஒரு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. ஞானம் மிகுந்த இந்த பூமியிலே ஏன் மக்களை இப்படி ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வு கற்பித்துக்கொண்டு, பரஸ்பரம் அவநம்பிக்கையுடன் வாழ்கிறார்கள் என்றும் தெரிய வில்லை .'' பின்னர், வாசுகி அண்ணியின் பக்கம் திரும்பி, "வா, நாம் உள்ளே போகலாம்'' என்றாள்.

ஆனால், வாசுகி அண்ணி, ''நான் இன்னொரு நாள் வருகிறேன். இவரும் இங்கு வந்து விட்டார். எப்போ வீடு திரும்புவாரென்று தெரியாது! வீட்டிலே அவர் அப்பாவும் இருக்க மாட்டார். அம்மா மட்டும் தனியாக அல்லாடிக் கொண்டிருப்பார்கள். நான் போய்விட்டுப் பின்னர் வருகிறேன். தினமும்தான் வருகிறேனே!'' என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டார். அந்த அம்மையாரும் வெளியே போன பின் வள்ளுவன் சொன்னான்: ''மிரியத்தின் மூத்த சகோதரி இந்த அம்மையார். ஹெப்சிபா என்று பெயர். விதவை."

"பாவம்!'' என்றேன்.

"பாவம் என்றும் சொல்வதற்கில்லை. நான் அறிந்த வரையில் அவள் புருஷன், கெட்ட வழிகளில் சென்று அவளை மிகவும் துன்புறுத்திக் கொண்டிருந்தானாம். இரண்டு குழந்தைகள் வேறு இருக்கின்றன, ஒரு பெண்ணும், ஒரு பையனும். ஒரு விதத்தில் அவன் போனது நல்லது என்றும் சொல்லலாம்.''

"இருந்தாலும்..."

''மனிதன் வாழ்வில் எதுவும் நிச்சயமாகச் சொல்ல முடியாதுதான். நல்லது என்று நாம் நினைப்பது நல்லதாகவே இல்லாமல் இருக்கலாம், கெட்டது என்பதும் முழுவதும் கெட்டதாக இருப்பதும் இல்லை. இரண்டும் எல்லாக் கணிப்பிலும் கலந்த கட்டிதான்."

"இவர்களில் – அதாவது யூதர்களில் – விதவா விவாகம் கிடையாதோ?"

''உண்டு என்று தான் சொல்கிறார்கள்." என்றான் வள்ளுவன். "இருந்தும் முதல் கசப்பான அனுபவம் ஏற்பட்டபின் மீண்டும் மணம் செய்து கொள்கிற

துணிவு வரவில்லையோ – அல்லது, இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்ட பிறகு இனியும் திருமணம் எதற்கு என்றும் தீர்மானித்திருக்கலாம்!"

வள்ளுவனையே கவனித்துக் கொண்டிருந்ததில் உள்ளே முப்பது, முப்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய ஒரு நபர் வந்ததை நான் கவனிக்கவில்லை . அருகில் வந்து, "அப்பா வரவில்லையா? உங்களுக்காகத்தானே காத்திருந்தார். நீங்கள் வந்து நேரமாகிறதா?", என்று கேட்டான் அவன்.

"வரட்டும், காத்திருக்கலாம். எங்களுக்கு அவசரம் எதுவும் இல்லை . உங்க அப்பாவைப் பார்க்கத்தான் வந்திருக்கிறோம்'' என்று சொல்லிவிட்டு, "இவர் பெயர் மாத்யூ. பெரியவருடைய மூத்த பிள்ளை . வியாபாரத்திற்கெல்லாம் வாரிசு. ஒரு கணக்கு பார்ப்பதில் – அதுவும் மனதிற்குள்ளே க்ஷணத்தில் பார்ப்பதில் மிக மிக நிபுணர்,'' என்று அவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தான். வள்ளுவன், பிறகு, "இவன் என் நண்பன். வாதூலன் என்று பெயர்'' என்று என்னையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

"இவரைப் பற்றி – எங்கள் நண்பன் என்பதுடன், சுகஜீவி; பிராமணோத்தமர் என்றும் எனக்குத் தெரியும். இவரைப் பற்றி மிரியம் நிறையச் சொல்லியிருக்கிறாள்!" என்றான் மாத்யூ.

'இதேதடா வம்பாக இருக்கிறது' என்று எனக்குத் தோன்றியது. மிரியம் என்னைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறாளாமே! அப்படி என்ன தெரிய வந்து அவள் என்ன சொல்லியிருக்கக்கூடும்?

"பிராமணோத்தமன் இல்லை. பிராமணன் அதமன் என்று வேண்டுமானால் சொல்லலாம். சுகஜீவனம் என்றும் சொல்ல முடியாது! ஒன்றும் இல்லாதவன் எப்படி சுகஜீவனம் செய்ய முடியும்? வள்ளுவனுக்கு நண்பனாக இருப்பதை என் பாக்கியமாகக் கருதுகிறேன். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல் அவன் தோழமையினால் எனக்கும் இந்த மாதிரி உங்கள் மாளிகைக்குள் வருவதற்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறது."

"தெரிகிறது" என்றான் மாத்யூ கம்பீரமாக. எந்த அர்த்தத்தில் அப்படிச் சொன்னான் என்பதை என்னால் அனுமானிக்க முடியவில்லை. "எனக்கும் வள்ளுவன் நண்பர்தான். அதனாலேயே தங்களுக்கும் எனக்கும் ஒரு பிணைப்பு இருப்பதாகக் கருதலா மில்லையா? தவிர வாழ்க்கையில் எப்போதுமே லாப நஷ்டக் கணக்கை மட்டும் பார்த்துக்கொண்டு காலம் தள்ள இயலாது. வேறு ஒரு பிடிப்பும் வேண்டியதாக இருக்கிறது.

எங்கப்பாவுக்கு மதம், பழைய பழக்கவழக்கங்கள் என்கிற பிடிப்பு இருக்கிறது. எனக்கு...."

"உனக்கு இந்தப் பிராந்தியத்து ஜனங்களின் பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும், அவர்களில் ஒருவனாக வேண்டும் என்று ஒரு பிடிப்பு இருக்கிறது. அது பற்றி உன் அப்பா கவலையுறுகிறார் என்றும் உனக்குத்தெரியும். அதேபோலத்தான் இந்த வாதூலனும். அவனுக்கு பிராமணர்களைத் தவிர மற்றவர்களிடமெல்லாம் பிடிப்பு இருக்கிறது. அவன் அப்பா அவன் பிராமணத்துவத்தை இழந்து விடுவானோ என்று கவலைப்படுகிறார்" என்றான் வள்ளுவன்.

"பொருளீட்டுவது மட்டும் போதவில்லை; திருப்தி ஏற்படு வதில்லையே!"

"ஏற்றுக் கொள்கிறேன். எதுவுமே தனியாகத் திருப்தி தருவதில்லை . எல்லாமே ஒரு அளவில் அதன் அளவில் இடம்பெறுகிற மாதிரி இருந்தால்தான் திருப்தி ஏற்படுகிறது. பொருள் வேண்டும். பொருள் சம்பாதிப்பதை நியாயமான, தருமமான வழிகளில் செய்தால் அதனால் ஒரு மன நிறைவு ஏற்படுகிறது. தருமமான முறைகளில் சம்பாதித்தால் மன நிறைவுடன், மோட்சமும் கிடைக்கும் என்று இங்கு நம்புகிறோம். ஆனால், மோட்சம், நிறைவு எல்லாம் வேண்டுமானால் அருள் வேண்டும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. அருளில்லாதார்க்கு அதேபோல் அவ்வுலகம் இல்லை" என்று முடித்தான் வள்ளுவன்.

பொருளைத் தேடித் தேடிப் பெறாதவர்களும் இருக்கலாம். அருள் பற்றியும் அப்படித்தான். இரண்டுமே தேடாமலே சில சமயம் இருந்து விடுவதுமுண்டு" என்றான் மாத்யூ.

அவன் ஒரு புதிர்ப் பேர்வழி என்று தோன்றியது எனக்கு. "இப்படித் தேடியலைவது பூர்வ ஜன்மக் கர்மாக்களின் விளைவு என்று ஜைனர்கள் கருதுகிறார்கள்" என்றான் திருவள்ளுவன்.

"திருவள்ளுவன் ஜைனனாகத்தான் பிறந்தான். ஆனால், அவன் ஜைனன் என்று சொல்லிக் கொள்வதில்லை. எதிலேயும் ஒரு தனித்துவத்தையும், எல்லா மதங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு மனிதத்துவத்தையும் தேடிக் கொண்டிருக்கிறான்" என்றேன் நான்.

# அத்தியாயம் 4

யவனர்கள் அணிவது போன்ற ஒரு டோகாவும், இடுப்பில் அதைச் சுற்றி ஒரு நீலநிறமான பட்டையும் அணிந்திருந்தார். காலில் செருப்பு இருந்திருக்கும். ஆனால், அதை அறைக்கு வெளியே விட்டுவிட்டு வந்திருந்தார். சாதாரணமான உயரம் – வள்ளுவனை விட, அதிகம் போனால் இரண்டு மூன்று விரற்கடை அதிகமிருக்கும். கண்கள் சற்று நீலமாக அகன்று ஆழ்ந்து இருந்தன. தலைமயிர் அதிகம் இல்லை – இருந்த வரையிலும் தும்பை வெளுப்புக் கலந்த பழுப்பாக இருந்தது. யூதர்களுக்குரியது என்று நான் கேள்விப்பட்டிருந்த வளைந்த கூர்மையான எடுப்பான மூக்கு, மெல்லிய உதடுகள், தாடியோ, மீசையோ இல்லாத முகம். கைவிரல்கள் புளியம்பழம் மாதிரி நீளநீளமாக இருந்தன. கால் விரல்களும் சற்று நீளம்தான்.

எங்கிருந்தோ வந்து தன் நாணயத்தாலும் கெட்டிக்காரத்தனத்தாலும், முக்கியமாகத் தன் மனுஷ்யத்தனத்தாலும் இங்கு பல நண்பர்களையும், ஏராளமான ஐசுவரியத்தையும் சம்பாதித்து விட்டார். உலகின் பல பாகங்களிலும் இருந்து அனுபவப்பட்டவர் என்று சொன்னார்கள். ஆனால், தழும்புகள் தடிப்பாகத் தெரியவில்லை .

உலகெங்கும் சிதறிக் கிடப்பவர்கள் யூதர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கட்டுமானமாக ஒரு இடத்தில் இருந்து பலகாரணங்களால் சிதறிப் போனவர்கள். எங்கிருந்தாலும் சரி; எப்படிக் கஷ்டப்பட்டாலும் சரி; குலப்பெருமையையோ, குல ஒற்றுமையையோ, ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பான் மையையோ இழக்காதவர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தங்கள் கடவுள் பேரிலும், தங்கள் மத சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலும், பழக்கவழக்கங்களிலும் எக்காரணங்கொண்டும் நழுவி விடாதவர்கள் இந்த யூதர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அறிவும் நாணயமும் ஒருங்கே இருக்கும் இடத்தில் ஓரளவிற்கு உலகாயுதமான வெற்றிகளும், ஐசுவரியங்களும் சகஜம் தானே!

வள்ளுவன் எழுந்து வணக்கம் சொன்ன பின்தான் எனக்கும் எழுந்து வணக்கம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

‘‘உட்காருங்கள் உட்காருங்கள்" என்று எங்களைக் கையமர்த்தி விட்டு தன் மகன் மாத்யூவிடம், "இவர்களுக்குக் குடிப்பதற்கு ஏதாவது சர்பத் கொண்டு வரச் சொல்லு. வள்ளுவன் நம் வீட்டில் வேறு எதுவும் சாப்பிட மாட்டான்." என்றார்.

"ஐயா! எனக்கு இப்போது எதுவும் தேவையில்லை. காலையில் நீராகாரம் சாப்பிட்டுவிட்டுத்தான் வந்தேன். ஏதோ கூப்பிட்டனுப் பினீர்களாமே – ஏன்? என்ன விஷயம்? என்னால் என்ன ஆக வேண்டும் சொல்லுங்கள்," என்றான் வள்ளுவன்.

‘‘ஜெருசிசலத்தில் நடக்கிற, நடந்துகொண்டிருக்கிற, சில விஷபங்கள் பற்றித் தகவல்கள் வந்தன. என் தம்பி ஜோஸப் எழுதியிருக்கிறான். அந்தக் கடிதத்தை உனக்குப் படித்துக் காட்ட வேண்டும் என்று எண்ணினேன்."

இதற்குள் மாத்யூவின் மகன் ஒரு தட்டில் நாலைந்து கோப்பைகளில் சர்பத்தும், ஒரு மாம்பழத்தை நறுக்கித் துண்டாக்கியும் கொண்டு வந்தான். "மிரியம்தானே அனுப்பினாள்? வள்ளுவனிடம் அவளுக்கு ரொம்பவும் அன்பு’’ என்றார் ஸெகியல்.

"மிரியத்திற்கு உலகில் உயிர் வாழும் எல்லாரிடமும் அன்புதான். மனிதர்களிடம் மட்டுமில்லை; மிருகங்களிடம் கூட அன்போடு பழகக் கற்றுக்கொண்டு விட்டாள் அவள்" என்றான் வள்ளுவன்.

"எதனிடமும் அன்பு அதிகமாக வைப்பது ஆபத்தாகவும், கஷ்டம் தருவதாகவும் முடியும். இது உலக அனுபவம்," என்றார் ஸெகியல்.

"சிலபேருக்கு அன்பு சுபாவமாகவே வருகிறது. இந்த அன்பு காரணமாகப் பிறருக்கு இன்னா செய்யாமை பழக்கமாகி விடுகிறது. தனக்குத் தீங்கு செய்பவர்களைக்கூட மன்னித்து விடுகிற ஒரு மனப்பான்மை ஏற்பட்டு விட்டால் நல்லதுதான்."

"இப்படி ஒரு அன்பு மதம் வெகுசமீபத்தில் தொடங்கி யூதர்களிடையேயும், மற்றவர்களிடமும் வேகமாகப் பரவி வருவதாக என் தம்பி எழுதியிருக்கிறான்!" என்றார் ஸெகியல்.

"சற்று விவரமாகச் சொல்லுங்கள்!" என்று வள்ளுவர் சொன்னதும் தன் டோகாவின் பையிலிருந்து ஒரு சுருள் பார்ச்மெண்டை எடுத்துப் படித்துக் காட்டினார் ஸெகியல்.

"எப்போதுமே இஸ்ரேலியர்களாகிய யூதர்களுக்கிடையே பல தரப்பட்ட கொள்கைப்பூசல்களும், தாக்குதல்களும் இருந்து வந்ததுண்டு. ஏதோ ஒரு

மெஸ்ஸையா என்கிற தீர்க்கதரிசி தோன்றி, யூதர்களை ஒன்றுபடுத்தி, வெற்றிமேல் வெற்றியாக அடையச் செய்து, மஹோந்நதமான நிலைக்கு இட்டுச் செல்லப் போகிறார் என்று ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நம்மில் பலரும் நம்பி வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மெஸ்ஸையா தாவீதின் வம்சத்தில் நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகவும், அவர் ஜெருஸலத்தில் ஆலயத்தில் நடக்கும் முறைகேடான காரியங்களைக் கண்டித்து யூதப் பூசாரிகளின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டதாகவும், அவர்கள் வெகுநாள் காத்திருந்து சமயம் வாய்க்கும்போது அவருடைய சிஷ்யர்களில் ஒருவரான யூடாஸ் என்பவனுக்குக் கொல்லப் பணம் கொடுத்து அவரைக் காட்டிக்கொடுத்து பாலஸ்தீனத்தின் ரோம [யவன] பாண்டியஸ் பைலட் முன் ராஜத்துரோகம் செய்கிறவன் என்றும் குற்றம் சாட்டி நிறுத்த- அவன் புதிய ராஜா என்று தன்னைச் சொல்லிக் கொண்டதாகவும், தேவதூதன், கடவுளின் மகன் என்று பொய்க் கருத்துகள் சொன்னதாகவும் குற்றம் சாட்ட பைலட் அப்படி அவர் குற்றவாளியாகத் தோன்றவில்லையே என்று அவரை விடுவிக்க முயல, யூத ஆலயப் பூசாரிகள் அவரைச் சிலுவையிலறைந்து கொல்ல வேண்டும் என்று வற்புறுத்த, பைலட் அவ்வாறே உத்தரவிட்டான். அவ்வாறே இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளுக்கு முன் சிலுவையில் அறையப்பட்ட அந்த 'ஏசு கிறிஸ்து' என்ற மனிதன் மாண்டான்" என்று படித்து விட்டு ஸெகியல் நிறுத்தினார்.

"பாவம்! சிலுவையிலறைவது என்பது மிகவும் குரூரமானதான ஒரு காரியம். எங்கள் ஊரிலும் கழுவேற்றுவது என்று ஒரு மரண தண்டனை உண்டு. மனிதனை மனிதன், சட்ட பூர்வமாகவேயானாலும் கூடக் கொடுமைப்படுத்துவது என்பதும், சித்திரவதை செய்வதும் என்றுதான் நிற்குமோ?" என்றான் வள்ளுவன்.

“என்றும் நிற்கப் போவதில்லை" என்றார் ஸெகியல். "மீண்டும் கேளுங்கள், என் தம்பி எழுதியுள்ளான். கிறிஸ்து என்கிற அந்த மனிதனைப் பற்றிப் பல நம்ப முடியாத கதைகள் வழங்குகின்றன. அவர் மனிதனுக்குப் பிறந்தவர் இல்லையாம். மேரி என்கிற ஒரு கன்னிக்கும், கடவுளுக்கும் பிறந்தவராம். மேரிக்கு ஒரு புருஷன் ஜோசஃப் என்று ஒருவன் இருக்கிறான். அவன் பழைய தாவீத் அரசன் வம்சத்தில் வந்தவனாம். கிறிஸ்துவாக வந்தவர் ஏழை எளியவர்களை அவர்கள்தான் சொர்க்கத்திற்கு உரியவர்கள், பணக்காரர் சொர்க்கத்தை அடைய முடியாது என்று சொன்னாராம். குஷ்ட நோய்க்காரர்களைத் தொட்டுத் தடவி குணப்படுத்தியிருக்கிறாராம். ஒரு தடவை லாஸரஸ் என்று மரித்துப்போன ஒருவனை உயிர்ப் பித்துக் கொடுத்தாராம். இந்த லாஸரஸ் இன்றும் உயிருடனிருப்பதாகச்

சொல்லுகிறார்கள். பலவிதமான அதிசயங்கள் நிகழ்த்தியதாகக் கதைகள் பரவியுள்ளன ஏசுவைப் பற்றி. ஒரு திருமணத்தின்போது வந்திருந்த விருந்தாளிகளுக்குப் போதுமான மது இல்லையாம்; ஏசு ஒரு அண்டாவில் இருந்த தண்ணீரை நல்ல மதுவாய் மாற்றினாராம். கடல் மேல் நடந்தார் என்றும் சொல்கிறார்கள். ஏழை எளியவர் களிடையே அவருடைய பெருமை, செல்வாக்கு வளர்ந்து வருவதாக வும், அதனால் ஏதாவது புரட்சி நேரலாம் என்று பயந்துதான் யூத ஆலயப் பூசாரிகள் அவரை சிலுவையில் அறையச் சொல்லி வற் புறுத்தினார்கள் என்றும் சொல்கிறார்கள். ஆனால், நான் கேள்விப் பட்ட வரையில் அவருக்குப் புரட்சி நோக்கமோ அல்லது ராஜ்யதிகார நோக்கமோ இருந்ததாகத் தெரியவில்லை. அன்புள்ளமும், யாருக்கும் தீங்கு செய்யாத பான்மையும் மக்களிடையே பரவ வேண்டும் என்று அவர் பிரச்சாரம் செய்ததாகத் தெரிகிறது. நமது கடவுள் யாஹ்வே மாதிரி, 'கண்ணுக்குக் கண், கைக்குக் கை, காலுக்குக் கால்' என்று வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் மனப்பான்மையை ஒழிக்க வேண்டும் என்று அவர் சொன்னதாகத் தெரிய வருகிறது. 'பிறர் உன்னிடம் எப்படி நடக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ அதன்படி நீ அவர்களிடம் நடக்கவேண்டும் என்றும், ஒருவர் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் பதிலுக்கு அடிக்காதே – மறு கன்னத்தையும் அடிக்கக் காட்டு என்று அவர் சொன்னதாகத் தெரிகிறது...'

இந்த இடத்தில் வள்ளுவன் எழுந்து நின்று உற்சாகத்துடன், "அதை மீண்டும் படியுங்கள், பிறர் உன்னிடம்."

ஸெகியஸ் அந்த வாக்கியத்தை மீண்டும் படித்தார். "பிறர் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நீ எண்ணுகிறாயோ அதன்படி நீ அவர்களிடம் நடக்கவேண்டும் என்றும், ஒருவர் உன்னை ஒரு கன்னத்தில் அடித்தால் பதிலுக்கு அடிக்காதே – மறு கன்னத்தையும் அடிக்கக் காட்டு' என்று அவர் சொன்னதாகத் தெரிகிறது.

"சற்றேறக்குறைய இதையேதான் எங்கள் ஜீன தீர்த்தங்கரர்களும் ஆயிரத்திற்கும் அதிகமான ஆண்டுகளாக வற்புறுத்தி வந்துள்ளார்கள்" என்றான் வள்ளுவன்.

"கடிதத்தில் இன்னும் ஒரு முக்கியமான வாக்கியம் இருக்கிறது. அதையும் வாசிக்கிறேன்" என்று வாசித்தார் ஸெகியஸ். "சிலுவையில் உயிர் துறந்த ஏசு கிறிஸ்து என்கிற தேவ குமாரன் மூன்றாவது நாள் மீண்டும் உயிர் பெற்று எழுந்து அவர்கள் முன் நடமாடியதாக ஏசுவின் சிஷ்யர்கள் நம்புகிறார்கள். இந்த மறு உயிர் பெற்று நடமாடியது அவர்களுடைய கொள்கைகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. ஏசுவின்

சிஷ்யர்கள் யூதர்கள். பழைய சாப்பாட்டுப் பழக்கவழக்கங்களைப் புறக்கணிக்கிறார்கள் என்றும், மாசுபடுத்து கிறார்கள் என்றும் சண்டை சச்சரவுகள் அதிகமாகிக் கொண்டிருக் கின்றன. யூதர்களின் பழமைவாதிகளுக்கும், இந்தப் புது ஏசு தர்மத்திற்கும் இடையே பல பூசல்கள் நிகழ்ந்து அதிகாரவர்க்கத்தினர் குறுக்கே புகுந்து தடியடிப் பிரயோகம் செய்தும், மற்றபடி சட்டங்கள் போட்டும், நிலைமையைச் சமாளிக்க வேண்டியதாக இருக்கிறது. 'பைலட்'டுக்குப் பின் வந்த அதிகாரிகள் ஏசுவைப் பின்பற்றுபவர் களிடம் சரிவர நடப்பதில்லை என்று ஏற்பட்டுவிட்டது. கலகங்கள் காரணமாக கிறிஸ்துவர்கள் என்று கூறிக் கொள்பவர்களையும் மற்றும் பழைய யூதர்களையும் ஒருங்கே கொடுமையாக நடத்துகிறார்கள். விடிந்தால் ஒரு கலகம் – அஸ்தமித்தால் பத்துக் கொலை என்று ஜெருஸலமும், சுற்று வட்டமும் அவதியுறுகிறது."

"அன்புவழி மதம் ஸ்தாபிக்கப் போய் இப்படி ஹிம்ஸை விளைகிறது. இதைத்தான் மனித மௌட்டியம் என்று சொல்ல வேண்டும்’’ என்றான் வள்ளுவன்.

"அதுமட்டுமல்ல, இந்தக் கிறிஸ்துவர்கள் என்கிற ஏசுவாதிகள் எல்லோருமே ஒரு விதத்தில் யூதர்கள் தாம். ஏசுவே யூத குலத்தில் பிறந்தவன் தான். எங்கள் குலத்தில் யூதத் தாய்க்குப் பிறந்தவர்கள் எல்லோருமே யூதர்கள் என்று கருதுவதுதான் வழக்கம். இருந்தும் என் தம்பி எழுதியிருப்பதைப் பார்த்தால் ஏசு வாதிகள் முக்கியமான போக்காக யூதர்களை வெறுப்பதும், சண்டை பிடிப்பதுமாகக் காலந் தள்ளுகிறார்கள் என்று தெரிகிறது. ஏசுவின் பரம சிஷ்யர்களான பால், பீட்டர் என்பவர்களிடையே மதப்பிரச்சாரம் பற்றி சண்டைகள் சச்சரவுகள் அதிகமாகக் கிளம்புகின்றனவாம்" என்றார் ஸெகியல்.

"அன்பு வழியைப் பிரதானமாகப் பிரசாரம் செய்த முதல்வரின் அடுத்த தலைமுறையிலேயே அவருடைய சிஷ்யர்களிடையே சண்டைகள் தோன்றிவிட்டன என்பது ஆச்சரியப்பட வேண்டிய காரியமில்லை. இங்கேயும் அதெல்லாம் ஏராளமாக உண்டு. சண்டைக்குக் காரணம் அல்ப சொல்பமானாலும் போதும். அன்பு செலுத்தத்தான் காரணம் பலமாக அமைய வேண்டியதாக இருக்கிறது" என்றான் வள்ளுவன்.

‘‘என் தம்பி இன்னும் பல விஷயங்களும் எழுதியிருக்கிறான். அதில் முக்கியமானது இரண்டு. ஒன்று, கிறிஸ்தவர்கள் யூதர்களை – முக்கியமாகப் பழமைவாதிகளாக உள்ள யூதர்களை – வெறுக்கிறார் களாம். இதற்குக் காரணமாக அவர்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. யூடாஸ் என்ற யூதன் 'ஏசு' என்கிற யூதனைக் காட்டிக் கொடுத்தானாம். அவர்கள்

எல்லோருமே யூதர்கள்தான். இருந்தும், யூதர்களை வெறுக்கும் போக்கை வளர்க்கிறார்கள். ஏற்கனவே பல அல்லல்களுக்குட்பட்டுள்ள யூதர்களிடையே இது ஒரு புதுத் தொல்லை. கிறிஸ்துவர்களின் வெறுப்பைச் சமாளிக்க வேண்டும். அதைத் தவிர இன்னொரு விஷயம்.."

"என்ன?" என்றான் வள்ளுவன்.

"ஏசுவின் பன்னிரெண்டு சிஷ்யர்களில் ஒருவனான யூடாஸ் ஆரம்பத்திலேயே எதிரியாகி விட்டான். மற்ற பதினோரு சிஷ்யர்களும் – அவர்களை அபோஸ்தலர்கள் என்று யூத மொழியில் கூறுவார்கள் – பிரதம சிஷ்யர்கள் என்று அர்த்தம். உலகைப் பதினோரு கூறாகப் போட்டுக் கொண்டு இவர் இவர் இன்னின்ன தேசத்திற்குப் போய்க் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியைப் பரப்பி, உலகம் பூராவையும் கிறிஸ்துவர்களாக்க முயற்சி செய்யவேண்டும் என்று விதிக்கப்பட் டிருக்கிறதாம். அதன்படி பீட்டர், பால் இருவரும் ரோம சாம்ராஜ்யத் தின் தலைநகரான ரோமாபுரிக்குச் சென்றதாகவும், தங்கள் தியாகத் தாலும், ஓரளவு பிரசாரத்தாலும் தாழ்ந்தவர்களிடையே கிறிஸ்துவப் பிரசாரம் செய்து, வெற்றி கண்டிருப்பதாகவும் என் தம்பி எழுதியிருக்கிறான்."

‘‘நல்ல காரியமாகத்தானே தோன்றுகிறது" என்றான் வள்ளுவன்.

"ஓரளவில் நல்ல விஷயமாகத்தான் தோன்றுகிறது. ஆனால், எத்தனை எத்தனை கலகங்கள் இதனாலெல்லாம் விளையப் போகின்றன? மனித சரித்திரம் இந்தக் கிறிஸ்துவக் கொள்கைப் பாதிப்பினால் எப்படி ஆகப் போகிறது என்று யார் சொல்ல முடியும்? ஏசுவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான தாமஸ் என்பவருக்கு அவர் பங்காக இந்தியா வந்து, இந்திய மக்களை ஏசு மதத்திற்கு மாற்றும் பணி தரப்பட்டிருக்கிறது என்றும், அந்தத் தாமஸ் உடனேயே புறப்பட்டு எந்த மார்க்கமாகவோ வட இந்தியாவில் சில காலம் மதப் பிரசாரம் செய்து வெற்றி கண்டதாகவும், பின்னர் கீழைக் கடற்கரையில் மலையாள மக்களிடையே பிரசாரம் செய்து கொண்டிருப்பதாகவும் என்னைப் பற்றியும், நான் இங்கு மயிலாப்பூரில் இருக்கிறேன் என்றும் ஏற்கனவே தெரியுமாதலால், தாமஸ் என்பவர் இங்கு என்னைத் தேடி வரலாம் என்றும் என் தம்பி தெரிவித்திருக் கிறான்’’ என்று சொல்லிக் கடிதத்தை பையில் போட்டார் ஸெகியல்.

"இங்கு மதப் பிரசாரங்களுக்குக் குறைவில்லை. நூற்றோடு நூற்றியொருவர் என்று மக்கள் – அவர் பெயர் என்ன? தாமஸ்ஸா? – அவரையும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், அவர் வந்தால் மதம், கொள்கை என்பதைவிட ஏசு

என்கிற மனிதனையும், மெஸ்ஸையாவை யும் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள நான் விரும்புவேன்" என்றான் வள்ளுவன்.

ஸெகியல் எதுவும் சொல்லாமல் வள்ளுவனையே பார்த்துக் கொண்டிருந்தார். வள்ளுவன் தொடர்ந்து சொன்னான். "உலகில் கொடுமையும், கொடூர மனப்பான்மையும் ஆதி காலந்தொட்டே ஆட்சி செலுத்தி வந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அவ்வப்போது மனிதர்களிடையே அன்பு வழிகளைப் பரப்பப் பலர் தோன்றி முயற்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதும் உண்மை. ஜைனர்களிடையே ரிஷபதேவர் என்கிற தீர்த்தங்கரர் தோன்றி சைவ உணவுப் பழக்கத்தையும், அன்பே சாசுவதம் என்கிற கொள்கையையும் பரப்பினார் என்று சொல்கிறார்கள். ஆனால், மகாவீரர் என்கிற சரித்திர புருஷர் – நம்மைப்போல ஒரு மனிதர் – இந்தக் கொள்கைகளை வரையறுத்து உலகுக்குப் பயன் தரத்தக்க வகையில் விதிகளைக் கட்டாயமாக்கி மனிதர்கள் பயனுறும்படிச் செய்தார். அவருக்குப் பின்னர் தீர்த்தங்கரர்கள் தோன்ற வேண்டிய அவசிய மில்லை என்றும் ஜைனர்கள் கருதுகிறார்கள். கருணையே அஸ்திவார மாக அமைந்த மதத்திலும்கூட, சகலவிதமான கெட்ட வழிகளும் தோன்றி, மற்றும் ஒரு தீர்த்தங்கரருக்கோ, அவர் போன்ற ஒரு தவிர்க்க முடியாத சக்தி வாய்ந்த மனிதனுக்கோ இடமிருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. நானே ஒரு குருவாக மாறிச் சீர்திருத்தம் செய்யலாம் தான் – அதைத் தடுப்பவர் யாருமில்லை. இந்நாட்டு மக்களிடையே ஏற்றுக் கொள்பவர், ஏற்றுக் கொள்ளலாம். ஏற்க மறுப்பவர்கள் அவர்கள் வழி போகலாம். இருவரும் சில சமயம் அடித்துக் கொண்டாலும் சண்டை சச்சரவுகள் செய்து கொண்டாலும் மொத்தத்தில் சமரசமாகிப் போய் விடுவார்கள். அதனால்தான் பாரதம் என்று சொல்லப்படுகின்ற இந்தத் தேசத்திலே இத்தனை மதங்கள் ஏற்பட்டு வளர்ந்து வந்தும், பொதுவாக எல்லோருமே ஓரளவிற்கு ஒற்றுமையாக இருக்க முடிகிறது. யூதர்கள் போன்ற குறுகிய சமூகத்தில் சச்சரவு ஏற்பட்டால் ஓரளவிற்கு விபரீதமான, தொடர்ந்து வரக்கூடிய கெடுதல்களை விளைவிக்கலாம்தான். இதுபற்றிப் பயப்பட வேண்டிய அவசியமும் இருக்கிறது. நாடு விட்டு நாடு வந்து இங்கு ஒதுங்கித் தங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டிருக்கிற போதும்கூடக் கலவரமடைய வேண்டிய அவசியம் ஏற்படுவது மனிதகுலத்தின் சாபங்களில் ஒன்று என்றுதான் சொல்ல வேண்டும்."

என்ன என் நண்பன் இப்படி ஒரு நீண்ட பிரசங்கமே செய்யத் தொடங்கி விட்டானே என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இதுவரையில் பேசாதிருந்த நான், ஆழந் தெரியாமல் எதிலோ காலைவிடுகிறோமோ என்கிற ஒரு சந்தேகம் இருந்தாலும்கூட, “இந்த மாதிரியான கொள்கை

விரோதங்கள் எல்லாம் ஒருவரைப் பாதிக்காமல் தடுத்துக் கொள்ளலாமே! அதுவும் பொருளும், அந்தஸ்தும் உள்ளவர்களை அதிகமாகக் கொள்கைகள், கொள்கை மாறுதல்கள் பாதிப்பதில்லையே!'' என்றேன். அதைச் சொன்னவுடன் தான் அப்படிச் சொன்னதும், இந்தச் சந்தர்ப்பத்தில் சொன்னதும் தவறோ என்றும் ஒரு பாதிப்பு உண்டாகியது. ஆனால், சொல்லியாகி விட்டது. "வாயால் தெளித்துவிட்ட வார்த்தைகளைத் திருப்பிப் பொறுக்கி எடுக்க முடியாது. அதனால் எதையும் யோசித்துத்தான் சொல்ல வேண்டும் தம்பி'' என்று வள்ளுவனின் தாயார் ஆதி சொல்வது நினைவிற்கு வந்தது. "நான் சொன்னது தவறாக இருந்தால் மன்னிக்கவும்!" என்று சொல்லி வைத்தேன்.

வள்ளுவன்தான் பதில் சொன்னான். ஸெகியல் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தவராகப் பதில் சொல்லவில்லை.

"சிலரிடம் பணம் இருக்கிறது; பலரிடம் இல்லை. ஒரு சிலரிடம் செல்வாக்கு என்று சொல்கிற விஷயம் ஒன்று இருக்கிறது. வெகு பலருக்கு இது இல்லவேயில்லை ஆனால், எல்லா மனிதர்களுக்கும் மனதிற்குள் மனதாக ஒரு மனச்சாட்சி என்ற ஒன்று பிரமாணமாக இருக்கிறது. அன்பு, பிற மனிதர்களிடம் பிடிப்பு, நாநலம் என்கிற இதுபோன்ற விஷயங்களில் அது சாட்சி பூதமாகச் செயல்படுகிறது. குஷ்டரோகியைக் கண்டால் விலகிப்போய்விடுவதும், கிட்ட வராதே என்று எட்டப் போய் விடுவதும் சுலபம்தான். ஆனால், அவனையும் அணைத்து ஒரு சகோதரனாகக் கருதி அவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதைத் தன் உரிமையும், கடமையுமாக நினைப்பவர்களை மனிதர்களிடையே தெய்வமாகப் போற்ற வேண்டும். தண்ணீரை மதுவாக மாற்றியதையும், நீர்மேல் நடந்ததையும், செத்தவனை உயிர்ப்பித்ததையும் விட, அந்த ஏசுவின் காரியங்களில் மிக முக்கியமானதாக அவன் குஷ்டரோகியைத் தொட்டு அணைத்துச் சிகிச்சை செய்து ஆறுதல் கூறியது முக்கியமான காரியமாகப் படுகிறது எனக்கு. இந்த ஆசாமியைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது" என்றான் வள்ளுவன்.

"அதற்கு ஒரு சந்தர்ப்பம் உனக்குக் கிடைக்கலாம் என்று நினைக்கிறேன். யூதர்கள் பல விஷயங்களை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு கடைசிவரை விட்டுவிடாமல் இருப்பவர்கள். அப்போஸ்தலன் தாமஸ் என்று இந்தத் தேசத்து மக்களிடையே பிரசாரம் செய்வதற்காக வந்திருப்பதாகச் சொல்கிறார்களே – அவனைப் பற்றி நான் நிறையவே வேறு ஒரு சந்தர்ப்பத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏசு செத்துப் பிழைத்ததைப் பற்றி – தாமஸுக்கு மிகவும் அவநம்பிக்கையிருந்ததாகவும், பிழைத்தெழுந்த ஏசுவே

அவன் கண் முன் தோன்றி 'அவநம்பிக்கைப்படாதே! சாவு ஒரு முடிவில்லை. மேலும் வாழ்வு – புனிதமான வாழ்வு உண்டு' என்று சொல்லி அவன் அவநம்பிக்கையைப் போக்கியதாகவும் சொல்கிறார் கள். அவனை மற்ற கிறிஸ்துவர்கள் 'அவநம்பிக்கைத் தாமஸ்' என்றே பெயர் சூட்டி விட்டார்களாம். மற்ற அப்போஸ்தலர்களையும் விட அவன் சற்று அதிகக் கல்வி கற்றவன் என்றும் சொல்கிறார்கள். அவன் வந்தால், என்னைத் தேடி வந்தால், சொல்லியனுப்புகிறேன். நீ வந்து அவனைச் சந்திக்கலாம். அவன் ஏசு என்கிற மனிதனைப் பற்றி உனக்கு நிறையவே சொல்வான் என்று நம்புகிறேன்," என்றார் ஸெகியல்.

"வரட்டும்" என்றான் வள்ளுவன்.

எனக்கும்கூட "அவன் வரட்டும்'' என்று சொல்லத் தோன்றியது. வள்ளுவன், ஏசு என்கிற புது மனித மத வர்க்க ஸ்தாபகராக வந்த மகான் பற்றி அறிந்து கொள்ள 'வரட்டும்' என்றான். ஸெகியல் தன் யூத குலத்தின் எதிர் காலத்தை இந்த 'ஏசு' என்கிற மனிதன் எப்படிப் பாதிப்பானோ என்ற பயத்தில் – அப்போஸ்தலரா அவர்? – தாமஸின் வரவை எதிர்பார்த்து 'வரட்டும்' என்றார். நான் எதற்காக 'அவர் வரட்டும்,' என்றேன்? எனக்கே தெரியவில்லை . என் மனதில் பெரும் எதிர்பார்ப்பு ஒன்று எப்படியோ ஏற்பட்டிருந்தது. ஏன், எதனால் என்று சொல்லத் தெரியவில்லை. வள்ளுவனையே சிந்திக்க வைத்த வருகை முக்கியமானது என்று எனக்குத் தோன்றியது.

## அத்தியாயம் 5

நான் ஸெகியலின் மாளிகைக்கு வள்ளுவனுடன் சென்றதற்கு ஒரே ஒரு காரணம்தான், இன்று அதெல்லாம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் எனக்குத் தெரிகிறது. மிரியத்தைப் பார்க்கலாம், மிரியத்தின் அருகிலிருக்கலாம், அவளோடு நெருங்கிப் பழகலாம் என்ற ஒரே காரணம்தான். அந்தப் பெண்ணின் பேச்சும், உருவமும், அவள் பேசிய சில வார்த்தைகளும் என்னைத் தூண்டில் போட்டு இழுப்பதாக இருந்தன. அதை அன்பு என்றோ, காதல் என்றோ நான் அப்போது உணர்ந்தேனா என்பது எனக்கே தெரியவில்லை.

முதல் தடவையாக நான் ஸெகியல் மாளிகைக்குச் சென்றபோது எங்களை வரவேற்ற மிரியம், பின்னர் எங்கள் கண்ணில் படவே யில்லை. அவள் பேசிய சில வார்த்தைகளும்கூட வள்ளுவனுடன் தான். நான் கூட இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அவ்வளவுதான். வள்ளுவனும் ஸெகியலும்

பேசிக் கொண்டிருந்த பெரிய பெரிய விஷயங்களெல்லாம் என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் பேசிய விஷயம் என்பதால் என் மனதைக் கவர்ந்ததே தவிர, வேறு அதன் முக்கியத்தால் அல்ல. அவர்கள் முக்கியமாகக் கருதிய அந்த ஏசு வருகையோ, ஏசுவின் தூதனான தாமஸ் என்பவரின் வருகையோ என்னை எப்படியெல்லாமோ பாதிக்கப் போகிறது என்று அப்போது தெரியவில்லை . கிழவர், பெரியவர், தன் மதப் பழக்க வழக்கங்களை, ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளை, யாரோ பிடித்து உலுக்குகிறார் களே என்று துன்புற்றார். அவ்வளவுதான். வள்ளுவனோ ஏதோ ஒரு புது விஷயம் தெரிந்து கொள்ள இருக்கிறது என்று மகிழ்ச்சியுற்றான். எனக்கு இதில் துன்பமோ, மகிழ்ச்சியோ அடைவதற்கு விஷயம் இருப்பதாகத் தெரியவில்லை. மகிழ்ச்சியும் துன்பமும் மிரியத்தின் பங்காக எனக்கு வரலாம் – அவ்வளவுதான்.

"எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகளில் நிகழ்காலத்தைக் கழிக்காதே!" என்று அறிவுரை தேடி வந்த காஞ்சிப் பல்லவ ராஜகுமாரன் சிவபுத்திரனிடம் வள்ளுவன் ஒரு நாள் சொல்லிக் கொண்டிருந்தபோது நான் கேட்டுக் கொண்டிருந்தேன். எவ்வளவு சாதாரணமான, முக்கியமான ஒரு அறிவுரை இது என்று எனக்குத் தோன்றியது. எதிர்காலம் வருகிறபடி வரும்; இருக்கிறபடி இருக்கும். யாராலோ எப்படியோ சமைக்கப்படுவதாகவும் இருக்கலாம். தன்னாலேயே சமைக்கப்படுவதாகவும் இருக்கலாம்; பிறர் கட்டாயத்தை அனுசரித்து நடப்பதாகவும் இருக்கலாம். எப்படியானா லும் அதையே நினைத்துக்கொண்டு இன்று பூராவையும் கழித்து விடுவது எத்தனை முட்டாள் தனம்!

ஒருவனின் எதிர்காலத்தைக் கணிப்பதற்குப் பிராமணர்கள் பலரும் ஜாதகம் பார்க்கிறார்கள். ஏதோ, எங்கேயோ வானவீதியில் உலாவும் கிரகங்கள் மனிதனின் காலப் போக்கை நிர்ணயிப்பது பெருமளவில் உண்மைதான். அதையே சாவு, கல்யாணம், பொருளீட்டுதல், பிரயாணம் தொடங்குதல் முதலிய சிறு சிறு காரியங்களுக்கு ஆதாரமாகக்கொண்டு ஜோஸியம் பார்ப்பது பற்றி வள்ளுவன் பரிகாசம் செய்வான். எனக்கு இதில் நம்பிக்கையும் இல்லை; அவநம்பிக்கையும் இல்லை. அப்படி இருக்கலாம்; அப்படி இல்லாம லும் இருக்கலாம் என்றுதான் தோன்றுகிறது.

வள்ளுவன் கூட வருகிறான் என்பதையே மறந்துவிட்ட மாதிரி ஸெகியலின் மாளிகையை விட்டுக் கிளம்பி எதிரே கொந்தளித்துக் கொண்டிருந்த கடலில் மணல் கரையின் ஓரமாக அரை நாழிகைக்கு மேல் நடந்த பிறகு, இதுவரை வள்ளுவன் தானும் மௌனமாக வந்ததை மறந்துவிட்டு, "என்னடா வாதூலா என்ன?" என்றான்.

"நீயும் தானே எதுவும் பேசவில்லை! எனக்காக எதுவும் யோசித்துப் பேசச் சக்தி ஏது? நீ ஏதாவது சொன்னால் நான் பதில் சொல்லு வேன்'' என்று சாதுர்யமாகப் பதில் சொன்னேன்.

"கண்ணொடு கண் நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் ஏதும் பயனில,'' என்று கூறி நகைத்தான் வள்ளுவன், ஆனால், கண்ணோடு கண்ணோக்குவதால் பயன் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தப் பெண்ணோ யூதப் பெண், முற்றிலும் அந்நியப்பட்டவள். நீயோ நமது தேசத்தில் உயர்ந்த குலப் பிரஜை."

"அவர்கள் செல்வந்தர்கள், நான் ஏழை."

"அது முக்கியமில்லை. மிரியம் உன்னைத் தான் மணந்து கொள்வேன் என்றால் ஸெகியல் உன்னைப் பணக்காரனாக்கி விடுவார். அதற்குப் போதிய சொத்தும் மனமும் இருக்கிறது அவருக்கு. ஆனால், என் கவலையெல்லாம் உன் தகப்பனாரும் உன் குலத்தவரும் ஆர்ப்பாட்டம் செய்து உன்னைத் தடை செய்து, அவசியமானால் தூக்கிக்கொண்டு போய்விடுவார்களே என்றுதான்."

"எங்கப்பா நான் செல்வந்தனாவதை ஆட்சேபிப்பார் என்கிறாயோ நீ?"

"ஏழை செல்வந்தனாவதை இந்த உலகத்தில் யாருமே ஆட்சேபிக் காமல் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அதுவும் பிராமண குலத்தில் இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் அதிகம் இல்லையா?"

"இருக்கலாம். ஆனால், என் அப்பாவை எனக்குத்தெரியும். பணம் வருகிறது என்றால் அவரே யூத மதத்திற்கு மாறிவிடுவார். அப்படி யொன்றும் பிராமண வழிகளில் அவருக்குப் பிடிப்பு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்றேன் நான்.

"பிராமணத்துவத்தின் பிடிகள், பிடிப்புகள் அப்படியொன்றும் சுலபமாகத் தளர்ந்துவிடும் என்று எனக்குத் தோன்றவில்லை. புது மதத்தின் எந்தக் கொள்கைகளும் அப்படியொன்றும் புதுமையாகவோ, சக்திவாய்ந்தவையாகவோ எனக்குத் தோன்றவில்லை" என்றான் வள்ளுவன்.

"எல்லாக் கொள்கைகளுமே நல்லவைதான், எல்லாக் கொள்கைகளும் கெட்டவைதான். கொள்கைப் பிடிப்பு என்பது சிலரிடம் மட்டுமே காணப்படுவது. சாதாரண மக்கள் நல்லது, தீயது என்பது பற்றிக்கூடத் தீவிரமாகச் சிந்தனை செய்யச் சக்தியற்றவர்கள். ஏதோ பழக்கப்பட்ட, சுலபமாக எதிர்ப்படுகிற வழிகளில் போய்க்கொண்டிருப் பவர்கள். இது

பிராமணர்களிலும், பிராமணர் அல்லாதவர்களிலும் சரி, – பௌத்தர்வழி பின்பற்றுபவர்களிலும் சரி – என் போன்றவர்கள் மத்தியிலும் சரி – காணக்கூடிய ஒரு விஷயம்தான்."

"ஏதேது! வாதூலனும்கூட இந்த அளவுக்குச் சிந்திக்கக் கற்றுக்கொண்டு விட்டானே! உலகம் எல்லாம் இனி எங்கே போகுமோ தெரியவில்லையே!'' என்று சொல்லி வள்ளுவன் கபடமில்லாமல் நகைத்தான்.

"உன்னோடு சேர்ந்து நானும் கெட்டுப் போகிறேன் என்று அப்பா சொல்கிறார். உன்னோடு பழகிப் பழகியே உன்னுடைய சிந்திக்கும் சக்தியில் ஒரு துளி என்னையும் நனைக்கிறது. அன்று நீ சொன்னாயே..."

"என்ன சொன்னேன்?"

''மக்களில்லாதவர்களும் எப்படி அதிசயமாக மக்களைப் போலவே இருக்கிறார்கள் என்று..."

"அதற்கென்ன இப்போது?"

''இல்லை, சொன்னேன். பிராமணரல்லாதவர்களும், பிராமணர் களைப் போலவேதான் இருக்கிறார்கள் என்று சொல்ல வந்தேன்.''

"சபாஷ்! விஷயத்தை இவ்வளவு தூரம் புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்ட நான் ஒரு குருகுலம் ஆரம்பிக்கும்போது உன்னையே என் பிரதான சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு விடுகிறேன்!" என்றான் வள்ளுவன்.

"எனக்கு அந்த ஆசையில்லை. அறிவு என்பது பயங்கரமான ஒரு ஆயுதம். அது உபயோகிப்பவனையே சில சமயம் பதம் பார்த்து விடும். தவிரவும்..."

"தவிரவும் என்ன?'' என்று கேட்டான் வள்ளுவன்.

"பிரதான சிஷ்யர்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லோருமே உரிய காலத்தில் தங்கள் தங்கள் குருமார்களைப் பொய்ப்பிப்பவர்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"சபாஷ் வாதுலா! சபாஷ்!" என்றான் வள்ளுவன். மேலும் சொன்னான்.

"இந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் நிறையவே சிந்தித்து வைத்திருக்கிறாய் என்று தோன்றுகிறது. ஹிந்து சமயம், வாழ்க்கை வழிகள், தத்துவம் என்று சொல்லப்படுகிறதெல்லாம் வேத காலத்திலேயே சீர் குலையத் தொடங்கி விட்டன என்பதும், புத்தர் போதித்துக் கொண்டிருக்கும் பௌத்த சமயம் பெருமளவில் அழியத் தொடங்கிவிட்டது

என்பதும், தீர்த்தங்கரர்கள் பேசி முடிக்குமுன்னமே அவர்களுடைய தத்துவங்கள் தளரத்தொடங்கி விட்டன என்பதும் இன்னோரன்ன பல விஷயங்களும் மனிதன் பிறக்கும்போதே கால முடிவை [சாவை] நோக்கித்தான் அடியெடுத்து வைக்கிறான் என்பது போல அழிவை உள்ளடக்கிக் கொண்டேதான் மதங்கள், கொள்கை கள், தத்துவங்கள் எல்லாமே பிறக்கின்றன. உலகம் எவ்வளவு அநித்தியமானதோ அவ்வளவு அநித்தியமானது வாழ்க்கையை நிர்ணயிக்கும் கொள்கைகளும், தத்துவங்களும்."

‘‘சொல்லு."

"என்னத்தைச் சொல்வது? உண்மை, உண்மை என்று கதைக்கிறாமே. இந்த உண்மை என்பதுதான் என்ன? கோணம் திரியும் போது உண்மையும் திரிகிறது. மனிதனுக்கு நன்மை பயக்கும் விஷயங்களையே உண்மை என்று கொண்டு நாம் நடைமுறையில் வாழவேண்டுமே தவிர உண்மை என்று நன்மைக்குப் புறம்பான விஷயங்களை, நன்மை பயக்காதவர்களைப் பற்றிப் பேசக்கூடாது.’’

"எது நன்மை பயக்கும்? எது தீமை விளைவிக்கும் என்று யாருக்கு நிதர்சனமாகத் தெரியும்? அதுவும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் மாறலாமே!"

"மாறலாம். இதனால்தான் பல வழிகள், மார்க்கங்கள், சமயங்கள் நம்மிடையே தோன்றுகின்றன. அவற்றால் ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதிலாகக் குலைகிறது. பூசல்கள் விளைகின்றன. ஆனால், இப்ப சக்தியாக இந்த நேர்த்தியான சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதோ பார், உன் அப்பா வருகிறார்’’ என்றான் வள்ளுவன்.

"அவரைப் பற்றி இப்போதுதானே பேசிக்கொண்டு இருந்தோம். அவருக்கு ஆயுள் நூறுக்குக் குறையாது... என்ன அப்பா? என்னைத் தேடிக்கொண்டு வருகிறீர்கள்? உங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டே வந்தோம், உங்களுக்கு நூறு வயசப்பா!’’ என்றேன்.

"உன் ஆசீர்வாதம் பலிக்கும்டா, பலிக்கும்!" என்று கேலியாகக் கூறிய என் தகப்பனார் முகத்தைச் சோகமாக வைத்துக்கொண்டு "உன்னைப் பெற்ற மகராசி சாகக் கிடக்கிறாள்! உன்னை எங்கிருந்தாலும் அழைத்து வர வேண்டும் என்று எனக்கு உத்தரவிட்டிருக்கிறாள். உன்னைக் காணாமல் அவள் உயிர் பிரியாதாம்!" என்று சொன்னார்.

எனக்கு உண்மையில் என் அப்பாவிடம் பிடிப்பில்லையே தவிர அம்மாவிடம் உயிர். அம்மா இல்லாத உலகத்தை என்னால் எந்த விஷயத்திலும்

நினைத்துக்கூடப் பார்க்க முடிவதில்லை. வேளா வேளைக்குச் சோறு, சமயம் பார்த்து அன்பான சில வார்த்தைகள், அப்பா கடிந்து கொள்ளும்போது சமாதானமாகச் சில வார்த்தைகள், காலாகாலத்தில் கல்யாணம் செய்து வைத்து, பிறக்கும் தன் பேரக் குழந்தைகளைச் சீராட்ட வேண்டும் என்று ஆசை... இப்படியாக ஒரு உருவம்.

செய்தி கேட்டு பதட்டமடையாத என் தோழன் வள்ளுவன், "பயப்படாதே, ஒன்றும் நேர்ந்து விடாது. உன் தாயார் உனக்குக் கல்யாணம் ஆகும் வரையிலாவது உயிரோடு இருப்பார்கள்; உனக்குக் குழந்தைகள் பிறக்கும் வரையிலும்கூட இருக்கக்கூடும். கவலைப் படாமல் அப்பாவோடு போ!" என்றான்.

வள்ளுவனுக்கு எப்படியோ வைத்தியமும் கைவந்த கலை என்று எனக்குத் தெரியும். ஆனால், நாங்கள் – பார்ப்பனர்கள் – இருந்த தெருவிற்குள் கூட அவனை அனுமதிக்க மாட்டார்கள். அவனை என் தாயாரை வந்து பார்த்து வைத்தியமும் செய் என்று கூப்பிட முடியாது. "எப்படியிருக்கிறது, அம்மாவுடைய உடம்புக்கு என்ன செய்கிறது என்று எவ்வளவு சீக்கிரம் வந்து சொல்ல முடியுமோ சொல்கிறேன். நீ ஏதாவது மருந்து மூலிகை கொடு," என்று விடைபெற்றுக்கொண்டு, அப்பா பின்தொடர, அவசரமாக வீடு திரும்பினேன்.

மயிலாப்பூர் அக்ரஹாரத்தில், பிராமணத் தெருவில், என் வீட்டை அணுகும்போது நான் சற்று முன் பார்த்த ஸெகியலின் மாளிகைக்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே வித்தியாசங்கள் பளிச்சென்று மனதில் பட்டன. அது மாளிகை. மகாலட்சுமி விரும்பிக் குடியிருந்த இடம். எங்கள் வீட்டில் அவள் அக்காதான் பிரசன்னமாகியிருந்தாள் என்றும் சொல்ல முடியாது. அப்பாவுக்கு ஏதோ நாலு சாஸ்திரங்கள் தெரியும். லௌகீகமாக வைதீகத்தினால் பிழைக்கத் தெரிந்தவர் என்று பெயர் உண்டு. வைதீக வாழ்விலேயே சுமாராகச் சம்பாதித்தார். ஆனால், அவரைவிட அதிகம் சம்பாதித்தவர்களும் உண்டு. வீடு, வாசல், சொல்ப நிலம் என்றும் உண்டு. பிறன்மனை விழைவதை ஒரு தத்துவமாகக் கொண்டு உயிர் வாழும் என் அப்பா, தன் மனைவி சாகக் கிடக்கிறாள் என்று முகத்தில் சோகத்தை வரவழைத்துக் கொள்கிறார். எனக்கு அதுவே எரிச்சலூட்டியது. தன் மனைவியைப் பற்றி அவர் சிந்திப்பதில்லை. நான் அம்மாவைப் பற்றிச் சிந்திக்கிறேன். அது காரணமாகவே வீட்டில் இருப்புக் கொள்ளாமல் ஊர் சுற்றுகிறேன். வள்ளுவனுடன் பேசிப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்கிறேன். எனக்கு என் அம்மாவிடம் பூரணமான அன்பு இருக்கிறது; அப்பாவிடம் எனக்கு அதை விடப் பூரணமாக 'அன்பு'தான். ஆனால், அதில்

ஒரு சோகம், 'ஒரு துயரம் படர்ந்திருக்கிறது. நானும் என் அப்பா மாதிரி ஆகி விடுவேனோ என்று !'

அக்கிரஹாரத்தில் பாதிக்குமேல் வீடுகள் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. முன்னோர்கள், நல்லபடியாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தபோது கட்டிப்போட்ட வீடுகள்; பெரும்பாலும், குடும்பத்தில் வருவாய் குறையக் குறையச் சரி செய்து புது வண்ணம் வைத்து இடிபாடுகளை அகற்றும் சக்தி குறைகிறது. மொத்தம் இரண்டு சரகங்களிலும் இருந்த வீடுகள் பதினெட்டுதான். இதில் பத்து வீடுகள் மேலும் மேலும் க்ஷணமடைந்து கொண்டிருக்கின்றன. எஞ்சிய எட்டு வீடுகளில் என் வீடும் ஒன்று. சற்றே உயரமாக, நாலு படிகள் ஏறிப்போக வேண்டிய வீடு. இரண்டு விசாலமான, குண்டு குழியில்லாத "சௌகரியமாகப் படு, படு" என்று வற்புறுத்துகிற திண்ணைகள். திண்ணையில் தெரிகிற ஜன்னலில் காற்று புகலாமே தவிர, வெளிச்சம் புகாது – அந்த ஒன்றும் காமிரா அறை என்று சொல்லுகிற அறையைச் சேர்ந்தது. இருட்டான ரேழி. அதைத் தாண்டினால் மரத் தூண்கள் ஓட்டுக் கூரையைத் தாங்க, ஒரு தாழ்வாரம். தாழ்வாரம் தாண்டிப் பெரிய முற்றம். தாழ்வாரத்துக்கப்பால் கூரையைத் தூண்கள் தாங்க மறுபடி ஒரு தாழ்வாரம். அதற்கப்பால் இரண்டு தாழ்வாரங்கள் அளவிற்கு ஒரு பெரிய கூடம். பெரிய கூடத்தின் எதிர்க் கோடியில் பின் பக்கத்தை எட்டும் கதவு. மூலையில் நெற்குதிர் பத்தடி உயர மிருக்கும். மரக்குதிர். எப்போதும் நெல் நிறைந்திருக்கும். நடுக்கூடத்தில் ஊஞ்சல். அம்மாவுக்கு உடம்பு சரியாக இருந்திருந்தால் ஊஞ்சலில் தான் உட்கார்ந்திருப்பாள். ஆனால், இப்போது ஊஞ்சலுக்குப் பக்கத்தில் உள்ள விசு பலகையில் படுத்திருக்கிறாள்.

அம்மாவைப் பார்ப்பதற்கு முன் நான் அவளைப் பார்க்கிறேன். அவள் ஊஞ்சலில் வீட்டுக்குச் சொந்தக்காரி போல அமர்ந்திருக் கிறாள். 'இதென்னடா இது? இவளை யார் உள்ளே விட்டார்கள்?" என்று எனக்குத் தோன்றிற்று இது என்ன அதிசயமாக இருக்கிறதே என்று யோசித்தவனாக "யாரு? மிரியமா?" என்றேன்.

"ஆமாம். என் அக்கா லிஸ்ஸத்தை உங்கம்மாவுக்கு உடம்பு சரியாயில்லை என்று கூட்டி வந்தார்கள், நானும் வந்தேன்'' என்றாள் மிரியம்.

ஸெகியலின் இரண்டாவது மகள் – லிஸ்ஸத் – கைராசிக்காரி என்றும், அவள் வைத்தியம் செய்யச் சம்மதித்துச் செய்தால் மிகவும் சிக்கலான வியாதிகூடத் தேறிவிடும் என்றும் ஊரில் ஒரு வதந்தியிருந்தது எனக்கும் தெரியும். தருமத்திற்குத்தான் வைத்தியம். தெரிந்த மருந்துகளைக் காசு வாங்கிக் கொள்ளாமல் – கைக் காசை செலவழித்துப் பிரயோகம் செய்பவள்

லிஸ்ஸத் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். இந்தப் பெண் மிரியமும் அவளுடன் வருவாள் என்பது எனக்குத் தெரியாது.

"எனக்கும் வைத்தியம் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசை. அதனால் அவளுடன் நானும் வருவேன். பார்த்துத் தெரிந்துகொள்வதுதான் முக்கியம் என்று எனக்கு நினைப்பு'' என்றாள் மிரியம்.

‘‘நான் வள்ளுவனுடன் வருகிற மாதிரி – கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே என்று."

"அம்மாவுக்கு ஒன்றும் ஆபத்தில்லை என்று லிஸ்ஸத் சொன்னாள். மருந்து கொண்டு வரத்தான் போயிருக்கிறாள். வந்து விடுவாள்" என்று ஊஞ்சலிலிருந்து எழுந்திருக்கப் போன மிரியத்தைக் கையமர்த்திவிட்டு, நான் அம்மாவின் பக்கம் போய் நின்று பார்த்தேன். ‘‘வந்தாயா! வாடா!'' என்றாள் அம்மா பலஹீனமாக.

"என்னம்மா செய்தது உனக்கு? என்ன?'' என்றேன், என் குரலில் என் மனசிலிருந்த துன்பமெல்லாம் ஒலிக்க.

"கிறுகிறுவென்று வந்தது. விழுந்து விட்டேன் போல் இருக்கு. உன் அப்பா வந்து பார்த்துவிட்டு குய்யோ முய்யோ என்று கூச்சல் போட்டார். பக்கத்து வீட்டுக் கிட்டா மனைவி பர்வதம் தூக்கிக் கொண்டு வந்து விசுப் பலகையில் கிடத்திவிட்டுத் தன் பிள்ளையை அனுப்பி அந்த லிஸ்ஸத்தை அழைத்துவரச் சொன்னாள். அவ்வளவு தான். அப்பா வந்ததும் உன்னைக் கூட்டி வர அனுப்பினேன். இப்போ தாவலை!'' என்றாள் அம்மா.

தாவலை என்று அம்மா சொன்னதுமே எனக்குக் கவலை விட்டுப் போய்விட்டது மாதிரி இருந்தது. எல்லோரும் இந்தப் பக்கத்தில் தேவலை என்று சொல்வதை அம்மா எப்போதும் தாவலை என்றுதான் சொல்வாள். நான்கூடக் கேலி செய்வதுண்டு. கேலி செய்தால்கூட, "அது எங்கள் பக்கத்துப் பழக்கம்,'' என்று சொல்வாள் அம்மா. அதற்குப் பிறகுதான் அவள் எந்தப் பக்கம் என்று கேட்டுத் தெரிந்துகொண்டேன்.

அம்மா பிறந்த தேசம் சோழதேசம். மாயூரத்துக்கும் பக்கத்தில் ஒரு கிராமம். அப்பா வேத பாடசாலையில் மாயூரத்தில் வேத பாராயணம் பண்ணிக் கொண்டிருக்கும் போது பதினாறு வயசான வெங்கடரமணனுக்கு சாவித்திரி என்கிற ஒன்பது வயசுப் பெண்ணைக் கல்யாணம் செய்துவைத்து விட்டார்கள். ஊர் ஊராகச் சுற்றிப் பிழைப்புத் தேடிக் கடைசியில் கபாலிக்ஷேத்திரம் வந்தடைவதற்கும், நான் பிறப்பதற்கும் சரியாகப் போய்விடவே அதற்கு மேலே அலையாமல், மயிலாப்பூரில் தாத்தா கட்டிய

வீட்டிலேயே தங்கிவிட்டார். அதிகமாக மேடு பள்ளங்களில்லாத சராசரி வாழ்க்கை அவர்களுடையது!

என் வாழ்க்கையும் அப்படி மேடு பள்ளங்களில்லாத வாழ்க்கையாக அமைந்துவிடக் கூடாதே! அதில் சுவாரஸ்யம் சிறிதும் இருக்காதே என்றுதான் எனக்குத் தோன்றியது.

எது எப்படியானாலும் என் அம்மா கஷ்டப்பட்ட மாதிரி என் மனைவி கஷ்டப்படாதிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. ஊமையடியாக எத்தனை அடிகளை என் அம்மா தாங்கியிருப்பாள் என்று நினைக்கும்போது என் அப்பாவைப் பற்றி எனக்குக் கோபம் கோபமாக வரும். பொறுமை நிறைந்த என் அம்மாவும், பிறர் மனை விழைவதே லட்சியமாகக் கொண்ட என் அப்பாவும் என்னை ஏதோ ஒரு வழியில் புகுத்த முனைகிறார்கள் என்ற நினைப்பில் என் வழியே போக முயன்று கொண்டிருந்தேன் நான்.

வள்ளுவன் எனக்கு உறுதுணை!

## அத்தியாயம் 6

மிரியத்தை நான் என் வீட்டில் எதிர்பார்க்கவில்லை என்று சொன்னால் மிகையாகாது.

அந்தரங்கத்தில் என்னைப் பற்றிய வரையில் அவளை என் வீட்டுக்கு நிரந்தரமாக அழைத்துக்கொண்டு விடவேண்டும் என்றுதான் ஆசை. ஆனால், அது ஒருபோதும் சாத்தியமாகாது என்றும் தெரியும்.

பிராமணனாகப் பிறந்து விட்டவனுக்குக் கட்டுப்பாடுகள் பல விதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் பலவற்றை மீறுவது சுலபம்தான். அப்படி மீறுவதை இலைமறைவு, காய்மறைவாக வைத்துக் கொண்டிருந்தால், ஊருக்குப் பயப்பட்டுத் தலைகுனிந்து போய்க்கொண்டிருந்தால், ஒருவரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். உதாரணமாக என் தகப்பனார் இருக்கிறார். அவர் ஊர் மேய்கிறார் என்பது ஊர்ப் பிரசித்தம். அதைப் பற்றி அவர் கவலைப்படுகிற மாதிரி தலைகுனிந்து போய்க் கொண்டிருக்கிற வரையில் ஒருவரும் ஒன்றும் சொல்வதில்லை.

பிராமணத் தெருவில் புகுந்து விளையாடுகிற தைரியம் இல்லாமல் அவர் பல 'கீழ்ஜாதிப் பெண்களிடம் சகவாசம் வைத்துக் கொண்டிருந் தார். காசு பணம் கிடையாது. விலைமாதர்களிடம் போக இயலாது. தான் ஆண்

அழகன், தன் தடித்தனம் சில பெண்களுக்காவது மனோல்லாசமாகப் பிரயோஜனப்படும் என்று அறிந்து தன் காரியங்களை முடித்துக் கொள்பவர் அவர்.

எனக்கு என்னவோ அந்தச் சாமர்த்தியங்களெல்லாம் கிடையாது. எனக்கு இன்னும் பெண்களைப் பற்றிய நினைப்பே வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும் – முப்பது வயதிருக்கும் எனக்கு ஒரு அனுபவமும் கிடையாது. யாராவது ஒரு பெண்ணை மணந்து அவளைக் கன்னிப் பையனாகவே அணுகவேண்டும் என்கிற மரபு வழியான நினைப்பு. வள்ளுவனைத் தெரிந்துகொண்ட பின் அவன் வீட்டுக்குப் போய் அவன் தாயார் ஆதியையும், அவன் மனைவி வாசுகியையும் அறிந்த பிறகு, அவர்களைப் போல் ஒரு பெண் வேண்டு மென்று எண்ணுகிறேன். இந்த இருவருடன் என் அம்மாவைப் போலவே பொறுமைசாலியான, எந்த விஷயத்திலும் தன்னை முன்னுக்குத் தள்ளிக் கொள்ளாத பெண்ணாகக் கிடைக்க வேண்டும் என்று எனக்கு ஆசை.

தன் தாயார் பார்வதியைப் போலத் தனக்கு மனைவி கிடைக்க வேண்டும் என்று விநாயகர் குளத்தங்கரையிலும் தெருச் சந்திகளிலும் உட்கார்ந்து காலங் காலமாகத் தேடிக் கொண்டிருப்பதாகப் புராணங்கள் எதுவும் கூறாவிட்டாலும், ஜனங்கள் நம்புகிறார்கள்.

எனக்கு மிரியத்தைப் பார்த்தது முதலே மனதில் ஒரு சலனம் – எப்போதுமில்லாத ஒரு சலனம் ஏற்பட்டு விட்டது.

அவளை முதன் முதலாகப் பார்த்த காலதேச வர்த்தமானம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. மீனவர் குப்பத்தில் யாரோ ஒருவன் தெருவில் விழுந்து கிடக்கிறான் – சேர் சகதி குப்பை மேடுகளுக்கு மத்தியில் அந்தப் பக்கமாகக் கடற்கரையில் காற்று வாங்கிக்கொண்டு நடந்து கொண்டிருந்த வள்ளுவனும், நானும் அமளி கேட்டு அங்கு போனோம் அங்கு நாங்கள் போய் சேருவதற்கும், அங்கே ஒரு பெண்மணியும், மிரியம் என்கிற இந்தப் பெண்ணும் வருவதற்கும் சரியாக இருந்தது. கீழே கிடந்தவனை யாரோ அடித்துக் குற்றுயிரும் குலையுயிருமாகப் போட்டிருக்கிறார்கள்.

கொஞ்சங்கூடச் சங்கோஜமோ, தயக்கமோ இல்லாமல், பெரிய பெண்மணி தன்னுடன் வந்த சிறியவள் கொண்டுவந்த பையிலிருந்து மூலிகைகள், அரைக்கக் கல் எல்லாம் எடுத்து, குடிசை ஒன்றிலிருந்து தண்ணீர் வாங்கி வந்து சந்தனம் மாதிரி அரைத்து அதைத் தன் அழகிய விரல்களினாலேயே அடிபட்ட இடங்களிலெல்லாம் தடவுகிறாள். மிரியம் என்ற சின்னப் பெண்ணைக் கூப்பிட்டு வீட்டுக்கு ஓடிப்போய் ஏதோ ஒரு குப்பியைச்

சொல்லி அதை எடுத்து வா என்கிறாள். அவர்கள் பேசுகிற பாஷை எனக்குப் புரியவில்லை . ஆனால், மிரியம் என்று அவள் கூப்பிட்ட அந்தப் பெயர் என் மனசில் நின்றுவிட்டது. நண்பகலில் அவள் போனபிறகு சூரியன் அஸ்த மனமாகிவிட்டது போல இருட்டாகி விட்டது. அவள் திரும்பி வந்ததும் உதயமானாற் போல இருந்தது.

இதெல்லாம் பற்றி எதுவும் நான் வள்ளுவனிடம் பேசவில்லை. ஆனால், வள்ளுவன் மிக மிக அறிவாளி. அவனைச் சிலர் நான் என்றே கூறுகிறார்கள். அவன் எனக்கு நெருங்கிய தோழனே தவிர, மற்றவர்கள் அதைக் கண்டு, அவன் அறிவுக் கூர்மையைக் கண்டு பயப்படுகிறார் கள். அறிவாளி அல்லாதவர்கள், மௌடியர்கள் அறிவுள்ளவர்களைக் கண்டு இப்படிப் பயப்படுவார்களோ! அப்படியொன்றும் நான் அறிவாளியல்லவே, எனக்கு ஏன் வள்ளுவனிடம் மட்டும் இந்த நட்பு நெருக்கம் ஏற்பட்டிருக்கிறது!

மிரியம் பற்றிய இந்த என் மனச் சஞ்சலம் சற்றும் பயனற்றது என்று எனக்குத் தெரியும். அவள் செல்வந்தர்களின் கடைக்குட்டி. அழகாகவும் இருக்கிறாள். சுதந்திரமாக இருக்கிறாள். கட்டுப்பாடுகள் அதிகம் இருப்பதாகத் தெரியவில்லை. என்னைப் பற்றி வீட்டின் மருமகனாக அவர்கள் நினைப்பதற்குக்கூடச் சந்தர்ப்பம் இராது. தவிரவும், அவள் அந்நிய மதத்தினள். அந்நிய தேசத்திலிருந்து இங்கு வந்திருப்பவள். குலங்கோத்திரம் என்று பெருமை பேசித் திரியும் பிராம்மணர்களைச் சேர்ந்த நான், அவளை எக்காரணம் கொண்டும் மணமுடிக்க முடியும் என்று தோன்றவில்லை. அதற்கு வாய்ப்பே யில்லை என்று தெரிந்திருந்தும் ஏன் இந்த மனச் சஞ்சலம்?

நானும் என் அப்பாவைப் போலத்தானோ!

கண்ட பெண்களைச் சுற்றிக் கொண்டு...

மிரியத்தையும் கண்ட பெண்கள் கோஷ்டியில் சேர்க்க என்னால் முடியவில்லையே! என்ன செய்ய?

"அம்மாவுக்கு உடம்பு சரியாகிவிடும். கவலைப்படத் தேவையில்லை!'' என்றாள் மிரியம். ‘‘இப்படி உட்காருங்கள்'' என்று ஊஞ்சலில் தனக்குப் பக்கத்தில் இடத்தைக் காட்டினாள். எனக்குத் தான் உட்காரத் தைரியம் வரவில்லை .

"எப்படி அம்மா இருக்கிறது இப்போ?" என்று கேட்டுக்கொண்டு அம்மா படுத்திருந்த விசுப் பலகையின் பக்கத்திலேயே நின்றேன்.

"லிஸ்ஸத் அக்கா மருந்துகொண்டு வரப்போயிருக்கிறாள். நான் அம்மாவைத் தனியாக விட்டுவிட்டுப் போக வேண்டாம் என்று தங்கினேன். வீட்டிலே வேறு யாருமில்லையே!" என்றாள் மிரியம் பின்னர், "உங்கள் நண்பர் வள்ளுவர் ..."

"அவன் இங்கேயெல்லாம் வருவதற்கு அனுமதி கிடையாது. அவன் கீழ்ச்சாதி. பிராம்மணர் தெருவில், அவன் காற்றுக் கூடப் படக் கூடாது என்கிறார்கள்'' என என் ஆற்றாமையை ஒருவிதமாக வெளிப்படுத்திக் கொண்டேன்.

"எங்களிலேகூட இந்த மாதிரியெல்லாம் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் உண்டு. சாப்பாடு, யாரோடு பழகலாம், யாரைத் திருமணம் செய்து கொள்ளலாம், யாருக்கு அறிவு உதவி செய்யலாம், யாருக்கு வைத்தியம் செய்யலாம் – என்கிற மாதிரியெல்லாம் ஏகப்பட்ட விதிகள் உண்டு. இங்கே யூத சமூகம் என்று சொல்லக்கூடிய ஒன்று இல்லாததால் நாங்கள் சுலபமாக வீட்டை விட்டு வெளியே வர முடிகிறது – எல்லோருடனும் பழக முடிகிறது."

"கட்டுப்பாடுகளும், அவற்றிற்கு அடங்கி நடப்பதும் மிகமிகத் தேவைதான்," என்றாள் அம்மா ஹீனஸ்வரத்தில். அவளும் பேச்சைத் தொடர்ந்து அதில் கலந்து கொண்டது எனக்கு மிகவும் திருப்தியாக இருந்தது.

"சிலரால் கட்டுப்பாடுகளை மீறாமலிருக்க முடியாது – என்னைப்போல'' என்றாள் மிரியம். இதை அவள் தற்பெருமை யாகவோ, மதிப்பாகவோ சொல்லவில்லை. ஒரு விநாடி கழித்து, ‘‘உங்கள் பிள்ளையும் அப்படித்தான், என்று தோன்றுகிறது'' என்றாள்.

"என் புருஷனும் அப்படித்தான்" என்று கசப்புத் தொனிக்கச் சொன்னாள் அம்மா.

"யார் யார் எந்த மாதிரியான கட்டுப்பாடுகளை மீறுகிறார்கள் என்பதைப் பொறுத்து, இதில் நல்லது, கெடுதல் சொல்வது," என்றேன் நான் அவசர அவசரமாக. மிரியத்துக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கிறது என்றாலும் அம்மா வாயால் என் அப்பாவைப் பற்றி அவள் எதிரில் எதுவும் சொல்ல வேண்டாம் என்று என் நினைப்பு.

அதை நல்ல வேளையாக விட்டுவிட்டு மிரியம் வேறு ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினாள். "எங்கள் யூத குலத்தில் ஒரு மெஸ்ஸையா தோன்றப் போவதாகவும், அவர் தோன்றியவுடன் உலகில் கடவுளின் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார் என்றும், உலகம் பூராவும் அன்பு

வழியில் ஒரே குலமாக நிற்க அவர் வழி வகுத்துத் தருவார் என்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது.

"அந்த மெஸ்ஸையா வந்துவிட்டதாகவும் ஒருசாரார் நம்புகிறது போலத் தோன்றுகிறதே!" என்றேன் நான். அதுபற்றித்தான் – ஓரளவுக்கு எனக்குப் புரியாத வகையில்தான் என்றாலுங்கூட – சற்றுமுன் உன் தகப்பனாரும் வள்ளுவனும் பேசிக் கொண்டிருந்தார் கள். நான் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்."

"ஏசு என்ற பெயர் பெற்ற, 32, 33 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து, குற்றவாளி என்று யூதர்களால் கருதப்பட்டுச் சிலுவையில் உயிர் துறந்தவரைக் கிறிஸ்துவாக, எதிர்பார்க்கப்பட்ட மெஸ்ஸையாவாகப் பலர் கருதுகிறார்கள் என்றாலும் அவர் வருகையினால் அன்போ , சமாதானமோ நிலைத்ததாகத் தெரியவில்லை" என்றாள் மிரியம். "அதற்கு மாறாக யூதர்களிடையேகூட ஏசுவினால் சண்டையும், பூசலும் வளர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். உண்மை என்ன என்பது தெரியவில்லை ."

"உண்மை என்பது அப்படி ஒன்றும் தெள்ளத் தெளிந்த விஷயமாக எப்போதுமே தெரிவதில்லை என்று வள்ளுவன் சொல்கிறான். பிறருக்குத் தீங்கு விளைவிக்காத உண்மைகளையே போற்ற வேண்டும் என்று அவன் அடிக்கடி சொல்கிறான்," என்றேன். என்னைப் பற்றிய சிந்தனைகளிலிருந்து விடுபடுவதற்கு வள்ளுவனைப் பற்றிப் பேசுவது சுலபமான வழியாக எனக்குத் தோன்றியது.

"வள்ளுவர் உங்கள் மதத்தைச் சேர்ந்தவரில்லை இல்லையா?"

"அவர் மதம் எங்கள் பிராம்மண மதத்துக்கும், வேத மதத்துக்கும் முந்தியே இருந்து வந்திருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். ஆனால், வள்ளுவனுக்கும் அவன் மதமும் பூரண சம்மதம் இல்லை . மதங்களுக்கும், கொள்கைகளுக்கும் அப்பாற்பட்டதாக ஒரு மனுஷ்யத்வம் நிறைந்த லட்சியம் வேண்டும் என்கிறான்."

"தேட வேண்டியதுதானே!" என்று கூறி நகைத்தாள் மிரியம். அந்த நகைப்பில் துயரமும் இருந்தது. சிந்திக்கும் திறனும் இருந்தது. சிந்தனைகளைக் கடந்து நிற்கும் ஒரு பூரணமும் இருந்தது. அல்லது எனக்குத்தான், மிரியத்திடம் இருந்த ஈடுபாட்டினால் இப்படித் தோன்றியதோ!

அவளுடன் இப்படியே எத்தனை நேரம் வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருக்கலாம் போல இருந்தது எனக்கு. ஆனால், இதற்குள் என்

அப்பா வந்தார். "எப்படிடா இருக்கு அம்மாவுக்கு வாதூ? – என்ன பேசிக் கொண்டே நிற்கிறாய்?'' என்று என்னில் தன் குற்றத்தையே கடிவதுபோலச் சொன்னார்.

அம்மாவே அவர் கேள்விக்குப் பதில் சொன்னாள் "எனக்கு இப்போது உடம்புக்கு ஒன்றுமில்லை. நீங்கள் அப்படி ஒன்றும் கவலைப்பட வேண்டாம். இன்னும் கொஞ்சம் நாள் அனுபவிக்க வேண்டியது பாக்கியிருக்கு.'

"சரி! சரி! ஆரம்பித்து விடாதே, தொணதொணக்க உடம்பு சரியாகப் போகட்டும்," என்று அப்பா கூறிவிட்டு மிரியத்தை ஏறிட்டுப் பார்த்தார். அவர் அப்படி மிரியத்தைப் பார்ப்பது எனக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால், எப்படிச் சொல்வது?

"நீ யூத வியாபாரி ஸெகியல் மகள்தானே?" என்றார் அப்பா.

"ஆமாம். வைத்தியம் செய்ய வந்த லிஸ்ஸத்துடைய தங்கை" என்றாள் மிரியம் அவரை நேருக்கு நேர் பார்த்துக்கொண்டு.

''இந்தப் பயலுக்கு உங்கள் வியாபார ஸ்தாபனத்தில் ஏதாவது ஒரு வேலை போட்டுக் கொடுக்கச் சொல்லேன் – சும்மா இந்த வயதில் கவலைப்படாமல் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறான்'' என்றார் அப்பா.

எனக்கு உடலும் மனசும் கூசிக் குறுகியது. என்னவோ எதையோ மிதிக்கக் கூடாததை மிதித்துவிட்ட மாதிரி இருந்தது.

மிரியம் உரக்கச் சிரித்தாள். ''அவருக்கு வேலை நிறையவே இருக்கிறது. வியாபார ஸ்தாபனத்தில் வேலை தேவையில்லை. ஊரும், உலகமும் உய்ய வழி தேடிக் கொண்டிருக்கிறார் அவர். எங்கள் வீட்டுக்கு அவர் வேலைக்காரனாக வரமாட்டார்" என்றாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இந்தப் பெண் மகா துடுக்குக்காரிதான். என் மனத்திலிருந்த விஷயம் எப்படி அவளுக்கு எட்டியிருக்கிறது? தான் ஊகித்த விஷயத்தை வள்ளுவன் அவளுக்கும் சொல்லியிருப்பானோ?

மிரியம் தொடர்ந்து சொன்னாள். "உங்கள் மகனைப் பற்றி உண்மையிலேயே கவலைப்படுவதாக இருந்தால், அவருக்குக் கூடிய சீக்கிரமே உங்கள் குலத்திலேயே ஒரு பெண் பார்த்துத் திருமணம் முடித்து வையுங்கள். இல்லாவிட்டால்...''

பெரிய மனுஷி மாதிரி இந்தச் சிறு பெண் தன்னைக் கேலி செய்வது போல ஏதோ சொல்வது, அவருக்கு அது தெளிவாகவே புரிந்தாலும், பிடிக்கவில்லை. "இல்லாவிட்டால்..." என்று சற்று விரைப்பாகவே கேட்டார்.

"நீங்கள் அடுத்த தெரு அஞ்சலையைத் தேடிக்கொண்டு போவதுபோல நிலைமை கை மீறிவிடும் – கட்டுக்கடங்காது போய்விடும்."

அடுத்த தெரு அஞ்சலையைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறாள் மிரியம் என்று தெரிந்த உடனே சற்று அடங்கிவிட்டார் அப்பா. ஆனால், அது அப்படியொன்றும் ரகசியமும் இல்லை. ஊர் அறிந்த விஷயம்தான்!

"அதோ அக்கா வருகிறாள். ஆனால், இன்னொன்றும் சொல்லிவிடுகிறேன். எனக்கு ஜோசியமும் எதிர்காலத்தைப் பற்றி அறிகிற வித்தையும் கைவந்த கலை. அதனால்தான் சொன்னேன்" என்றாள் மிரியம்.

லிஸ்ஸத் தன் மருந்துப் பெட்டியுடன் உள்ளே வந்ததும் அதுதான் சமயமென்று அப்பா நழுவிவிட்டார். தேவையான மருந்துகளைக் கொடுத்து, அவற்றை எப்படி அம்மாவுக்குத் தர வேண்டும் என்று விரிவாக என்னிடம் சொல்லிவிட்டு, "அம்மா உங்கள் அன்புக்காக ஏங்குகிறார். அவரைப் பட்டினி போட்டு விடாதீர்கள்?" என்று ஒரு மூத்த பெண்மணியின் தோரணையில் எனக்கும் அறிவுரை கூறிவிட்டுத் தன் தங்கையை நோக்கி, "வழக்கம்போல இங்கு ஏதாவது விஷமம் செய்தாயா?" என்று கடிந்தமாதிரி கூறிவிட்டு, அவள் பதிலுக்கு எதிர்பார்க்காமல் அவளையும் அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

அம்மா விசுப் பலகையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு நான் கொடுத்த மருந்தை அருந்திவிட்டு, "அந்தச் சின்னப் பெண்ணை எனக்கு மிகவும் பிடித்திருக்கு! என்ன கலகலப்பான சிரிப்பு! என்ன கபடமற்ற பேச்சு! அழகாகவும் இருக்கிறாள்! ஐசுவரியமும் இருக்கிறது. கோடீஸ்வரராக்கும் அவள் அப்பா! அவள்தானாகட்டும் அவள் அக்காதானாகட்டும் மனிதர்களிடம் எத்தனை அபிமானம் வைத்திருக்கிறார்கள்! என்னைத் தேடிவந்து வைத்தியம் செய்து ஒரு காசுகூடக் கேட்காமல் போகிற பெருந்தன்மை யாருக்கு வரும்!'' என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

அம்மாவுடைய பெருமூச்சின் அர்த்தம் எனக்கும் புரிந்தது. நானும் பெருமூச்சு விடுவதைத் தவிர என்ன செய்ய இயலும்! ஊஞ்சலில் சற்று முன் மிரியம் உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்து நானும் பெருமூச்சு விட்டேன். அம்மா என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

# அத்தியாயம் 7

கட்டுப்பாடு, விதிமுறைகள் என்றெல்லாம் சொல்கிறார்களே தவிர, பிராமணர்களின் வாழ்க்கை அப்படியொன்றும் சகட்டுமேனிக்கு ஒரே மாதிரியாக இல்லை. ஒருவனுக்கு மனமிருந்தால் வேதவித்தாக தருமத்தின் மூலை முடுக்குகளில் வளைய வந்து கொண்டிருக்கலாம். மனமில்லாவிட்டால் அரைகுறை ஞானத்துடன், வேதங்களில் சொல்லப்பட்டிருப்பதைச் சந்தர்ப்பத்திற்கேற்றபடி மனப்பாடம் தவறாமல், சந்தம் தவறாமல் முணுமுணுத்துக் கொண்டு, அவற்றின் அர்த்தங்களைத் தெரிந்து கொள்ளாமலும், அர்த்தத்தைப் பற்றியோ, அவற்றின் முடிவு, லட்சியம், போக்கு எது பற்றியுமோ கவலைப்படாமல் காலந்தள்ளி விடலாம்.

எனக்குத் தெரிந்தவரையில், முன்காலத்தில் எப்படி இருந்ததோ, இன்று இந்தப் பிராமணத் தெருவில் உள்ள இருபத்திரண்டு பிராமணர்களில் ஒருவர் – அதிகம் போனால் இருவருக்குத்தான் ஓரளவுக்காவது வேதங்களின் போக்கும், அர்த்தமும், பிராமண வாழ்க்கை வழிகளின் தாத்பரியமும், லட்சியமும் தெரிகிறது என்று சொல்வேன். மற்றவர்கள், பிராமணர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டாலும், சில சமயம் பெருமை பாராட்டிக் கொண்டாலும், தலையை ஆட்டுகிற சமயத்தில் ஆட்டிக்கொண்டு, "எவன் தலையில் அட்சதையைப் போடறது" என்று சொல்லிக் கொண்டு கிடைக்கிற காசு பணத்தை வாங்கி இடுப்பில் முடிந்து கொள்ளுகிறார்கள்.

பெருமை பாராட்டிக்கொள்வது என்பது பரம்பரையாக வருகிறது. இந்தப் பெருமைக்கு ஒரு இழுக்கு, குலத்துக்கே கெடுதி செய்கிறோம் என்கிற நினைப்பு என் தகப்பனார் போன்ற பிராமணாளுக்குத் தெரியவில்லையே – அதேன்?" என்று என்னையே நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிராமணவத்தில் பெருமையிருக்கலாம். எப்போது? என்ன செய்கிறோம் என்று தெரிந்து செயல்படும்போது. என் தகப்பனாரைப் போலத் தப்புத்தண்டா செய்து கொண்டு, அதை மறைப்பதையே வாழ்க்கையில் பெரும் பயனாக இருப்பவர்களைக் காணும்போது, 'நான் ஏன் பிராமணனாகப் பிறந்தேன்?' என்று எண்ணத் தோன்றுகிறது. பெருமை பாராட்ட வேண்டுமானால் பெருமைப்படக் கூடிய விஷயங்களில் ஈடுபடவேண்டும். பெருமை தருகிற காரியங்களில் ஈடுபட வேண்டும்.

'செயற்கரியன செய்வோர் பெரியோர்; சிறியோர் செயற்கரியன செய்யமாட்டாதவர்,' என்று வள்ளுவன் சொல்கிறானே– அது மிகவும் சரியான விஷயம்தான்.

கட்டுப்பாடுகளினாலோ, குறுகிய வழிகளை வகுத்துக் கொண்டிருக் கிறார்களே என்பதனாலோ எனக்குப் பிராம்மண குலத்தினிடம் அதிருப்தியில்லை. செய்யத் தகாத காரியங்களைச் செய்துவிட்டு, அவைகளை மறைத்துவிட்டு, ஏதோ பெரிதாகத் தங்களால்தான் உலகில் தருமங்கள் தழைப்பதாகச் சொல்லிக்கொண்டு திரிபவர்களைப் பற்றித்தான் என் சிறுமை உணர்வெல்லாம். ஊருக்கு உதாரணமாக வாழ வேண்டியவர்கள் நீசத்தனமான காரியங்களில் ஈடுபடும்போது பிராமணத்துவம் குறுக்கிடாத வகையில் அந்தப் பிராமணத்துவத்தி னால் என்ன பயன்? நான் பிராமணனாகப் பிறந்தது பற்றி எனக்குப் பெருமை பாராட்டுவதற்குப் பதில் சிறுமையுணர்ச்சியே தோன்றுகிறது.

வள்ளுவன் என்னை அடிக்கடி மடக்குகிறான். "உன் தகப்பனார் நீ சிறுமைப்பட வேண்டிய அளவில் நடந்து கொள்கிறார் என்றால், நீ பிராமணர்களும் வியக்கும்படியாக லட்சிய வாழ்வு வாழ்ந்து காட்டேன்" என்று எனக்கு ஆணித்தரமாக அறிவுரை கூறுகிறான்.

நான் முயற்சி செய்யாமலில்லை. வேதபாராயணத்திலும், வேதத்தின் சடங்குகள், மந்திரங்கள், போக்குகள் இவற்றை அறிந்து கொள்வதிலும் மிகவும் பூரணமான ஈடுபாட்டுடன்தான் முயன்றேன். அறிவுபூர்வமான எத்தனை கல்வி, கேள்வி கற்றுக்கொள்ள முடியுமோ அத்தனையையும் கற்றுக் கொண்டேனே தவிர, தெளிந்தபாடில்லை. இப்படியிப்படித் தான் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறதே? ஏன்? வேறு விதமாகச் செய்தால் என்ன? வேதத்தில் சொல்லியிருப்பதைக் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிறார்களே ஏன்? கேள்வி கேட்பது தவறா என்ன? கேள்வியே கேட்காமல் விஷயங்களை உள்ளபடித் தெரிந்து கொள்வது எப்படி?

வள்ளுவன் சொல்கிறான்: "எல்லா மதங்களிலுமே இதற்குமேல் எந்தக் கேள்வியும் கேட்பது உசிதமல்ல என்று ஒரு வரையறை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். பிராம்மண மதத்திலிருந்த வரையறை பெரும்பகுதியை வளைக்கிறது. ஜைன மதத்தில் இந்த வரையறைப் பகுதி சற்றுக் குறைவு என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படித் தோன்றுவது நான் ஜைனனாகப் பிறந்ததனால் இருக்கலாம். பௌத்தமும், ஏன், ஸெகியலின் யூத மதமும்கூட ஞானத்தில் சில பகுதியை அணுகும்போது இதற்குமேல் கேள்விகள் கேட்கக் கூடாது என்றுதான் சொல்கிறது."

"ஞானத்திலும் பகுதி, கால், அரை என்று உண்டா என்ன?" என்று நான் கேட்டேன்.

வள்ளுவனே ஒரு நிமிஷம் எனக்குப் பதில் சொல்லத் தெரியாமல் திணறிவிட்டான். பிறகு சமாளித்துக்கொண்டு சொன்னான். "ஞானத்தைப் பிய்த்துப் பார்க்க முடியாது தான். ஞானம் என்பது ஒட்டுமொத்தமாக ஏற்படுவது தான். புத்தர் காலத்தில் எங்கேயோ மேலை நாடுகளில் வாழ்ந்த ஞானி, 'எனக்கு ஒன்றும் தெரியாது என்கிற ஞானத்தையே நான் பூரணமாகக் கருதுகிறேன்' என்றானாம். அதேபோலக் கீழை நாட்டில் சற்றேறக்குறைய அதே காலத்தில் வாழ்ந்த ஒரு ஞானி, 'மனிதனுக்கு அன்றாட வாழ்க்கையில் பயன்படாத ஞானம் எதுவும் ஞானம் என்கிற பெயருக்கு லாயக்கற்றது' என்று சொன்னதாக அந்த தேசத்து அறிவாளிகள் சொல்லக் கேட்டிருக்கிறேன்."

"நான் சொன்னதற்கு இது பதில் இல்லையே'' என்றேன்.

"அதாவது...."

"இது வரையில்தான் கேள்விகள் கேட்கலாம். இதற்கு மேல் கேள்விகள் கேட்பது தவறு என்று சொல்லிவிட்டால் அது சரியாகுமா?

"சரியல்ல என்றே வைத்துக் கொண்டாலும், மனித அறிவும், அதன் காரணமாக வருகிற ஞானமும் பூரணமாக முடியாது என்று ஏற்படுகிறது. உண்மையில் அதனாலேதான், இத்தனை சமயங்கள், வாழ்க்கை வழிகள், தத்துவங்கள் உலகில் இருக்கின்றன. நமக்குத் தெரிந்தே நமது மக்களிடையே இருபது தினுசான தனித்தனி மதங்கள் இருக்கின்றன. வேறு தேசங்களில், வேறு சந்தர்ப்பங்களில் எத்தனையெத்தனை சிந்தனைப் போக்குகள் இருக்கின்றனவோ? இருந்தவை, இருப்பவை போக, வருகிற – எல்லையில்லாது விரிகிற காலத்தில் இன்னும் எத்தனையெத்தனை நம்பிக்கைகள், மதங்கள், சடங்குகள், சம்மதங்கள்! நம்பிக்கைகள், சடங்குகளால் எத்தனை யெத்தனை பூசல்கள் விளையப் போகின்றனவோ – யார் சொல்ல முடியும்? அதை எண்ணிப் பார்க்கும்பொழுது பயமாகத்தான் இருக்கிறது" என்றான் வள்ளுவன்.

"அதெல்லாம் பெரிய விஷயங்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. மனித குலத்தின் விதியை, மதியை நினைத்து எதுவும் செய்ய – சீர்திருத்தவோ, அனுதாபப்படவோ, கண்ணீர் பெருக்கவோ எனக்குச் சக்தியில்லை. ஆனால், இந்த மயிலை நகரில் தெருத்தெருவாகச் சுற்றி வரும்போது – எனக்கு ஒரு இடத்திலும் இருப்புக் கொள்ளவில்லை என்பது உண்மைதான் – என் அப்பாவின் சிறுமைதரும் காரியங்கள் என்னைப் பின்பற்றி வருகின்றன – தெரு நாய்கள் அந்நியனைக் கண்டால் குரலெடுத்துக் குரைப்பது போலக் குரைத்துக் கொண்டு அச்சிறுமைகள் என்னைப் பின்பற்றும்போது, 'நீயா

பிராமணன்?' என்று என்னைக் கேட்பது போலத் தோன்றுகிறது. நான் எது செய்தாலும் அது வியர்த்தமாகப் போகும் என்று தோன்றுகிறது. எதுவும் செய்து – கல்வி கற்றோ, லட்சியத்தை நோக்கி முன்னேறியோ, அல்லது தாமரையிலைத் தண்ணீர் போலப் பட்டும் படாமலும் இருப்பது என்பதோ சற்றும் பிரயோஜனப் படாது என்றுதான் தோன்றுகிறது.''

வள்ளுவன் இதற்கும் பதில் வைத்திருக்கிறான். "உன் கர்மா, உன் விதி, உன் போக்கு நீயாகத் தீர்மானித்துக் கொள்ளவேண்டிய ஒன்றா கும். உன் தகப்பனாரின் காரியங்களைச் சாக்கிட்டுத்தான், அதனால் பாதிக்கப்படுவதாக எது செய்தாலும் அது வியர்த்தமாகிப் போகும் என்றும் நினைப்பானேன்?" என்று ஒரு நாள் கேட்டான்.

அன்றே அப்போதே அவனுக்குப் பதில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. ஒருநாள் பூராவும் யோசித்துப் பார்த்துவிட்டு நான் சாவதானமாக மறுநாளுக்கு மறுநாள் தான் அவனுக்குப் பதில் சொன்னேன். "நான் இப்படி நினைப்பதற்குக் காரணம் நான் பிராமணனாகப் பிறந்திருப்பதினால்தான். பிறப்பினால் பிராமணத் துவம் வந்து விடுகிறது என்று எண்ணுகிறார்கள், நம்புகிறார்கள். என் பிறப்பிற்குக் காரணம் என் தகப்பன். என் தகப்பன் செய்கிற காரியங்களும், அவர் போக்குகளும், அவர் மனப்பான்மையும் என்னைப் பாதிக்கத்தானே வேண்டும். அவை என்னைப் பூரணமாகப் பாதிக்காவிட்டால் எப்படி நான் பிராமணனாக முடியும்?"

உண்மைதான் என்று வள்ளுவனும் ஏற்றுக் கொண்டான். ஆனால், நீ உன் தகப்பனாருக்கு மட்டும் பிள்ளையில்லையே. உன் தாயாருக்கும் பிள்ளைதானே. அவளுக்கு வேத அறிவோ, கல்வியோ, ஞானமோ இல்லையென்றாலும் ஒழுக்க நிறைவு, அவளாக ஏற்றுக்கொண்ட தருமநெறி வழி நிற்பது என்கிற கொள்கையிருக்கிறது அல்லவா! அவள் காரணமாக நீ பிராம்மணோத்தமனாக ஆக முயலலாமே!

இதற்கு எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. வள்ளுவன் சொன்னது உண்மைதான். ஆனால், இந்தச் சமூகத்தில் பெண் அதம பட்சமாகவே ஜன்மம் ஜன்மமாகக் கருதி வந்திருக்கிறார்கள். அதனால்தான் இந்த விஷயம் எனக்கு மனத்தில் படவில்லை போலும்! ஆண்பிள்ளைதான் முக்கியம், அவன்தான் எல்லாவற்றையும் நிர்ணயிக்கிறான்; நிர்ணயிக்க வேண்டும் என்பது போலவும் நம்பிக்கொண்டே நடப்பது தலைமுறை தலைமுறையாக நமக்குக் கை வந்திருக்கிறது

"எந்தச் சமூகத்திலாவது, எந்த மதத்திலாவது பெண்களுக்குச் சரிசமமான அந்தஸ்துக் கொடுத்திருக்கிறார்களா ஆண்கள்?" என்று கேட்டேன்.

"அப்படிச் சிறப்பாகச் சொல்லும்படியாக இல்லை. சமூகங்கள், பொருளாதார லோகாயுத அடிப்படையில் ஏற்படுபவை. அதனால் பொருளீட்டுபவனைக் குடும்பத் தலைவனாக, குடும்பத்தில் முக்கியமானவனாகக் கருதுகிற பழக்கம் தொன்றுதொட்டு வந்துவிட்டது. அதில் தவறில்லை. நமது சமுதாயத்தில் பெண்களுக்குச் சிறப்பான இடம் இல்லை என்று சொல்ல முடியாது. ஓரளவுக்குப் பெண்கள் மஹோன்னதமானவர்களாகவே கருதப்படுகிறார்கள்" என்றான் வள்ளுவன்.

"மன அமைப்பில், மனப் போக்கில்..."

"ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்தவிதமான வித்தியாசங்கள் கற்பிக்க முடியும்? தவிரவும் பிரஜோற்பத்தியில் ஆண்களைவிடப் பெண்களுக்குப் பங்கு அதிகம் என்று சொல்வது தவறாகாதே! பத்துமாதம் சுமந்து பெறுகிறாள் என்பதுடன் இல்லையே! அதற்குப் பிறகும் ஐந்தாறு ஆண்டுகளாவது குழந்தையின் மனம் தாயாரைப் பின்பற்றித்தானே செல்கிறது! தாயாரின் பங்கு குறைவு என்று நினைப்பானேன்?" என்றான் வள்ளுவன். "உன் தாயாரைத் திருப்திப்படுத்துவதற்காகவேனும் நீ உன் வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

வள்ளுவனுடன் நடந்த இந்த நீண்ட விவாதத்திற்குப் பிறகுதான் இரண்டொரு ஆண்டுகளாக எனக்கு வாழ்க்கையில் ஓரளவுக்கேனும் ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். அதற்கு முன், வாழ்க்கையை ஆற்றிலோ, குளத்திலோ விழுந்து நானாகவே முடித்துக் கொண்டு விடலாமா என்று பல தடவைகள் சிந்தித்ததுண்டு. இப்போது அந்தச் சிந்தனைகள் என்னை விட்டுத் தூர அகன்று விட்டன. பிராமணப் பிழைப்பு (மந்திரம் ஓதி, சடங்குகள் செய்து கொடுத்து பிழைப்பு) – பிழைப்பது என்பது இன்னமும் மனதிற்கு ஒவ்வாத காரியமாகவே இருக்கிறது. எனக்கே நிச்சயமில்லாத ஒரு கொள்கையை, ஒரு சிந்தனையை, ஒரு வாழ்க்கை வழியைப் பின்பற்றி, அதில் நம்பிக்கையிருப்பவன் போல நடிப்பவருடன் நானும் அப்படியே நினைத்து மௌனியாக, உலகை ஏமாற்றிக்கொண்டு வாழ்க்கை நடத்த எனக்கு இஷ்டமில்லை. அப்பா வற்புறுத்தினால்கூட நான் புரோகிதம் செய்வதற்குப் போவதில்லை. அதனால் என் வேத அத்யனம் எல்லாம் வீண் என்று கருதவில்லை. மற்ற பிராமணர்கள் அதைப் பொருளீட்டும் ஒரு சாதனமாகக் கருதுகிறார்கள் – அதை நான் கற்றும் உபயோகமேயில்லாத – தற்காலிகமாக எதற்கும் உதவாத ஒரு கல்வியறிவாக நான் கருதுகிறேன்.

ஊஞ்சல் பலகையை லேசாக ஆட்டிக்கொண்டு நான் எத்தனை நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தேனோ, எனக்கே தெரியவில்லை, வள்ளுவனிடம், "வருகிறேன் - வந்து அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கிறது என்று சொல்கிறேன்'' என்று சொல்லியிருந்ததுகூட மறந்துவிட்டது. அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள் போலும் - அவளுக்கு என் சிந்தனை ஓட்டத்தைக் கலைக்கவில்லை. நண்பகல் தாண்டி நிழல்கள் கிழக்கு நோக்கி நகரத் தொடங்கி விட்டன.

அம்மா ஏதோ கனவு கண்ட மாதிரி உலுக்கி அடித்துக் கொண்டு, படுத்திருந்தவள் திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள். அவள் முகத்தில் களைப்போ, மயக்கமோ இருந்ததன் ஆயாசமோ தெரியவில்லை. "அந்தப் பெண் நல்ல மருந்தாகத்தான் கொடுத்திருக்கிறாள். நான் எழுந்து, ஸ்நானம் செய்துவிட்டு சமைக்கிற காரியத்தைப் பார்க்கிறேன்" என்றாள் அம்மா.

இந்த அம்மாவின் மனசில் தன் புருஷன் பிற பெண்களை நாடி இப்படி நாய் மாதிரி அலைகிறானே என்று ஒரு ஆதங்கம் இல்லாமல் இருக்காது. அது மனித சுபாவம். ஆனால், அந்தப் புருஷனுக்கு வேளா வேளைக்குச் சோறு சமைத்துப் போடுவதும், அந்தப் புருஷனுக்குப் பிறந்த பிள்ளைக்கு வாய்க்கு ருசியாகச் சமைத்துப் போட்டுத் திருப்திப் படுவதும் வாழ்க்கை வழியாகவும், இன்பம் தரும் செயலாகவும், பெண்குல தர்மமாகவும் இருக்கிறது.

"எனக்குப் பசியில்லை. எனக்காக எதுவும் செய்ய வேண்டாம்" என்றேன்.

"நன்றாயிருக்கு போ! இந்த வயசில் பசியில்லாமல் என்ன? உங்கப்பா வந்தா, உனக்கு உடம்பு சரியில்லேன்னா நான் பட்டினி கிடக்கணுமா என்று சத்தம் போடுவார். அஸ்தமிக்க இன்னும் பத்து நாழிகையிருக்கே. அரை நாழிகையில் ஸ்நானம் செய்துவிட்டுச் சமைத்து விடுவேன்" என்று பரக்கப் பரக்க எழுந்தாள் அம்மா.

"முடிஞ்சால் செய். இல்லாவிட்டால் அப்பா ஒரு நாள் பட்டினி கிடந்தால் தான் என்ன? குடியா முழுகிப் போய்விடும்?"

"வீட்டிலே ஒரு பெண் இருக்கும் போது அப்படிச் சொல்லலாமோ!" என்று அம்மா வேறு எதையோ நினைத்துக் கொண்டவளாக, "எனக்கு ஒத்தாசையாகக் கூடமாடத் துணைக்கு இருக்க நீ ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொண்டு விட்டாயானால் எனக்குச் சரியாக இருக்கும். - "எனக்கே சாப்பாடு அப்பா சம்பாத்தியத்தில் நடக்கிறது. அப்பா

சம்பாத்தியத்தில் சாப்பிட நான் வேறு ஒரு பெண்ணையும் கொண்டு வந்து அவளையும் அரைப் பட்டினி போடுவானேன்?"

"பட்டினியா கிடக்கிறோம்! இன்னும் அந்த அளவுக்கு வரவில்லையே! தவிர வருபவளுடைய ஜாதக விசேஷத்தினால் உனக்கே ஐசுவரியம் வரலாமே. வருபவள் லக்ஷ்மியாக வந்தால்...."

"அவள் அக்காவாகத்தான் வருவாள்" என்றேன்.

"அப்படியெல்லாம் சொல்லாதே. அச்சான்யமாக இருக்கிறது" என்றாள் அம்மா.

"நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்து விடாது அம்மா."

"அது சரி. ஆனாலும் உன் தோழன் வள்ளுவன் சொல்கிற மாதிரி வாயிலே நல்ல சொல்தான் வர வேண்டும்'' என்றாள் அம்மா.

"வாழ்வில் நிறைவு வரும்போது வாயிலும் நல்ல சொல்தான் வரும்." "ஒவ்வொருவர் வாழ்விலும் நிறைவு காண அவரவர்கள் முயற்சி செய்துதானே ஆக வேண்டும்? முயற்சியே செய்யாமல் தானே நிறைவு வந்து விடும் என்றால் எப்படி வரும்?"

"உனக்கு வாழ்வில் நிறைவிருக்கிறதா? சொல்லு அம்மா" என்று மெதுவாக என் உள்ளத்தில் கனிந்து கொண்டிருந்த அன்பு ததும்பக் கேட்டேன்,

திடுக்கிட்டு ஒரு வினாடி என்னை நிமிர்ந்து பார்த்தாள். என் உள்ளத்து அன்பு பூராவும் அவள் கண்களிலும் பிரதிபலிப்பது கண்டு எனக்குத் திருப்தியாகத்தான் இருந்தது. ஒரு பத்து விநாடிகள் ஊஞ்சல் கம்பியைப் பிடித்துக்கொண்டு தடுமாறாமல் நிற்பது போல நின்று நிமிர்ந்து அழுத்தமாகச் சொன்னாள்: "எனக்கு என்ன குறை வாது! பிறந்த இடத்திலும் எனக்கு ஏதும் குறை வைக்கவில்லை , புகுந்த வீட்டிலும் எனக்கு ஏதும் குறை வைக்கவில்லை. கண் நிறைந்த கணவன், இரண்டு பெண்கள் – அவர்கள் தங்கள் கணவன்மார்களுடன் சௌக்கியமாகவே இருக்கிறார்கள். மணியான ஒரு பிள்ளை. அம்மாவிடம் அன்பு வைக்கிற பிள்ளை. எனக்கு என்ன குறை?" என்றாள்.

"உண்மையிலேயே குறைவில்லையானால் எனக்குச் சந்தோஷம் தான்" என்றேன்.

"நீ என்ன நினைத்து இப்படிச் சொல்கிறாய் என்று எனக்குத் தெரிகிறது வாது. ஆனால், அதெல்லாம் சில்லறைக் குறைகள். பெரும்படியான,

ஆளை அமுக்கிவிடக் கூடிய குறை எதுவும் இல்லை . என் மாமனார் 'வஞ்சர ஊசி' என்று ஒரு பாட்டுச் சொல்வாரே!''

எனக்கும் நினைவுக்கு வந்தது. "கூன், குருடு, செவிடு, நொண்டி, முடம் இல்லாமல் வியாதியால் பீடிக்க விடாமல் இருக்க எத்தனை அதிர்ஷ்டம் பண்ணியிருக்க வேண்டும் மனிதன்!'' என்று கடவுளுக்கு நன்றி செலுத்தும் பாட்டு.

"அதேபோல அவர்கள் பாஷையில் ஒரு பாட்டு இருக்கிறது என்று மிரியம் நீ வருவதற்கு முன் சொல்லிக் கொண்டிருந்தாள் '' என்றாள் அம்மா. "அவள் அழகாகப் பாடி அதற்கு அர்த்தமும் சொன்னாள். எனக்குப் பாட வரவில்லை. அவள் சொன்ன அர்த்தம் என் மனசில் அப்படியே பதிந்துவிட்டது. 'ஓ என் பிரபுவே! நீ என்னிடம் எவ்வளவு கருணையுடனும், நியாயமாகவும் நடந்து கொள்கிறாய்! என்னாலான வகையில் நான் அறிவுடனும், அடக்கத்துடனும் நடந்து கொள்வேன். என் உள்ளத்தில் உன் லட்சிய வருகையைப் போற்றி வளர்த்து வளைய வருகிறேன்! (Psalm-101) - யாரோ அவர்கள் தேசத்து ராஜா பாடியதாம்.''

மிரியத்தைப் பற்றி அம்மா இப்படிச் சொன்னது எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. "மிரியத்தை இந்தச் சந்தர்ப்பத்திற்கு முன் நீ சந்தித்திருக்கிறாயா அம்மா? எங்கே, எப்போது, நீதான் வீட்டை விட்டு வெளியே போவதில்லையே?" என்று கேட்டேன்.

"நாலைந்து நாள் - ஒரு வாரம்கூட இருக்கும். ஒரு நாள் மாலை அவள் தேடிக் கொண்டு வந்தாள். பல விஷயங்களுக்கு மத்தியில் உன்னைப் பற்றியும், வள்ளுவனைப் பற்றியும் பல விஷயங்கள் பேசினாள்.'' அம்மா தன்னையுமறியாமல் பெருமூச்சு விட்டாள். "நல்ல பெண்."

"நல்ல பெண்தான். மிகவும் தைரியசாலியான துணிச்சலான பெண். அவளிடம் அத்துமீறி நடந்து கொண்ட ஒருவனைக் குதிரை சவுக்காலேயே அடித்து விட்டாள்!" என்றேன்.

"எத்தனையோ பேருக்குக் குதிரைச் சவுக்கடி தேவைதான்; கிடைப்பதில்லையே!" என்றாள் அம்மா.

என் அம்மாவைப் பற்றி எனக்குப் பெருமையாக இருந்தது.

## **அத்தியாயம் 8**

பின்னோக்கி நினைவில் நகரலாமே தவிர, உண்மையில் காலத்தின் ஓட்டத்தின் பின்னால் செல்ல முடியாது. முன்னோக்கித்தான் போக வேண்டும்.

பிராமணர்களுக்கு ஒரு செல்வாக்கு சமூகத்திலிருக்கிறது; அதை வைத்துப் பிழைப்புக்கு வழிதேடிக் கொள்கிறார்கள். பிராமணர்களின் வாழ்க்கைக்கு ஒரு காலத்தில், என்றோ ஒரு காலத்தில், வேதம் தொடங்கிய காலத்தில் அர்த்தமும், லட்சியமும் இருந்திருக்கலாம். இப்போது அந்த லட்சியம், அர்த்தம் எல்லாம் தேய்ந்து விட்டது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

பிராமணத்துவம் எனக்கு ஏனோ திருப்தி தரவில்லை.

நல்ல லட்சியங்களின் மேன்மையாகவோ, கொள்கைகளின் உன்னதத்தினாலோ அல்ல. என் தகப்பனாருடைய பொய்யான வாழ்க்கையினால்தான் எனக்குப் பிராமணத்துவம் திருப்திதரவில்லை. திருப்தியாகத் தினசரிக் காரியங்களைச் செய்துகொண்டு இருக்கிற பிராமணர்கள் இல்லாமலில்லை. அவர்களைத் தூரத்திலிருந்து பார்க்க முடிகிறதே தவிர, நெருங்கி எனக்கு முன்னுதாரணமாகக் கொள்ள இயலவில்லை .

ஒரு நாள் நான் வள்ளுவனிடம் கேட்டேன். “நான் ஜைனனாகி விடலாமா?" என்று.

"எதற்கு?"

"என் பிராமணத்துவம் எனக்குத் திருப்தியளிக்கவில்லை."

"என் ஜைனத்துவம் எனக்குத் திருப்தி தரவில்லையே! என்ன செய்வது?" என்றான் வள்ளுவன்.

"நாம் இருவரும் ஒரே விஷயத்தைப் பற்றித்தான் பேசுகிறோம் என்று எனக்குத் தோன்றவில்லை.”

"நீ உன் அப்பாவின் உதாரணத்தை வைத்து அதிருப்தியுடன் பிராமணர்களை எடை போடுகிறாய். எனக்கு ஜைன தத்துவங்கள் போக்கை மீறி மனிதகுலம் பூராவுக்கும் பொதுவான ஒரு சமயத்தை, மதத்தை, மதபூர்வமான லக்ஷியத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்று ஒரு துடிப்பு இருக்கிறது" என்றான் வள்ளுவன்.

"இரண்டும் ஒன்றாகாதே! நீ ஜைனத்தின் அடிப்படையிலேயேதான் உன் சர்வஜன மதத்தை அமைத்துக் கொள்கிறாய் – அஹிம்சை, கொல்லாமை,

துறவு மனப்பான்மை, ஐந்தவித்தல் என்று. எனக்குப் பிராமணத்துவம் கசக்கிறது என்பது வேறு காரணத்தினால் அல்லவா? நல்வாழ்வு வாழ, முக்கியமாக நான் நல்வாழ்வு வாழ பிராமணனாக இருப்பது போதவில்லை."

"இதற்காக வேறு மதம் தேடிப் போவது சரியென்று எனக்குத் தோன்றவில்லை. நீ மாற வேண்டுமே தவிர, உன் மதம் மாறக்கூடாது'' என்றான் வள்ளுவன்.

"நான் பிராமணனாக இருந்துகொண்டு மனம் மாறுவது சாத்தியமாக எனக்குத் தோன்றவில்லை."

"நீ பிராமணனாக இல்லாமல் வேறு எதாக இருக்க முடியும்? பிராமணர்கள் குலம், கோத்திரம் என்று நம்புகிறார்கள். குலத்தினால் நீ பிராமணன். ஜைனனானாலும்கூட நீ பிராமணனாகத்தானே இருக்க வேண்டும்?"

"அது எப்படி?"

"ஜைனன் என்பதனால் மட்டுமில்லை. எனக்கு மனிதனுக்குப் பழசை மாற்றிக்கொள்ளும் சக்தி இருப்பதாகத் தோன்றவில்லை. இன்று மதம் மாறி உன் பெயரை மாற்றிக் கொண்டாலும் உன் பழமை எங்கு போகும்? தப்ப முயலுகிறாய் என்று வேண்டுமானால் உலகுக்கு நிதர்சனமாகத் தெரியலாம். வேறு எதுவும் லாபம் இருக்கும் என்று தோன்றவில்லை.''

"சரி, ஜைனனாக மாறவில்லை, அன்று ஸெகியல் சொன்னாரே – அந்தப் புது ஏசு மதத்திற்கு மாறி விடுகிறேனே – அதை அன்பு வழி என்று சொன்னார் அவர். அது நல்ல வழியாகத்தானே இருக்க வேண்டும்?'' என்றேன்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு வள்ளுவன் சொன்னான், "எல்லா மதங்களுமே சொல்லப் போனால் அன்பைத்தான் போதிக்கின்றன. ஆனால், எந்த மனிதனாலும் அன்பு என்பதைப் பூரணமாக அனுபவிக்கவோ, பிரயோகிக்கவோ முடிவதில்லை. சமயங்கள் என்கிற பொதுவான சமூக முயற்சியினால் மட்டும் அன்பு வராது. தனிமனித முயற்சியினால்தான் அது முடியும். தனி மனித முயற்சியினால் ஏற்பட்டு, அன்பு பூரணமாகச் சமூகத்தை மாற்றுகிறபோது அன்புவழி என்று ஒன்று சாத்தியமாகலாம்..."

"அது சாத்தியமாகுமோ என்று பார்ப்பது நல்லதுதானே."

"நல்லதுதான்! யார் யார் வாயிலாக எதைக் கேட்பினும் அதை ஆராய்ந்து உண்மையறிந்து செயல்படுவது நல்லது. அன்பு வழியை அறிந்து கொள்வதனால் நமது பிராமணத்துவமும் நமது ஜைனத்துவ மும் ஆழ்ந்து

பரவலாக உயரவேண்டுமே தவிர, வேறு மதத்துக்கு மாறிவிட்டால் எல்லாம் சரிப்பட்டு விடும், பழசு இயலாது போய்விடும் என்று நினைப்பது சரியல்ல."

நான் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

வள்ளுவன் தொடர்ந்தான். "அன்பு வழி என்று ஏசு சொன்ன வழிக்கு ஏதோ நான் வைத்த பெயர்தானே தவிர, அதுதான் அடிப்படைத் தத்துவம் என்றோ, அதைத்தான் வற்புறுத்துகிறார் ஏசு என்று சொல்வதற்கோ எனக்கு அதுபற்றி நிச்சயமாக எதுவும் தெரியாதே! அன்பு வழி பிறக்கும்போதே ஸெகியல் சொல்வதை நம்பலாம். ஆனால் சண்டை சச்சரவுகளும் ஏற்படுத்திக்கொண்டு தான் பிறந்திருக்கிற மாதிரி இருக்கிறது. ஏதோ புது மதக்காரர்களுக்கும் பழைமைவாதிகளான யூதர்களுக்கும் மத விஷயமாகச் சண்டை பூசல், கைகலப்புக்கள் என்று ஸெகியல் சொல்லவில்லையா! மற்ற விஷயங்களையும் பூரணமாகத் தெரிந்து கொள்ள எனக்கு ஆசைதான். யாரோ அப்போஸ்தலன் தாமஸ் என்று ஒருவன் வரப்போகிறான் என்றாரே ஸெகியல் – வரட்டுமே? தெரிந்துகொண்டு மற்றதைப் பற்றிப் பேசலாம்.’’

இதற்கும் நான் பதில் எதுவும் சொல்லவில்லை.

வள்ளுவன்தான் மீண்டும் பேசினான்; ‘‘எது செய்தாலும் உன் அப்பாவைப் பற்றி நீ கவலைப்படாவிட்டாலும், அம்மாவைப் பற்றிய கவலையுடன் செய். அவள் ஏற்கனவே உடல் நலம் இல்லாமல் நலிவுற்றிருக்கிறாள். அவள் மனம் நோகும்படியாக எதுவும் செய்துவிடாதே. அதுதான் முக்கியம்."

"அம்மாவுக்கு உடலும் மனமும் நோகாதிருக்க வேண்டுமானால் நான் உடனே யாராவது ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும், என்று சொல்வதுகூடத் தவறு. அவர்கள் பார்த்துத் தாலிகட்டு என்று சொல்கிற பெண்ணுக்குத் தாலி கட்டிவிடவேண்டும்."

"உன் தாயாரோ, தகப்பனார் கூடவா உனக்குக் கெடுதலைச் செய்வார்கள் என்று நம்புகிறாயா?"

"அம்மாவைப் பற்றிய வரையில் சரி. ஆனால், தனக்குச் சௌகரியமானதைத்தான் அப்பா செய்வார். அது அவர் சுபாவமாகி விட்டது. பொதுவாகப் பிராமணர்கள் பலரும் சுயநலக்காரர்களாகவே இருக்கிறார்கள் என்பது என் அனுபவம். நான் தப்பாக இருந்தால் எனக்கே திருப்திதான்’’ என்றேன் நான்.

"உலகில் சுயநலம் என்கிற பிசாசினால் ஆட்டிப் படைக்கப் படாதவர்கள் மிக மிகச் சொற்பம்! சுயநலம் சிறிதேனும் இல்லாதவர் களை மகான்கள் என்று

பாராட்டும் வழக்கம் மனிதர்களிடையே இருந்து வந்திருப்பதே சுயநலமில்லாமல் வாழ்வது எவ்வளவு அருமை, சிரமம் என்பதைக் காட்டுகிறது."

"அதற்கு உதாரணம் சுயநலத்தையே கொள்கையாகக் கொண்ட ஒரு பகுதி மனிதர்களிடையே இருக்கிறது என்றால், அது இந்த ஊரில் பிராமண குலம் என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.''

"அப்படியும் சொல்லிவிட முடியாதே. பிராமணர்களில் சில சிரேஷ்டர்கள் இருக்கிறார்கள் என்று எனக்கே தெரிகிறதே – ராமச்சந்திர தீக்ஷிதர், பத்வாஜ தீக்ஷிதர், சுப்புராம ஐயர்."

"மூன்று பேரைச் சொல்லிவிட்டாய்! முப்பதுபேரில் நாலாவது ஆசாமி கிடைப்பதுதான் கஷ்டம்" என்று கூறி நகைத்தேன்.

"முப்பதுக்கு மூன்று நல்லவர்கள் என்கிற விகிதத்தில் உலகில் நல்லவர்கள் இருந்து விட்டால் உலகம் வெகுவாக முன்னேறி விட்டதாகச் சொல்லலாமே!"

"நீ சொல்வதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன். இருந்தும் இனியும் என்னைப் பிராமணனாகக் கருதிக் கொண்டு இந்தக் குறுகிய வட்டத்திற்குள் வளைய வந்து கொண்டிருப்பது சாத்தியமாகத் தோன்றவில்லை!"

"எது செய்தாலும் உன் அம்மாவைக் கேட்டுக் கொண்டு அவர் சம்மதத்துடன் செய். முடியுமானால் அவரையும் உன்னுடன் இட்டுச் செல் என்று மட்டும்தான் நான் சொல்லுவேன். நேற்றோ, அதற்கு முன்தினமோ உன் தாயாரைப் பற்றி மிரியம் பேசிக் கொண்டிருந்தாள்."

"என்ன சொன்னாள்... மிரியம்?"

‘‘தனக்கு உன் அம்மாவை ரொம்பவும் பிடித்திருக்கிறது என்றாள். யூத மக்களிடையேயும், பல விஷயங்களிலும் லட்சியப் பெண்மணி களாகக் கருதப்பட வேண்டிய குடும்ப ஸ்திரீகள் இருக்கிறார்கள் என்றும், பெண்கள் மதிப்பு சமூகத்தில் உயர்ந்து போற்றக் கூடியதாகும் வரையில் எந்தச் சமூகமும் உருப்படாது என்றும் சொன்னாள்."

"அம்மாவுக்கும் மிரியத்தைப் பிடித்திருக்கிறது’’ என்றேன் நான்.

"மிரியத்தைப் பிடிக்காத பேர்வழிகள் இருப்பது அருமைதான். அவளை மணந்து கொள்பவன் அதிர்ஷ்டசாலி" என்றான் வள்ளுவன்.

‘‘என் தகப்பனாரையும் மிரியத்தையும் போன்ற இன்னொரு பெண்மணியையும் எனக்குத் தெரியுமே" என்றேன், நான் சற்றுப் பெருமிதமாகவே.

வள்ளுவனுக்கும் நான் யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று தெரியும். இருந்தாலும் என் வாயாலேயே அதைக் கேட்க வேண்டும் என்பதற்காகவே, "யாரைச் சொல்கிறாய்?" என்று கேட்டு வைத்தான்.

"என் மன்னி. உன் மனைவி வாசுகி." என்றேன்.

"உண்மையில் நான் பல விஷயங்களில் அதிர்ஷ்டசாலிதான். போன ஜென்மத்தில் என்னென்ன நற்காரியங்கள் செய்தேனோ அதன் விளைவாக எனக்கு வாசுகி மனைவியாக வாய்த்திருக்கிறாள். இந்த மாதிரிப் பெண்கள் ஒரு சிலரேனும் இருக்கும் வரையில் எதிர்காலப் பிரஜைகளின் நல்ல மனப்போக்குப் பற்றி நாம் அதைரியப்பட வேண்டியதேயில்லை."

அது எனக்கும் தெரிகிறது. ஆனால், அவர்களால் இன்றைய உலகை ஆட்டிப்படைக்க முடியவில்லையே!"

"முடியவில்லை என்று எண்ணுகிறோம். அவர்கள் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ?" என்று சொல்லி வள்ளுவன் ஒரு விநாடி மௌனம் சாதித்தான். பிறகு, "மனிதனுக்குக் கிடைக்கிற செல்வங்களிலே முக்கியமானதாகக் 'கிரஹ' செல்வத்தைச் சொல்லவேண்டும். வீட்டில் ஒரு நல்ல தலைவி இருந்துவிட்டால் மனிதனுக்கு வேறு எந்த ஐசுவரியமும் தேவையில்லை. வீட்டில் நல்ல தலைவி இல்லையானால் அவனுக்கு எத்தனை செல்வம், எவ்வளவு சௌகரியம் இருந்தும் பயனில்லை. அவ்வளவும் இல்லாதது போலத்தான்."

‘‘உன் தாயாரையும் இந்த நல்ல பெண்மணிகளின் வரிசையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இல்லையா?’’

"ஆமாம். அதேபோல நமக்குத் தெரியாதவர்களிலும் நல்ல பெண்மணிகள் என்று சொல்லப்பட வேண்டியவர்கள் பலரும் இருக்கலாமே! அதேபோல நமக்கு அறிமுகமாகாமலே பல நல்ல ஆண்களும் இருக்கலாமே! பிராமண சமூகத்தில் மட்டுமல்ல – வேறு சமூகங்களிலும் நல்லவர்கள் உண்டுதானே! உதாரணமாக ஸெகியல் – பொருளீட்டுவது மிகவும் நியாயமான, தரமான வழிகளில். அதனால் ஐசுவரியத்துடன் அவருக்கு மோட்ச சாதனங்கள் என்று கூறப்படுவ தும் கூடுகிறது. இம்மையில் செல்வமும், சாவுக்குப் பின் மோட்சமும் தருகிற இந்த இரண்டு செல்வச் சேர்க்கை மனித லட்சியங்கள் இரண்டையும் பூர்த்தியாக்குகிறது.’’

"செல்வம் சேர்க்காவிட்டாலும் உன் தகப்பனார் பகவனும்..."

"பிறப்பிலே திருவுடையார் சிலர் இருக்கிறார்கள் என்பதற்கு நான் ஒரு சிறந்த உதாரணம். இந்தத் திருவிற்குத் தகுதியுடையவனாக நான் இருக்கணுமே என்பதுதான் என் கவலை."

அந்தக் கவலை எனக்கு இல்லை" என்று கூறி நகைத்தேன் நான்.

"எப்பொழுதும் நீ உன் தாயாரை மறந்து விடுகிறாய்! அதுதான் தவறு" என்றான் வள்ளுவன் கடுமையாகவே.

உண்மைதான். அவன் கண்டனம் சரியானதுதான். என் அம்மா விடம் எனக்கு அன்பு இல்லாமல் இல்லை. ஆனால், அன்பு மட்டும் போதாது. மனசில் அன்புடனேயே அவளுக்குச் சிரமம் தருகிற காரியங்களை நான் செய்துவிட முடியும். அவளுக்குக் கஷ்டம் தரக்கூடிய எதையும் நான் செய்வதில்லை என்று அந்த விநாடியே தீர்மானித்துக் கொண்டேன்.

"வாழ்க்கை ஏன் இவ்வளவு கடினமானதாக இருக்கிறது?" என்று வள்ளுவனைக் கேட்டேன்.

"வாழ்க்கை கடினமாகவும் இல்லை. சுலபமாகவும் இல்லை. நாமாகத்தான் வாழ்க்கையைக் கடினமாக்கிக் கொள்கிறோம். சுலபமாக்கிக் கொள்ளத் தெரியாததனாலேயே வாழ்க்கையைக் கடினமாக்கிக் கொள்கிறோம்! சுலபமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்."

"என் தகப்பனார் மாதிரியா? சுயநலத்தை வளர்த்துக் கொண்டால் வாழ்க்கை சுலபமாகி விடுகிற மாதிரியிருக்கிறது."

"அதுவும் கடினந்தான். சுயநலத்தினால் தனக்கு ஏற்படுகிற லாபத்தைவிடப் பிறருக்கு ஏற்படுகிற நஷ்டம் அதிகமாகிப் போகிறது என்று கணக்குப் போட்டுக் காண முடிகிறது இல்லையா? வேறு எத்தனையோ லட்சியங்களை வளர்த்துக் கொள்ளலாமே! பிறருக்கு உதவி செய்வது, கருணை காட்டுவது, எந்தச் சமயத்திலும் தீய சொல் கூறாதிருப்பது, உண்மையைப் பூஜை செய்வது என்று எத்தனையோ கொள்கைகள் மனிதர்களிடையே காணக் கிடக்கின்றனவே! அவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டால் மற்ற...!"

"நினைத்துப் பார்க்கும்போது நானேகூட நல்ல லட்சியங்கள் பலவற்றைப் போன ஜென்மத்தில் செய்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் இந்த ஜென்மத்தில் உன்னைப் போன்ற ஒரு நண்பன் எனக்கு ஏற்பட்டிருக்க முடியாதே!'' என்றேன்.

"எனக்கு அது பெருமை தருகிறது. பணிவுடன் அந்தச் சிந்தனையை ஏற்றுக் கொள்கிறேன்" என்றான் வள்ளுவன். "உன்னை நண்பனாகப் பெற்றதில் நானும் அதிர்ஷ்டசாலிதான். அதிர்ஷ்டம் என்பதைப் பூர்வஜென்ம கருமபலன் என்கிற அர்த்தத்தில்தான் உபயோகிக்கிறேன் நான், எனக்கு அவ்வளவாக ஜனங்கள் அதிர்ஷ்டம் என்று சொல்வதில் நம்பிக்கை கிடையாது. எவ்வளவுதான் அறிவோடு பேசினாலும் பேசுவதைப் பூரணமாக மனசில் வாங்கிக்கொள்ள ஒரு கேட்டன் கிடைக்க வேண்டுமே! நல்ல கேட்டன் - சிஷ்யன் என்று சொல்ல எனக்கு இன்னும் குருபீடம் கிடைக்கவில்லையே - எனக்குக் கிடைப்பதை நான் அதிர்ஷ்டமாகத்தானே கருத வேண்டும்?"

"சரி. பூர்வ ஜென்மாவில் நாமிருவருமே நற்கருமங்கள் செய்தவர்கள் தான் என்று ஏற்றுக் கொள்வோம். இந்த ஜென்மாவில் என்ன செய்யப் போகிறோம் என்பதுதானே இன்றைய நிலை பற்றிய பிரச்னை?"

‘‘ஆகாயத்தில் பறக்காதே! காலைப் பூமியில் வைத்து நட. அதுதான் சரி என்கிறாயா?"

"ஆமாம்."

"ஆகாயத்தில் பறக்கவே மனமுள்ள ஒருவனைப் பூமியில் நடக்க வைக்க ஒரு தோழன் தேவைப்படுகிறது."

"அது அப்படிக் கவனிக்கும்போது நல்ல காரியமாகப் படவில்லை எனக்கு."

"நல்ல காரியம்தான். ஆட வரும் பெண்டிர் காலில் கனமான வெள்ளிச் சதங்கைகள் அணிந்து ஆட வருகிறார்களே - ஏன், என்று நான் சில சமயம் யோசித்துப் பார்த்ததுண்டு. "ஜலக்' 'ஜலக்' என்று சப்தம் ஒலிக்கிறது என்பது ஒரு சின்னக் காரணம்தான். பெரிய காரணம் - அவர்கள் ஆடுகிற ஆட்டத்தில், குதிக்கிற குதியில் பூமியைவிட்டு எம்பி வானத்தில் வீதியில் பறக்க ஆரம்பித்துவிடாமல் இருப்பதற்காகவே அவர்கள் கால்களில் கனமான வெள்ளிச் சதங்கைகள் போட்டுக் கனம் தந்திருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது."

"இருக்கலாம்!"

கடற்கரையில் குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றுப்புறத்தையெல்லாம் மறந்துவிட்டுப் பேசிக்கொண்டே நடப்பது மிகவும் சந்தோஷமாகத் தான் இருக்கிறது. தினமும் இரண்டு வேளை, காலையிலும், மாலையிலும், ஒவ்வொரு தடவையும் இரண்டு நாழிகை நேரம் - காலையில்

சூரியவெப்பம் உடலைத் தாக்கும் வரையில், மாலையிலா னால் இருள் சூழ்ந்து எல்லாம் மறைகிற வரையில் – இந்தப் பல வருஷங்களாக நினைவு தெரிந்து ஐந்தாறு வருஷங்களாய் – நானும் வள்ளுவனும் இதைச் செய்து வருகிறோம்.

நான் ஏழைப் பிராமணன். பிராமணத்துவமோ, அதில் நம்பிக்கையோ சிறிதும் இல்லாத, பிறப்பினால் மட்டும் பிராமணனான பிராமணன். வள்ளுவன், எல்லோரும் கீழ்ச்சாதி என்று சொல்கிற, முக்கியமாகப் பிராமணர்கள் தூர ஒதுக்கி வைக்கிற வள்ளுவ குலத்தவன். மதத்தினாலும் மாறுபட்டவன். ஜைன மதத்தவர்கள் இங்கு பெரும்பகுதியாக இருந்தாலும் என் போன்ற உயர்ஜாதி இந்துக் கள் ஜைனர்களைத் துச்சமாக, மிலேச்சர்களாகத்தான் கருதுகிறார்கள். என் தகப்பனாரும் என்னை அவனுடன் சேரக்கூடாது – கெட்டுப் போய்விடுவாய் என்றுதான் சொல்கிறார். இருந்தும் வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் வெகுவாக ஜைனக் கருத்துக்கள் கலந்து வந்திருப்பதாகவே பலரும் – பிராமணர்களும், ஜைனர்களுமே கருது கிறார்கள். அதைப்பற்றி உண்மையில் ஜைனர்களோ, பிராமணர்களோ அதிகமாகப் பேசுவது கிடையாது. மறந்துவிட முயலுகிறார்கள். ஜைனம் என்கிற கொள்கை வேத காலத்திற்கு முன்னதாகவே இருந்ததாகத்தான் பிராமணர்களும் அடிப்படையில் எண்ணுகிறார்கள் என்றாலும், வேதத்திற்கு முந்தி ஒரு காலம் இருந்தது என்று பிராமணர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பூசி மெழுகி விடுகிறார்கள்.

என்னைப் பிராமணனாக நானே நினைப்பதில்லை.

செய்திருந்த குற்றத்திற்காகப் பாடசாலைப் படிப்பை முடித்துக்கொண்டு மயிலை நகர் வந்தபின் ஆரம்ப காலத்தில் சில வைதீகப் பிராமணர்கள் தங்களுக்கு உதவியாக, இரண்டாவது பிராமணனாக வரச்சொல்லி அழைத்ததுண்டு. நான்தான் போன தில்லை. ஆனால், வள்ளுவன் விஷயம் அப்படியில்லை. அவனை ஜைனர்களில் பலர் குருவாகவே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பல்லவ ராஜ வம்சத்தின் இளந்தளிரான சிவகுமார ராஜகுமாரன் அவனை வந்து பார்த்து, பணிந்து, “நான் அரசுக் கட்டிலேறும்போது எனக்கு உபயோகப்படும்படியாக இந்தியப் புராதன நூல்களிலிருந்து கருத்துக்களை எடுத்துச் சொல்லி ஒரு கையடக்க நூல் எழுதித்தர வேண்டும்” என்று கேட்டுக் கொண்ட போது நான் உடனிருந்தேன். "என்னை விடத் தகுதி படைத்தவர்கள் உங்கள் நகரிலேயே இருப்பார்களே," என்று வள்ளுவன் அடக்கமாகச் சொல்லிப் பார்த் தான். ராஜகுமாரன் பிடிவாதமாக "நீங்கள்தான் என் குரு. நீங்கள்தான் அந்த நூலை எனக்கு எழுதித்தர வேண்டும்," என்று சொல்லி விட்டான்.

அரச கட்டளை என்பது மட்டுமில்லை; என் நண்பனுக்கும் இந்த மாதிரி விஷயங்களில் ஈடுபாடு உண்டுதான். முப்பது முப்பத்தைந்து வயதிற்குள்ளாகவே ஜைன சாஸ்திரங்களைப் பற்றி மட்டுமில்லாமல், மற்ற இந்தியத் தத்துவ நூல்களையும், சாஸ்திரங் களையும் கேட்டு அறிந்து கொண்டவன் அவன். எனக்குப் பிறப்பு முதலே அக்ஷராப்பியாசம். கல்விப் பயிற்சி எல்லாம் கற்றுத் தந்து விட்டார்கள். சமஸ்கிருதம், கொஞ்சம் தமிழ் என்று நான்தான் ஆரம்ப காலத்தில் வள்ளுவனுக்கு எழுத்தறிவித்தவன். "நீ தான் என்னைப் பொறுத்தவரையில் ஆதி, பகவன் எல்லாம். என் உலகம் அவர் பெற்றெடுத்ததனால் ஆதி, பகவன் முதலே தொடங்குகிறது. எனக்கு அகரம் கற்றுத் தந்ததனால் நீயும் என்னைப் பொறுத்த வரையில் ஒரு ஆதி, பகவன்தான்."

ஆதி, பகவன் என்பதே ஒரு ஜைன தத்துவம் என்று எனக்குப் பின்னர்தான் தெரிய வந்தது. என்னிடம் சமஸ்கிருதம் படிக்கவும், தமிழ்ப் படிக்கவும் கற்றுக்கொண்டான் வள்ளுவன். இந்த அறிவை நான் அவனுக்குப் புகட்டியதே தவறு என்றுதான் பிராமணகுலம் சொல்லும். தமிழ் அறிவு எப்படியானாலும், சமஸ்கிருத அறிவு கீழ்க் குலத்தவருக்கு எட்டிவிடக்கூடாது என்று சமீப காலத்தில் பிராமணர்கள் தீவிரமாக, விசேட மூர்க்கத்தனம் காட்டுகிறார்கள். இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை .

நாங்களிருவரும் – வள்ளுவனும் நானும் – சிநேகமாக இருப்பது ஊருக்கெல்லாம் தெரியும். நான் கெட்டுப்போனவன் – என் தகப்பனாரைப்போல; ஆனால், வேறு வழியில் கெட்டவன் என்று ஊரார் – முக்கியமாகப் பிராமணர்கள் நம்பினார்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை. பிராமணர்களிடம் நான் எனக்காக எதையும் எதிர்பார்க்கவில்லை. வள்ளுவனுடைய சினேகம் எனக்கு மன ஆறுதலளித்தது என்பதுதான் உண்மை . பலவிதமாகத் தத்தளித்துக் கொண்டு கரையேற மாட்டாமல் நின்ற என்னை ஓரளவிற்காவது நிதானப்படுத்தியது வள்ளுவனுடைய பேச்சும், அந்தப் பேச்சில் பலமான அடித்தளமாக அமைந்திருந்த ஞானமும்தான்.

வள்ளுவனையும், அவன் தாய் ஆதியையும், மனைவி வாசுகியையும், ஏன் அவன் தகப்பன் பகவனையும், அவன் தம்பி சித்தார்த்தனையும் தெரிந்து கொண்டதனால்தான் என் வாழ்வுக்கே புது அர்த்தம் ஏற்பட்டிருப்பதாக நான் எண்ணுகிறேன். அது பூர்வஜென்மக் கரும பலனே என்று எண்ணுகிறேன். யக்ஞ வேத கர்ம அனுஷ்டானங் களினால் பூர்வஜென்மப் பலனை மாற்றி விடலாம் என்று அகம்பாவத் துடன், ஆதாரமில்லாமலே பிராமணர்கள் நினைக்கிறார்கள். அப்படி மாற்ற முடியாது என்றுதான் எனக்குத்

தோன்றுகிறது. அந்த அளவில் நானும் ஜைனன் என்றுதான் சொல்ல வேண்டும்.

வருகிற நாட்களில் என் பூர்வ ஜென்ம கருமாக்கள் எனக்கு என்ன பலன்களைச் சிறப்பித்துத் தரப் போகின்றன என எண்ணிக்கொண்டே வீடு நோக்கி நடக்கிறேன். வள்ளுவன் வீடு ஊருக்கப்பால் எதிர்த் திசையில். வானத்தில் புயல் மேகங்கள் சூழ்ந்திருந்தன. புழுக்கமாக இருந்தது. வியர்வையைத் துடைத்துக் கொண்டேனே தவிர, புழுக்கத்தை உணரவில்லை.

கடலில் சகஜமான புயல் என் வாழ்க்கையிலும் ஒரு புயலை உண்டாக்கப் போகிறது என்று எனக்கு அப்போது தெரியாது. அந்தப் புயலும், அதன் சமனமும் வள்ளுவன் மூலமாகவே ஏற்படப் போகிறது என்றும் எனக்குத் தெரியாது. நான் ஒரு பெயரில்லாத சரித்திர நாயகனாக ஆகப்போகிறேன் என்பதும் எனக்குத் தெரியாது அன்று மாலை நான் வீடு சேரும்போது.

மறுநாள் புயல் இரவில் வீசி ஓய்ந்து விட்டது. என் வாழ்க்கையில் பெரும் புயலின் அறிகுறிகள் தோன்றத் தொடங்கின. 62 – தாமஸ் வந்தார்

## அத்தியாயம் 9

என்ன சொன்னாலும் பிராமணர்கள் தெருவும், பிராமணர்களும் ஓரளவுக்காவது அதிர்ஷ்டசாலிகள் அல்லது சமூகத்தினால் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டவர்களாகத்தான் சொல்ல வேண்டும். என்ன சொன்னாலும் ஒரு மழையோ, இடியோ, மின்னலோ அல்லது புயலோ எப்போவாவது சில சமயங்களில் தவிர, அவர்களுடைய வீடுகளைச் சேதப்படுத்துவதில்லை. மக்களை நிலைகுலையச் செய்வதில்லை. காரையினாலும் மண்ணாலும் கல்லாலும் கட்டிய வீடுகள் காற்றுக்கும், மழைக்கும் அசைந்து கொடுக்காமல் இருக்கின்றன. கடற்கரையோரமாக இருந்த ஊரில் அதிகமாகச் சேதம் விளையாத ஒரே தெரு அந்தப் பிராமணத் தெரு ஒன்றுதான். மற்றவர்கள் – இந்தப் பிராமணர்களையும் விட அதிக மாகவே பணம், காசு படைத்த மனிதர்கள் – வாழும் சில தெருக்களில் கூடச் சேதம் மிகமிக அதிகம்தான். மீனவர்களின் குடிசைகளிலோ, மற்றும் தாழ்ந்த குலத்தவர் என்று கருதப்பட்டவர் களின் சேரிகளிலோ ஆடுகளும், மாடுகளும், பன்றிகளும், கோழிகளும், மனிதர்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சேதம் அதிகம்தான்.

இடிகள், மின்னல்கள் இந்திரனால் ஏற்படுவனவென்றும், இந்திரனுடைய குமாரனான அர்ச்சுனன் பெயரை, வானத்தில் மின்னல் விளையாடும்போது, இடி பயங்கரமாகக் குமுறும்போது சொன்னால் நம்மை இடி, மின்னல் தாக்காது என்று சொல்லி பிராமணர்கள் நம்பி அதற்கென்று ஒரு சுலோகமும் மந்திரமும் வைத்திருக்கிறார்கள். பிசாசு மற்றும் உத்பாதங்கள் நம்மைப் பாதிக்காமல் இருக்கத் தங்கள் பூணூலின் முடிச்சில் தினமும் 108, 64, 32 என்று உரியபடி மந்திரத்தைச் சொல்லி வந்தால் அரணாக அமையும் என்று நம்புகிறார்கள்; சொல்கிறார்கள். இதெல்லாம் அசட்டு நம்பிக்கைகள் என்று சொல்லத்தான் தோன்றுகிறது. உண்மையாகவே இது என் பலஹீனம்தானா! அசட்டு நம்பிக்கை களோ என்னவோ அதில் ஏதோ சொல்ப பயனும், பலனும் இருப்பது போல் அன்றோ தோன்றுகிறது?

அன்றிரவு அடித்த புயற்காற்றினால் கடல் அலைகள் ஒரு தென்னை மர உயரத்திற்கு எழும்பின. எந்த வினாடியும் கடல் நீர் ஊர்த்தெருக்களில் புகுந்து விடும் என்று தோன்றியது. கோயிலைச் சுற்றியிருந்த மக்கள் எல்லாம் கோயிலுக்கும், கடற்கரைக்கும் வெகு தூரம் இல்லை – கடவுள் கபாலி காப்பாற்றுவார் என்று கோயிற் பிரகாரத்து மண்டபங்களில் வந்து ஒதுங்கி, நடுங்கிப் பயந்து இரவின் பிற்பகுதியில் பெரும்பகுதியையும் கழித்தார்கள். மாடு, கன்றுகள் பலவற்றிற்கும் அந்தப் பகுதியில் அதிகச் சேதம் விளையவில்லை. ஏனென்றால் புயலின் அறிகுறிகள் தோன்றியவுடனே, மாடுகளையும் கொண்டுபோய், கோயிலின் கீழண்டைச் சராகத்தில் இருந்த மண்டபத்தில் கட்டிவிட்டார்கள். கோயிலில் வேலை செய்து கொண்டு கபாலி பெயரில் பிழைப்பு நடத்தும் கோயில் சேவகர்கள் – பெரும்பாலும் பிராமணர்களில் சற்றுத் தாழ்ந்தவராகக் கருதப்படும் பிராமணர்கள் – அவர்களிடையேயும் ஏற்றத் தாழ்வு இருக்கத்தானே செய்கிறது! கோயிலில் பதுங்கி விட்டார்கள்].

மயிலாப்பூர் வியாபாரிகளின் வீடுகள் – ஒரு சிலரின் வீடுகளைத் தவிர, கல்லாலும், காரையினாலும் பலமாகக் கட்டப்பட்டவை. அவர்கள் வசித்த தெருக்களில் அதிகமாக மரங்கள் கிடையாது. முப்பது, நாற்பது வீடுகளும் பொதுவாகச் சுவர்களுடன் ஒன்றோ டொன்று தொட்டுக் கொண்டபடி கட்டப்பட்டவை. மண்டப மாகவோ, அல்லது தட்டாகவோ அநேகமாக எல்லா வீடுகளிலுமே மாடிகள் இருந்தன வீட்டுக் கதவுகளும், ஜன்னல்களும் – சொத்து உள்ளவர்கள் உள்ள இடமாதலால் – பலமாகவே இருந்தன. இவர்கள் வீடுகளில் ஒரு சேதமும் இல்லை. வெளியே கிடக்கிற தட்டுமுட்டுச் சாமான்கள், துணிமணிகள், காற்றில் அடித்துக்கொண்டு போகப்பட்டிருந்தால் தான் உண்டு. அந்த வியாபாரிகளுக்கு அதை ஒரு பெரிய நஷ்டம் என்று சொல்ல முடியாது.

மற்றபடி அக்ரஹாரத்தில் பிராமணர் தெருவில் வரிசையாக ஒரு ஐம்பது தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அவைகளில் ஒரு பத்து இருபது சடசடவென்று புயல் வேகத்தில் சரிந்து விழுந்தன. கொல்லையில் வளர்ந்திருந்த வாழைகளுக்குப் பெரும் சேதம். ஒன்றிரண்டு வேப்ப மரங்கள் – பிராமணத் தெருவில் வேப்பமரங் களை வேண்டுமென்றே, வேப்பங்காற்று உடம்புக்கு நல்லது என்று வைத்து வளர்த்தார்கள் – சில விழுந்திருந்தன. அநேகமாகப் பல கூரைகளின் ஓடுகள் காற்றில் பறந்திருந்தன – அநேகமாக எல்லா வீடுகளுக்குமே ஓடு மாற்றித்தான் ஆகவேண்டும் என்று சொல்லலாம். மற்றபடி கிலமாகிக் கொண்டிருந்த வீடுகளிலும்கூட ஏதோ மழைத் தண்ணீர் தாரையாகக் கொட்டி நனைந்திருந்ததே தவிர, வேறு எவ்விதச் சேதமும் இல்லை. விழுந்த தென்னை மரங்கள் கூட வீடுகளின் கூரைகளின் மேல் விழவில்லை . தெருவோடு கிடந்தன. அதுவே ஆச்சரியம்தான். ஆனால், தென்னை மரத்துக் காய்களுக்கும், சிவனுக்கிருப்பது போல மூன்று கண் உண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறேன். தேங்காய் யார் தலையிலும் விழாதாமே!

இவர்கள் எல்லோரும் – பிராமணர்கள். வியாபாரிகள் மற்றும் கோயில் ஊழியர்கள், செல்வந்தர்கள் எல்லோருமே ஊர்ப் பெருங்குடி மக்கள். இவர்களிடையே புயல் எந்தச் சேதத்தையும் விளைவிக்க வில்லை என்று சொல்வது முழுவதும் சரியல்ல. வியாபாரிகள் பலருக்குச் சிறு கப்பல்களும், படகுகளும் இருந்தன. அந்தப் படகுகள், கப்பல்கள் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்தவை. எங்கே போயின என்று தெரியவில்லை – சில மூழ்கியிருக்கலாம் – சில காற்றினால் வெகுதூரம் தள்ளப்பட்டு நடுக்கடலில் போயிருக்கலாம். கண்டுபிடித்து மீட்டு வர வேண்டும். ஸெகியலினுடைய பன்னிரண்டு படகுகளும், மூன்று கப்பல்களும் இருந்த சுவடே தெரியவில்லை என்று சொன்னார்கள். நடுக்கடலில் போய்க்கொண்டு புயலில் சிக்கிய படகுகள், கப்பல்கள், அவற்றில் இருந்த மனிதர்கள் என்ன ஆனார்கள் என்று சில நாட்களில் தான் தெரியவரும்.

இத்தனையையும் கணக்கில் சேர்த்துக் கொண்டாலும், ஊர்வாசிகளில் கால்வாசிப் பிரஜைகள் என்றுதான் கணக்குச் சொல்ல வேண்டும். மற்ற முக்கால்வாசிப் பிரஜைகள் குடிசைகளில், அதிகமாக ஒன்றும் உடைமைகள் இல்லாமல் வசிப்பவர்கள். அவர்கள் ஊரின் வெளிப்புறத்தில், சிலர் கடற்கரையை அடுத்த பிரதேசத்திலேயே குடிசைகள் போட்டுக்கொண்டு வாழ்ந்தார்கள். பெண்டு பிள்ளைகள், ஆடு மாடுகள், பன்றி, கோழி, நாய் என்று வளர்த்து வந்த கால்நடைகளில் பலவற்றையும் காப்பாற்ற முடியாமல் இழந்தவர்கள் பலர். சுவர், மழைக்கனம் தாழாமல் இடிந்து தலைமேல் விழுந்து உயிர் துறந்தவர்கள் சிலர். மரங்கள் ஆடி நிலை பெயர்ந்து

விழும்போது அவற்றில் சிக்கி நசுக்குண்டவர்கள் பலர். கடற்கரைப் பகுதிகளில் இருந்த குடிசைகளில் கடல் அலைகள் பாய்ந்து திரும்பும்போது அடித்துச் செல்லப்பட்ட குழந்தை குஞ்சுகள், பெண்கள், ஆண்கள், பெரியவர்கள் பலர். நிலங்களில் உழுது பயிரிடும் மக்கள் வாழும் சேரிகளில் ஒரு குடிசைகூடப் புயலை எதிர்த்து நிற்க முடியவில்லை . அதற்கு அடுத்தபடியாகத் தச்சு வேலை, கட்டிட வேலை செய்பவர் களின் குடிசைகளும் பல மழையில் கரைந்து விட்டன அல்லது காற்றில் அடித்துக்கொண்டு போகப்பட்டன.

புயல் அசுரவேகமாகக் கிளம்பும்போது நள்ளிரவைத் தாண்டிவிட்டது. புயல் வரப்போகிறது என்கிற அறிகுறிகள் முன்னிரவிலேயே தோன்றிவிட்டாலும்கூட காற்றில்லாத ஒரு புழுக்கம், வானத்தில் மேக மூட்டம், பௌர்ணமியேயானாலும் வானத்தில் சந்திர வெளிச்சம் தெரியாமல் மூட்டம் போட்டிருந்தது. – அவரவர் தங்கள் வீட்டில் பந்தோபஸ்தாகப் படுத்துக் காலம் கழிப்பதில் எல்லோரும் நாட்டமாக இருந்தார்களே தவிர, பிறர் கஷ்டப்படுவார்களே – உதவி செய்ய வெளியேறி ஏதாவது செய்யலாம் என்று யாருக்கும் நினைப்பில்லை.

எனக்கே புயல் வீசிக் காற்று கூரையின் கீழ் வந்து கூவும்போது வள்ளுவன் நினைவு வந்தது. அவன் வள்ளுவச் சேரியில் வாழ்கிறான் என்றாலும், அவன் வீடு கருங்கல்லாலும், செங்கல்லாலும் சாந்து பூசிய பலமான ஒரு மாடி மண்டபக் கட்டிடம். எந்தப் புயலுக்கும் அசைந்து கொடுக்காது. ஆனால், அது காற்றுக்கும், கடல் அலைக்கும் திறந்து கிடந்த ஒரு பகுதி. சுற்று வட்டத்தில் இருந்த வீடெல்லாம் குடிசைகள்தான். குடிசை வாழ் மக்கள் மாடிழந்து வீடிழந்து புயலில் அவதியுறும்போது வள்ளுவனோ அவன் தகப்பன் பகவனோகூடச் சும்மா இருந்துவிட மாட்டார்கள். வீடிழந்தவர்களைத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து மாடுகோழி கன்றுகளைக் காப்பாற்ற, குழந்தைகளை சமாதானப்படுத்த முயன்று கொண்டிருப்பார்கள் என்று எனக்குத் தோன்றியது.

நான் இப்படி இந்த புயல் வீசுகிற சமயத்தில் வீட்டில் தலையோடு கால் போர்த்திப் படுத்திருப்பது சரிதானா என்று என்னையே கேட்டுக்கொண்டேன். எழுந்து படுக்கையில் உட்கார்ந்து, என்ன செய்யலாம் – பிறருக்கு ஏதாவது உதவி செய்ய வெளியே செல்ல முடியுமா என்று யோசிக்கும்போது தெருவிலே ஒரு தென்னைமரம் நெடுஞ்சாண் கிடையாகக் காற்றில் சாய்ந்து விழுந்த சப்தம் கேட்டு என் அப்பாவும், அம்மாவும் விழித்துக்கொண்டு விட்டார்கள். இனிமேல் நான் வெளியே போகிறேன்

என்று சொன்னால் கூடப் போகவிட மாட்டார்கள். ஆனால், இந்தப் புயலில் வெளியே போய்த்தான் யார் என்ன செய்ய முடியும்?

என் முப்பது வருஷ ஆயுளில் மாயவரம் பகுதியிலாகட்டும், மயிலாப்பூர் பகுதியிலாகட்டும்; இப்படிப்பட்ட ஒரு புயலைப் பார்த்ததில்லை என்று தோன்றிற்று.

அப்பா, "என் அறுபத்தைந்து வயசில் நான் இப்படிப்பட்ட புயலைப் பார்த்ததில்லை. உலகம் கெட்டு கலி முற்றிக்கொண்டு வருகிறது. தருமம் குறைந்து அதருமம் பெருகுவதனால்தான் இந்த மாதிரி உத்பாதங்கள் தோன்றுகின்றன'' என்றார். விஷயம் தெரிந்தவர் மாதிரி, தெரிந்தவர் மாதிரி என்ன – தெரிந்தவர் தானே! அவர் செய்கிற அதருமங்கள் அவருக்குத் தெரியாதா என்ன?

நானோ அம்மாவோ அவருக்குப் பதில் சொல்லவில்லை. அவரேதான் மீண்டும் பேசினார், "சேரிகளிலும், மற்றும் மீனவர் குப்பம் போன்ற கடற்கரைப் பகுதியிலுள்ள மக்களுக்குத்தான் மிகவும் சிரமம். எத்தனை ஆடுமாடுகள், வீடுகள், மனிதர்கள் இந்தப் புயலுக்குப் பலியாகப் போகின்றனவோ– ஈஸ்வரா!'' என்றார்.

என் அப்பாவுக்குக்கூட இப்படியெல்லாம் சிந்தனை இருக்கிறதா, என்று எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. இதுதான் சமயம் என்று, "நம்மால் ஏதாவது யாருக்காவது உதவி செய்ய முடியுமா என்று வெளியே போய்ப் பார்க்கலாமே! என்று எனக்குத் தோன்றுகிறது" என்றேன்.

அம்மா பயந்து கொண்டே , "என்ன உதவி செய்ய முடியும்? புயல் தணிந்தபின் காலையில் செய்யலாம் ஏதாவது உதவி. இப்போது நீயோ, உன் அப்பாவோ வெளியே போய்விட்டால், என்ன ஆச்சோ ஏதோ என்ற திகிலிலேயே எனக்கு உயிர் போய்விடும்'' என்றாள்.

"இடமில்லாமல் தவிப்பவர்களை நம் வீட்டில் தங்க இடம் தரலாமே!" என்றேன்.

"அது எப்படியடா முடியும்? மீனவர்களையும், மற்ற ஜாதியினரையும் அக்கிரஹாரத்துக்குள் என்ன ஆபத்தானாலும் வரவிடுவார்களா? அது தவறு என்று நம்மேல் குற்றம் சாட்ட மாட்டார்களா மற்ற பிராமணர்கள் எல்லோரும்?" என்றார் அப்பா.

"மற்ற பிராமணர்கள் வீட்டின் ஒவ்வொன்றிலும் பத்திருபது பேர் தங்க முடியுமானால் புயலைச் சமாளித்து விடலாமே!'' என்றேன்.

"அது நடக்காத காரியம்" என்றார் அப்பா. "நீ வள்ளுவனுடைய தோழன். ஜாதி மதம் பார்க்காமல் ஸெகியல் வியாபாரி வீட்டுக்குக் கூடப் போகிறாயாம். அங்கு என்ன இருக்கிறது, உன்னை காந்தம் போல இழுக்க? அங்கே நீ ஏதாவது சாப்பிடுகிறாயோ என்று கூட ராமச்சந்திர சாஸ்திரி போன வாரம் சந்தேகப்பட்டு என்னைக் கேட்டார்! நான்தான் நீ அப்படியெல்லாம் சாப்பிட்டு விட மாட்டாய்!' என்று சொன்னேன்" என்றார் அப்பா. எனக்குப் பாடம் படிப்பிக்கிற மாதிரி.

வெளியே காற்று சற்று ஓய்ந்து மழை பெய்கிற மாதிரி இருந்தது. "வள்ளுவன் இந்த மாதிரி மக்களுக்கு உதவி தேவை என்று ஏற்படுகின்ற நேரங்களில் உதவாமல் நம்மைப் போல வீட்டுக்குள் உறங்கிக்கொண்டு இருக்க மாட்டான். ஸெகியல் வியாபாரிகூடத் தன் மாளிகைக் கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு வீடு வாசல் இழந்தோருக்கு அடைக்கலம் தருவதில் முனைந்திருப்பார்'' என்றேன். அவர்கள் அப்படிச் செய்பவர்கள்தான் என்பது இரண்டுபேரைப் பற்றியும் தெரிந்த விஷயம்தான்.

"ஸெகியல் வியாபாரியோ, உன் வள்ளுவனோகூட இந்தப் புயலில் வெளியே போய் ஒன்றும், யாருக்கும் எந்தவித உதவியும் செய்ய முடியாது. இரண்டடி எடுத்து வைப்பதற்குள் அவனுக்கே உதவி தேவைப்படுவதாகிப் போய்விடும்'' என்றார் அப்பா.

அதுவும் சரிதான் என்றே எனக்குத் தோன்றியது. ‘‘ஏன் மக்களுக்குக் கஷ்டம் விளைவிக்கிற மாதிரி இயற்கை இப்படி விளையாடுகிறது?" என்று கேட்டேன்.

அம்மா முதலில் பதில் சொன்னாள். "இயற்கையின் விளையாட்டு, கடவுளின் லீலை.''

"கடவுளின் லீலை மனிதனுக்கு நல்லது செய்வதில் இருக்கக் கூடாதா?" என்று கேட்டேன்.

"இந்தப் புயலாலும் யாருக்காவது எப்படியாவது நன்மை விளையாது என்று எப்படி நிச்சயமாகச் சொல்லமுடியும்?" என்று கேட்டாள் அம்மா.

மறுநாள் வரப்போகிற நன்மை எனக்குத் தெரியத்தான் இல்லை. என் அம்மாவுக்கு எப்படியோ சூசகமாக ஏதோ மனசில் தோன்றியிருக்கிறது.

"நமது தர்ம சாஸ்திரங்களில் கடல்நீர் பூமி மட்டத்துக்கு மேல் ஒரு முழ உயரம் தூக்கியிருப்பதாகவும், மனிதர்கள் செய்யும் தருமங்கள்தான் கடல்நீர்

பூமியின் மேல் பாய்ந்து எல்லாவற்றையும் அழித்து விடாமல் காப்பாற்றுவதாகவும் சொல்கின்றன'' என்றார் அப்பா.

"அப்படியொன்றும் தருமம் – கடலலைகளில் பூமி முழுகாமல் தடுக்கக்கூடிய அளவில் – தருமங்கள் இன்று ஓங்கியிருப்பதாகத் தெரியவில்லையே!" என்றேன் நான். பிறகு சற்று தைரியமாகவே, அப்பா சண்டை பிடித்தாலும் பிடிக்கட்டும் என்று குத்தலாகவே கேட்டேன். "நமக்குத் தெரிந்தவர்களில் எல்லோருமே ஏதாவது ஒருவிதத்தில் அதருமம் செய்பவர்களாகத்தானே இருக்கிறார்கள்?" என்று கேட்டு விட்டேன்.

வெளியே மறுபடியும் காற்று விசிறி விசிறி அடிக்கிறது. காற்றின் வேகத்தில் மழைச் சப்தம் தெரியவில்லை... மழை இல்லை, நின்று விட்டதோ? இன்னொரு மரம் சாய்வது காதில் விழுகிறது. தென்னை மரத் தொனியில்லை இது. வேப்பமரமாக இருக்கவேண்டும். மங்களம் பாட்டியாத்து வேப்பமரமாக இருக்கலாம்.

அதை எழுபது வருஷ மரம் என்று நேற்றுத்தான் பெருமையாகப் பாட்டி சொல்லிக்கொண்டிருந்தாள்.

"தனி மனிதரின் அதருமங்கள் துருத்திக்கொண்டு அதிகமாகத் தெரிகின்றன என்றாலும்கூட, ஒட்டு மொத்தத்தில் உலகில் மனிதர்களிடையே தருமவான்கள் அதிகம்'' என்று சொன்னார் அப்பா.

சற்று நேரம் கழித்து அவரே சொன்னார்: ‘‘இதில் பொதுவாக பிராமண தருமங்கள் அடங்கியிருக்கிறது என்று சொல்ல முடிகிறது! வள்ளுவனின் தகப்பன் ஜாதியினால் தாழ்ந்தவன் என்றாலும் தருமத்தால் உயர்ந்த மனிதன்தான். வள்ளுவனும் அவனைப் போல் இருந்தாலும் ஆச்சரியமில்லை. ஆனால், எங்கிருந்தோ இங்கு வந்து குடியேறி நியாயமாக, நேர்மை தவறாமல் வியாபாரம் செய்து பொருளீட்டும் அந்த யூதன் ஸெகியல் கூடத் தர்மவான்தான். பிராமணனாகப் பிறந்து விட்ட தோஷம் என்னால் அவர்களுடன் சரிசமமாகப் பழக முடியவில்லை . பழகினால் என் பிழைப்பே போய்விடும். நீ பிராம்மணனாகப் பிழைப்புத் தேடிக் கொள்ளாத தினால் வள்ளுவனோடும், ஸெகியலோடும் சரிசமமாகப் பழக முடிகிறது. நீ அப்படிப் பழகுவது என் பிழைப்புக்கு ஆபத்து விளைவிக்குமோ என்று சில சமயம் பயமாக இருக்கிறது. அதனால் உன்னைக் கண்டிக்கப் பார்க்கிறேன். மொத்தத்தில் நீ அவர்களோடு பழகுவதில் எனக்குத் திருப்திதான்."

இதைக்கேட்டு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. புதுமையாகவும் இருந்தது. அப்பாவினால் பிராமணர்கள் இழுத்த நேர்க்கோட்டைத் தாண்டி இப்படியும் சிந்திக்க முடிந்ததே என்று எனக்கு வியப்பாக இருந்தது. அப்பாவைப் பற்றியும்கூட ஏதோ கொஞ்சம் பெருமைப் படலாம் போல இருந்ததே!"

"பிராமணர்களை வேலி போட்டு வைத்திருக்கிறார்கள் – அந்த வேலிகளே இன்றில்லாவிட்டால் என்றோ ஒருநாள் அவர்களை அழித்துவிடத்தான் போகிறது" என்றார் அப்பா.

எனக்குப் பூரணமாகத் தூக்கம் கலைந்துவிட்டது. இந்த விஷயத்தை நானே வள்ளுவனிடம் கூற வேண்டும். அவன் என்ன சொல்கிறான் என்று கேட்க வேண்டும்.

அப்பா தொடர்ந்தார்; "ஸெகியல் அப்படி இருப்பதில் – தருமவானாக இருப்பதில் எனக்கு ஆச்சரியமில்லை . அவன் பெண்களும், பிள்ளைகளும் அவரவர் வழியில் தருமவான்களாக இருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது!'' என்றார்.

"இந்தப் புயலில் பாதிக்கப்பட்டவர்களைத் தன் மாளிகைக்குள் அனுமதித்துக் கொண்டிருப்பார் ஸெகியல். அவர் பெண்கள் லிஸ்ஸத்தும், மிரியமும் இரவு பூராவும் கண் விழித்து காயம் பட்டவர்கள், அடிப்பட்டவர்கள், யாரையாவது இழந்தவர்களுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டு அல்லது மருந்து கொடுத்துக் கொண்டு இருப்பார்கள் என்று தோன்றுகிறது."

"அந்த லிஸ்ஸத்தும், மிரியமும் நல்ல பெண்கள். அந்நியனாயிற்றே, என்னவோ ஏதோ என்று எண்ணினேன். எவ்வளவு நல்ல பெண்கள் அவர்கள்" என்றாள் அம்மா தூக்கக் கலக்கத்துடன்.

புயல் காற்று ராட்சஸ வேகத்துடன் வீசி வீசி ஆடிக்கொண்டிருந்தது. கடல் அலைகளின் ஒலி காற்றுடன் சேர்ந்து பயங்கர இசை பாடிற்று. தூங்கினால் நல்லதுதான், தூக்கம் வரவில்லை . தூக்கக் கலக்கத்தில் மிரியத்தைப் பற்றி ஏதாவது சொல்லிவிடக் கூடாது.

அப்பாவும் தூங்கவில்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அம்மா சொன்னாள்: "அந்த மிரியம் ஒரு விஷயம் சொன்னாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. வள்ளுவன் ஒரு நாள் அவர்கள் வீட்டில் அவள் அப்பாவிடம் மாமிச பட்சணம் பண்ணுவதைக் கண்டித்து மிருகங்கள், பட்சிகள், மான்களைக் கொன்று உண்டு தன்னை வளர்த்துக்கொள்வது தவறு என்று விவாதித்துக் கொண்டிருந்தானாம். அதைக் கேட்டுக் கொண்டிருந்த மிரியத்துக்கு வள்ளுவனின் வாதங்கள் சரியென்று படவே

அன்று முதல் மாமிசம் சாப்பிடுவதையே நிறுத்தி விட்டாளாம்! இப்போது பூராவும் சைவ உணவுதானாம். தனியாகத் தனக்கென்று சமையலறை வைத்துக்கொண்டு காய்கறிகளைத்தான் சாப்பிடுகிறாளாம்! அவள் சொன்னபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது!" என்றாள் அம்மா கொட்டாவி விட்டுக்கொண்டே.

நான் எதுவும் சொல்லவில்லை. அப்பாவும் பதில் சொல்லவில்லை. அம்மாதான் தொடர்ந்தாள். "அந்தப் பெண் பிராமணப் பெண்ணாக இருந்தால்...?"

"ஏன்? உன் அருமைப் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து கொண்டு விடுவாயோ!" என்று கேலியாகக் கேட்டார் அப்பா. "அவர்கள் பணக்காரர்கள் – வியாபாரிகள். நாளைக்கே ஊரைவிட்டுப் போனாலும் போய்விடுவார்கள். வாதூலனுக்குப் பெண் தருகிறேன் என்று தீக்ஷிதர் சொல்கிறார்."

"சீட்டாட்ட தீக்ஷிதரா?'' என்றேன் நான்.

"அவர் சீட்டாடினால் என்ன? அவர் பெண் சீட்டாட மாட்டாள்."

"எந்தப் பெண்? அவருக்கு ஐந்தும் பெண்கள் – மூத்தவளுக்கு மட்டும்தான் கல்யாணமாகி இருக்கிறது'' என்று விசாரித்தாள் அம்மா.

"மங்களம் என்று பெயர் சொன்னார். இரண்டாவது பெண் என்று எண்ணுகிறேன்" என்றார் அப்பா.

"ஐயோ! அது மகா அசடுன்னா!'' என்றாள் அம்மா. "தத்துப்பித்து என்று பெரியவர்கள் பேசறச்சே ஏதாவது உளறி வைக்கும். மூன்றாவது பெண் சற்று சமத்து. அபயம் என்று பெயர்."

''அசட்டுப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதுதான் நல்லது. புருஷன் என்ன செய்தாலும் என்ன செய்கிறான் என்று அறியாமல் பேசாதிருந்துவிடும் பார்'' என்றேன் நான்.

அம்மா சிரித்தாள், அப்பாவை நான் குத்திக் காட்டுகிறேன் – கோபித்துக் கொண்டுவிடப் போகிறாரே என்று அவளுக்குப் பயம்.

ஆனால், அப்பா தூங்கிப் போய்விட்டார்.

புயல் இன்னும் ஆக்ரோஷமாக வீசிக் கொண்டிருந்தது.

காற்று, மழை எல்லாவற்றிற்கும் அப்பால் இடி இடிப்பதும் மின்னல் மின்னுவதும் தொடங்கிய பின்தான் – விடிய இரண்டு நாழிகை இருக்கும்

போதுதான் – விழித்துக்கொண்டேன். எப்போது தூங்கினேன் என்று எனக்கே தெரியாது.

அம்மா இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். நான் விழித்துக்கொண்டு பார்த்தபோது அப்பாவை அவர் படுத்திருந்த இடத்தில் காணவில்லை. எழுந்து வெளியே போயிருக்கிறார்போல இருந்தது. ஒரு விநாடி அவர் தன் அபிமானப் பெண்களில் யார் ஷேமத்தை விசாரிக்கப் போயிருக்கிறாரோ என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால், இரவில் அவரிடம் ஏற்பட்ட நல்லெண்ணம், "அப்படியிராது! யாருக்காவது உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவத்தான் போயிருப்பார்" என்று என்னையே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

நான் பரக்கப் பரக்க எழுந்து தாழ் நீக்கியிருந்த வாசற்கதவை அணுகும்போது அம்மாவும் விழித்துக் கொண்டுவிட்டாள். முதற்காரியமாக, ‘‘புயல் ஓய்ந்து விட்டது. இடியும், மின்னலுமாக இருக்கிறது. வெளியே போவதானால் ஜாக்கிரதையாகப் போ. யாராவது துணையுடன் போ – தனியாகப் போகாதே" என்றாள்.

முதலில் வள்ளுவனைத் தேடித்தான் போகிறேன். பின்னர்தான் மற்றதெல்லாம் என்று சொல்லிவிட்டு வெளியே வந்தவுடன் அக்கிரஹாரத்தில் இருந்த அலங்கோலத்தைக் கீழும் மேலுமாகப் பார்த்தேன். அக்கிரஹாரத்து வீடுகளிலும் சில சேதமடைந்துதான் இருந்தன. எதிர் வீடு – கூரையில்லாததுதான், ஓலையைத் தற்காலிகமாக வேய்ந்திருந்தார்கள். அது கூரையே இல்லாமல் கிழக்குப் பக்கத்துச் சுவர் இடிந்து விழுந்து கிடக்க, வீட்டிலிருந்தவர்கள் கூடத்தில் ஒண்டிக் கொண்டிருந்தாலும் தெருவிலேயே நிற்கிற மாதிரிதான் இருந்தது. புயல் அடித்துக் கொண்டிருந்தபோது அவர்களுக்காவது என் வீட்டில் இடம் தந்திருக்கலாமே என்று தோன்றியது எனக்கு.

நான் எதுவும் சொல்லுமுன் என் பின்னால் வந்து அவர்கள் வீடு ஆகியிருந்த நிலைமையைப் பார்த்த அம்மா "இங்கே வந்து ஒண்டிக்கொள்ளச் சொல்லுடா! இங்கே வேணுங்கற இடம் இருக்கு" என்று என்னிடம் சொல்லிவிட்டு விடுவிடுவென்று தெருவில் இறங்கிப்போய், எதிர் வீட்டு அம்மாளையும், அவளுடைய இரண்டு பெண்களையும், கைக் குழந்தையையும் ஏதோ சொல்லி உள்ளே அழைத்து வந்தாள். அவர்கள் வீட்டில் காப்பதற்கென்று சாமான்கள் கூட எதுவும் அதிகம் இல்லை . இருந்ததை சீதாராம ஐயரும் நானும் கொண்டுவந்து என் வீட்டுக் கூடத்தில் பத்திரப் படுத்தி விட்டுக் கிளம்பியபோது, ‘‘நானும் வரேன். யாருக்கு என்ன

கஷ்டமோ? இந்தச் சமயத்தில் உதவி செய்யாதவன் மனிதனா?" என்று கேட்டுக்கொண்டே சீதாராமய்யரும் உடன் வந்தார்.

அவர் வருவது எனக்கு இடைஞ்சலாகப்பட்டது. நான் போகிற இடத்திற்கு அவர் வரமாட்டார். நானும் போகக்கூடாது என்று தடுப்பார் அவர் என்று எண்ணினேன். ஆனால், இடையில் அவருக்கு உகந்த சகபாடி யாரோ கிடைக்கவே, "என்ன சர்மா? ஊர் எப்படி யிருக்கு? ரொம்ப நஷ்டமோ?" என்று கேட்டுக் கொண்டு என்னைத் தனியே விட்டுவிட்டுப் போய்விட்டார். எனக்குத் திருப்திதான்.

புயல் ஊருக்குள் புகுந்து விளையாடித்தான் இருக்கிறது. ஊர்த்துவ தாண்டவம், ஊழிக்கூத்து என்று சொல்கிறார்களே – அது இதுதானோ? ஆனால், இது இயற்கையின் விளையாட்டுத்தான் – கடவுளின் ஊழிக்கூத்தல்ல, இதன் விளைவே இப்படியானால், அதன் விளைவு எப்படியிருக்கும்?

கோயிலின் கீழண்டைச் சுவர் புயலிலும் மழையிலும் இடிந்து விழுந்துவிட்டது. நல்ல வேளை – ஆட்களுக்கு ஒன்றும் சேதமில்லை. சுவர் இடிந்து விழும் முன் அதன் மேல் ஒரு மரம் சாயவே, ஜனங்கள் வேறு பந்தோபஸ்தான இடத்துக்கு ஒதுங்கியிருக்கிறார்கள், அதனால் தப்பித்துக் கொண்டு விட்டார்கள். இல்லாவிட்டால் குழந்தைகள், பெண்கள் என்று பத்திருபது பேராவது போயிருப்பார்கள். மறுபிழைப்புத்தான் அது.

ஸெகியலின் மாளிகை வாசலில் ஒரே கூட்டம். உள்ளே முன் ஹாலில் மரம் முறிந்து விழுந்து காயம்பட்டவர்கள், சுவர் இடிந்து விழுந்து காயம்பட்டவர்கள், யாருக்கோ உதவப்போய்க் காயம் பட்டவர்கள் என்று இருபது முப்பது பேர்வழிகள் வலியால் முனகிக்கொண்டு கிடத்தப்பட்டிருந்தனர். லிஸ்ஸத்தும், மிரியமும் மருந்து கொடுப்பதும், மருந்து தடவுவதுமாக நிமிர்ந்து பார்க்க நேரமில்லாமல் சுறுசுறுப்பாக இருந்தார்கள். பெரிய கதவு பூரணமாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. ஸெகியலே முன் நின்று செய்ய வேண்டிய காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். இரவு பூராவும் அந்த வீட்டில் யாரும் சிறிதும் உறங்கவில்லை என்பதும் அந்த வீட்டுக் கதவு இரவு பூராவும் சாத்தப்படவில்லை என்பதும் தெளிவாகவே தெரிந்தது. எங்கிருந்தோ வியாபார நிமித்தம் இங்கு வந்தவர்கள் ஸெகியலும் அவர்கள் குடும்பத்தினரும். அவர்களுக்குத் தான் என்ன மனிதாபிமானம். எங்கள் வீட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு படுத்துத் தூங்கிவிட்டதை நினைக்க எனக்கு வெட்கமாக இருந்தது. அந்தச் சமயம் பார்த்து மிரியம் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். இரவு பூராவும் கண் விழித்திருப்பாள் போல

இருக்கிறது. அவள் முகத்தில் என்ன களைப்பு! ஆனால், அத்துடன் என்ன களை! என்ன சோபை! அடுத்த விநாடி அருகிலிருந்த காலொடிந்த ஒருவனின் கால் அவள் கவனத்தைக் கவர்ந்தது. காரியத்தில் கண்ணானாள்.

நானும் நகர்ந்தேன். போகும் வழியெல்லாம் சேறும் சகதியுமாக இருந்தது. பாதை சரியாகத் தெரியவில்லை. பொழுது புலர ஆரம்பித்து விட்டது. இடியும் மின்னலும் கூட நகர்ந்து விட்டது. வானத்தில் ஒரு மேகம்கூட இல்லை. ஆனால், வானத்தை நிமிர்ந்து பார்த்து நடக்க முடியாதபடி சேறும், சகதியும். காலை எங்கே வைக்கிறேன் என்று பார்த்து நடக்க வேண்டும். விழுந்த மரங்களும், வேரோடு பறிக்கப்பட்டு இடம் பெயர்ந்து காற்றில் பறந்து வந்திருந்த செடி, கொடிகளும் வழி நெடுகக் கிடந்தன.

வள்ளுவன் வீட்டைச் சுற்றிலும் ஒரே குப்பை கூளம்தான். வள்ளுவனின் வீட்டுக்கு ஒரு சேதமும் இல்லை. சுற்றிலும் இருந்த வீடுகளில் பத்துப் பன்னிரெண்டு குடிசைகளாவது இருந்த இடம் தெரியாமல் கரைந்து மண்மேடாகக் கிடந்தன. கூரைகள் எங்கே போயினவோ தெரியாது. பெண்களும், குழந்தைகளும் மட்டும் வள்ளுவனின் வீட்டு முன்கூடத்தில் நிறைந்திருந்தனர். ஆதி பெரிய அடுப்பை மூட்டி அவர்களுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தாள். ஆண்கள் ஒருவரையும் காணோம். வள்ளுவனும், அவன் தகப்பனாரும் ஊரில் யாருக்கு என்ன உதவி தேவை என்று தேடிக்கொண்டு கிளம்பியிருப்பார்கள். மற்ற ஆண்களில் சிலரும் யாருக்காவது உதவி செய்ய முடியுமா என்று தேடிக்கொண்டு போயிருக்கலாம். மற்றவர்கள் இந்தப் புயலில் கொண்டுவந்து தெருவில் உதறப்பட்ட பொருள் கிடைக்குமோ என்று தேடிக்கொண்டு போயிருப்பார்கள் என்றுதான் எனக்குத் தோன்றியது. உலகில் நல்லவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாதே! அவர்கள் செய்யும் தருமம் உயர நிற்கும் கடல்நீரை உள்ளே வராமல் தடுக்கப் போதுமானதாக இருக்கிறது என்று அப்பா சொல்கிறார். வள்ளுவனும், பகவனும், ஸெகியலும் இங்கு இருந்து கண்முன் தருமங்கள் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் கைநீட்டிக் கடல்நீர் உள்ளே வராமல் தடுத்துக் கொண்டிருக்க முடியும் என்று எனக்குத் தோன்றிற்று. ஊருக்கு ஒருவர் இருந்தால் போதுமே!

என்னைப்போல் தருமம் செய்யாமல், அதருமமும் செய்யவும் தெம்பில்லாமல் இருப்பவர்தான் உலகில் பலரும். அவர்களால் உலகத்திற்கு லாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை.

வள்ளுவன் எங்கே போயிருப்பான் என்று எங்கே போய்த் தேடுவது?

"வள்ளுவனும் அவர் அப்பாவும் கிழக்கே போனார்கள். எங்கே போனார்கள் என்று தெரியாது'' என்றாள் ஒரு சிறுமி.

கிழக்கேதான் கடல் பரந்து கிடந்தது. அமைதியாக, அதிகமாகச் சப்தம்கூடக் காட்டாமல், 'நான் அப்படி ஆர்ப்பாட்டமெல்லாம் பண்ணவில்லையே' என்று சொல்கிற மாதிரி அடங்கி ஒய்ந்து கிடந்தது. கடற்கரையை நோக்கிக் கிளம்பினேன். போகும் வழியெல்லாம் ஊர்ச்சேதம் – பொருள்கள் – விலையற்றவை, இப்போது உபயோகமும் அற்றவை – சிதறிக் கிடந்தன. ஒரு விழுந்த அரசமரத்தின் ஓரமாகக் கிளைகளிடையே ஒதுங்கிக் கிடந்த ஒரு சிறு உடலிலிருந்து முனகல் ஒலி எழுந்து கொண்டிருந்தது. ஒரு பெண் குழந்தை – இரண்டு வயதிற்குள்தான் இருக்கும். எத்தனை நேரமாக – குளிரில் விறைத்துக் கொண்டு – சட்டையின் ஈரம் காயவில்லை – படுத்துக் கொண்டு கிடந்ததோ அது! என் வீட்டுக்கு எடுத்துப்போய் என் தாயாரிடம் கொடுக்கலாமா என்று தோன்றியது. ஆனால், எந்த ஜாதிக் குழந்தையோ! வீட்டில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று அப்பாவோ, அம்மாவோ சொல்லாவிட்டாலும்கூட பிரா மணோத்தமர்கள் பலரும் சொல்வார்கள். ஸெகியலின் வீட்டிலும் கொண்டு போய்ச் சேர்க்கலாம். அவர்கள் சரிவரவே சிசுருக்ஷை செய்து கவனித்துக் கொள்வார்கள்.

ஆனால், அதெல்லாம் பற்றிச் சிந்தித்தேனே தவிர என் கால்கள் தாமாகவே வள்ளுவன் வீடு நோக்கித்தான் நடந்தன. அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமே கிடையாது. எந்தக் குழந்தையானாலும் அவர்கள் ஏற்றுப் பராமரித்துக் காப்பாற்றி விடுவார்கள். உரியவர்கள் வந்து கேட்டால் கொடுத்தும் விடுவார்கள். சொத்துக்குடையவர்கள் யாரும் வராவிட்டால் வைத்துக் காப்பாற்றிவிடுவார்கள்.

வாசுகிதான் முதலில் கண்ணில் பட்டாள். குழுமியிருந்தவர்களுக்குக் கஞ்சி கொடுத்துக் கொண்டிருந்தாள். "யார் வீட்டுக் குழந்தையோ! அழுதும், பசியினாலும், பயத்தினாலும் களைத்துப் போயிருக்கிறது. இன்னும் அரை நாழிகையானால் உயிர் போயிருக்கும். பாவம்! இந்தமாதிரி கஷ்டப்பட வேண்டும் என்று பச்சை மண்ணில் எழுதியிருக்கிறதே – பாவம்தான்'' என்று குழந்தையை அவள் வாங்கி ஆதியிடம் தந்தாள்.

மிரியத்திற்குக் குழந்தை பிறந்தால் இப்படித்தான் அழகாக புதுப்பூ மாதிரி மிருதுவாக இருக்கும் என்று ஏதோ சம்பந்தமில்லாமல் சிந்தித்துக் கொண்டே நான் வந்த வழியே திரும்பினேன்.

பாதி வழியிலேயே என் எதிரே, கைத்தாங்கலாகக் கால் ஒடிந்து வலியால் முனகிக் கொண்டிருந்த ஒரு பெரியவரை அழைத்துக் கொண்டு வள்ளுவன்

வந்து கொண்டிருந்தான். அந்தக் காலொடிந்த வனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகத்தான் எண்ணியிருந் தான். ஆனால், இந்தமாதிரி கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களில் பலருக்கு ஸெகியலின் வீட்டு முன்கூடத்தில் லிஸ்ஸத்தும், மிரியமும் சிகிச்சையளித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று நான் சொன்ன போது, "எனக்கு ஏன் அது தோன்றாமல் போயிற்று? நானே எதிர்பார்த்திருக்க வேண்டியதுதானே அது?" என்று சொல்லிக் கொண்டே ஸெகியலின் மாளிகைப் பக்கம் திரும்பினான்.

"இன்னும் யாருக்காவது உதவி தேவையாயிருக்கும். நீ போய் மீனவக் குடிசைகள் இருந்த இடத்தில் போய்ப் பார்'' என்றான் வள்ளுவன்.

அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது எனக்கு. "இவரைக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு இருவருமே போவோம். ஒருவருக்கிருவராக இருந்தால் எதுவும் செய்வது சுலபம்" என்றேன்.

வள்ளுவன் மறுதலிக்கவில்லை. காலொடிந்தவரை ஸெகியலின் மாளிகையில் சேர்த்ததும் அங்கிருந்தவர்கள் அவரைக் கவனித்துக் கொண்டார்கள். எங்கள் பொறுப்பு முடிந்தது என்று நாங்கள் இருவரும் கிளம்பினோம்.

மனிதனால் கோயில்கள் மட்டும்தான் கட்ட முடிகிறது என்று இல்லை. வீடுகளும் கட்ட முடிந்தது. வீடுகள் இடிந்து விழுந்து விட்டால் – புயலில், வெள்ளத்தில், தீயில் வருந்தினாலும் – துயரைத் தேற்றிக்கொண்டு தீர்மானமாக மறுபடியும் வீட்டை நிர்மாணிக்க முயல முடிகிறது. மீனவர்கள் குடிசைகளில் எத்தனையோ புயல்களைக் கடலிலும், கரையிலும் சமாளித்தவர்கள் இருந்தார்கள். அவர்களில் பலருக்குத் தங்களுக்கு வேறு யாரும் உதவ முன் வரமாட்டார்கள். தாங்களே தான் தங்களுக்கும் தங்களைப் போன்ற மற்றவர்களுக்கும் உதவ வேண்டும் என்பது அனுபவத்தினால் தெரிய வந்த பாடம். அவர்களில் பலரும் மூங்கிலாலும், தென்னங் கீற்றுகளினாலும் ஆன தங்கள் குடில்களை மீண்டும் உயர்த்த, இடியும் மின்னலும் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கும்போதே ஆரம்பித்து விட்டார்கள். அடிபட்டு, உபயோகமற்றுப் போனவர்களுக்குச் சிகிச்சை செய்கிற காரியமும் ஒரு அனுபவம், முதிர்ந்த கிழவரின் தலைமையில் இளவட்டங்கள் பலர் செயல்பட நடந்து கொண்டிருந்தது. புயலில் இடிந்து விழுந்த சுவடே தெரியாமல் இரண்டு மூன்று குடிசைகளை நிமிர்த்தி அதில் எல்லோருக்குமாய்க் கஞ்சி காய்ச்ச ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. அவர்களில் ஒருவன் போய் ஸெகியலின் மாளிகையிலிருந்து இரண்டு மரக்கால் அரிசி கொணர்ந்திருந்தான். இரண்டு வேளைக் கஞ்சி காய்ச்சி ஊத்த அது போதும்.

மீனவர்கள் சுறுசுறுப்பாக, மகிழ்ச்சிகரமாகவே இயங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்ட வள்ளுவன், "துயருற்ற கலையும் மகிழ்ச்சியாக இருக்கும் கலையும் நாம் இவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான்.

மூங்கிலும், கீற்றும் வேய்ந்த ஒரு படலை ஒரு வீட்டின் சுவராக நிமிர்த்தி வைக்க முயன்று கொண்டிருந்த செங்கோடன், "என்ன வள்ளுவரே! கடல்தாய் கொடுக்கிறாள். கடல்தாய் எடுத்துக் கொண்டு விடுகிறார். இதெல்லாம் சகஜம். இந்த செங்கோடன் எத்தனையோ புயல்களைப் பார்த்திருக்கிறான். அவற்றில் இது சற்றுப் பெரிய புயல்!" என்றான்.

"உயிர்ச் சேதம்..." என்று தயங்கினான் வள்ளுவன்.

"உயிர்ச் சேதம் இல்லாமலிருக்குமா? ஏழு பேர் போய் விட்டார்கள் – மீளாத உலகுக்கு. பாவம், உங்களுக்கு வேண்டியவனான பரமன் போய்விட்டான்'' என்றான் செங்கோடன்.

"பரமன் போய்விட்டானா? எப்படி?"

"புயல் வீசிப் பெருக ஆரம்பித்த போது, தூரத்தில் ஒரு படகு தத்தளிப்பது தெரிந்தது. அதைக் காப்பாற்றப் போக முடியாது – கடலில் நீந்திச் சமாளிக்க முடியாது என்று நாங்கள் தீர்மானித்துச் சும்மாயிருக்கிறபோது, நாங்கள் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே பரமன் கடலுக்குள் பாய்ந்து விட்டான். அவனுக்கு உதவி செய்கிறேன் என்று மாசிலாமணியும் கடலில் புகுந்து விட்டான். இருவரும் திரும்பவில்லை. இன்று சாயங்காலம் கடற்கரையில் தேடினால் அவர்கள் உடல் கிடைக்கும்" என்று முடித்தான் செங்கோடன்.

"பாவம் பரமன்! அந்தப் படகு என்ன ஆயிற்று?"

''யார் கண்டது? கடலிலே அடிபட்டுக் கொண்டிருந்தது. எங்கே போய் மோதிற்றோ! அதில் யார் யார் இருந்தார்களோ – யாருக்குத் தெரியும்?"

அவன் போக்கிலே அலட்சியத்தைவிட ஒரு செயலின்மைதான் தொனித்தது. செய்யக் கூடியதைச் செய்யாமல் செய்ய முடியாததை எண்ணி என்ன லாபம் என்று அவன் சொல்வதுபோல இருந்தது.

"நம்ம பக்கத்துப் படகா? இல்லை வேறு ஊர் படகா?"

"நம்ம ஊர்ப் படகில்லை. பார்த்தால் அந்த மங்கலில் மலையாளப் பக்கத்துப் படகு மாதிரித் தோன்றியது. நிச்சயமாகச் சொல்ல முடியாது'' என்றான்

செங்கோடன்.

"மனிதர்கள்"

"இரண்டு மூன்று பேர் இருந்திருக்க வேண்டும் அந்தக் காற்றில் கரைப்பக்கம், கண்ணுக்கெட்டிய தூரத்தில் அது வந்ததே மனித யத்தனத்தால்தானே இருக்கவேண்டும்? மனிதர்கள் இருப்பது லேசாகத் தெரிந்ததனால்தான் பரமன் அவர்களைக் காப்பாற்ற முடியுமா என்று எண்ணிக் கடலில், செய்ய முடியாத காரியத்தைச் செய்ய முற்பட்டான். இந்த மாசிலாமணியும் போகாமல் இருந்திருக்கலாம். ஆயுசு முடிந்துவிட்டால் யார் தடுத்து நிறுத்த முடியும் வள்ளுவரே?" என்றவன், "உங்களுக்குத் தெரியாததா நான் சொல்லப் போகிறேன்?" என்று பணிவாகச் சொன்னான்.

"போய் விட்டவர்களைப் பற்றிப் போய் விட்டானே என்று கவலைப்படுவதில் அர்த்தமில்லை. நல்ல காரியம் செய்ய முனைந்து போனானே என்று திருப்திப்பட வேண்டியதுதான்" என்றான் வள்ளுவன்.

வள்ளுவன் அங்கு வந்திருப்பதை அறிந்து பரமனின் தாய் அணுகினாள். "என் அய்யா போய்ட்டான். எனக்கு அழுகையே வரவில்லை. பெருமையாகத்தான் இருக்கு. அந்தப் படகு என்ன ஆயிற்றோ, படகில் இருந்தவர்கள் காப்பாற்றப்பட்டு விட்டால் பரமன் போனதுகூட எனக்குப் பாரமாகத் தோன்றாது'' என்றாள்.

எனக்கு அழுகை வந்துவிடும் போல இருந்தது. செங்கோடனை வள்ளுவன் விசாரித்தான். "அந்தப் படகு என்ன ஆகியிருக்கும் செங்கோடா?"

"என்ன ஆகியிருக்கும்? கவிழ்ந்திருக்கும் அல்லது எங்கேயாவது தரை, கல்லில் மோதி உடைந்திருக்கும். கடலில் முழுகாமல் உயிருடனிருந்தால் படகிலிருந்த மனிதர்கள் கரையில் வந்து சேர்ந்திருக்கலாம். எங்கேயாவது மயங்கி, தண்ணி குடித்துவிட்டுக் கிடந்தாலும் கிடக்கலாம்... இங்கே வேலையில்லாவிட்டால் நான் போய்த் தேட முடியும்" என்றான் செங்கோடன்.

"எந்தப் பக்கம் தேடணும் சொல்லு. நான் போய்த் தேடறேன்" என்றான் வள்ளுவன்.

"ஒரு நாள் பூராவும் தேடுவதும் கூட வியர்த்தமாகப் போகலாம். நமக்கு எட்டிக் காண முடியாத தூரத்திற்குப் போயிருக்கலாம்'' என்றான் செங்கோடன் நேரடியாகப் பதில் தராமல்.

“தெற்கே தேட வேண்டுமா – வடக்கே தேட வேண்டுமா சொல்லு."

"காற்று தெற்குப் பக்கம் தான் அடித்தது’’ என்றான் செங்கோடன்.

வள்ளுவன் கிளம்பும் முன் பரமனின் தாய் குறுக்கிட்டாள் – "வள்ளுவா! நீ தான் எனக்கு இனிமேல் பிள்ளை!"

"ஒரு பிள்ளைக்கு எத்தனை தாய்கள்?’’ என்றான் வள்ளுவன்.

"படகு பற்றித் தகவல் வந்து சொல்லு. அது தெரிகிற வரையில் நான் அழ மாட்டேன்’’ என்றாள் பரமனின் தாய்.

## அத்தியாயம் 10

நான் பளபளவென்று பொழுது விடியும் முன்பே என் வீட்டை விட்டுக் கிளம்பியிருந்தேன். வள்ளுவன் எனக்கு முன்னாடி எழுந்து எங்கெங்கே போனானோ, யாராருக்கு உதவினானோ – எதுவும் எனக்குத் தெரியாது. சாகக் கிடந்த குழந்தையைக் கண்டு நான் வாசுகியிடம் கொடுத்துவிட்டு வரும்போதே, கிழக்கே சூரியன் உதித்துவிட்டான். பொழுது நன்றாக விடிந்து வெளிறத் தொடங்கி விட்டது. புயலின் சின்னங்களைத் தேட வேண்டும் என்றால் பூமியில் தான் தேட வேண்டுமே தவிர வானத்தில் தேடிப் பயனில்லை. இந்த வானத்திலா புயல் மேகங்கள் திரண்டு இருண்டிருந்தன என்று கேட்க வேண்டும்போல வானம் நிர்மலமாக, ஒரு மேகம் கூட இல்லாமல், அழகான அமைதியான நீலமாக இருந்தது.

"நேற்று இருந்தவன் இன்று போய்விட்டான் என்று சொல்லும் பெருமையையும் புகழையும் பெற்றது இந்த உலகம். புயல் இல்லை ’’ என்றான் வள்ளுவன்.

காலொடிந்த கிழவனை இருவருமாகத் தாங்கி ஸெகியல் வீட்டுக்குக் கொண்டுபோய் ஒப்படைத்துவிட்டு மீனவர் குப்பம் தேடிப் போகும் போது வெய்யில் உயர வந்து உடம்பில் சுள்ளென்று அடிக்க ஆரம்பித்துவிட்டது. காலையில் நீராகாரமோ, பழையதோ சாப்பிடும் நேரம் தாண்டி ஒரு நாழிகைக்கும் அதிகமாகிவிட்டது. எனக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. எதைத் தேடிக்கொண்டு தெற்கே கிளம்பியிருக் கிறோம் என்று எனக்கு நிஜமாகவே தெரியவில்லை.

"எதைத் தேடிக்கொண்டு நாம் செல்கிறோம் வள்ளுவா?" என்று கேட்டேன்.

"நீ சுலபமாகக் கேள்வி கேட்டு விட்டாய். இந்தக் கேள்விக்கு மட்டும் எந்த மனிதனாலாவது சுபலமாகப் பதில் சொல்லிவிட முடியு மானால் வாழ்க்கை எத்தனை சுலபமாகி விடும்'' என்றான் வள்ளுவன்.

வள்ளுவனின் போக்குகள், சிந்தனையோட்டம் எனக்குப் பழக்கமானதுதான். அன்றிரவு அடித்த புயலும், அதன் விளைவாக அவனுக்கு ஏற்பட்ட அனுபவங்களும் அவனை வெகுவாக உலுக்கி யிருக்க வேண்டும். மனித குலத்திடம் ஒரு கசப்பான நம்பிக்கையின்மை யுடன் அவன் பேசுகிறான் என்பது தெரிந்தது. சாதாரணமாக அவன் மனித குலத்திடமும், எதிர்காலத்திலும், நம்பிக்கையுள்ளவன். இன்று உள்ளது போலவோ, நேற்று இருந்தது போலவோ உலகம் எப்போதும் இருண்டு கிடக்காது என்றும், மனிதன் எந்த வழியில் சென்றாலும் ஏதோ ஒரு சக்தி அவனை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துவிடும். என்றும், அவன் நன்றாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பான். நன்றாக என்பதற்கு அவன் பல சமயங்களில் பல விதமான அர்த்தங்கள் சொல்வதுண்டு.

"மனிதர்கள் கயவர்களாக மாறுவதற்கு லேசான காரணம் போதும். புயல்கூடத் தேவையில்லை" என்று வள்ளுவன், சொன்ன புதிர் புரியாமல் நான் விழிப்பதைப் பார்த்து "மூன்று இடங்களில் புயல் கொந்தளிப்புடன் சேர்ந்து இயற்கையாக விளையாத தீவினையாக, மனிதர்களால் விளைந்த தீவினையாக மூன்று காரியங்கள் நேற்றிரவு நடந்து விட்டன."

"என்ன?" என்றேன்.

"முதல் தீவினை – ஸெகியல் வீட்டை அடுத்து இருந்த கிட்டங்கியில் சில கயவர்கள் தீ வைக்க முயன்றிருக்கிறார்கள். நல்ல வேளையாகத் தீ பெரிதாகப் பரவி ஏகப்பட்ட நஷ்டம் விளைவிக்கு முன் அணைக்கப்பட்டது."

"யார் செய்தார்கள்? யார் கண்டுபிடித்தது?"

"யார் செய்தது என்று தெரியாது. நான்தான் கண்டுபிடித்தேன். புகைந்தது. நான் அந்தப் பக்கம் போனபோது, ஸெகியலின் ஆட்களைக் கொண்டே அதை அணைக்க ஏற்பாடு செய்தேன். என்னால் மட்டும் செய்திருக்க முடியாது.

"ஸெகியல் என்ன சொன்னார்?"

“விஷயம் எனக்குத் தெரிந்து அவர் வரையில் போகவில்லை . அவர் கப்பல்கள், படகுகள் தவிர, புயலில் அவதியுற்ற மனிதர்களுக்கும், குடும்பங்களுக்கும் உதவி தந்து, வைத்தியம் செய்து தன்னாலானதைச்

செய்து கொண்டிருந்தார். அவரை அந்தச் சமயத்தில் விளித்து இந்தத் தீச்செய்தியையும் சொல்வானேன் என்று வந்து விட்டேன்.

‘‘மறுபடியும் யாராவது விஷமம்...’’ என்று நான் சொல்லும்போது, மறித்து, அதற்கான வகையில் ஏற்பாடுகளைச் செய்து காவல் போட்டுக் கொள்ளும்படி அவர் ஆட்களிடம் சொல்லி விட்டேன். அவர்கள் நிச்சயமாகச் சரிவரக் கவனித்துக்கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும்."

"இப்படி ஒரு பெரியவர் ஊரிலிருப்பதே பெரிய விஷயம்! அவரால் எத்தனை பேருக்கு – இன்று மட்டுமல்ல – இதற்கு முன்பும் எத்தனை தடவைகள் உதவ முடிந்திருக்கிறது! பாவம்! அவர் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள முயல்கிறார்களே பாவிகள்!" என்று என் ஆற்றாமையை வெளியிட்டேன்.

"நல்லவேளை தடுக்க முடிந்தது; இரண்டாவது காரியம் மேலத் தெருவில் ஒரு கோயில் குருக்கள் பத்து வயதுப் பெண் ஒருத்தியைக் கற்பழித்து விட்டான். சம்பவம் நடந்த பிறகுதான் எனக்குத் தெரியவந்தது. அந்தப் பெண்ணை என் வீட்டில் கொண்டுபோய் ஒப்படைத்து விட்டு, குருக்களைப் பின்னர் பார்த்து ஏதாவது செய்வது என்று தீர்மானித்தேன். அவனைப் புடைப்பதோ, அடிப்பதோ, தண்டிப்பதோ எனக்கு சம்மதமில்லை. நல்வழியாக, அவனும் நல்லவனாக வாழ்வதற்கு மீண்டும் இந்த மாதிரி தீவினை செய்யாமல் இருப்பதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும். என்ன வழி என்றுதான் புலப்படவில்லை" என்றான் வள்ளுவன்.

பேசிக்கொண்டே மெதுவாக மேலே நடந்து கொண்டிருந்த வள்ளுவன், கடற்கரையில் எல்லா இடங்களையும் ஊடுருவிப் பார்ப்பதற்குத் தவறில்லை. கரைக்குச் சமீபமாக வந்திருந்த படகு, இங்கேதான் தரை தட்டியிருக்க வேண்டும். அல்லது கடலில் மூழ்கியிருக்க வேண்டும் என்கிறான் செங்கோடன். தரைதட்டி யிருந்தால் படகில் இருந்த மனிதர்களில் ஒருவர் இருவராவது உயிருடனிருக்கலாம் – குலையுயிரும் குத்துயிருமாகக் கிடப்பார்கள். அவர்களைக் கண்டுபிடித்து உதவி செய்ய வேண்டியது அவசியம் என்று எனக்கும் தோன்றுகிறது. ‘‘நாம் தேடி உதவாவிட்டால் கவனிப்பின்றியோ, உணவில்லாமலோ அடிபட்டிருந்தால் ரத்தப் போக்கினாலேயே அவர்கள் இறக்க நேரிடலாம். அப்படி நடந்த பின் வருந்துவதைவிட முன்னால் ஏதாவது செய்யலாமா என்று பார்க்க லாமே என்றுதான் தேடிக்கொண்டு அவசரமாகக் கிளம்பினேன். சாப்பிட்டுவிட்டுக் கிளம்பியிருக்கலாம். அது தோன்றவில்லை. பசி வயிற்றைக் கிள்ளுகிறது."

"எனக்கும்தான். நானும் சாப்பிடவில்லை. சாப்பிடத் தோன்ற வில்லை அந்தச் சமயம்'' என்றேன்.

"பாதகமில்லை. ஒருவேளை பட்டினி கிடப்பதனால் உயிர் போய் விடாது. இன்னும் கொஞ்ச தூரம் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பி விடலாம்."

"அது சரி – மூன்றாவது தவறு என்று புயல் காரணமாக நடந்து விட்டது என்றாயே, அது என்ன?'' என்று விசாரித்தேன்.

"அது சின்ன விஷயம்தான். புயல் சப்தங்களிலே தங்கள் சத்தம் தெரியாமல் மறைத்துக்கொண்டு சிலர் சில கடைகளில் புகுந்து கொள்ளையடித்திருக்கின்றனர். சில வியாபாரிகளுக்குக் கொழுத்த நஷ்டம் – புயலால் ஏற்பட்ட நஷ்டத்தைவிட இப்படிக் கொள்ளையால் ஏற்பட்ட நஷ்டம் அதிகம் என்று அவர்கள் சொல்கிறார்கள்."

"யார் எப்படிக் கொள்ளையடித்தார்கள்? கொள்ளையடித்த பொருள்களை எங்கே பதுக்கியிருக்கிறார்கள் என்று எப்படிக் கண்டு பிடிப்பது? புயலில் அந்தப் பொருள்கள் அவர்கள் கையிலும் தங்காமல் நழுவிப் போயிருக்கலாம் இல்லையா?" என்று கேட்டேன்.

‘‘கை தவறியிருக்கலாம். இருந்தாலும் அந்தக் கொள்ளைக் காரர்களைப் பிடித்து தண்டிக்காமல் விட்டு விட்டால், ஊரில் கொள்ளையடித்து வாழமுடியும் என்று ஏற்பட்டுவிடும். வியாபாரிகள் மட்டுமின்றி மற்ற ஜனங்களும் கொள்ளைக்காரர்களுக்குப் பயந்தே காலந்தள்ள வேண்டி வந்துவிடும். அந்தக் குருக்களய்யாவையும் இந்தக் கொள்ளைக்காரர்களையும் மறுபடி அத்து மீறாமல் செய்ய வேண்டியது என் பொறுப்பு என்று நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றான் வள்ளுவன்.

"ஏன்?"

"கற்பழிக்கப்பட்ட பெண் என் கண்ணில்தான் பட்டாள். அந்த விஷயம் ஊரில் யாருக்கும் தெரியக்கூடாது. நீ சொல்ல மாட்டாய் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் உன்னிடம் சொன்னேன். அந்த வியாபாரிகளும் நான் ஏதாவது வழி செய்வேன் என்று என்னிடம் தான் வந்து முறையிட்டார்கள்."

"நீ என்ன ஊரின் மனச்சாட்சியா? ஊர்க்காவலன் பதவி வகிக்கிறாயா. அல்லது உனக்கு ஏதாவது அரசாங்க அதிகாரம் இருக்கிறதா?" என்று கேலியாகக் கேட்டேன்.

"அரசாங்க அதிகாரி நேற்றுப் புயலின் சின்னங்கள் தெரிந்து தனக்கு ஆபத்து வரும் என்று தெரிந்தவுடனேயே குதிரை மேல் ஏறித் தன் பெண்டு பிள்ளைகளைக்கூடப் பிறர் காப்பாற்றிக் கொள்ளட்டும் என்று கவலையில்லாமல் போய்விட்டான். ஊர்க்காவலன் நாம் ஊரை விட்டுக் கிளம்பும் வரையில் யார் கண்ணிலும் படவில்லை. அவர்களையெல்லாம் நம்ப முடியாது என்றுதான் நம்மிடம் – குறிப்பாக என்னிடம் வந்து வியாபாரிகள் சொன்னார்கள். அந்த ஊர்க் காவலன் மருதப்பனேகூட கொள்ளையடித்திருக்கலாமோ என்று இந்த வியாபாரிகளுக்குச் சந்தேகம்."

"அப்படியும் இருக்குமோ?" என்று நான் கேட்டேன்.

''இருக்கும் – இருக்காது. மனிதர்கள் எதையும் நம்பத் தயாராக இருக்க வேண்டும். எதையும் நம்பாமலும் இருக்கவேண்டும். வா – இன்னும் கொஞ்ச தூரம் – அதோ அந்தப் பிள்ளையார் கோயில் வரை போவோம்.

"அது திருவான்மியூர் பிள்ளையார் கோயில், அது மிகப் புனித மானது; பழமையானது என்று பிராமணர்கள் சொல்கிறார்கள். நீ நெருங்கிப் பார்த்து விட்டாயானால், யாராவது கண்டுவிட்டார்களா னால் உன்னை நையப்புடைத்து விடுவார்கள். என்னையும் உன்னைத் தடுக்காததற்காக நையப்புடைத்து விடுவார்கள்.''

"நமது பிராமணர்களின் அறிவுதான் பிரசித்தமாயிற்றே! நீயே பிள்ளையார் கோயிலை நெருங்கிப் பார். நான் தூர நிற்கிறேன். யார் ஏற்படுத்திய எந்த வேலியையும் தாண்ட நான் விரும்பவில்லை. அதற்குட்பட்டு என்ன செய்ய இயலுமோ அதைச் செய்யலாம்" என்றான் வள்ளுவன்.

"அது சரி. ஆனால், நான் கேட்டதற்கு நீ எதுவும் பதில் சொல்லவில்லையே!"

"என்ன?"

"எதைத் தேடி நாம் புறப்பட்டிருக்கிறோம்?"

"அதான் சொன்னேனே! நம் ஒருவருக்கும் நாம் எதைத் தேடுகிறோம், தேடியலைகிறோம் என்பது தெளிவாகத் தெரிவதேயில்லையே!"

"அந்தப் படகில் யார் இருந்திருக்கக் கூடும் என்று நீ எதிர் பார்க்கிறாய்?" என்று கேட்டேன்.

"மனிதர்கள்! யார் என்று குறிப்பிட்டுச் சொல்ல உனக்குத் தெரிந்ததுதானே எனக்கும் தெரியும்'' என்றான் வள்ளுவன்.

"செங்கோடன் மலையாளப் பகுதிப் படகு என்று சொன்னதிலிருந்து எனக்கு ஒரு யோசனை தோன்றியது" என்றேன்.

‘‘அது சரியாகவும் இருக்கலாம். சரியில்லாமலும் இருக்கலாம்! தேடிப் பார்க்க வேண்டியது நம் கடமை. அந்த மனிதன் – அவராக இருந்தால் இத்தனை கடல்களைக் கடந்து இங்கே வந்து புயலில் சிக்கி உயிரிழக்க வேண்டும் என்று விதியோ, கடவுளோ, அவர் கருமமேயோ விதித்திருந்தால் நாம் என்ன செய்ய முடியும்?"

பேசிக்கொண்டே நாங்களிருவரும் திருவான்மியூர் கடற்கரைப் பிள்ளையார் கோயிலுக்கு நூறு கெஜதூரத்தில் வந்துவிட்டோம். அதைப் பார்த்த வள்ளுவன், "நீ மட்டும் முன்னே போய் ஏதாவது விசேஷமாகத் தென்படுகிறதா என்று பார்த்துவிட்டுத் திரும்பி வா. உங்கள் பிராமணாள் கோயிலின் புனிதத்தைக் கெடுக்க – அதுவும் காரணமேயில்லாமல் கெடுக்க, நான் தயாராய் இல்லை. அது பிராமணர்கள் புடைப்பார்களே என்கிற பயத்தினால் அல்ல – ஊரோடு ஒட்ட ஒழுக வேண்டும் என்கிற எண்ணத்தினால்தான்’’ என்றான் வள்ளுவன்.

இந்த வள்ளுவனால்தான் எப்படிப் பழைய முனிகள், ரிஷிகள், முக்காலமும் உணர்ந்த ஞானிகள் போலப் பேச முடிகிறது என்று எண்ணிக்கொண்டே முன்னேறினேன் நான். முள்ளும், செடி, கொடிகளும் நிறைந்த பாதையே இல்லாத பாதை அது. எதிரே கோயில் தெரிந்தது. ஒரு மதில் சுவர்மேல் கடல் அலைகள் மெதுவாகக் காலைச் சூரியனின் தகதகப்புத் தெரிந்தாலும், சப்தம் காட்டாமல் லேசாக மோதிக் கொண்டிருந்தன. அந்த ஞானிகளும் ரிஷிகளும் தேவ பாஷையென்று கருதப்படுகிற சமஸ்கிருதத்தில் எழுதினார்கள் – பாடினார்கள். இந்த வள்ளுவன் நம் இடையே வழக்கத்தில் இருக்கிற, பேசிப் பழகுகிற, நம் வீடுகளில் புழங்குகிற தமிழ் மொழியில் பேசுகிறான். அவன் வார்த்தைகளில் அர்த்தமும், வேகமும், ஆழமும் தமிழ் அதிகமாகப் படிக்காத, கற்று அறியாத எனக்குக்கூட அற்புதமாகப் புரிகிறது... நான் ஏதோ சிந்தித்துக் கொண்டே தொண்ணூறு கஜ தூரம் வந்து ஒரு முள்புதரில் சாவகாசமாகக் கால் வைத்து விட்டேன். காலெல்லாம் முள். முனிகள் தவம் செய்கிற மாதிரியோ அல்லது தேவடியாள் சதிர் ஆடுகிற மாதிரியோ ஒரு காலைத் தூக்கி முட்களைப் பிடுங்கி, வீசி எறிந்துவிட்டு மேலே போவதற்குப் பத்து விநாடிகள் பிடித்தன. மேலே போகும்முன் இரண்டு கால்களையும் ஊன்றிக்கொண்டு திரும்பிப் பார்த்தேன். வள்ளுவன் நின்றுகொண்டு எதிரே கடலையும், பக்கவாட்டில் என்னையும் பார்த்துக்கொண்டு நின்றான்.

அந்தச் சமயம்தான், பத்தடிக்கப்பாலிருந்த பிள்ளையார் கோயிலிலிருந்து யாரோ முனகுவது போலச் சப்தம் கேட்டது. மெதுவாகவே பத்து எட்டுகளையும் கடந்து, மதில் சுவரைத் தாண்டி எட்டிப் பார்த்தேன்.

குறுந்தாடியோடு ஒரு மனிதன். நல்ல சிகப்பாக இருந்தான். நனைந்து அழுக்காகிப் போயிருந்த அங்கியணிந்திருந்தான். அது ஸெகியல் அணிகிற அங்கிபோல் இருந்தது. கையில் ஒரு ருத்திராட்சக் காய் போலத் துணியால் முடிச்சுகளாகச் செய்யப்பட்ட ஒரு பிராத்தனை மாலை இருந்தது. பிள்ளையார் கோயிலுக்கு ஏறிச் செல்லும் ஐந்து படிகளில் நாலாவது படியில் தலை மோதி லேசாக ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. ஒரு மீனவர் படகில் உடைந்த நீளமான பலகை, படிகளுக்கடியில் கிடந்தது. அந்தப் பலகையின் மேல் முழங்கால்கள் மடிந்து, பதிந்து கிடந்தன. லேசாக முனகிக் கொண்டிருந்தான். அதனால் உயிர் போகவில்லை என்று தெரிந்தது. அலையுயர்ந்து எழும்பிப் பலகையுடன் அவனை – அவரைக் கொணர்ந்து அந்த விநாயகர் கோயில் படியில் மோதியிருக்க வேண்டும். தலையில் பட்ட அடியினால் எழுந்திருக்க முடியாமல் மயக்கமாக ஆனால், ஏதோ லேசாக முனகிக் கொண்டு கிடந்தார். வயது அனுமானிக்க கூடிய அளவில் தளர்ந்த வயதுதான் – அறுபது கடந்து இருக்கலாம். எழுபதுகூடத் தாண்டியிருக்கலாமோ...

"ஐயா!'' என்று கூப்பிட்டுப் பார்த்தேன்.

முனகல் லேசாக வந்ததே தவிர நான் கூப்பிட்டது காதில் விழுந்ததாகவோ, பிரக்ஞையில் தட்டியதாகவோ, தெரியவில்லை.

எனக்கு வைத்திய சாஸ்திரத்தில் ஆரம்ப அட்சரம்கூடத் தெரியாது. நான் அவரைத் தொட்டு எழுப்பி, அதனால் அவர் உயிர் பிரிந்துவிட்டால் என்ன பண்ணுவது? கிட்டச் சென்று சற்றே உற்றுக் கவனித்தேன். மூச்சு பெரு மூச்சாக வந்து கொண்டிருந்தது. பத்துப் பெரு மூச்சுக்கு ஒரு தரம் முனகல் சப்தம் லேசாகத் தான் கேட்டது. அதோடு வேறு ஏதோ வார்த்தை சொல்வது போலவும் கேட்டது. காதை அவர் வாய் அருகில் வைத்துக் கவனித்துக் கேட்டேன். 'ஏன் ஏசுவே' என்று சொல்வதுபோலத் தோன்றியது. என் பிரமையாகவும் இருக்கலாம்.

எத்தனை நேரமாக இப்படி அடிபட்டுக் கிடக்கிறாரோ தெரியாது. இன்னமும் காலந் தாழ்த்தக் கூடாது என்று தோன்றியது. கோயிலைச் சுற்றிப் பார்த்தேன். ஜாதிக்காய் பலகையிலான ஒரு பெட்டியும், அதனுடன் பிணைக்கப்பட்டிருந்த மலையாளத்து ஓலைப் பெட்டியும் கிடந்தன. அவற்றை யாராவது பார்த்தால் திருடிக்கொண்டு போய்விடுவார்கள் என்று –

வள்ளுவன் கொள்ளைக்காரர்களைப் பற்றிச் சொன்னதனால் – தோன்றவே இரண்டையும் பிள்ளை யாருடைய பெரிய உருவத்திற்குப் பின்னால் ஒளித்து வைத்தேன். பின்னர் மீண்டும் ஒரு தரம், மயக்கமுற்றுக் கிடந்த அந்த மனிதரைப் பார்த்துவிட்டு, அவசர அவசரமாக வெளியே வந்தேன். வள்ளுவன், நேரமானதிலிருந்து ஏதோ விசேஷம் இருக்கிறது என்று அறிந்து கொண்டவனாக, ஆனால், சாவதானமாகவே நெருங்கி வந்து கொண்டிருந்தான். 'அவசரமாக வா' என்று சைகை காட்டினேன். குரல் எட்டும் தூரத்துக்கு வந்ததும், "எதிர் பார்த்தது போலவேதான்! வா. மயக்கமாகக் கிடக்கிறார்'' என்று உரக்கக் கத்தினேன். வள்ளுவன் ஓடியே வந்தான்.

"கோயிலின் புனிதம் ஏற்கனவே அவர் படியில் மோதிக் கிடப்பதனால் கெட்டுவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். அவரையும், நம்மையும் யாரும் கவனிக்காமல் அப்புறப்படுத்திக் கொண்டு விட்டோமானால், புனிதம் கெட்டது யாருக்கும் தெரியாது. வா, வந்து பார் வள்ளுவா! தலை கருங்கற் படியில் மோதி ரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது. அதற்கு மேல் அதிகமாகக் காயம் ஒன்றும் தெரியவில்லை. ரத்தப்போக்கும் அதிகமாக இல்லை. மயக்கமாகிக் கிடந்தாலும் முனகுகிறார். பத்துப் பெருமூச்சுக்கொரு தரம் 'என் ஏசுவே' என்று சொல்லுகிற மாதிரி எனக்குத் தோன்றுகிறது. என் பிரமையாகவும் இருக்கலாம்" என்று நான் சொல்லிக் கொண்டி ருப்பதைக் கேட்டுக் கொண்டே வள்ளுவன் நிதானமாகப் படிகளை அணைத்துக்கொண்டு குப்புறப்படுத்து, தலை கருங்கற் படியில் மோதியபடி கிடந்தவரை வாயோடு வாய் வைத்து முத்தமிடுகிறார் போல அவர் வாய்க்குள் ஊதினான். பிறகு, "உயிருக்குப் பயமில்லை. அப்படியொன்றும் தான் செய்ய வந்ததைச் செய்யாமல் உயிரை விட்டுவிடுகிற கட்டையில்லை. அவரை எப்படி ஸெகியல் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது என்பதுதான் பிரச்சனை" என்றான். பிறகு, "சுற்றிலும் ஒருதரம் பார்த்துவிடு. வேறு யாராவது இதேமாதிரி எங்கேயாவது கிடந்தாலும் கிடக்கலாம்" என்றான். நான் சுற்றிப் பார்த்தேன். அதற்குள் அவர் வயிற்றில் விரலை வைத்து இரண்டொரு இடங்களில் அழுத்தினான் வள்ளுவன். அவர் வாயிலிருந்து கடல்நீர், சுத்தமான கடல் நீராகவே இரண்டு வாய் வெளிவந்தது. "அன்ன ஆகாரமில்லாமல் வயிறு காலியாய் இருக்கிறது. அதுவும் நல்லதுதான். கடல்நீரும் அதிகம் உள்ளே போகவில்லை. ஜாக்கிரதையாக அந்தப் பலகையில் மிதந்து வந்து விழுந்திருக்கிறார், ஏதாவது சாமான்கள்...''

ஜாதிக்காய்ப் பெட்டியும், ஓலை நார்ப் பெட்டியும் கிடந்ததைப் பத்திரப்படுத்தியதையும் சொன்னேன்.

"முதலில் இவரைக் கோயிலிலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும். இல்லாவிட்டால் எங்கள் கோயிலை ஏன் அசுத்தப்படுத்தினாய்' என்று இந்த நிலையிலும் தாட்சண்யம் பார்க்காமல் உள்ளவர் புடைத்து விடுவார்கள். மரப்பெட்டியையும், ஓலைப் பெட்டியையும் நீ எடுத்துக் கொள். என்னால் ஒண்டியாக அவரை ஐம்பதடிக்கப்பாலாவது கொண்டுபோய்க் கிடத்த முடியும் என்றே எண்ணுகிறேன். படியில் பட்டிருக்கிற ரத்தக் கறையைக் குளத்தில் தண்ணீர் மொண்டு வந்து அலம்பி விட்டு விடு. அது கொஞ்சம் இருந்தாலும் சந்தேகம் வரும்.

வள்ளுவன் இதைச் சொல்லிவிட்டு அந்தக் கிழவரைத் தூக்கி நிறுத்தி, தன் தோளை அண்டைக் கொடுத்துப் பிடித்துக்கொண்டு, அவர் கால்கள் தரையில் பட்டும் படாமல் இழுத்துக் கொண்டுவர, சுமந்துகொண்டு கோயிலை விட்டு வெளியேறினான். நான் ஒரு தேங்காய் மூடியில் தண்ணீர் மொண்டு வந்து படிகளை அலம்பிச் சுத்தம் செய்தேன். பத்துத் தரம் தண்ணீர் மொண்டு வரவேண்டியதாக இருந்தது. பிறகு என்மேல் துண்டைப் போட்டு இரண்டு தரம் துவட்டியெடுத்துவிட்டு மறுபடியும் இரண்டு கொட்டாங்கச்சித் தண்ணீர் விட்டுக் காலால் அழுத்தித் தேய்த்து விட்டேன். ரத்தக்கறை என் கண்களுக்குத் தெரியவில்லை. பின், விநாயகருக்குப் பின் ஒளித்து வைத்திருந்த மர, ஓலைப் பெட்டியையும் உடைந்த பலகைகளையும் எடுத்துக்கொண்டு வெளியேறினேன். தூரத்தில் பிள்ளையார் கோயில் குருக்கள் பிள்ளையாருக்கு முதற் காலை பூஜை செய்ய மிகவும் சாவதானமாக ஆடி அசைந்துகொண்டு வருவது தெரிந்தது. அவர் பூஜை செய்யலாம். பிள்ளையாரின் புனிதம் கெட்டுவிடவில்லை. ஒரு உயிரைக் காப்பாற்றியதால் புனிதம் கூடிவிட்டதாகவே எனக்குத் தோன்றியது. உயிர் காத்த பிள்ளையார் என்று அவருக்குப் பெயர் வைக்கலாம்.

"என்ன சிரித்துக்கொண்டே வருகிறாய்?" என்றான் வள்ளுவன்.

என் சிந்தனையை, திருவான்மியூர்ப் பிள்ளையாருக்கு உயிர் காத்த பிள்ளையார் என்று பெயர் வைக்கலாம் என்கிற என் யோசனையைச் சொன்னேன். "ஏசுவின் சிஷ்யருடைய உயிர்காத்த பிள்ளையார் என்று சொன்னால் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆசையினால் உயிர்காத்த பிள்ளையார் என்று சொன்னால் உன் உயிரைக் காத்ததாக வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்" என்றான் வள்ளுவன்.

பிறகு, "இவருக்கு உதவி உடனடியாகத் தேவை. தலையில் கட்டுப்போட வேண்டும். இல்லாவிட்டால் மயக்கம் தெளியாது. கொஞ்சமாகத்தான் என்றாலும் ரத்தம் போய்க்கொண்டுதான் இருக்கிறது. நீ போகிறாயா? நான் போகட்டுமா? ஒருவர் போய் ஸெகியலிடம் அவர் காத்துக் கொண்டிருந்த

ஆசாமி வந்து விட்டார் – மயக்கமாக இங்கே கிடக்கிறார் என்று சொல்லி உதவிக்கு உங்களுடன் வண்டியோ அல்லது நலுங்காமல் அவரைத் தூக்கிப்போக ஏதாவது ஒரு உபகரணமோ கையோடு கொண்டுவரச் சொல்ல வேண்டும். வண்டி வருவதனால் லிஸ்ஸத்தும் உடன் வருவது நலம் என்று சொல்லு. மண்டையில், அடிபட்ட இடத்தில் ரத்தம் கசியாமல் தடுப்பதற்கு நீர் விட்டுக் கழுவி, கிடைத்த பச்சிலையை வைத்து அழுத்தித் துணியைக் கட்டியிருக்கிறேன். அதுபோதும் என்று தோன்றவில்லை. கையோடு மருந்தும், கட்டுப்போடத் துணியும், லிஸ்ஸத் வருவதனால் கொண்டு வரச்சொல்...."

"நான் போகிறேன். ஓட்டமும் நடையுமாகவே போய் உதவிக்கு ஆள் கூட்டி வருகிறேன். உன்னைவிட என்னால் வேகமாக ஓட முடியும். நீ எத்தனை தடவை ஓட்டப் பந்தயங்களில் என்னிடம் தோற்றிருக்கிறாய்?" என்றேன் நான். விநாடியின் கணத்தைக் குறைத்துக்கொள்ள, ஏதாவது லேசாய்ப் பேச வேண்டும் போலத் தோன்றியது.

"ஓடு. வேகமாக நட. எதையும் அதீதமாகச் செய்து நீ விழுந்து விடாதே. இந்த மனித உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஒரு நாழிகைக்குள் உதவி கிடைக்க வேண்டும். இரண்டு நாழிகைக்கு மேல் ஆகிவிட்டால் உயிர் பிழைப்பது அரிதாகிவிடும். நள்ளிரவிலிருந்தே இவர் இங்கே இப்படிக் கிடக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றான் வள்ளுவன்.

நான் இடுப்பில் என் வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு ஓடத் தொடங்கினேன். "பெட்டிகளை நான் எடுத்துப் போகட்டுமா?" என்றேன்.

"வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வேகமாகப் போய் அவசரப்படுத்தி வேகமாக உதவி அழைத்து வர வேண்டும். அதுதான் முக்கியம், என்றான் வள்ளுவன்.

நான் கிளம்ப ஒரு விநாடி முன், "ஸெகியலிடம் சொல். அவர் எதிர்பார்த்த ஆசாமிதான் என்று சொல். பத்துப் பெருமூச்சுகளுக்கு ஒரு தரம் 'வெல்க ஏசு' என்று சொல்கிறார் என்று சொல்லு. கிளம்பு" என்று அவசரப்படுத்தினான் வள்ளுவன்.

ஏதோ ஓட்டப் பந்தயம் ஓடுகிற மாதிரிதான் அன்று ஓடினேன். புயல் அடித்த இரவுக்குப் பின் வெயில் சற்றுக் கடுமையாகத்தான் இருந்தது. நண்பகலுக்கு இன்னும் இரண்டு நாழிகை இருக்கும். முந்திய இரவு சாப்பிட்டதுதான். ஓட்டம் வயிற்றைச் சுருட்டியிழுத்தது. ஆனால், என் உயிரே ஊசலாடுகிற மாதிரி ஒரு நினைப்பு என்னை உந்தி வேகவேகமாக ஓடச் செய்தது.

ஓட்டமும் நடையுமாகப் போகிறேன் என்று சொன்னேனே தவிர, ஓட்டமேதான் வழி நெடுக.

எனக்கும், இந்த மனிதனுக்கும் என்ன பிணைப்பு? அவன் – அவர் இருந்தால் என்ன? போனால் என்ன? என் வாழ்க்கை, ஒன்றுக்கும் உதவாத பிராமணப் பையனின் வாழ்க்கையாகக் கழியப் போகிறது. என் அப்பா இருக்கிற வரையில் அவர் எனக்குச் சிரமம் வராமல் பார்த்துக் கொண்டு விடுவார். கல்வியிருந்தும், அந்தப் பிராமணக் கல்வியில் ஈடுபாடு இல்லாததனால் நான் அதை எந்தவிதத்திலும் உபயோகப்படுத்தவில்லை. ஒரு உயிரைக் காப்பாற்ற நான் ஓடுகிறேன் என்று அம்மா புரிந்துகொள்வாள். அப்பாதான், "என்னடா, இதெல்லாம் வீண் வேலை?" என்பார். மனிதாபிமானம் கூட இல்லாதவர் அவர். ‘‘யாரோ, எவனோ – நம்ம ஜாதி, இனம்கூட இல்லை’’ என்பார். இந்த ஜாதி, இனம் எல்லாம் எப்பொழுது இங்கிருந்து போகப் போகிறதோ?

நான் ஓடினேன்! ஓடினேன்! மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. வள்ளுவன் சொன்னதை நினைத்துப் பார்த்துச் சற்று நிதானப்படுத்திக் கொண்டேன். வழியில் மீனவர் குப்பத்தில் செங்கோடன் எதிர்ப்பட்டு, "வள்ளுவர் எங்கே?" என்றான். நான் பின்னால் கையைக் காட்டி விட்டு, "அவசரம்!" என்று சொல்லிவிட்டு நிற்காமல் ஓடினேன். செங்கோடன் வேறு ஒரு ஆசாமியையும் அழைத்துக்கொண்டு நான், காட்டிய திசையில் வேகமாக நடக்க ஆரம்பித்ததைப் பார்த்தேன். செங்கோடன் புத்திசாலி! யாரையோ வள்ளுவன் கண்டுபிடித்து, என்னை உதவிக்கு அழைக்க அனுப்பியிருக்கிறான் என்று யூகித்துக் கொண்டிருப்பான். அவனால் ஆன உதவியைச் செய்யக்கொள்ள வைத்தியம் தெரிந்த ஒரு ஆசாமியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான் என்று எனக்குத் தோன்றியது.

நான் ஸெகியலின் மாளிகையை அடைந்து விட்டேன். வாயிலிலேயே ஸெகியல் நின்றிருந்தார். "என்னப்பா வாதுலா? இப்படி ஓட்டம்! என்ன? வள்ளுவன் அனுப்பினானா?’’ என்று கேட்டார்.

எனக்கு நிதானப்படுத்திக் கொண்டு பதில் சொல்ல முடியவில்லை. ஏதோ காணாதது கண்டவனைப் போல் ஒன்றும் சொல்லமாட்டாமல் பேந்த பேந்த விழித்துக் கொண்டிருக்கும் போது லிஸ்ஸத்தும் அவளுடன் மிரியமும் வாசலுக்கு வந்து விட்டார்கள்.

"கொஞ்சம் தண்ணீர் வேண்டுமானால் அருந்து" என்றார் ஸெகியல்

"நம் வீட்டில் தண்ணீர்கூட அருந்த மாட்டாரே!" என்றாள் லிஸ்ஸத்

"பிராமணராச்சே!" என்றாள் மிரியம்.

'தண்ணீர் கொடு. குடிக்கிறேன்' என்று சைகை காட்டினேன். மிரியம்தான் கண்ணாடி டம்ளரில் கொண்டு வந்து தந்தாள். குடித்துவிட்டு ஒரு நிமிடம் பேச முடியாமல் தயங்கி விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஸெகியலும், லிஸ்ஸத்தும் செயல்பட ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு ஆளைப் படுக்க வைக்கக்கூடிய ஒரு சாதனத்தை ஒரு மனிதன் கொண்டு வந்து வண்டியில் வைத்தான். வண்டி தயாராகவே வாசலில் இருந்தது. எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தார் போலும் ஸெகியல். "நீ சற்று ஓய்வெடுத்துக் கொள்'' என்றார் ஸெகியல். "இல்லை, நானும் வருகிறேன்" என்று கிளம்பி வண்டிக்காரன் பக்கத்தில் நான் உட்கார்ந்து கொண்டேன். முதலில் லிஸ்ஸத், பிறகு மிரியம், கடைசியில் ஸெகியல் வண்டியில் ஏறிக் கொண்டார்கள். கூட இரண்டு மூன்று ஆசாமிகளை ஓடிவரும்படி கட்டளையிட்டார் ஸெகியல். மறுபேச்சு பேசாமல் அவர்கள் வண்டி கிளம்பு முன்னரே கிளம்பி விட்டார்கள். நான் வள்ளுவனை விட்டுக் கிளம்பி முக்கால் நாழிகை நேரம்கூட ஆகியிருக்காது. இன்னும் கால் நாழிகையில் வண்டி திருவான்மியூர்ப் பிள்ளையார் கோயிலை அடைந்துவிடும்.

## அத்தியாயம் 11

வண்டியில் இருந்தவர்களில் ஒருவருக்கும் சோகம் தெரியவில்லை. வந்திருப்பவர் ஒரே ஒரு காரியத்துக்காக வந்திருப்பவர். அதனால் அந்தக் காரியத்தை மேற்கொண்டு முடிக்காமல் இறக்கமாட்டார் என்று எல்லோருக்குமே ஒரு பலமான நினைப்பு இருந்தது. தங்கள் ஊர்த் துறவிகளை அறிந்த ஸெகியல், லிஸ்ஸத், மிரியம் இவர்களுக்கு அந்த நம்பிக்கையிருந்தது பெரிசில்லை. எனக்கும் அந்த மாதிரி ஏன் தோன்றவேண்டும்?

மிரியம்தான் வழிநெடுகப் பேசிக்கொண்டு வந்தாள். அவள் தமிழில் பேசியபோதும் சரி; அவர்கள் மொழியில் ஹீப்ரூவில் அவர்களிடையே பேசிக்கொண்டு வந்தபோதும் சரி; அவள் என்ன சொல்கிறாள் என்பதை நான் கவனிக்கவில்லை. அவள் பேசுவது என் காதில் இசையாகப் பெய்தது. அர்த்தத்தைக் கவனித்து என்ன பேசுகிறாள் என்று அறிந்துகொண்டு பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை .

பாதையென்று ஒன்றும் இல்லை. கடற்கரை மணலில் மாடுகளை விரட்டினால் மெதுவாகப்போகும் என்பதனால், கடற்கரையை ஒட்டிய

கட்டாந்தரையிலே மாடுகளை விரைவாக ஓட்டினான் வண்டிக்காரன். அவனிடம் "அவசரம், எவ்வளவு சீக்கிரம் போக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போ" என்றார் ஸெகியல். அவன் தனக்குத் திருவான்மியூர் கடற்கரைப் பிள்ளையார் கோயில் தெரியும் என்றான். அவன் அந்தப் பக்கத்திலிருந்து வந்தவன்தானாம்! ஆகவே வண்டிக்காரனுக்கு வழிகாட்டக்கூட நான் தேவைப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னால் ஒரு பிரயோசனமும் இல்லை. எனினும் நான் இதன் நடுமத்தியிலே – என் முழு இஷ்டத்துடனும் தான் – அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ஏன் என்று சிந்திக்கிறேன். பிடிபடவில்லை.

மிரியம்தான் இன்னமும் பேசிக்கொண்டிருந்தாள். புது மதத்தைப் பற்றி – "ஏசு என்கிற பெயரே எனக்குப் பிடித்திருக்கிறது. ஆட்டுக் குட்டியைத் தூக்கி வைத்து அணைத்துக் கொள்வதுபோல இருக்கிறது. இந்த மனிதரைப் பற்றிப் பூரணமாக விசாரித்துக்கொண்டு அவர் தெரிவிப்பது பிடித்திருந்தால் நான் அவரோடு சேர்ந்துகொண்டு விடுவேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

இந்தப் பெண்ணுக்கு இருந்த சுதந்திரம் எனக்கில்லையே என்றிருந்தது. ஸெகியல் என்ன சொல்கிறார் என்று காத்திருந்தேன். அவர் ஒன்றும் சொல்லவில்லை. லிஸ்ஸத் தான் மிரியத்திற்குப் பதில் சொன்னாள். "முதலில் அந்த மனிதன் உயிரைக் காப்பாற்றியாக வேண்டும். அதற்குப் பிறகு அவர் சொல்வது சரியென்று தோன்றி னால் அப்பாவே அவரோடு சேர்ந்து விடுவார். அதில் சந்தேகப்பட வேண்டியதில்லையே!"

ஸெகியல் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தவர், தூக்கத்திலிருந்து விடு பட்டவர் போல, நீச்சல்காரன் தண்ணீரிலிருந்து தலையைத் தூக்கித் தண்ணீரை உதறிவிட்டுப் பேசுவது போல, தலையை ஒரு தரம் உலுக்கி விட்டுச் சொன்னார். 'கடவுளின் தூதனாக உலக முடிவு சமீபிக்கும் காலத்தில் ஒரு மெஸ்ஸையா வருவார். வந்து நமது கடவுளின் முக்கியக் கொள்கையான கைக்குக் கை, காலுக்குக் கால் என்கிற வஞ்சம் தீர்க்கிற கொள்கையை மறுத்துவிட்டு, அன்பு வழியை உலகில் ஸ்தாபிப்பார். உலகம் பூராவும் யூதர்கள் மட்டுமின்றி மற்ற மக்களும் அவரைப் பன்பற்றுவார்கள். கடவுளின் உண்மை ஆட்சி உலகில் ஸ்தாபிதம் ஆகும்போது உலகம் முடிந்துவிடும் என்று நமது வேதங் களில் எழுதியிருப்பதாக என் தாத்தா சொல்லுவார் என் சிறுவயதில்' என்றார் ஸெகியல்.

மிரியம் கேட்டாள். "அந்த மெஸ்ஸையாவைப் பற்றி இன்னும் என்ன சொல்வார் தாத்தா?"

ஸெகியல் அவள் கேள்விக்குப் பதில் என்று சொல்லாமல் தொடர்ந்தார்: ‘‘நான் படிப்பதற்கோ அல்லது பொதுவாகவோ ஏதாவது முரண்டு பிடித்தால், 'நீ ஏண்டா அந்தப் புது மெஸ்ஸையாவாக இருக்கக் கூடாது? அப்படி நீ மெஸ்ஸையாவானால் எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும்" என்பார். எனக்கு அது சாத்தியமில்லை என்று தெரியும். ஏனெனில் மெஸ்ஸையா எனப்பட்டவர் தாவீதியர் வம்சத்தில் வந்தவராக இருக்க வேண்டும் என்று யூதவேதங்கள் சொல்லுகின்றன. நாம் வேறு வம்சம். தாவீதையும்விடப் புராதனம் தான். ஆனால், முக்கியமில்லாதது – சரித்திர முக்கியமில்லாதது. 'ஏன் தாத்தா அவரைக் கொல்லச் சதி செய்து தெருவோடு இழுத்துப் போகும்போதுகூடப் பலியிட இழுத்துப் போகும் ஆடு போல, மறுதலிக்காமல் வருவதை ஏற்றுக்கொள்ளப் புனிதத் திருவுள்ளம் கொண்டவர்போல, கடவுளின் மகனேயானாலும், தாழ்மையுடன் போவாராமே! அது சாத்தியமா?" என்று கேட்டேன். அவரைப் பற்றிச் சொல்லப்பட்ட விஷயங்களில் அது ஒன்றுதான் உலகத்தின் முடிவு பற்றிய செய்தியை மற்றொன்றாக ஒத்துக்கொண்டால், இது இரண்டு தான் எனக்கு நினைவிருக்கிறது. வியாபாரத்தில் செலுத்திய கவனத்தை நான் நமது வேதங்களைப் படிப்பதில் செலவிடவில்லை" என்று வருத்தப்படுகிற குரலில் சொன்னார் ஸெகியல்.

"வேதப் படிப்பு முக்கியம்தான். ஆனால், அதைவிட முக்கியம் வாழ்க்கையை வாழ்வதுதான். வியாபாரியானால் என்ன – மனிதனாக முழு வாழ்வு வாழ்ந்திருக்கிறீர்கள். அது பெருமைப்பட வேண்டிய விஷயம்" என்றாள் மிரியம்.

என்னையும், பிராமண குலத்தையும் பற்றிச் சுட்டிக் காட்டுகிறாளோ என்ற சந்தேகத்தில் நான் திரும்பி அவளைப் பார்த்தேன். என் நினைவு அவளுக்கு என் முகத்தைப் பார்த்த பிறகுதான் வந்ததுபோலும்.

"இந்தப் பிராமணர்கள் என்று சொல்லப்படுபவர்கள், அவர்கள் வேதத்தைக் கட்டிக்கொண்டு பிறருக்கு எந்தவிதத்திலும் இந்த வாழ்க்கையில் உபயோகப்படாத வியர்த்தமான வாழ்வு வாழ்கிறார்கள். ஏன் வாதூலரே?" என்று என் வாயைக் கிண்டினாள் மிரியம்.

ஸெகியல்தான் பதிலளித்தார், ‘‘மூன்றாவது ஒரு விஷயமும் மெஸ்ஸையா என்பவர் பற்றிக் கூறப்பட்டது எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. உலகத்திலுள்ள பாவச் சுமையை எல்லாம் அவர் ஏற்றுக்கொண்டு அதன் சுமை தாங்காமல் கூனிக் குறுகி ஜெருசலேம் தெருக்களில் திரிவார் என்று சொன்னார்கள். ஒரு மனிதன் தலையில் – அவர் எவ்வளவு பெரிய மனிதரேயானாலும், கடவுளின் மகனேயானாலும் – மனித குலத்தின் பாவச் சுமை பூராவையும் ஏற்றி வைப்பது அடாவடியாளர் செயல் என்று எனக்குப்

பட்டது. சொன்னேன். அதற்குத் தாத்தா என்ன சொன்னார் தெரியுமா? – பாவங்கள் கனப்பதில்லை. புண்ணியங்களில் மிகச் சுலபமானதுகூட அதிக கனம் என்றார். விளையாட்டாகச் சொன்னாரோ, வினையாகச் சொன்னாரோ தெரியாது."

நானும் அதுபற்றிச் சிந்திக்க ஆரம்பித்தேன், பாவங்கள் சுமை கனமா? புண்ணியங்கள் சுமை கனம் அதிகமா? பிராமணர்கள் பாவ புண்ணியங்கள், நல்லது தீயது முதலியவற்றைத் தங்களளவில் தாண்டி நிற்பதாகப் பெருமை பேசிக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன். கடவுள் பயம் என்பதுகூட அவசியமில்லை என்பது அவர்கள் கட்சி. கடவுள் என்று ஒருவன் இருந்தால்தானே அவனைப் பற்றிப் பயப்பட? உலகில் உள்ள மகாத்மாக்களெல்லாம் ஒருங்கே சேர்ந்தால் உலக ஆத்மா – கடவுள் என்று பெயர் சொல்லலாம் என்கிறார்கள். அப்படி உண்மையாக நம்புகிறவர்கள் என்றால், அவர்கள் வாழ்வை வியர்த்த மாகக் கழிக்க முடியாதே! வள்ளுவனும், ஸெகியலும் தங்களைப் போன்ற உயர்ந்த ஜாதியில்லை என்று பிராமணர்கள் கருதுகிறார்கள். உயர்ந்த ஜாதியில் பிறக்காதவர்களால் மட்டும்தான் வியர்த்தமான வாழ்வு வாழாதிருக்க இயலுமோ?

என் சிந்தனைகள் முடியுமுன் போகவேண்டிய இடம் வந்து விட்டது. முதலில் வண்டியிலிருந்து குதித்து வள்ளுவனையடைந்தது நான்தான். என்னைத் தொடர்ந்து வண்டியிலிருந்து இறங்கி லிஸ்ஸத்தும், மிரியமும் வந்தனர். மிரியம் ஏதோ இன்னும் பேசிக் கொண்டேதான் வந்தாள். ஸெகியல் சற்று நிதானமாக வந்தார்.

மயக்கமாக மணலில் கிடந்தவர் இன்னும் மயக்கமாக மணலில் கிடந்தார். அவர் பெட்டிகள் இரண்டும் – ஒன்று ஓலைப்பெட்டி, இன்னொன்று மரப்பெட்டி – உடைந்த படகின் பலகையின் மேல் வைக்கப்பட்டிருந்தன. மண்டையில் அடிபட்ட இடத்திலிருந்து ரத்தம் ஒழுகுவது நின்றுவிட்ட மாதிரி இருந்தது. தலையில் கட்டியிருந்த கட்டில் ரத்தம் அதிகம் பரவியிருக்கவில்லை . கழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டிய பூஜை பட்டு முடிச்சு மாலை இன்னும் அவர் கையில் இருந்தது. தூங்குவது மாதிரி படுத்திருந்தார். சலனமில்லை . மயக்கம் தெளியவில்லை. பெருமூச்சுக்களும், முனகலும், சற்றைக்கொரு தரம் "வெல்க ஏசு'வும் கவனித்துக் கேட்டால், தெளிவாகவே கேட்டன.

லிஸ்ஸத் எதுவும் விசாரிக்காமல் நாடியைப் பிடித்துப் பார்த்தாள் – கண்ணிமைகளை நீக்கிப் பார்த்தாள் – மார்பில் கை வைத்துப் பார்த்தாள். பிறகு மண்டைக்கட்டை அகற்றிவிட்டு, கொண்டு வந்திருந்த ஏதோ மருந்தை வைத்து ஒழுங்காக அழுத்திக் கட்டினாள். புதுத்துணி கொண்டு,

'ஒன்றும் பயமில்லை . மயக்கம்தான். பசி, அடி, மற்றும் வேறு என்னவோ – எல்லாமாகச் சேர்ந்து மயக்கத்தைத் தந்திருக்கிறது. மயக்கம் தெளிய இரண்டொரு நாளாவது ஆகும் என்றுதான் நினைக்கிறேன். மயக்கம் தெளிந்தாலும் ஒரு வாரத்திற்கு நடமாட முடியாது. அதற்கு உணவு, போஷாக்கு எல்லாம் தேவை! பார்த்துக் கொள்ளலாம். ஜாக்கிரதையாக நலுங்காமல், உலுக்காமல் தூக்கி வண்டியில் எடுத்து வைக்கச் சொல்லுங்கள். ரத்தக் கசிவு நின்றுவிட்டது. பச்சிலை வைத்து கட்டி விட்டேன் மறுபடி ரத்தம் கசியாது. வள்ளுவர் இருந்து பார்த்துக் கொண்டதனால் வேறு பெரியதாய்த் தொந்தரவு ஏற்படவில்லை" என்றாள் லிஸ்ஸத். மிரியம் சற்று வாய் ஓய்ந்து எதுவும் சொல்ல இயலாமல், சொல்லவும் இல்லாமல் கீழே கிடந்தவரையே பார்த்துக்கொண்டி ருந்தாள். அவள் கண்களில் ஒரு புது ஒளி சேர்ந்திருந்தது போலத் தோன்றியது.

வள்ளுவன் சொன்னான்: "நாங்கள் இருவரும் இங்கு வந்து சேர்ந்து வாதூலன் கோயிலுக்குப் போய் இவரைக் காண்பதற்கு முன், பத்துப் பன்னிரெண்டு நாழிகை நேரம் கருங்கல்படியில் மண்டை மோதியபடியே மயக்கமாகக் கிடந்திருக்கிறார் பெரியவர். நாய், நரி, கெட்ட மனிதர்கள் எல்லோரிடமிருந்தும் அவரைக் காப்பாற்றியது அவர் ஏசுவோ, அல்லது வேறு எந்தக் கடவுளின் எந்தத் திருக்குமாரனோ – யார் சொல்வது?"

"வெல்க ஏசு" என்று முனகினார் மயக்கமாகக் கிடந்தவர். அவர் மயக்கத்திலும் நாம் பேசுவது அவர் பிரக்ஞையில் உரைக்கிறது என்று சொல்லலாமா?" என்று கேட்டேன் நான்.

"உரைக்காமல் என்ன செய்யும்? பிரக்ஞை என்பது உள்ளவரையில் தான் மனிதன் மனிதனாக இருக்கிறான்.''

ஸெகியல் இதுவரை எதுவும் பேசாமலேயிருந்தார். இப்போது சொன்னார்: ‘‘இது ஏசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர்தான். வட பாரதத்தில் ஏசு சேவை செய்து விட்டு, மலைநாட்டில் ஏசு சேவையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். மயிலாப்பூர் வரப்போகிறார் என்றும் என் தம்பி எழுதியிருந்த அதே 'தாமஸ்'தான் இவர். கழுத்தில் அணிந்துள்ள பட்டு ஜப முடிச்சும், அவர் அங்கியும், அவர் யூதர் என்பதைத் தெரிவிக்கின்றன. அவர் ஓலைப் பெட்டி அவர் மலையாளத்திலிருந்து வருகிறார் என்பதைத் தெரிவிக்கிறது. அந்த மரப்பெட்டி எங்களூரில் புழக்கத்திலுள்ள செடார் என்னும் மரத்தினா லானது. என்னிடம் கூட இந்த மாதிரி ஒரு பெட்டியிருக்கிறது?" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே மிரியம் ஒரு பேச்சும் பேசாமல் அந்த ஓலைப் பெட்டியைத் திறந்துவிட்டாள். மேலே பஞ்சு வைத்து அடைத்திருந்தது. பஞ்சை எடுத்தவுடன் ஒரு

மரச்சிலுவையில் ஏசு என்கிற மனிதன் கால்களிலும், கைகளிலும் ஆணி அறையப் பெற்று தலை, மார்பில் ஒரு பக்கமாகச் சாய, உயிர் நீக்கும் தறுவாயில் இருக்கிற மாதிரி வெள்ளியில் ஒரு உருவம் செய்து பொருத்தப்பட்டிருந்தது. மிரியம் ஏதோ பரவசப்பட்டவள் போல அந்தச் சிலுவை உருவத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்!

திடீரென்று லிஸ்ஸத் சொன்னாள்: "ஓலைப்பெட்டி நனைந்த தாகவோ, பஞ்சின் மேல் கடல் நீர் பட்டதாகவோ தெரியவில்லை! நனைந்திருந்தால் அதற்குள் பஞ்சு நிச்சயமாகக் காய்ந்திருக்க முடியாதே! ஓலைப் பெட்டிக்குள் நீர் போகாமல் எப்படி இருந்திருக்க முடியும்?" என்று கேட்டாள்.

அப்பொழுதுதான் நாங்கள் எல்லோருமே கவனித்தோம். பஞ்சும் நனைந்திருக்கவில்லை. ஓலைப்பெட்டியில் ஈரம் பட்டது போலவே தெரியவில்லை. இதுவும் ஒரு அதிசயமா? ஓலைப்பெட்டி அந்த மனிதருடன் கடலில், புயலில் அகப்பட்டுக் கொள்ளவில்லை என்று சொல்லிவிடலாமா? ஏசுவின் உருவம் பாரத வேலைப்பாடுதான். மலையாளத்தில் யாரோ வெள்ளியில் வேலை செய்யும் ஒரு கலைஞன் ஏசுவிடம் பக்தியுடன் அவர் உருவத்தை, அவர் சொன்னதிலிருந்தே கிரஹித்துக் கொண்டு உருவாக்கிக் கொடுத்திருக்கிறான். மரமும் மலையாளத் தேக்குதான் – அந்த மரத்தில்தான் பிராமணத் தெருவில் வீட்டுக்குத் தூண்கள், ஆசனங்கள் எல்லாம் அமைக்கிறார்கள். எப்படிப் புயலிலும் நீர் படாமல் வந்தது என்பது அதிசயம் தான்.

மரப்பெட்டியில் கண்ணுக்குத் தெரியாமல் இருந்த ஒரு விசையை ஸெகியல் அழுத்தியதும் பெட்டி திறந்து கொண்டது. பெட்டியில் இரண்டொரு யூத அங்கிகள் கடல் நீரில் நனைந்து ஈரமாகக் கிடந்தன. இன்னும் இரண்டு பூஜை முடிச்சுக் கயிறுகள் இருந்தன. எல்லா வற்றிற்கும் அடியில் ஒரு பார்ச்மெண்ட் காகிதத்தில் "போ, தாமஸ். பாரத தேசம் உன் பிரதேசம் என்று ஏசு உத்தரவிட்டிருக்கிறார். வெல்க ஏசு!" என்று எழுதி அதன் கீழே ஸால் என்கிற பீட்டர் என்று கையெழுத்திட்டிருந்தது.

"கொஞ்சநஞ்சம் இருந்த சந்தேகமும் தீர்ந்துவிட்டது. இவர் ஏசுவின் அப்போஸ்தலராகப் பாரதத்திற்கு வந்தவர். ஏசுவின் மதத்தைப் பரப்ப வந்தவர். எதிர்காலத்துப் பிரஜைகள் ஏசுவின் மார்க்கத்தை நம்பி வழி நடக்கப் போகிறவர்கள் பல லட்சக்கணக்கானவர்கள் உன் பெயரை வாழ்த்தப் போகிறார்கள் வள்ளுவர்'' என்றார் ஸெகியல்.

"நான் எதுவும் செய்யவில்லை" என்றான் வள்ளுவன். "இவரைக் கண்டுபிடித்த பொறுப்பும், செய்தியை உங்களுக்குச் சொல்லி உங்களை

அழைத்து வந்ததன் பொறுப்பும், எல்லாமே இந்த வாதூலனுடையது. என்னுடையது ஒன்றும் இல்லை."

அதுவும் உண்மைதான். என் பொறுப்பு – நானும் அறியாமலே ஏற்றுக்கொண்டது என்னையே அமுக்கிவிடும் போலத்தான் இருந்தது. நான் ஈடுபட்டுச் செய்த காரியங்கள் நல்லனவா, தீயவையா என்று எனக்கே தெரியவில்லை . ஏதோ ஒரு யுகசந்தியில் இருப்பதாக மட்டும் தோன்றியது எனக்கு. அது திருப்தி தருகிற அனுபவமாக இல்லை . புது அனுபவங்களை விரும்பி மேற்கொள்ளாதவர்கள் பிராமணர்கள்; நான் பிராமண குலத்தில், என் இஷ்டம் சிறிதும் இல்லாமலே, பிறந்தவன். இதெல்லாம் எப்படி முடியுமோ?

வள்ளுவனுக்கு இதன் முடிவெல்லாம் தெளிவாகத் தெரிந்தன போலும்! அவன் முகத்தில், அவன் மனத்தில் ஏதாவது சலனம் இருந்தால் அது வெளிப்படவேயில்லை. மிரியம் முழு மனதோடு யுகசந்தியில் அகப்பட்டுக்கொண்டு அதைப் பூரணமாக அனுபவிக்க, அதில் ஈடுபடத் தயாராக இருந்தாள். அங்கிருந்தவர்களில் வயதாலும் மற்ற குணாதிசயங்களாலும், பணத்திலும் பெரியவர் ஸெகியல். தாமஸ் அப்போஸ்தலராக இருந்தாலும், அவர் மேலும் செயல்படுவது ஸெகியலின் கையில்தான் இருக்கிறது. அவர் வருகை ஸெகியலுக்கு முன் கூட்டியே சொல்லப்பட்ட ஒன்று – ஏசு மெஸ்ஸையாவாக வருவதைச் சொன்ன யூத ஞானிகள் போல என்றாலும், அவர் தம்பி ஞானி அல்ல. சாதாரணர்களுக்கும் யுகசந்தியில் ஒரு ஸ்தானம் உண்டு போலும்! ஸெகியலும் தன் ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருந்தார்.

தாமஸ் என்கிற ஏசுவின் அப்போஸ்தலர் உடல் நலம் பெற்று இங்கு ஏசு கொள்கையைப் பரப்புவதற்கான செயல்களில் ஈடுபடுவதற்கு அவரால் ஆன உதவிகளைச் செய்யத் தயாராகவே இருந்தார் ஸெகியல். ஏசுவின் அப்போஸ்தலராக வராவிட்டாலும்கூட, அவருக்கு உதவி செய்ய முழு மனதுடன் ஸெகியலும், அவர் குடும்பமும் முன்வந்திருக்கும். மனிதர்களுக்கு உதவி செய்யப் பிறந்தவர்கள் அவர்கள் – ஸெகியல் மட்டுமல்ல; லிஸ்ஸத்தும், மிரியமும் கூடத்தான். அந்தக் குடும்பத்தில் சேராதவன் வள்ளுவன். அவனும் எத்தனையோ பேருக்கு உதவி செய்யப் பிறந்தவன். அதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

ஸெகியல், மிரியம், வள்ளுவன், நான் நால்வரும் கால்நடையாகவே வீடு திரும்பினோம். வண்டியில் லிஸ்ஸத்தும், பாடை போன்ற அந்த ஸ்ட்ரெச்சரில் செத்தவர்போலக் கிடந்த அப்போஸ்தலர் தாமஸும் திரும்பினார்கள். ஏசு செத்து உயிர் பெற்றவர் என்று தன் தம்பி எழுதிய

கடிதத்தை வாசித்துக் காட்டினார் ஸெகியல் அன்று. இன்று அவர் அப்போஸ்தலர் தாமஸ் செத்து உயிர் பெற்றுக் கொண்டிருக் கிறார். இதன் விளைவுகள் என்ன என்று என் மனதில் ஒரு பயம் நிறைந்திருந்தது.

## அத்தியாயம் 12

புயல் அடித்து ஓய்ந்தமாதிரி என்று சொல்வார்களே, அந்த மாதிரித் தான் இருந்தது. ஆனால், வாழ்க்கையை மனிதர்கள் எப்போதும் போலத் தொடரத்தானே வேண்டியிருக்கிறது. புயல் அடித்துக் கடல் கொந்தளித்து எழும்பி உயிர்ப்பலி வாங்கியதை மறந்தவர்கள் போல, செம்படவர்கள் படகுகளைச் செலுத்திக்கொண்டு மறுநாள் மீன் பிடிக்க, வலை வீசத் தயாராக இருந்தார்கள். சூரியோதயத்திற்கு நாலு நாழிகை முன்னதாகவே கிளம்பிச் சூரியன் ஒரு சாண் உயரம் வானத்தில் ஏறுமுன் கரை திரும்பி, கிடைத்த மீன்களைப் பேரம் செய்து வாங்குபவர்களிடம் விற்றுக் காசு பணம் பண்ணி, அரைக்காசுக்கு மிளகாய், கால் காசுக்கு உப்பு, ஒரு காசுக்கு எண்ணெய் என்று வாங்கி வயிறு குளிர வழி செய்து கொண்டிருந்தார்கள். புயலால் பெரும்பாலும் வாழைத் தோட்டங்கள் சரிந்துவிட்டபடியால் வாழையிலைக்கும், வாழைக்க்காய்க்கும் உடனே இல்லாவிட்டாலும் இரண்டு நாட்களில் கிராக்கி வந்து விட்டது. பிராமணர்களில் பெரும்பாலோரும் வாழைப் பொருட்களை நம்பியிருப்பவர்கள்.

கபாலி கோயிலிலும், மாயூரநாதர் கோயிலிலும், இரண்டும் பக்கத்தில் பக்கத்தில்தான் என்றாலும் வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு பூஜைகளும், நைவேத்தியங்களும் நடைபெற்றன. மாயூரநாதர் கோயிலில் அடுத்திருந்த உயர்ந்த மேடையில் உட்கார்ந்து பிராமணப் பிள்ளைகள் வேத காலத்திலிருந்து இன்றுவரை தவளைகள் சந்தை வைப்பதைப் போலச் சந்தை வைத்தார்கள். இலவசமாக, கோயிலில் அளிக்கிற ஒருவேளைப் போஜனத்திற்காக முறை வைத்துக்கொண்டு பிராமணத் தெருப் பிராமணர்கள் இந்தச் சந்தைத் தவளைகளைக் குரல் எழுப்பச் சொல்வார்கள். புயல் அடித்த அன்று காலை என் தகப்பனார் முறை. சந்தை சொல்ல அவர் தயாராகத்தான் போயிருந்தார் அன்று. நியாயந்தானே! ஆனால், சந்தைச் சொல்ல ஒருவரும் வரவில்லை . என் தகப்பனார் மட்டும் குரலெடுத்து உரியபடி பஞ்சாதி பூராவும் சொல்லிவிட்டு, உச்சிகாலப்பூஜை முடித்த பிறகு, அந்தப் பஞ்சபட்சப் பரமானங்களை இலைகளிலும், பாத்திரங்களிலும் சுமந்துகொண்டு வீட்டுக்கு வந்தார்.

அவர் வீடு திரும்புவதற்குக் கால் நாழிகை நேரத்துக்கு முன்தான் நான் அப்போஸ்தலர் தாமஸை மயக்கமாக இருந்த நிலையிலேயே ஸெகியலின்

வீட்டிலே விட்டுவிட்டு, வள்ளுவனுடன் பத்து வார்த்தை பேசிவிட்டு, வீடு திரும்பியிருந்தேன். அம்மா கோபித்துக் கொண்டாள். "எங்கெல்லாமடா உன்னைத் தேடுவது? காலையில் ஒரு நீராகாரம் கூடச் சாப்பிடாமல் போய்விட்டாயே! அப்பா தான் பஞ்சாதி சொல்லுகிற முறை. கோயிலுக்குப் போனார். நீ எங்கே போனாய்?" என்று கேட்டாள்.

நானும் வள்ளுவனும் ஈடுபட்டிருந்த காரியங்களைப் பற்றி எல்லாம் சொன்னேன். அம்மா, அதெல்லாம் உபயோகமான காரியம்தான் என்று ஒப்புக் கொண்டவள் போல மேலே எதுவும் என்னைக் கடிந்து பேசாமல் ஸெகியல் வீட்டில் மயக்கமாக, உயிருடன் கிடந்த அந்த விருந்தாளி பிழைத்துக் கொண்டுவிடுவாரா? என்ன சொல்லுகிறார் கள்?" என்று விசாரித்தாள்.

‘‘ஏதோ காரியத்துக்காகக் கடவுளால் இங்கு தள்ளி விடப்பட்டவர் – பிழைத்துக்கொண்டு விடுவார் என்று தான் சொல்கிறார்கள். நல்ல வயதானவர். இந்தப் புயலை மீறிப் பிழைத்திருந்தது அதிசயம் என்கிறார்கள்.’’

"கடவுளை நம்புகிறவர்களுக்கு ஆபத்துகளும் அதிகமாகத்தான் விளைகின்றன. ஆபத்துகள் விலகுவதும் சுலபமாகத்தான் நடக்கிறது" என்றாள் அம்மா லோகாயதமாக.

இதற்குள் அப்பா கோயில் பிரசாதத்துடன் வந்து விட்டார். இரண்டு மூன்று பேருக்குக் காணும்படியாகக் கோயில் பிரசாதம் வரும் என்று தெரிந்திருந்தபடியால் அம்மா அடுப்புக்கூட மூட்டவில்லை. நீராகாரம்கூடச் சாப்பிடாமல் போனேன் என்று கோபித்துக் கொண்டாளே தவிர, அவளால் எனக்குத் தர சமையல் எதுவும் தயாராக இல்லை .

சாப்பிடும்போது சாப்பாடு என்னவோ ருசித்துச் சாப்பிடும் படியாகத்தான் இருந்தது. நான் எப்பவுமே சாப்பாட்டு ராமன்தான். நான் மெதுவாகக் கேட்டேன். "சிவன் சொத்து குலநாசம். சிவன் கோயிலில் எதுவும் சாப்பிடக் கூடாது என்றெல்லாம் சொல்கிறார்களே – நாம் இப்படிச் சிவன் கோயில் பிரசாதத்தைச் சாப்பிடுகிறோமே – அது சரிதானா?" என்று கேட்டேன்.

அப்பாதான் பதில் சொன்னார் ‘‘சிவன் சொத்தைத் திருடிச் சாப்பிடுவது கூடாது என்றுதான் அர்த்தம். சம்பாதித்து – சந்தை சொல்லி நம்மைப் போலச் சம்பாதித்துச் சாப்பிடுவது சரியான காரியம்தான்’’ என்றார்.

"சிவன் சொத்தைத் திருடக்கூடாது என்றால் மற்றவர்கள் சொத்தை மட்டும் திருடலாமா’’ என்கிற நியாயமான கேள்வியைக் கேட்டேன்.

அப்பா 'அது விதண்டாவாதம்' என்றார். அம்மா, அதற்கெல்லாம் வேறு அர்த்தம் இருப்பதாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றாள். சிவனுக்கு உலகமே சொந்தம் என்றால் எல்லாமே சிவன் சொத்துத்தானே! பஞ்சாதியில் சிவனைப் பற்றி மட்டுமா சொல்கிறோம்? ருத்திரன், என்ற பெயரில் சிவன், மற்றும் இந்திரன், அக்னி, மழை என்று எத்தனையோ தெய்வங்களைச் சொல்கிறார்கள். எல்லாத் தெய்வங்களுக்கும் அவரவர் இடத்தில் மனிதர்களைப்போல மதிப்பும் அதிகாரமும் உண்டு.

சிவன் சொத்தோ, பஞ்சாதியின் சொத்தோ - சாப்பாடு பிரமாதமாகத்தான் இருந்தது. ஓட்டம், நடை காலையில் சாப்பிடாதது எல்லாம் காரணமாக எனக்கு ஒரே பசி. ஒரு கை பார்த்து விட்டு எழுந்திருக்கும்போது, பாத்திரத்தில், அப்பா சாப்பிட்ட பிறகும் மிஞ்சக்கூடிய அளவில் சர்க்கரைப் பொங்கல் மிச்சமிருந்ததைப் பார்த்து விட்டு, "நீ சாப்பிட்ட பிறகு மிச்சம் சர்க்கரைப் பொங்கலை ஒரு பழைய இலையில் கட்டிக்கொடு. வள்ளுவனுக்குக் கோயில் சர்க்கரைப் பொங்கல் என்றால்ல் ரொம்பவும் பிடிக்கும். அவனும் மனைவி வாசுகியும் விரும்பிச் சாப்பிடுவார்கள்'' என்று சொன்னேன்.

"அடடா! அது நினைவில்லை எனக்கு. வேறு ஒருவருக்கு அதைத் தருவதாக நான் வாக்களித்து விட்டேன்!'' என்றாள் அம்மா.

"யாருக்கு?" என்று நான் கேட்பதற்கும், அதே சமயம், "சாப்பிடத் தயாராக வந்து விட்டேன் அம்மா! எனக்கு ஏதாவது வைத்திருக் கிறீர்களோ - இல்லையோ?" என்று கலகலவென்று கேட்டுக் கொண்டே மிரியம் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

மிரியத்திற்குத்தான் அம்மா சர்க்கரைப் பொங்கலை வாக்களித்திருந் தாள் என்பது எனக்குத் திருப்தியாக இருந்தது. வள்ளுவனுக்கு அடுத்த தடவை கொடுத்துக் கொள்ளலாம். அப்பா சாப்பிட்டுக் கையலம்பி விட்டு நாலு வீடு தள்ளியிருக்கும் சங்கரன் வீட்டிற்குப் போகிறேன் என்று போய்விட்டார். அவர் வீட்டிலிருந்தால் வள்ளுவனுக்குச் சர்க்கரைப் பொங்கல் கொடு என்று நான் கேட்டிருக்க மாட்டேன். அவர் காதில் விழுந்தால், "கோயில் பிரசாதத்தை நாய்களுக்கும், கீழ்ஜாதி ஜனங்களுக்கும் கொடுக்கப் படாது'' என்பார். அதிலும்கூட நாய்களுக்குப் பிறகுதான் கீழ்ஜாதி மக்கள் - வள்ளுவன் போன்றவர் கள். எனக்குப் பற்றிக்கொண்டு வரும். என்ன செய்ய?

மிரியத்துக்குக் கோயில் சர்க்கரைப் பொங்கல் பற்றி என்ன சொல்வாரோ - தெரியாது. அவர் மிரியத்தை இரண்டு காரணங் களால் அவள் கீழ்ஜாதி

என்று சொல்லி விடமாட்டார். அவள் பணக்கார வியாபாரி ஸெகியலின் மகள். இரண்டாவது, அவள் அழகி. என் அப்பா ஓரளவுக்கேனும் பணத்துக்கும், அழகுக்கும் அடிமைப்பட்டவர். பிராமணர்கள் பலரும் பணத்துக்கு மட்டும் அடிமைப்பட்டவர்கள். அதிலே என் அப்பா தேவலை. அழகையும் சுவைக்கும் உள்ளம் படைத்தவர் அவர்.

மனிதர்கள் எல்லோருமே பணத்திற்கு அடிமையாகத்தான் இருக்கிறார்கள். பௌத்த மதம் பேசுபவர்களும் சரி, ஜைனவாதம் பேசுகிறவர்களும் சரி – எல்லோருமே பொருளுக்கு, பூமிக்கு அடிமைகளாகத்தான் நடந்து கொள்கிறார்கள். பொருள், பூமி, லாபம் என்று வரும்போது ஆன்மீகம், அமைதி, உயர்ந்த சிந்தனைகள், கொள்கைகள் எல்லாவற்றையும் இழந்துவிடுவார்கள். இது மனிதப் போக்கிலே வெளிப்படையாகவே காணக் கிடைக்கிற விஷயம். வள்ளுவன் அடிக்கடி சொல்வதுபோல, "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று – அத்துடன், "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை" என்றும் சேர்த்துச் சொல்கிறான். இவ்வுலகம் போதும் என்பதுதான் மனிதர்கள் பலரின் நினைவாகவும் இருக்கிறது.

இதில் பிராமணர்கள், பிராமணர் அல்லாதவர்கள், வேதத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், வேதத்தில் நம்பிக்கை வைக்காதவர் கள் என்று வித்தியாசமேயில்லை. வேறு ஏதேதோ ஏட்டளவில் சொல்கிறார்கள். பெரிய பெரிய தத்துவங்களைக் கதைக்கிறார்கள். எல்லாரும் தெய்வத்தின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறார்கள். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்கிறார்கள். ஆனால், பணம் என்று வந்துவிட்டால் வேறு யோசனைகள் வந்து விடுகின்றன.

ஏழை, பணக்காரன் என்கிற வித்தியாசம் இந்த உலகில் ஏன் தோன்றுகிறது? ஒருவன் உழைத்துத் தனக்கு வேண்டியதைத் தேடிச் சம்பாதித்துக் கொள்வதில் தவறில்லை. சில துறைகளில் – உதாரணமாக வியாபாரத் துறையில் ஏராளமாய்ப் பொருளீட்ட முடிகிறது. பணத்தைத் தேவைப்படுகிறவர்களுக்குக் கொடுத்து வட்டி வாங்கி, அந்த வட்டிப் பெருக்கத்தினாலேயே பணக்காரர்களானவர்கள் இந்தப் பிராமணத் தெருவிலேயே பலர் இருக்கிறார்கள் – விசுவநாத சாஸ்திரிகள், பஞ்சாபகேச சாஸ்திரி, ராமச்சந்திர கனபாடி என்று. அவர்கள் யாரிடமிருந்து வேண்டுமானாலும் பெற்றுக் கொள்வார் களே தவிர, கொடுக்கமாட்டார்கள் – விட்டுக் கொடுக்க மாட்டார்கள். எத்தனை பணம் சேர்ந்தால்தான் என்ன – போகும்போது தலையில் கட்டிக்கொண்டு போக முடியுமா என்ன என்று அப்பா சொல்கிறார். உண்மைதான். சாப்பிடுவதுகூட அளவாகத்தான் சாப்பிட

வேண்டிய தாக இருக்கிறது. தினம் இந்தக் கோயில் சர்க்கரைப் பொங்கல் மாதிரி தின்று வந்தால் செரிக்காது. வீட்டை வேண்டுமானால் பெரிதாகக் கட்டிக்கொள்ளலாம். ஒரு ஜோடி மாட்டுக்குப் பதில் இரண்டு ஜோடி மாடு வைத்துக் கொள்ளலாம். பணமிருந்தால் வீட்டில் பசுமாடு வாங்கிக் கட்டிக் கொள்ளலாம் என்கிறாள் அம்மா. அதற்குமேல் அவளுக்கு ஆசையில்லை. அதுவும் பிற ஸ்திரிகளைத் தேடியலையும் தன் புருஷன் இரவில் இருமுகிறாரே – அது குறையும், பசும்பால் சாப்பிட்டால் என்பதற்காகத்தான் அந்த ஆசையும்.

ஒரு தரம் அப்பாவுக்கு யாரோ சாவுச் சடங்குகளில் பசுமாடு தானம் தருகிறேன் என்றான். ஆனால், அம்மா பிடிவாதமாக 'அதை வாங்கிக் கொள்ளக்கூடாது, பசு மாட்டைத் தானம் வாங்கினால் குடும்பத்திற்கு ஆகாது. குடும்பம் வளராது – அதாவது எனக்கு, தன் பிள்ளைக்குக் கல்யாணமாகிப் பிள்ளை பிறக்காது' என்று சொல்லித் தடுத்து விட்டாள் என்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

"என்னடா வாது – என்ன யோசனை?'' என்றாள் அம்மா. மிரியம் உரக்கச் சிரித்தாள். "வள்ளுவர் சொல்கிறார் – வாதூலன் எப்போதும் சிந்தித்துக் கொண்டேயிருப்பதால் பேசுவது குறைவு என்று."

"வள்ளுவனும் அதிகமாகப் பேசி விடுகிறவன் அல்ல" என்றேன். "எதைச் சொன்னாலும் அளந்து சொல்ல வேண்டும் என்கிறார் அவர். ஏனென்றால் ஒரு தரம் வார்த்தை வாயை விட்டு வெளியே வந்து விட்டால் அதைத் திருப்பி வாங்கிக் கொள்ள முடியாது என்கிறார்'' அவர் என்றாள் மிரியம்.

"இன்னொன்றும் அவன் சொல்வான் அடிக்கடி. "தீயினால் சுட்ட புண் ஆறிவிடும். வாயினால் சுட்டபுண் ஆறவே ஆறாது' என்று சொல்வான்'' என்றேன் நான்.

"என்னிடமும் அதைச் சொன்னார்." என்றாள் மிரியம். "அவர் மனைவியும் அவரைப் போலவே பல விஷயங்களில் இருக்கிறார். எனக்கு இரண்டு பேரையுமே பிடித்துப்போய் விட்டது. அப்பாவும், அம்மாவும் ஊருக்குத் திரும்பிப் போனாலும்கூட அண்ணாவுடன்கூட நான் இங்கேயே தமிழ்நாட்டில் இருந்துவிடப் போகிறேன்'' என்றாள்.

‘‘அவர் ஊருக்குப் போகப் போகிறாரா?'' என்று கேட்டேன். "நிச்சயமில்லை. என் அண்ணாவால் வியாபாரத்தைச் சரிவரப் பார்க்க முடியும் என்று அவருக்கு நம்பிக்கையில்லை. அண்ணாவைத் தனியாக விட்டால், வியாபாரம் நொடித்துவிடும் என்று எண்ணுகிறார்.. போக மாட்டார். ஆனால்,

அங்கே ஜெருசலேத்திலும், பெத்தலஹேமிலும் நடக்கிற காரியங்கள் பற்றி அவர் தம்பி எழுதுகிற போது நேரில் போய்ப் பழைய இடங்களையெல்லாம் பார்த்து வர வேண்டும் என்று ஆசை. சபலம் ஏற்படுகிறது. அநேகமாகப் போக மாட்டார்'' என்ற மிரியம் இரண்டொரு நாழி கழித்து, "விருந்தாளிப் பெரியவர் தாமஸ் மயக்கம் தெளித்து விழித்தபின் அவரோட பிறந்த நாட்டுப் பெருமை, சிறுமைகளையெல்லாம் பேசிக்கொண்டே இங்கே தங்கிவிடுவார் என்றுதான் எண்ணுகிறேன். அவருக்கும் இங்கு தமிழர்களும், தமிழ்ப் பாஷையும், போக்கும் பிடித்து விட்டது.''

நான் சொல்ல வேண்டும் என்று நினைத்ததை அம்மா சொன் னாள்: "எங்களில் சிலருக்குத்தான் எங்கள் போக்குப் பிடிக்கவில்லை" என்று .

மிரியம் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அம்மா பதில் சொன்னாள். ‘‘இதோ பார் – நீ வள்ளுவனையும், அவர் மனைவி வாசுகியையும் பார்க்க முடிகிறது – பழக முடிகிறது. பொழுது போனால், பொழுது வந்தால் என் பிள்ளை வாதூலன் வள்ளுவன் புகழைப் பாடித் திளைத்துக் கொண்டிருக்கிறான். அவன் அறிவு என்ன, செயல் திறன் என்ன, தன்னலமில்லாத போக்கு என்ன, சொல்திறன் என்ன, வாசுகியின் நற்பண்புகள் என்ன என்ன என்ன என்று சொல்கிறான். சரி, அவளைக் கூப்பிட்டு நான் ஒருவேளை சமைத்துப் போட முடியுமா! சர்க்கரைப் பொங்கல் கொடுக்க முடியுமா? அவள் கீழ்ச் சாதியாம். கோயில் பிரசாதம் சாப்பிட லாயக்கில்லாதவள் என்று என் சக பிராமணர்கள் சொல்கிறார்கள்" என்றாள் அம்மா.

"நான் சாப்பிட்டதே தப்போ அம்மா!" என்று விசாரித்தாள் மிரியம்.

"தப்பு என்றால் உன்னை வா என்று சொல்லிக் கொடுத்திருக்க மாட்டேன். மற்றவர்கள் தப்பு என்று சொன்னாலும் அது தப்பில்லை என்று எனக்குத் தோன்றுவதால் நான் சில சமயம் வாதூலன் மூலம் வள்ளுவனுக்கும் சர்க்கரைப் பொங்கல் கொடுத்தனுப்புவது உண்டு. சர்க்கரைப் பொங்கல் கிடக்கட்டும். சின்ன விஷயம்."

"சின்ன விஷயம்தான் என்றாலும் நன்றாக இருக்கிறதே!" என்று கபடமில்லாமல் சொன்னாள் மிரியம்.

"நான் இதுவரை வள்ளுவனையாவது எங்காவது தூரத்தில் பார்த்திருப்பேன். அவன்தான் வள்ளுவன் என்று தெரியும். ஆனால், வாசுகியைப் பார்த்ததுகூட இல்லை, வள்ளுவனோடு பேசியதும்கூட இல்லை. பிராமணத்தியாகிய நான் வள்ளுவனாகிய அவனுடன் பேசி விட்டால் என்

பிராமணத்துவம் போய்விடுமாம். ஊரார் நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி பேச ஆரம்பித்து விடுவார்கள்."

அம்மா பேசியது எனக்கு மிகவும் உவப்பாக இருந்தது. இத்தனை விஷயங்களை அம்மா சிந்தித்து வைத்திருக்கிறாளே என்று எனக்கு ஆச்சரியமாகவும் இருந்தது.

"அப்பா கூட அன்று ஒரு நாள் சொன்னார் மனிதர்களில் குறிப்பிட்ட பகுதியினரை, அதுவும் சமூகத்தின் சுபிட்சத்திற்குக் காரண மான விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மனிதர்களைத் தீண்டத் தகாதவர்கள் என்று ஒதுக்கி வைத்திருப்பது அடிமைப்படுத்துவதை விடக் கொடுமை என்று அப்பா சொன்னார். அதற்கு வள்ளுவர் என்ன சொன்னார் தெரியுமா?''

"என்ன?" என்று நான்தான் கேட்டேன்.

"அநேகமாக எல்லாச் சமுதாயங்களிலுமே இந்த மாதிரி ஒரு கொடுமை இருந்துதான் வருகிறது" என்றார். "எந்த சமுதாயத்தில் ஒரு கொடுமையும் இல்லாமல் இருக்கிறது? அப்படிப்பட்ட லக்ஷிய சமுதாயம் இன்னும் மனிதர்களிடையே உண்டாகவில்லை. உண்டாக வேண்டும் என்றார். ஒருவனை அடிமைப்படுத்தியோ கொடுமைப் படுத்தியோ இல்லாதவனாக்கிப் பிச்சை எடுக்க வைக்கிற தெய்வம் இல்லாமற்போனாலும் நல்லதுதான் என்றார்."

இத்தனை விஷயங்களைப் புரிந்து கொள்வதற்கு இந்தச் சின்ன, அனுபவம் முதிராத, கல்யாணம்கூட ஆகாத பெண்ணுக்குத் திராணி யிருக்கிறதே என்று ஆச்சரியமாக இருந்தது எனக்கு. மிரியத்தை மணந்து கொள்பவன் அதிர்ஷ்டசாலியாக தான் இருக்க வேண்டும்.

மிரியம் போனபின் நான் அம்மாவிடம், "உனக்கு வாசுகியைப் பார்த்துப் பேச வேண்டுமானால் கடைத்தெருப் பக்கம் வரச் சொல்கிறேன்.''

"வேண்டாம் வாதூ. அது – அவளுக்கும் மரியாதையில்லை. எனக்கும் மரியாதையில்லை. அவளையும் தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் வரலாம். பொறுமையாக இருக்கலாமே'' என்றாள்.

என் அம்மாவைப் போன்றவர்களுக்குப் பொறுமை அதிகம் என்றுதான் எனக்குத் தோன்றியது? கடல்நீர் பூமிக்குள் புகுந்துவிடாமல் தருமம் காக்கிறது என்று சொன்னாலும், பெண்களின் தருமம்தான் அந்தத் தருமத்தில் பெரும்பகுதி என்று சொல்லவேண்டும். சிந்திக்கவும் தெரிந்து, பொறுமையாக இருப்பது, மிகமிக சிரமம். அந்தச் சிரமமான காரியத்தை

அம்மாவைப் போல எத்தனை பெண்கள் சாதித்துக் கொண்டிருக்கிறார்களோ?

## அத்தியாயம் 13

ஒன்பது முழு நாட்கள் – பகல், இரவு என்று மாறி மாறி – அப்போஸ்தலர் தாமஸ் உயிருக்கும், சாவுக்குமிடையே ஊஞ்சலாடிக் கொண்டிருந்தார். பெருமூச்சுகளும், முனகல்களும் ஐந்தாறு நாட்களுடன் நின்றுவிட்டன. ஏசுவின் பெயர் மட்டும் ஒரு ஏக்கத்துடன் ஒரு எக்களிப்புடன் சொல்லப்படுவது அதிகரித்திருக்கிற மாதிரி இருந்தது.

"இந்த மாதிரி ஒரு மனிதனின் மனத்தையும் உள்ளத்தையும், கவனத்தையும் கவர அந்த ஏசு மிகவும் உயர்ந்த மனிதனாகத்தான் இருக்க வேண்டும்" என்றான் வள்ளுவன்.

"நம் ஊரில் இல்லையா. அடித்தால்கூட ராமாராமா... என்று அழுகிறவர்கள்'' என்றாள் வாசுகி.

"உண்மைதான். ஏசுவை இவர் நேரில் கண்டிருக்கிறார் – கூடப் பழகியிருக்கிறார். ஒன்றாகச் சாப்பிட்டு ஒன்றாக உறங்கியிருக்கிறார்கள்."

"ராமனை யாரும் நேரில் கண்டதாகவும் தெரியவில்லை . நிஜமாகவே ராமன் என்று ஒருவன் இருந்தானா என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், ஒரு கவியின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து ராமனையும், கிருஷ்ணனையும் நண்பனாகவும் குருவாகவும் லட்சியமாகக் கொண்டு வாழ்பவர்கள் எங்கள் மதத்தை ஏற்றுக்கொள்ளும் மனிதர்களிடையே அதிகம் தான்" என்றேன் நான்.

"எங்களிடையே ஒரு ராமன் உண்டு. அவன் புராண புருஷன். அவனைச் சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்டவர்கள்கூட ராவணனைக் கொன்றதற்காக அவனை மகான் என்று சொல்வதில்லை. ஏனெனில் ராவணனும் மகான்தான் – வித்யாதரர்களில் உயர்ந்தவன். தெய்வ பக்தியும், தருமமும் மிக்கவன் என்றுதான் எங்கள் ராமாயணம் சொல்கிறது. இரண்டு ராமாயணங்களுமே ராம ராவண யுத்தத்தையும், அதன் முடிவையும் ஒன்றாகத்தான் சொல்கின்றன" என்றான் வள்ளுவன்.

"ராமாயணத்தை உன்னைப்போல நான் படித்ததில்லை. ஏனென்றால் எனக்குச் சுவடிப் பிரதிகள் கிடைக்கவில்லை. கதை சொல்கிறவர்கள் சொல்லத்தான் கேட்டிருக்கிறேன். வால்மீகியும்கூட ராவணனை உயர்ந்தவனாகத்தான் சொல்லியிருக்கிறான் என்று சொல்கிறார்கள். சாதாரண

மனிதனை எதிர்த்து வெற்றி பெறுவதில் ராமனுக்குப் பெருமை சேருமா? மஹா உன்னதமானவனை எதிர்த்து வெற்றி பெறுபவனைத் தானே காவிய நாயகனாகச் சொல்ல வேண்டும்?" என்றேன் நான்.

"ஆன்மிகம், லௌகிகம் என்ற இருபெரும் பகுதிகளிடையே போர் நிகழ்கிறது. அதில் ஆன்மீகத்தை ராமனும், லௌகீகத்தை ராவணனும் தலைமை தாங்கி நடத்துகிறார்கள். இது ஜைன ராமாயணத்தில் தெளிவாகவே தெரிகிறது. ராவணன் ஞானத்துடன் விஞ்ஞானத்தை யும் கலந்து வாழ்க்கை வழிகளை அமைத்துக் கொண்டவன். எல்லாவிதமான சுகசௌகரியங்களையும் அனுபவிக்கத் தெரிந்தவன். இரண்டையும் ஒருங்கிணைத்து அவனால் பார்க்க முடிகிறது. ராமனால் அது முடியாது. ஆன்மீக வேகத்தில் 'தியாகம், தியாகம்' என்று காலந் தள்ளுபவன் ராமன். தியாகம் என்பது எல்லாச் சமயங் களிலும் உண்டு. சீதையைத் தியாகம் செய்வதாகத்தான் அமைந்தது என்று வால்மீகி கருணையுடன் எழுதுகிறார். அதற்குமேல் ராமாயணத்தில் – அந்தச் சம்பவங்கள் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் – அதில் வேறு விதமாக அர்த்தம் காண்பது தவறு" என்றான் வள்ளுவன்.

"ஏசுவும் தியாகங்கள் செய்யப் பிறந்தவராகத்தானே தன்னைக் கருதி, தன் உயிரையே தியாகம் செய்ததாக ஸெகியலின் தம்பி எழுதிய கடிதத்திலிருந்து – அன்று ஸெகியல் வாசித்துக் காட்டினாரே அந்தக் கடிதத்திலிருந்து – தெரிகிறது?" என்று கேட்டேன்.

"தியாகம் புரிந்து தனக்கென்று வாழாமல், பிறர் பிழைக்கவென்றே வாழ்ந்த பல மகான்கள் உலகின் பல பாகங்களிலும் இருந்திருக்கிறார்கள். எனக்கு ஏசுவின் விஷயத்தில், இதுவரை கேள்விப்பட்டதிலிருந்து, அவர் தியாகம்கூட முக்கியம் என்று தோன்றவில்லை. மீண்டும் பிழைத்து வந்ததும், தன்னைக் கடவுளின் குமாரன் என்று அவர் நம்பியதும்தான் முக்கியமாகத் தோன்றுகின்றன. பெரியவர் தாமஸ் சொல்வார் என்றுதான் காத்திருக்கிறேன். தவிர அந்த ஏசு எந்த மாதிரியான தத்துவங்களைத் தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு உபதேசித்தார் என்பதும் தெரியவில்லை."

"இன்னும் மயக்கம் தெளியாமல் கிடக்கிறாரே தாமஸ் அவர் மயக்கம் தெளிந்து எழுந்துவிட்டால் அவரிடமிருந்து உன் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்" என்றேன்.

"அப்படியும் எல்லாம் தாமஸ் வாயிலாக வந்து நிதர்சனமாகிவிடும் என்றும் சொல்லிவிட முடியாது. அவர் ஏசுவை நெருங்கிப் பழகியவர். பல விஷயங்கள் அவர் கண்களை மறைத்துவிடும். நீ என்னுடன் பழகியவன்.

அதனால் நட்பு காரணமாக என்னைப் பற்றிய பல விஷயங்களை நீ தெளிவாக அறிந்து கொண்டிருப்பதாக எண்ணுவ தும், நீ எண்ணுவதையெல்லாம் உண்மையென்றும் பூரணமாகவே நம்பலாம். மற்றவர்களும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்ல முடியுமோ?" என்றான் வள்ளுவன்

‘‘நானே ஏற்றுக்கொள்ள மாட்டேனே!" என்று சொல்லி நகைத்தாள் வாசுகி.

வள்ளுவன் சொன்னான், "இந்த விஷயங்களிலெல்லாம் பெண்மனம் மிகவும் துல்லியமானது. உனது தாயாரோ, எனது தாயாரோ வாசுகியோகூடச் சொல்வதை நான் அப்படியே ஏற்றுக்கொண்டு விடுவேன்’’ என்றான்.

"அப்படியா? ஆனால், ஏன் பெண்கள் சொல்படியே நடப்பவன் மனிதனேயல்ல என்று அடிக்கடி சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் வாசுகி.

"பெண்கள் சொல்வதிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை – ஏற்றுக் கொள்ளத் தகாதவை என்று வித்தியாசம் உண்டு. உள்ளம் சம்பந்தப் பட்ட மட்டில் பெண்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டுவிடலாம். மற்றபடி – லோகாயதமான காரியங்களில் – பொருளீட்டுவதில், நட்புப் பாராட்டுவதில், எந்தச் சமயத்தில் எந்தக் காரியம் செய்வது என்பதில் அவர்கள் பேச்சை ஏற்றுக்கொள்ளக் கூடாது." சற்று விட்டு, அந்த மிரியம் இருக்கிறாளே, அவள் மிகவும் நல்ல பெண்" என்றாள் வாசுகி.

"அழகான, அமைதியான பெண்" என்றேன் நான்.

"மயிலாப்பூரில் அவள் இப்பவே – தாமஸ் வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்வதற்கு முன்னாலேயே – அவருடைய பிரதம சிஷ்யை ஆகிவிட்டாள். நேற்று நான் போயிருந்தபோது அந்த வெள்ளிச் சிலுவை ஏசுவைக் கொண்டுவந்து எனக்குக் காட்டி, 'இந்த மனிதனின் முகத்தில் உலகத்தில் உள்ள கருணையெல்லாம் திரண்டு வடிந்து இருப்பதாகத் தெரியவில்லை உங்களுக்கு? அந்த முகத்தில்தான் அந்த உயிர்போகும் தருணத்திலும்கூட எப்படிப்பட்ட ஒரு உன்னதமான பாவம் தெரிகிறது!' என்று கவிபாட ஆரம்பித்து விட்டாள்."

"கருணையோ, வேறு மேன்மையோ இருந்தால் அது அந்த உருவத்தைச் செய்தவனின் கலைத் திறன் இல்லையோ?" என்றேன் நான்.

வள்ளுவன் நகைத்தான். "உங்களில் எத்தனை பேர் கபாலி லிங்கமும், நடராஜ உருவமும், கிருஷ்ணனின் புல்லாங்குழலும் கலைத் திறனால்

மட்டும் உருவானவை என்று ஏற்றுக் கொள்வீர்கள்? கலைத் திறனுக்கு அப்பாற்பட்ட ஒரு உயிர் இந்த மாதிரி விஷயங்களில் தானாக ஏற்பட்டுவிடுகிறது."

வாசுகி சொன்னாள்: “நேற்று நம் பார்வதி ஒரு மரக் கட்டையை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தாள். 'என்னடி விளையாடுகிறாய்?' என்றேன், 'அம்மா, யானை வந்திருக்கிறது' என்றாள். 'எங்கேடி பார்வதி யானை?' என்றேன். 'இதோ இது யானை, உனக்கு இது கூடத் தெரியவில்லையே" என்று என் அஞ்ஞானத்தைக் கைகொட்டி நகைக்க ஆரம்பித்துவிட்டாள். அந்த மரக்கட்டை யானையாகவே போய்விட்டது அவளுக்கு – துதிக்கை, சின்னக் கண்கள், பெரிய காதுகள், முதுகில் தங்க அம்பாரி, எல்லாமே அவளுக்கு அதில் தெரிந்தன."

"எவ்வளவு பெரிய உண்மையை எவ்வளவு சுலபமாக நீ சொல்லிவிட்டாய் வாசுகி!” என்றான் வள்ளுவன்.

"பெண்களுக்குக் கல்வி கற்றுத்தரக் கூடாது என்கிறார்கள் பிராமணர்கள். அவர்களுக்குக் கல்வி வராது என்கிறார்கள். இது எவ்வளவு அசட்டுத்தனமானது என்று எனக்குத் தோன்றுகிறது – அண்ணியைப் பார்க்கும் போது."

"கல்வி வராது என்று ஒருவரும் சிருஷ்டியிலே இருக்க முடியாது. அவரவருக்கு ஏற்பட்ட அளவில், தேவையான அளவில் கல்வியிருந்து கொண்டுதான் இருக்கிறது. அ, ஆவன்னா தெரியாதவன் அறிவாளி யாக இருக்க முடியாது என்று நாம் என்றுமே நம்பியதில்லையே! பிராமணர்கள், சிலருக்கு ஒரு குறிப்பிட்ட கல்வியைத் தரக்கூடாது – குறிப்பாக வேத அறிவைப் புகட்டக் கூடாது என்று சொல்வதற்கு ஒரே காரணம், பிறர் தங்களுக்குப் போட்டியாக வந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான்" என்றான் வள்ளுவன்.

வாசுகிக்கு வீட்டுக் காரியம் இருக்கிறது என்று உள்ளே போய்விட்டாள். நாங்கள் மூவரும் அவர்கள் வீட்டுத் திண்ணையில் தான் உட்கார்ந்து கொண்டிருந்தோம். நேரம், காலை நேரம். மேகங்கள் லேசாக வானத்தில் பரவியிருந்தன. வெயில் அதிகமாகத் தெரிய வில்லை . காற்றும் அதிகமாக இல்லை . இந்தப் பக்கங்களில் சகஜமாக உள்ளது போல லேசான ஒரு புழுக்கம் தெரிந்தது. "வா கடற்கரைப் பக்கம் போகலாம். செங்கோடன் ஏதோ சொல்லி அனுப்பினான். என்ன என்று கேட்போம்..."

கடற்கரையிலிருந்த மீனவர் குப்பத்தை நோக்கி நடந்தோம். எதிரில் நடுத்தெருப் பிள்ளையார் கோயில் குருக்கள் தென்பட்டார். ஆள் வாட்ட சாட்டமாக ஆஜானுபாகுவாக இருந்தார். கழுத்தில் மகரகண்டி, நெற்றியிலும், மார்பிலும், புஜங்களிலும் பட்டை பட்டை மையாக விபூதி. நெற்றிப் பட்டையின் நடுவில் ஒரு சந்தனக் கீற்று. வள்ளுவன் அவரைக் கண்டதும் சற்றுத் தயங்கி விட்டுச் சட்டென்று முன்சென்று அவர் கையைத் தொட்டு நிறுத்தினான். திடுக்கிட்டு நின்ற குருக்கள், "என்னடாது அக்கிரமமாகப் போயிற்று! நடுத்தெருவில் கீழ் சாதிக்காரன் பிராமணனைத் தொட்டு நிறுத்துகிறான். கலிகாலம்தான்! உனக்குப் பாடம் படிப்பிக்கணும்" என்றார்.

"அய்யா குருக்களே! அந்தப் பெண் எங்கள் வீட்டிலே தான் இருக்கிறாள்."

"எந்தப்..." என்று குழறினார் குருக்கள்.

‘‘எந்தப் பெண் என்று விஸ்தாரமாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்த மாதிரி இன்னொரு தரம் எதாவது நடந்தால் உம்மைப்பற்றி ஊரெல்லாம் சிரிக்க அடித்துவிடுவேன். அதைச் சொல்லத்தான் தொட்டு நிறுத்தினேன்."

"இந்தக் குருக்கள்தானா?’’

"இப்ப சத்தியமாக எனக்கும் என் நண்பன் வாதூலனுக்கும் தெரிந்துவிட்ட விஷயம் இது. வெளியே வந்து விட்டால் உம் மானம் போய்விடும். உங்களைச் சார்ந்தவர்கள் – கிழத்தகப்பனார், மகாலட்சுமி போல இருக்கும் உம் மனைவி, குழந்தை குட்டிகள் எல்லோரும் நாக்கைப் பிடுங்கிக் கொள்வார்கள்.. ஜாக்கிரதை. நினைவிருக் கட்டும்..." என்றான் வள்ளுவன்.

"என்ன வள்ளுவா இது? நீ ஏதோ தப்பாக..."

"நான் தப்பாக இல்லை. நீர்தான் தப்பாக... அதைப் பற்றிப் பேசவே எனக்கு இஷ்டமில்லை . மறுபடி ஒருதரம் அந்த மாதிரி ஏதாவது நடந்தால்... அவ்வளவுதான். நினைவிருக்கட்டும். வருகிறேன்."

பத்தடி போனபின் திரும்பிப் பார்த்தேன். குருக்கள் நின்ற இடத்திலேயே பிரமித்துப்போய் நின்று வள்ளுவனையே பார்த்துக் கொண்டிருந்தார். பிடி சாபம்' என்று சபிக்க முடிந்திருந்தால் 'பிடி சாம்பலாகி'யிருப்பான் வள்ளுவன். தெய்வத்துக்குக்கூட தெரியாது, கண்ணில் மண்ணைத் தூவி விட்டேன் என்று எண்ணியிருந்த அவருக்கு வள்ளுவனுக்கும், கூடவே

வாதூலனுக்கும் தெரிந்துவிட்டது பற்றி பீதி வந்துவிட்டது. அவர் பழைய மாதிரி நடமாட முடியாது.

பயத்தினால் அடங்கிச் சரிவர நடந்து கொள்வார். அல்லது அதுதான் தெரிந்துவிட்டதே – இனி என்ன கவலை, இருவருக்குத் தெரிந்தால் என்ன – ஊரிலெல்லாம் தெரிந்தால் என்ன என்று கவலையற்றுத் தப்புக் காரியங்களில் இறங்கி விடுவாரே! எப்படிச் சொல்லமுடியும்? மனித மனமும், நடத்தையும் விசித்திரமானது – எதிர்பாராத திருப்பங்களைத் தரவல்லது.

என் மனசையே என்னால் தெரிந்துகொள்ள இயலவில்லையே! என் அம்மாவுக்குத் துயரம் தரக்கூடாது என்பது என் முதல் லக்ஷியம். அந்த லட்சியத்தை அனுசரித்து எதுவும் செய்யத் தயாராயிருந்தேன். மிரியத்தை தாமஸின் முதல் சிஷ்யையாக வள்ளுவன் சொல்கிறான். எனக்கு என்னவோ என் பிராமணத்துவத்தைக் கெடுத்து என்னை அழைத்துக் கொள்ளத்தான் தாமஸ் மயிலை வந்திருக்கிறார் என்று அவரைக் காப்பாற்ற அன்று திருவான்மியூரிலிருந்து ஸெகியலின் வீட்டிற்கு ஓடும்போதே எனக்குள் தீர்மானமாகிவிட்டது. பிராமணர்கள் இதை விட்டகுறை, தொட்டகுறை என்கிறார்கள். பிராமணனோ, அல்லவோ – என்னால் பிராமணனாகத் தானே சிந்திக்க முடிகிறது!

'இந்தப் பிராமணப் பரம்பரையை ஒதுக்கித் தள்ளிவிட்டு அந்தப் பெண் மிரியத்தை மணந்துகொண்டு, ஸெகியலின் கொட்டாரத்தில் கணக்குப்பிள்ளையும், மாப்பிள்ளையுமாக வேலை பார்த்து, வியாபார வழிகளைத் தெரிந்து, நாணயமாகவும், தருமமாகவும் செயல்படுகிற வியாபாரி என்று பெயர் வாங்கி, குழந்தை குட்டிகளுடன்... எதிர் காலத்தை நோக்கும்போது எனக்குப் புல்லரித்தது; புளகாங்கிதமாகியது. தாமஸ் என்கிற பெரியவர் மயக்கம் தெளிந்து, எழுந்து எனக்கு உபதேசித்து நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லப் போகிறார் என்பதை அறிய ஆவலுடனும், துடிப்புமாக இருக்கிறேன் நான். வள்ளுவன் அறிவுபூர்வமாக, அறிவின் ஒரு அம்சமாகத் தாமஸுடன் பழக எண்ணுகிறான். எனக்கு உணர்ச்சிபூர்வமாகவே அவர் விஷயம் தெரிகிறது. ஏன் என்று தெரியவில்லை . விட்டகுறை, தொட்டகுறை என்றுதான் சொல்ல வேண்டும்.

'ஏசு' என்ற ஒரு தேவகுமாரனின் கொள்கைகள், தியாகங்கள், மறு உயிர்ப்புப் பெறுதல் – இதெல்லாம் ஒரு விதத்தில் அவசியமான பின்னணி என்றாலும், அவையெல்லாம் இல்லாவிட்டால் தாமஸ் என்கிற அப்போஸ்தலன் இங்கு

என்னைத் தேடி வந்திருக்க இயலாது என்பது உண்மைதான் என்றாலும், அவர் வந்துவிட்டது உண்மை. அது ஒன்றேதான் எனக்கு உண்மை .

நான் உண்மையிலேயே பைத்தியக்காரன் தான். ஏதோ பரவசப்படுகிற நிலையில் என் பக்தியையும், பரவசத்தையும் நான் வியாசர், யாக்ஞவல்கியர், வாதூலர் என்கிறவர்கள், என்ன செய்தார் என்று நிச்சயமாகத் தெரியாத மகரிஷிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுகிறேன். பிராமணனாகப் பிறந்த தோஷம் என்னை அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளத் தூண்டுகிறது. என்னோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள எனக்கு, என் பாரம்பரியத்திற்கு அப்பாற்பட்ட யாரையும் தெரியாதே! தாமஸ் வாயிலாக அவர்கள் முன்னோர்கள் பற்றி ஏதாவது தெரிந்து கொள்ளலாம்; மிரியம் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம். அவள் அம்மா அவளுக்குத் தாவீதுடைய கீதங்கள் பலவற்றைச் சொல்லித் தந்திருக்கிறாள். வேறு பண்பாட்டைப் பிரதிபலிப்பவை என்றாலும் அவைதான். உபநிஷத வாக்கியங்களைப்போல, எவ்வளவு அழகாக இருக்கின்றன!

ஏசு என்கிற மனிதர் தோன்றி யூதர் குலத்தின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ததாக ஸெகியலின் தம்பியும், ஸெகியலும், மிரியமும் சொல்கிறார்கள். இருந்தாலும் ஏசுவை மெஸ்ஸையாவாகவோ, அல்லது தேவகுமாரனாகவோ, யூதர்கள் அங்கீகரிக்கவில்லை என்றும், அதனாலேயே ஏசுவின் பக்தர்களால் யூதர்களின் வாழ்க்கைக்குப் பல தடவைகளிலும் இந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே தீங்குகள் பல விளைந்துவிட்டன என்றும் தெரிகிறது. அது பற்றி முழு விவரங்களும் எனக்குத் தெரியவில்லை. மதம், கொள்கை லட்சியம் இவற்றின் பெயரால் எத்தனையோ நல்ல காரியங்கள் நடக்கின்ற மாதிரி, எத்தனையோ கெட்ட காரியங்களும் நடக்கின்றன. அவற்றையெல் லாம் அளவிட்டு சரிவர அறிந்துகொள்ள முடியவில்லை . சரிவரக் கணித்துப் பாடங்களை கற்றுக்கொள்ள முடிந்தால் மனித குலம் உய்த்துவிடும். எல்லா மதங்களிலுமே சமய தத்துவங்களிலுமே ஒரு முழுச்சரடாக – மனிதகுலம் மேன்மையுற வேண்டும். மனிதன் பூரணமாக வாழ வேண்டும் என்கிற ஒரு லட்சியம் ஊடுருவிக் கிடக்கிறது. அந்தச் சரடை நான் கண்டுகொண்ட மாதிரி தமிழில் அழகாக எடுத்துச் சொல்வேன் என்கிறான் வள்ளுவன். அவனுக்குப் புத்தி சாதுர்யமும் சொல் சாதுர்யமும் இருக்கிறது. அவனே சொல்கிற மாதிரி சொல்லேர் உழவன் அவன்! உழவன் ஏர் பிடித்து மண்ணைப் பதப்படுத்தி விதை விதைத்துப் பயிர் செய்கிறான். வள்ளுவன் சொல் என்னும் ஏர் பிடித்து வார்த்தைகளை விதைத்து அறிவை அறுவடை செய்யப் போகிறவன். அவனால் இன்றைய பிரஜைகளுக்கு மட்டு மின்றி வருங்காலத்தில் பலப்பல தலைமுறையினருக்கும் பயன் உண்டு. என்னால் யாருக்கு என்ன பயன்?

சிவகுமார ராஜகுமாரன் அழைக்கிற மாதிரி ராஜகுருவாகப் போய் வள்ளுவன் காஞ்சியில் தங்கியிருப்பானானால் என் வாழ்க்கையே இங்கு சூன்யமாகி விடும். எனக்கு வேறு ஊன்றுகோல் வேண்டும். அப்போஸ்தலர் தாமஸ் வயதில் என்னைவிட இரண்டு மடங்கு பெரியவர்தான் என்றாலும்...

"அதோ, செங்கோடனே வருகிறான்" என்றான் வள்ளுவன். என் சிந்தனைகளைக் கலைத்து,

செங்கோடனும் இன்னொரு ஆசாமியும் வந்து கொண்டிருந்தனர். இருவரும் இடுப்பில் ஒரே ஒரு துணியைத் தார்ப் பாய்ச்சிக் கட்டிக் கொண்டிருந்தார்கள். அகன்ற மார்பு; மார்பில் மயிர்க் கற்றைகளும், திரண்ட புஜங்களும், கரணை கரணையாகக் கால்களுமாக நல்ல வலுவான ஆசாமிகள் என்று தெரிந்தது. செங்கோடன் நல்ல கறுப்பு; அந்நியன், உடன் வந்தவன், சற்றே வெளுப்பு நிறமாக இருந்தான். வந்தவன் கழுத்தில் ஒரு பட்டுக் கயிற்றில் கட்டிய ஒரு சிலுவை தொங்கியது. வள்ளுவனுக்கும், எனக்கும் ஏதோ விஷயம் புரிகிற மாதிரி இருந்தது. இவன் மலையாளப் பிரதேசத்தைச் சேர்ந்தவன். அப்போஸ்தலர் தாமஸினால் ஏசு மதத்திற்கு மாற்றப்பட்டவன். புயலில் சிக்கிக்கொண்ட அப்போஸ்தலர் பற்றித் தகவல் அறிவதற்காக அவன் மயிலை வந்திருக்க வேண்டும். அவன் அணிந்திருந்த சிலுவையில் ஏசுவின் உருவம் இருக்கவில்லை. பிராமணர்கள் பூணூல் அணிவது போலத்தான் ஏசு மதத்தான் என்பதைக் காட்ட அவன் சிலுவையைக் கழுத்தில் அணிந்திருக்க வேண்டும்.

செங்கோடன் கிட்ட வந்ததும் சொன்னான். "இவர் மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து வருகிறவர். மீனவர் தானாம். கொல்லங்கோடு என்கிற ஊர்ப்பக்கமாம். அன்று நீ கண்டு காப்பாற்ற முயன்ற அந்தப் பெரியவரைத் தேடி வந்திருக்கிறார். உன்னை வரவழைத்து உன்னிடம் இவரைச் சேர்த்துவிட வேண்டும் என்றுதான் சொல்லியனுப்பினேன்.’’

‘‘இவரை நான் ஸெகியல் வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன். உங்கள் பெரியவர் இத்தனை நாளும் மயக்கமாகவே இடந்தார். இன்னும் மயக்கம் தெளியவில்லை . உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை. கவலைப்பட வேண்டாம்" என்று வந்தவருக்குச் சொல்லிவிட்டு, "உன் பெயர் என்னப்பா?" என்று விசாரித்தான்.

"என் பழைய பெயர் ராமுண்ணி. இப்போது பெரியவர் ஞானஸ்தானம் செய்து வைத்தபின் ஜோஸப் என்று சொல்லப் படுபவன். இரண்டையும் சேர்த்து ஊரார் 'ஜோஸப் ராமுண்ணி' என்று சொல்கிறார்கள்" என்றான் வந்தவன்.

செங்கோடன் தனக்கு வேறு வேலையிருக்கிறதென்று போய் விட்டான்.

ராமுண்ணி சொன்னான். "ஐயாவை நானும், என் தகப்பனாரும் தான் படகில் இங்கு அழைத்து வருவதாக இருந்தோம். என் அப்பாவும் சிலுவை அணிந்துள்ளவர்தான். எனக்கு ஏதோ ஜுரம் வந்துவிடவே நான் வரமுடியவில்லை . என் அக்காவின் புருஷனும், என் அப்பாவும் படகு வலித்து வந்தார்கள். மயிலாப்பூர் வரணும் என்றுதான் வந்தார் பெரியவர். நடுவழியில் ஆபத்து ஏதாவது ஏற்பட்டு விட்டதோ என்று எனக்குப் பயம். என் அப்பாவும், அக்கா புருஷனும் என்ன ஆனார்கள் என்றுதான் தெரியவில்லை'' என்றான் ராமுண்ணி.

"ஈஸ்வர சங்கல்பத்தால் அவர்கள் உயிரோடும் இருக்கலாம். இல்லை, அவர்கள் புயலில் கடலுக்குப் பலியாகியும் இருக்கலாம். இவரே பலியானவர் தான் – ஆனால், உலகில் அவர் செய்ய வந்த காரியம் பாக்கியிருப்பதனால் உயிரோடு பிழைத்து வந்தார் என்றுதான் சொல்லவேண்டும்" என்றான் வள்ளுவன்.

"எங்களூரில் நாலைந்து முரடர்கள் ஒரு தடவை இவரை வளைத்துக்கொண்டு புடைத்துக் குத்துயிரும் குலையுயிருமாய்ப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். என் அம்மாதான் பச்சிலை வைத்துக் கட்டித் தேற்றினாள். அவளைக் 'கவலைப்படாதே அம்மா – என் சாவு இங்கு இப்போது இல்லை. இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்கிறது. கீழ்க் கடற்கரையில், ஒரு குன்றின் உச்சியில் வேலால் குத்துண்டு உயிர் துறப்பேன். அதுவரை உயிர் பிரியாது. கரை காணாத பிரதேசத்தில் முன்பின் தெரியாத மக்களிடையேதான் என் சாவு. அதற்குள் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தாக வேண்டும்' என்றார்.

"தன் சாவை எதிர்நோக்கி இவ்வளவு தூரம் வந்தவர் இப்போது செத்தவர் போலவே கிடக்கிறார்" என்றான் வள்ளுவன்.

## அத்தியாயம் 14

அப்போஸ்தலர் தாமஸைப் பற்றி ராமுண்ணியின் வாயைக் கிண்டி எதுவும் அறிந்துகொள்வதற்கு எனக்கு மிகவும் சங்கோஜமாக இருந்தது. வழக்கமாக வள்ளுவனும் ஒன்றாவது ஆசாமியின் வாயைக் கிண்டி இரண்டாவது ஆசாமியைப் பற்றி அறிந்து கொள்கிற சந்தேகாஸ்பத மான காரியத்தைச் செய்யவே மாட்டான். அது அவன் இயற்கைக்கே விரோதமானது.

ஆனால், தாமஸ் பற்றி ராமுண்ணியின் வாயைக் கிண்டுவதில் அவனுக்குச் சங்கோஜம் இருப்பதாகத் தெரியவில்லை. ராமுண்ணி தாமஸ் பற்றிப் பெருமதிப்பு வைத்திருந்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். ராமுண்ணியும் தாமஸுக்குச் சாட்சியாக வந்தவன் என்பதும் – அதாவது தாமஸே ஏசு என்ற தேவகுமாரனுக்கு சாட்சியாக இங்கு வந்து தோன்றியிருப்பது போல – காரணமாக இருக்கலாம். சாட்சிகளை நன்கு விசாரிக்கத்தானே வேண்டும்?

"எத்தனை ஆண்டுகளாக தாமஸைத் தெரியும் உனக்கு என்று மெதுவாக ஸெகியல் – மாளிகை இருந்த திசை நோக்கி நடந்து கொண்டே ஆரம்பித்தான் வள்ளுவன்

"கூனக்குறிச்சிக்குத் தாமஸ் பெரியார் வந்து பத்து கொல்லம் ஆகுது. என் தகப்பனார்தான் முதன்முதலில் அவரால் ஞானஸ்தானம் செய்விக்கப்பட்டவர். எனக்கு அப்போது பன்னிரெண்டு, பதின்மூன்று வயதுதான் இருக்குமுங்க.''

"ஏசு என்கிற ஒரு மனிதரைப் பற்றித் தாமஸ் உங்களிடம் சொன்னாரா?"

"நிறையவே சொன்னார். ஏசு என்பவர் மனிதர்களிடையே மனிதராக வந்தார் என்றும், அவர் கடவுளின் திருக்குமாரர் என்றும், உலகத்தின் பாவச் சுமைகளையெல்லாம் தன் மேல் ஏற்றிக்கொண்டு பாவம் இல்லாத தேவலோகத்தை இங்கே இன்று நிர்மாணிக்க வந்தார் என்றும் சொன்னார். மனிதன் பிறப்பினாலேயே பாவியாக இருக்கிறான். அவன் ஜன்மமே பெண்களை ஆண்கள் நாடும் பாவத்தினாலும், ஆண்களைப் பெண்கள் நாடி அழியும் பாவத்தினாலுமேதான் ஏற்படுகிறது – அந்தப் பாவம் எல்லாம் போகவேண்டுமானால் ஏசுவிடமும், ஏசுவின் தகப்பனார் தேவனிடமும், இருவரையும் ஒன்றுபடுத்தும் பரிசுத்த ஆவியிடமும் நம்பிக்கை வைத்துப் பாவ மன்னிப்புக் கேட்பவன் மக்களிடையே மன்னிக்கப்படுவான்; தேவனின் ராஜ்யத்தின் பிரஜையாவான் என்று சொன்னார். பாவங்களிலிருந்து விடுதலையாக ஒவ்வொருவர் மேலும் புனித நீரைத் தெளித்துத் தாமஸ் ஏற்றுக் கொண்டார்."

ராமுண்ணிக்கு உற்சாகமாகப் பேச வந்தது. சில விஷயங்களை அவன் காதில் வாங்கிக் கொண்டபடி பேசுகிறான் என்பது தெளிவு. அந்த விஷயங்கள் அவன் மனதில் உறைத்தனவா? எந்த மாதிரி அவற்றை அர்த்தப்படுத்திக் கொண்டிருந்தான் என்பது தெரியவில்லை.

அதை நிச்சயித்துக் கொள்வது போல வள்ளுவன் கேட்டான். "தேவன் புரிகிறது. தேவனின் திருக்குமாரன் புரிகிறது. இருவரையும்

ஒருங்கிணைக்கும் பரிசுத்த ஆவி என்றால் புரியவில்லையே!"

"நான் அதிகமாக எதுவும் படித்தவனில்லை. எனக்குப் புரிந்ததெல் லாம் சொல்லுகிறேன். மற்ற விஷயங்களை நீங்கள் அவரிடம்தான் கேட்கவேண்டும். பரிசுத்த ஆவி என்பது இரண்டு தனிப்பட்ட – அங்கொன்றும், இங்கொன்றுமாக உள்ள – தகப்பனையும், தனயனையும் பிணைக்கிற விஷயம். ஏசுவிடம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று தாமஸ் சொன்னார். நம்பிக்கை வைக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. ஒன்று, தேவன் பிரபஞ்சத்தைக் கட்டிப் பிடித்து அது வீணாகிப் போய்விடாதிருப்பதற்காகத் தன் மகனையே கூடப் பிணையாக, துயரங்களை அனுபவிக்க, உலகிற்கு அனுப்பியவன். அனுப்பிவிட்டு அவன் கண்ணை மூடிக்கொண்டு எது எப்படி யானால் என்னவென்று இருந்து விடவில்லை. பரிசுத்த ஆவியை அந்த ஏசுவுக்குத் துணையாக அனுப்பினான் என்று தாமஸ் சொன்னார். மகன், தந்தை, இருவரையும் பிணைக்கிற பரிசுத்த ஆவி என்ற மூன்றிலும், ஏசுவைப் பின்பற்றுபவன் எவனும் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்றார்."

"ம்.. புனிதமான நீரைத் தெளித்து உன்னை ஏற்றுக்கொண்டார் என்றாயே, அது என்ன?" என்று கேட்டான் வள்ளுவன்.

"ஏசுவைப் பின்பற்றுபவனாக ஒருவனை ஏற்றுக்கொள்ளும் முன் அவன் மேல் கைவிரல்களை ஜலத்தில் நனைத்துப் புரோக்ஷித்து விட்டு ஏற்றுக் கொள்வார் தாமஸ். அதற்குப் பெயர் ஞானஸ்நானம் என்று சொல்வார். ஏசுவைப் பின்பற்ற ஒவ்வொருவரையும் – ஆண், பெண், குழந்தை யாராலும் ஜலத்தைப் புரோக்ஷித்துத் தான் ஏற்றுக்கொண்டார். அது ஏசுவே நடைமுறையில் செய்து காட்டிய ஒரு விஷயம் என்றும், ஏசுவுக்கு முன்னோடியாக வந்த ஒருவர் – ஞானஸ்நானி ஜான் என்பவர் – ஏசுவையே ஞானஸ்நானம் செய்வித்துத்தான் அங்கீகரித்தார் என்றும் தாமஸ் சொன்னார்."

"ஏசுவைப் பற்றி வேறு என்னவெல்லாம் சொன்னார் உங்கள் தாமஸ்? முழுவதும் சொல்லு. எனக்கும் கொஞ்சம் விஷயம் தெரியட்டும்" என்றான் வள்ளுவன்.

"இதில் ரகசியம் எதுவும் இல்லீங்க. தாமஸ் செய்தது எதையுமே ரகசியமாகச் செய்யவில்லை. எல்லோர் முன்னிலையிலும், பகிரங்கமாகவேதான் செய்தார். ஏசுவைப் பற்றிப் பல கதைகள் சொன்னார். ஒரு கல்யாணத்திற்கு ஏசு போயிருந்தாராம். கல்யாணத்துக்கு ஏகப்பட்ட கூட்டம் – ஏசுவைப் பார்ப்பதற்குக் கிராமப்புறத்து மக்கள் ஏராளமாகக் கூடிவிட்டார்களாம்.

கல்யாண வீட்டுக்காரர்கள் மிகவும் ஏழைப்பட்டவர்கள். எப்படி வந்திருக்கிற விருந்தாளிகளுக்கெல்லாம் சாப்பாடு போடுவது, மதுவகைகள் தருவது என்று தயக்கத்துடன் இருந்தார்களாம். இதை அறிந்து கொண்ட ஏசு ஒரு குடம் தண்ணீரையும், ஒரு கூடை ரொட்டியையும் கையால் தொட்டுவிட்டு, எல்லோருக்கும் காணும். கொடு' என்று தன் சிஷ்யர் களுக்கு உத்தரவிட்டாராம். குடத்திலிருந்து சாய்க்கச் சாய்க்க மது வந்து கொண்டிருந்ததாம். கூடையில் எடுக்க எடுக்கக் குறையாமல் ரொட்டிகள் இருந்தனவாம். எல்லோரும் சாப்பிட்ட பிறகும்கூடக் குடமும், கூடைகளும் நிறைந்தே இருந்தனவாம்!"

"இது மாதிரிக் கதைகள் நம்ப ஊரிலும் உண்டு. காமதேனு கற்பக விருட்சம்'' என்றான் வள்ளுவன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒரு தடவை கொந்தளிக்கும் கடலில் ஏசு, கடல்மேல், கால் நனையாமல் நடந்து வந்து தன் சிஷ்யர்கள் இருந்த கப்பலில் ஏறி, 'புயலே அடங்கு' என்றாராம். புயல் உடனே அடங்கி விட்டதாம்."

"குரு கூப்பிட்டவுடன் சிஷ்யன் ஆற்றின் மேல் நடந்து வந்தான். அவன் ஆற்றின் ஜலத்தின் மேல் வைத்த ஒவ்வொரு அடிக்கும் ஒரு தாமரை மலர் புஷ்பித்தது என்று நம் ஊரிலும் கதை சொல்கிறார்கள். ம்..... மேலே சொல்லு!''

‘‘இந்த மாதிரிப் பல கதைகள். வெண் குஷ்ட நோய்க்காரனைத் தொட்டு 'உன் குஷ்டம் போய்விட்டது பார்' என்றாராம். உடனே போய்விட்டதாம். இறந்துபோன ஒரு பெண்ணை அவள் தாய்க்காக உயிர்ப்பித்துக் கொடுத்தாராம். குருடனுக்குக் கண்கொடுத்தாராம். இந்த மாதிரிதான் கூட இருந்து பார்த்ததாகப் பல சந்தர்ப்பங்களைச் சொல்கிறார் தாமஸ். அவர் பொய் சொல்லப்பட்டவர் அல்ல என்பது அவரோடு ஒரு நாள் பழகிவிட்டவர்களுக்கும் நிச்சயமாகத் தெரியும்...''

"அதுசரி. ஏசு இந்த மாதிரி அதிசயங்களெல்லாம் செய்து காட்டியவர் என்று சொன்ன தாமஸ் அவர்களே இந்த மாதிரி அதி சயங்கள், ஏதாவது உனக்குத் தெரிய, அல்லது உனக்குத் தெரிந்தவர் களுக்குத் தெரியச் செய்திருக்கிறாரா?" என்று கேட்டான் வள்ளுவன்.

ராமுண்ணி வெகுவாகத் தயங்கினான். தலையைச் சொறிந்தான். ஏதோ சொல்ல விரும்புகிறவனைப்போலவும், விரும்பியதைச் சொல்ல மாட்டாதவன், சொல்ல விரும்பாதவன் போலவும் மென்று விழுங்கினான்.

வள்ளுவன் கேட்டான். "உன் விஷயத்திலே தாமஸ் ஏதோ ஒரு அதிசயம் செய்து காட்டியிருக்கிறார் போல இருக்கிறது – சொல்லலாமா வேண்டாமா என்று தயங்குகிறாய் போல இருக்கிறது. நாங்கள் இருவருமே அவர் நண்பர்கள்தான். தாராளமாகச் சொல்லு. எதுவாக இருந்தாலும் ரகசியமாகவும் வைத்துக் கொள்வோம். அவருக்கு எதிராக உபயோகிக்கவும் மாட்டோம்."

இன்னமும் தயங்கினான் ராமுண்ணி. "அவர் யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று தான் சொன்னார். ஆனால், அது எங்கள் ஊரில் ஊரறிந்த ரகசியமாகப் போய்விட்டது."

"சொல்லு."

"நான் பன்னிரெண்டு வயதுவரை பிறவிக் குருடனாக இருந்தேன் ஐயா. தாமஸ் பெரியவர் வந்து கையைத் தண்ணீரில் தோய்த்து என் கண்களில் தடவிய பிறகுதான் எனக்குக் கண் நன்றாகவே தெரிகிறது. பாவிக்கு அவரிட்ட பிச்சை அய்யா இது" என்றான் கண்களில் நீர்வழிய .

வள்ளுவன் ஒரு விநாடி எதுவும் சொல்லவில்லை.

ராமுண்ணி சொன்னான். "இந்த மாதிரிப் பல காரியங்களைத் தாமஸ் பெரியவர் செய்திருக்கிறார். சாகும் தறுவாயில் இருந்த ஒரு க்ஷயரோக நோயாளியை உயிர்ப்பித்துத் திடகாத்திரனாக நடமாட வைத்திருக்கிறார். என் சித்தப்பாவேதான் அது. குணமாகாது என்று பெரிய பெரிய வைத்தியர்கள் கைவிட்டுவிட்ட நோயாளிகளைப் பார்த்த மாத்திரத்திலே குணப்படுத்தியிருக்கிறார். ஒவ்வொரு சமயத்திலும் இதை வெளியே சொல்லாதீர்கள். இதற்காக யாரும் என்னிடம் வர வேண்டாம்' என்று சொல்வதுடன்..."

“வேறு என்ன சொல்வார்?"

"நான் உங்களைக் குணப்படுத்தவில்லை. உங்களுக்குள் இருக்கும் நம்பிக்கைதான் உங்களைக் குணப்படுத்துகிறது. நான் ஒரு கருவியே தவிர, காரணம் அல்ல என்று சொல்லுவார். அதனாலேயே அவரிடம் பிடிப்பு அதிகரிக்கிற மாதிரி இருக்கும்."

"உண்மைதான். நம்பிக்கையைப் போன்ற மருத்துவன் உலகில் வேறு கிடையாது" என்றான் வள்ளுவன்.

எனக்குக் கேட்கக் கேட்கப் பரவசமாக இருந்தது. கால்கள் பூமியில் பரவாமல், எங்கேயோ, நானே ஆகாயத்தில் சஞ்சரிப்பது போல உணர்ந்தேன். நாங்கள் அவனைப் பார்த்து நகைக்கவில்லை. அதற்கு மாறாக அவன்

சொல்வதை விரும்பிக் கேட்கிறோம் என்கிற ஒரு விஷயம் ராமுண்ணிக்குத் திருப்திகரமாக இருந்தது. தாமஸ் என்பவரைப் பற்றிச் சொல்லாமல் மனத்திற்குள் வைத்திருந்த பல விஷயங்களை வெளியே கொட்டிவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறான் என்று எனக்குத் தோன்றியது. பேச வேண்டியதை யெல்லாம் பேசி முடிக்க வேண்டுமே என்பதற்காகவே வள்ளுவன் நாலு தெரு சுற்றியே ஸெகியலின் மாளிகையை அணுகினான் என்று எனக்குத் தோன்றியது.

"ஏசுவைப் பற்றித் தாமஸ் சொன்ன இரண்டு கதைகள் எனக்கு முக்கியமாக நினைவிற்கு வருகின்றன." என்றான் ராமுண்ணி. "ஒன்று ஆரம்ப காலத்தில், அதாவது, ஏசுவை எல்லோருமே மெஸ்ஸையா என்று அங்கீகரிக்காத போது, அவர் ஒரு நாள் ஜெருசலேம் கோயிலில் இருக்கும் போது, அவரிடம் ஒரு பெண்ணை ஒரு பத்திருபது பேர் கொண்டுவந்து நிறுத்தினார்களாம். 'இந்தப் பெண் கள்ளக் காதலனுடன் சோரம் போனவள். இவளை நமது தருமப்படி கல்லெறிந்து கொல்ல வேண்டும். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்று சொன்னார்களாம். "சோரம் போனது உண்மையா" என்று கேட்ட ஏசுவிடம், அவளைக் கையும் களவுமாகவே பிடித்து விட்டோம் என்றார்களாம். தருமப்படி அவளை நீங்கள் கல்லெறிந்து கொல்லலாம் என்று ஏசு சொன்னதும் எல்லோரும் குனிந்து அந்தப் பெண் மேல் கல்லெறியத் தயாராகக் கல்லை எடுத்துக் கொண்டு நின்றார்களாம். 'ஒரே ஒரு விஷயம்' என்று அவர்களிடம் ஏசு, 'உங்களில் யார் ஒரு பாவமும் பண்ணாதவனோ அவன்தான் அவள் மேல் முதற் கல்லைப் போடவேண்டும்' என்றாராம். ஒவ்வொருவராக யோசித்துவிட்டு தாங்கள் செய்த பாவம் பாவங்கள் நினைவிற்கு வரவே கல்லைக் கீழே போட்டுவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டு போய் விட்டார்களாம். கடைசியில் தனியாக விடப்பட்ட ஏசுவை அந்தப் பெண் பணிந்து, 'நான் என்ன செய்ய?' என்றாளாம். 'நீ உன் வழி போ, மறுபடியும் பாவம் செய்யாதே!" என்று அனுப்பி விட்டாராம்."

"ஓஹோ! இது மிகவும் உத்தமமான விஷயம். இப்படித்தான் புத்தன் அன்று தன்னிடம் வந்து தன் குழந்தை இறந்துவிட்டது என்று அழுத தாயிடம், 'ஊரில் சாவையே அனுபவிக்காத ஒரு வீட்டிலிருந்து எள் வாங்கி உன் குழந்தைக்கு கொடு, பிழைத்து விடும்' என்றாராம். தாய், வீடு வீடாகத் தேடி, சாவில்லாத வீடேயில்லை என்று உணர்ந்து மனத்தைத் தேற்றிக் கொண்டாளாம். அதைவிட இது 'மறுபடியும் பாவம் செய்யாதிரு என்று சொல்கிற அளவில் சிறந்ததுதான்' என்றான் வள்ளுவன். "உன் மனத்தில் நின்ற இரண்டாவது கதை என்ன?"

"கதையல்ல அது. உண்மையாக நடந்தது அது. நானும் உடன் இருந்தேன்" என்கிறார் தாமஸ். ஏசுவிற்குப் பன்னிரெண்டு சிஷ்யர்களில் ஒருவன் மட்டும் – அவன் பெயர் யூடாஸ் என்று சொன்னார் – ஏசுவை யூத அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்து அவர்களை அழைத்து வந்து ஏசுவை அடையாளம் காட்டினானாம்.

அப்படித்தான் நடக்க வேண்டும். நான் பூமியில் பிறந்த காரியம் நிறைவேற – இது என் தகப்பனின் சித்தம்' என்று ஏசு, தெரிந்தும், அந்தத் துரோகியைக்கூட ஒரு சொல் கடிந்து சொல்லவில்லையாம். அவனைக் கடிந்து சொன்ன பீட்டர் என்கிற சிஷ்யனிடம் 'நீ கூட இன்றிரவு கோழி கூவும் முன் மூன்று தடவை 'எனக்கு ஏசுவைத் தெரியாதே, தெரியாதே' என்று சொல்லப் போகிறாய்' என்று கூறினாராம். அப்படியே நடந்ததாம்" என்றான் ராமுண்ணி.

"மஹா உன்னதமான, மனிதாபிமான பல விஷயங்களை அறிவிக்கத் தான் அப்போஸ்தலர் தாமஸ் நம்மிடையே வந்திருக்கிறார். அதில் சந்தேகமில்லை ."

"எனக்கும் இதில் சிறிதும் சந்தேகமில்லை . என்னைப் பற்றிய வரையில் என் வாழ்வையே மாற்றி வைக்க வந்த மகான் அவர்'' என்று உரக்கச் சொல்ல வேண்டும் போல இருந்தது எனக்கு. சொல்லவில்லை.

## அத்தியாயம் 15

ராமுண்ணியைத் தான் ஸெகியலின் மாளிகையில் எத்தனை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள்! இந்த மாதிரி, மனிதனை மனிதனாக மட்டும் பார்த்து உபசரிப்பது என்பது பிராமணர் களிடையே சாத்தியமில்லை. குலம், கோத்திரம் எல்லாம் விசாரித்து, உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டு மனிதனைச் சிறுமைப்படுத்தி விடுவார்கள். முதலில் அவன் பிராமணனாக இருக்கவேண்டும், வீட்டிற்குள் அனுமதிக்கப்படுவதற்கே!

வெகு காலத்திற்கு முன் நான் சிறுவனாக இருக்கும்போது நடந்த ஒரு விஷயம் எனக்கு நினைவிற்கு வருகிறது. எங்கள் வீட்டில் ஒரு சின்னப்பெண் வேலை செய்து கொண்டிருந்தாள். அவள் வெளியில் எல்லாக் காரியங்களையும் சுத்தமாகச் செய்வாளே தவிர, அவளை பூஜை அறையிலோ சமையலறையிலோ விட மாட்டார்கள். சின்ன ஜாதிக் குட்டி, தீட்டு வந்துவிடும், சுத்தமாக இருக்கமாட்டாள். என்றெல்லாம் அம்மா சொல்வாள். அப்பாவும் "அவளை எங்கும் வரவிடாதே! வாசலோடு வேலை செய்து விட்டுப் போகட்டும்" என்று தான் சொல்லுவார். ஒருநாள் அந்தக்

குட்டியின் வீட்டினுள் அப்பா போவதைப் பார்த்துவிட்டு அவருக்கு அங்கென்ன வேலை என்று பின் தொடர்ந்து பார்த்தேன். அவர் செய்து கொண்டிருந்ததைப் பார்க்கவோ, சொல்லவோ எனக்கு நா கூசுகிறது. அந்தப் பெண்ணை கீழ்சாதிப் பெண்ணைக் கட்டிப்பிடித்து... அதை வெளியே சொல்லாதிருக்க வேண்டும் என்றுகூட எனக்குத் தெரியவில்லை. அம்மாவிடமே சொல்லி, நம் வீட்டில் அவளை விடமாட்டோம் என்கிறோம். அவளை அப்பா கட்டிப்பிடித்துக்கொண்டு நிற்கிறாரே? என்று கேட்டேன். அம்மா பதில் சொல்லாமல் அப்பா வந்தவுடன், 'உங்கள் பிள்ளையாண்டான் சொல்வதற்குப் பதில் சொல்லுங்கள்' என்று அப்பாவிடமே சொல்லி விட்டாள். அன்று அப்பா அந்தக் கப்பைச் செய்ததோடு நிறுத்திக் கொள்ளாமல் என்னையும் பின்னி வாங்கி விட்டார். அன்று முதல்தான் எனக்கு அப்பாவிடம் கோபம். நினைக்கும்போது அவரைக் கொன்றுவிட வேண்டும் என்று கூடத் தோன்றுகிறது.

அம்மாவுக்கு எத்தனை துரோகம் இழைத்து விட்டு மனுஷனாக, "பிராமணனாக" நடமாடிக் கொண்டிருக்கிறார்?

நல்ல விஷயங்களைக் கவனித்து நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறோம். ராமனையும் தருமனையும் எண்ணிப் பார்த்துக்கொண்டே, அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு, வாழ்க்கையை நடத்திவிட வேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் காவியங்களே தோன்றியிருக்க வேண்டும். ஆனால், மனுஷ்ய மனமோ தனது உற்றார், உறவினர்களின் சிறுமைகளையேதான் நினைக்கிறது.

என்னைவிட அதிகமான கெட்ட விஷயங்களை வள்ளுவன் தினமும் பார்க்கிறான். ஆனால், அவையெல்லாம் பற்றி அவன் பேசுவதுமில்லை. வளர்த்து விடுவதுமில்லை; சிந்திப்பதும்கூட இல்லை. நல்லதையே உலகில் வளர்க்க வேண்டும் என்று ஒரு தரம் சொன்னான்.

நல்லது என்பதற்கு உதாரணமாக ஸெகியலின் வீட்டார் ராமுண்ணியை வரவேற்று விசாரித்து அவனுக்கு அவர்கள் செய்ய முற்பட்டதைச் சொல்ல வேண்டும். அவன் செம்படவன்; என் வீட்டிற்குள் வரக்கூட அவனை அனுமதிக்கமாட்டார்கள். வீட்டுக்குள் என்ன? பிராமணத் தெருவிலேகூட அவனை அனுமதிக்க மாட்டார்கள். உபசரிப்பது என்பது கொஞ்சம்கூட நடக்காது. ஸெகியல் வீட்டில் அவனை வீட்டில் உள்ளவர்கள், வீட்டிற்கு வந்த உறவினனாக, நடத்தினார்கள். இத்தனைக்கும் அவர்கள் பணக்காரர்கள், இவனோ படகில், நாலில் ஒரு பங்கு மட்டும் சொந்தம் கொண்டாடி, தினம் மீன் பிடித்து, அதை விற்று வயிறு வளர்ப்பவன்.

ஆனால், மனிதன் என்கிற விஷயத்தில் தன் மகனுக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிற மாதிரி அவனை நடத்தினார் ஸெகியல்.

ஓரளவிற்கு அவன் அப்போஸ்தலர் தாமஸின் சிஷ்யன் என்று சொல்லிக் கொண்டதனால் இந்த வரவேற்பு, உபசரிப்பு எல்லாம் என்பது உண்மைதான். மிரியம் அவனிடம் நெருங்கி உட்கார்ந்து கொண்டு, தாமஸைப் பற்றி அவன் அறிந்த கதைகளையெல்லாம் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது என் பொறாமையைத் தூண்டி விட்டது.

"உனக்குக் கல்யாணமாகிவிட்டதா ராமுண்ணி?" என்று கேட்டாள்.

"ஓ! எங்களிலே சின்ன வயசிலேயே கல்யாணம் பண்ணி விடுவார்கள். எனக்கு ஒரு பெண்ணும், பிள்ளையும் இருக்கிறார்கள். பெண்தான் பெரிசு. வயசு எட்டாகிறது" என்றான்.

அதுவரையில் திருப்திதான். அப்பாவைப் போல கல்யாணமானவன் அயோக்கியனாக இருக்க முடியாது என்று ஏதாவது விதியிருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தேன். இதற்குள் மிரியம் அவனை உறவுமுறை வைத்தே அழைத்தாள். "அண்ணியையும், குழந்தைகளை யும் அழைத்து வா அண்ணா!'' என்றாள். அந்தவரையில் திருப்திதான்.

"தாமஸ் மயக்கம் தெளிந்தபின் என்ன சொல்கிறாரோ பார்க்கலாம். அவரே இங்கு இருக்கப் போகிறாரோ அல்லது கோணங்குறிச்சிக்கு வந்து விடுகிறாரோ – யார் சொல்ல முடியும்?''

அப்போஸ்தலர் தாமஸ் திருவான்மியூர் பிள்ளையார் கோவிலில் கருங்கல்லில் அடிபட்டு மயக்கமாக ஸெகியலின் மாளிகைக்குக் கொண்டு வரப்பட்டு, அன்றோடு எட்டு நாட்கள் முடிந்து விட்டன. மண்டையில் பட்ட காயம் நன்றாக ஆறிவிட்டது. உடலில் வேறு எந்த உபாதையும் இல்லை. லிஸ்ஸத், "உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லை, பிரக்ஞை தானே திரும்பி விடும்" என்று சொல்கிறாள்.

மறுநாள் அதிகாலையில் இரவு பூராவும் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்த தாமஸ் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். படுக்கைக்கு அருகில் தரையில் ஒரு கோரைப் பாயை விரித்து அவருக்குக் காவலாகப் படுத்திருப்பவன் போல ராமுண்ணி படுத்திருந்தான். அவன் சொல்லித்தான் அங்கு நடந்ததெல்லாம் பிறருக்கும் தெரியும். "ஏசுவே... என் ஏசுவே!" என்று சொல்லிக்கொண்டே தாமஸ் எழுந்தவுடன், அவனும் விழித்துக் கொண்டு விட்டான். எழுந்தவர் பெரிய அறையின் ஒரு மூலையில் போய் மண்டியிட்டு வெகுநேரம் தலை

குனிந்தபடி பிரார்த்தனை செய்தார். ராமுண்ணி அவருக்கு இடைஞ்சல் இல்லாமல் தன் கோரைப் பாயிலேயே மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தான்.

"என்னுடன் வந்த உன் தகப்பனும் உன் அக்கா புருஷனும் புயலில் படகு உடைந்து கடலில் மூழ்கி விட்டார்கள். நீ எப்போது வந்தாய் ராமுண்ணி?'' என்று கேட்டார் தாமஸ். "இரண்டு நாள் ஆகிறது. கிளம்பிப் போனவர்கள் பற்றித் தகவல் வரவில்லையே, உங்களைப் பற்றிச் செய்தி தெரியவில்லையே என்று நான் படகு வலித்துக் கொண்டு வந்தேன்.''

"இது யார் மாளிகை?"

''உங்கள் பிரதேசத்திலிருந்து வந்து பல வருஷங்களாக இங்கே தங்கிப் பெரும் பொருளீட்டியிருக்கும் ஸெகியல் என்ற ஒரு யூத வியாபாரியுடையது என்று சொன்னார்கள்."

"அப்படியா! புது ஊருக்குப் போனால் எந்த வீட்டில் முதலில் தங்குகிறோமோ அந்த வீட்டிலே இருந்து கொண்டு பிரசாரம் பண்ணக்கூடிய வரையில்தான் அந்த ஊரில் பிரசாரம் பண்ண வேண்டும் என்பது ஏசுபிரானின் கட்டளை. முதல் வீட்டில் தங்க முடியாது போய் விட்டால் அந்த ஊரை விட்டுக் கிளம்பிவிட வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவு.

"அப்படியா! அது தெரியாது எனக்கு. இங்கே தங்கி ஏசுபிரான் பற்றிப் பிரசாரம் செய்வதற்கு ஒரு தடையும் இராது. மிகவும் நல்லவர்கள். அவர்களே ஏசுவை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருப்பவர்கள்தான்" என்றான் ராமுண்ணி.

"அப்படியா! அதுவும் நல்லதுதான் - ஏசு எந்த வழி காட்டுகிறாரோ, பார்க்கலாம்."

"இந்த ஸெகியல் என்பவருக்கு மிரியம் என்கிற பதினாறு வயதில் ஒரு பெண் இருக்கிறாள். முக்கியமாக அவள் ஏசுவைப் பற்றியும் உங்களைப் பற்றியும், இடைவிடாது விசாரித்துக் கொண்டிருக்கிறாள். அவளால் கவரப்பட்டவனாக வாதூலன் என்ற பிராமண வாலிபன் அடிக்கடி உங்களை விசாரிக்கிற சாக்கில் வந்து போய்க் கொண்டிருக் கிறான். இன்னும் எத்தனையோ பேர்.. செங்கோடன் என்று ஒரு மீனவன்.. வள்ளுவன் என்று ஒருவன்..."

தாமஸ் குறுக்கிட்டார். "வாதூலன் என்கிற பெயரும் வள்ளுவன் என்கிற பெயரும் நான் என் மயக்கக் கனவில் கண்டு, கேட்ட பெயர்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?' என்று கேட்டார் தாமஸ்.

"மனிதர்களையெல்லாம் மதிப்பிட எனக்கென்னங்க தெரியும்? இருவருமே என்னிடம் நண்பர்களாகப் பழகுகிறார்கள் என்று சொல்லுவேன். அவ்வளவுதான்.''

"இந்த வாதூலன் மூலமாகத்தான் என் மகாதியாகம் முடிவுறப் போகிறது என்றும், இந்த வள்ளுவன் மூலமாகத்தான் அன்பு வழி என்கிற ஏசு தத்துவம் இங்கே பெருமளவுக்குப் பிரகடனம் ஆகப் போகிறது என்றும் என் கனவில் கண்டேன். ஆனால், அது ஏசுபிரானின் பெயரால் பரவாமல் வேறு பெயரில் பரவும் என்றும், கண்டேன்."

"வாதூலன் மூலம் உங்கள் மகாதியாகம் நிறைவேறப் போகிறது என்பதை நான் நம்பவில்லை. ஏனென்றால் அந்தப் பையன் பரம சாதுவான வாலிபன். ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யமாட்டாதவன் என்று எனக்குத் தோன்றுகிறது."

"தேவகுமாரனான ஏசுவின் சொல்லைப் பின்பற்றி நான் இங்கே வந்திருக்கிறேன். எனக்கு நீயும், மற்றவர்களும் பேசுகிற தமிழ் புரிகிறதே ஏன்? புரிகிறது. மட்டுமில்லை . அதில் பேசவும் முடிகிறதே ஏன்? நான் என்ன யாரிடமாவது பாடம் கற்றுக் கொண்டேனா? முன்பின் கேட்டிருக்கிறேனா? ஏசு சொன்னார்: உலகில் எந்தப் பகுதிக்கு உங்களில் யார் போனாலும் அந்தப் பிரதேசத்து மொழி தானாகவே உங்களுக்கு வந்துவிடும் என்று சொன்னார் – எனக்கு வருகிறது, ஏசுவின் சொல்படி என்பது தவிர, வேறு எப்படி என்று சொல்ல எனக்குத் தெரியாது. ஏசுவும் நல்லவனைக் கெட்டவனாக்க முற்பட்டவர்தான்! கெட்டவர்களையும், தீயவர்களையும் நல்லவராக்க உலகுக்கு அவர் பிதாவினால் அனுப்பப்பட்டவர். எப்படி வாதூலன் என் மகா தியாகத்திற்கு உதவி, சம்பந்தப்படப் போகிறான் – நல்லவனாக இருந்து கொண்டே – என்று பார்க்கலாம்..." என்று எழுந்தார் தாமஸ்.

ராமுண்ணி எதுவும் பதில் சொல்லவில்லை.

தாமஸ், "ஒன்பது நாட்கள் பூராவும் உறங்கிவிட்டேன். இனி உறக்கமோ, மயக்கமோ கூடாது. என் உடுப்புகள் பெட்டியும், என் சிலுவையில் அறையப்பட்ட ஏசுவைத் தாங்கிய ஓலைப் பெட்டியும் வந்திருக்க வேண்டுமே!"

"அதோ இருக்கின்றன'' என்று காட்டினான் ராமுண்ணி. ஓலைப் பெட்டியைத் திறந்து, ஒரு குழந்தையைக் கையில் தாய் எடுப்பதுபோல, சிலுவையில் ஏசு பிரதிமையை எடுத்தார்; அதை இரண்டு விநாடி பார்த்துக்

கொண்டே பெருமூச்சு விட்டார். பின்னர், "இந்தக் கருணாமூர்த்தியையும் எவ்வளவு கொடூரமாக அவருடைய மக்களே சிலுவையில், பெரிய பெரிய ஆணிகளைக் கையிலும் காலிலும் அடித்து, தாகம் என்று சொன்னபோதிலும் எதுவும் தாகத்திற்குத் தராமல் துன்புறுத்தினார்கள்! கடைசியில் ஒருவன் மதுவுக்குப் பதில் காடியைப் பஞ்சில் தோய்த்துத் தந்தான். வலிதாங்காமல் ஏசு 'என் தகப்பனே... என்னைக் கைவிட்டு விட்டாயா?' என்று கேட்டுக் கொண்டே உயிர் நீத்தார்'' என்றார் தாமஸ்.

சிறிது நேரம் கழித்து, "உயிர் நீத்தார் என்று சொல்வதும் பிசகு. அவர் உயிர் நீக்கவில்லை . அவர் இறந்த பிறகு மூன்றாவது நாளே உயிர்பெற்று தன் தகப்பனாருடன் அவர் வலதுபக்கம் உட்காரப் போய் விட்டார். இரண்டு, மூன்று தடவைகள், ஒரு தடவை நாற்பது நாட்கள் சேர்ந்தாற் போல எங்களுடன் அவரும், செத்த பிறகு உயிருள்ளவராக, எங்களைப் போலவே சாப்பிட்டுக் கொண்டும், பேசிக்கொண்டும் இருந்தார். என்னையும் மனிதனாக்கி 'உன்னிடம் பாரத தேசத்தை ஒப்புவிக்கிறேன், போ. தைரியமாகப் போ' என்று இங்கு அனுப்பியது ஏசுதான். இல்லாவிட்டால் சாட்சியாக நிற்கக்கூட எனக்குத் தைரியம் ஏது? அவர் தந்தது தான்."

ராமுண்ணி அவர் பரவசத்தை அறிந்து கொண்டவன் போல பயபக்தியுடன் சொன்னான், "ஏசுவை சிலுவையில் அறைந்தபோது நீங்கள் பக்கத்தில் நின்றுகொண்டு அவரைத் தப்புவிக்க உதவி செய்யவில்லையா?"

"அப்படி எந்த உதவியும் செய்யக் கூடாதென்று எங்களுக்கு உத்தரவிட்டுவிட்டார். யூடாஸ் காட்டிக் கொடுக்க, அவரைக் கைது செய்ய வந்த வீரர்களில் ஒருவனை பீட்டர் என்ற சிஷ்யர்களின் பிரதமர் தன் வாளால் காதில் காயப்படுத்திவிட்டார். பீட்டரை 'வாளை உறையில் போடு' என்று சொல்லிவிட்டு காயப்பட்டு ரத்தம் சிந்த நின்ற வீரனின் காதைத் தொட்டார். அந்தக் காது ஒரு காயமும் இல்லாமல் ஆறி உடனேயே சரியாகப் போய்விட்டது. அதுதான் அவர் சிலுவையில் அறையப்படும் முன் நிகழ்த்திய அதிசயங்களில் கடைசியானது. தான் சிலுவையில் உயிர் துறக்க வேண்டும் – அதைத்தான் தன் தகப்பனான தேவனே விதித்திருக்கிறான் என்று அவரே ஏற்றுக்கொண்டார். மிகவும் அல்பமாகிய என்னையும், அவரையும், ஒப்பிட்டுச் சொல்வது தகாது. இருந்தாலும் நானும் அவரைப் பின்பற்றுவேன் என்பதனாலேயே என் மகாத் தியாகம் இங்கேயே மயிலாப்பூரில்தான் விதிக்கப்பட்டிருக்கிறது என்பதனாலும், அவர் சித்தத்தைப் பின்பற்றியே இங்கு வந்திருக்கிறேன். சின்னத் தியாகங்களாக உன் தகப்பனும், அக்கா புருஷனும் போனதைச் சொல்ல வேண்டும்."

"நானும் என்னைத் தியாகம் செய்து கொள்ளத் தயார். சாமி, கட்டளையிடுங்கள்'' என்றான் ராமுண்ணி.

"அதுவும் அவசியமானால் ஏற்றுக் கொள்ளப்படும்'' என்றார் தாமஸ் கம்பீரமாக. "தன்னை எந்தச் சந்தர்ப்பத்திலும் தியாகம் செய்து கொள்ளத் தயாராக இருப்பவனையே ஏசு தன் சிஷ்யர்களுள் பிரதானமானவர்களாக ஏற்றுக் கொள்கிறார். 'நம்பிக்கையுடன் தியாகம் செய்து உயிரிழப்பவன் சாவுக்குப் பின் தேவனின் உலகில் தேவனுக்குச் சமதையாக வீற்றிருக்கிறான்' என்று ஏசு சொன்னார்."

"தைரியமூட்டுகிற சிந்தனைதான் அது."

"தைரியமா? வாழ்க்கையைச் சாதனையாக்குகிற சிந்தனை அது."

ராமுண்ணி வேறு எதையோ நினைத்துக் கொண்டவனாகக் கேட்டான். "மிரியம் என்கிற பெண் என்னை எப்படியெல்லாம் துளைத்துத் துளைத்துக் கேள்வி கேட்கிறாள் தெரியுமா? 'சாமியே பதில் சொல்ல முடியும் உனக்கு' என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், அவள் கேட்ட கேள்வி எனக்கும் கேட்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஏசுவைச் சிலுவையில் அறைந்து சாகடிக்கும்போது நீங்கள் ஒருவரும் உடன் இருக்கவில்லையா?"

சொல்லிக் கொள்ளவே வெட்கமாகத்தான் இருக்கிறது. ஏசுவின் சிஷ்யர்களேயானாலும் எங்களுக்குப் பக்குவம் போதவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் முனைந்திருந்தோமே தவிர, வேறு எப்படியும் இல்லை. அவர் சிஷ்யர் என்று அகப்பட்டுக் கொண்டால் எங்களையும் சிலுவையில் அறைந்து விடுவார்களே என்று பயம். பிரதான சிஷ்யனாக நாங்களே ஏற்றுக்கொண்ட பீட்டரைக்கூட, விசாரணையைக் கவனிக்கச் சென்ற யாரோ பார்த்து 'நீ ஏசுவின் சிஷ்யனில்லையா?' என்று கேட்டபோது 'எனக்கு அவரைத் தெரியவே தெரியாதே!' என்றார். இப்படி மறுநாள் காலை கோழி கூவும் முன் மூன்று தரம் ஏசுவை அவர் மறுக்க வேண்டி வந்தது. இதையும் முன்கூட்டியே அறிவித்திருந்தார் ஏசு. அவர் அறியாதது என்ன? சிலுவையைத் தப்ப வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தால் சுலபமாகவே தப்பியிருக்கலாம் அவர் தப்ப விரும்பவில்லை .''

"இன்னும் ஒரு விஷயம். ஏசுவின் வாழ்வில் அவர் உயிர் நீத்த பிறகு உயிர் பெற்று நடமாடியதுதானே முக்கியம். அதை விட்டு விட்டு நீங்களே சிலுவையில் உயிர் நீத்ததை முக்கியமாக வைத்து ஏசு புராணமாகச் சொல்கிறீர்களே, அது ஏன்?"

‘‘இது உன் கேள்வியல்ல. அந்தப் பெண்ணின் கேள்வி என்று யூகிக்க முடிகிறது. கெட்டிக்காரப் பெண் அது. சிலுவைக்கு முக்கியம். அது தியாகத்தின் சின்னம் என்பதனால்தான். தியாகங்களின் மகாத் தியாகமாக அமைந்தது அது. ஏசு விளைவித்த அதிசயங்களோ, ஒன்றுமில்லாமல் ஐயாயிரம் பேருக்கும் நாலாயிரம் பேருக்கும் உணவு, மது அளித்ததோ, குருடு, கூன், நொண்டியைச் சரிப்படுத்தியதோ அதனதன் அளவில் முக்கியம், அதிசயம்தான் எனினும் எல்லா வற்றிற்கும் சிகரமாக அமைந்தது சிலுவை விஷயம்தான். சிலுவையைத் தாங்கிக்கொண்டு ஊரெல்லாம் நடந்து சென்றதுபோல ஏசு பகவான் உலகத்துப் பாவங்களை எல்லாம் முதுகில் சுமந்து கொண்டு சிலுவையில் உயிர் நீத்தார். அப்படி உயிர் நீத்ததினால் உலகத்தின் பாவமூட்டை கரைந்தது. 'என்னிடம் நம்பிக்கை வைத்து, பாவங்களை மன்னிக்கும்படி வேண்டுபவனை நானும் என் பிதாவும் மன்னித்து ஏற்றுக் கொள்வோம். உன் பாவங்களையெல்லாம் நான், இதோ பார், ஏற்றுக்கொண்டு விட்டேன்' என்று சொல்லி உயிர் நீத்தார் ஏசு. பிறகு உயிர் பெற்றது முக்கியமானதுதான் எனினும், மனிதனுக்குப் பாவச்சுமை குறைவதென்பது முக்கியமல்லவா? அதனால்தான் ஏசுவிற்குரிய சின்னமாகச் சிலுவை ஏற்றுக் கொள்ளப்படுகிறது."

ஒரு வினாடி தாமதித்து விட்டு தாமஸ் சொன்னார், "இன்னொரு காரணமும் சொல்லலாம். ஏசு நம்மிடம் அன்பு செலுத்துகிறார் என்று ஏசுவை நம்புகிறவர்கள் ஒவ்வொருவரும் நம்ப வேண்டும். அப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருக்கிறார். நம் கஷ்டங்கள் எத்தனை அல்பமானவை என்று ஒவ்வொருவனும் கருதவேண்டும் என்பதற் காகவும் ஏசுவின் சின்னமாகவே சிலுவை ஏற்றுக்கொள்ளப் படுகிறது."

இதற்குள் அறையில் பேச்சுக் குரல் கேட்டு லிஸ்ஸத்தும் மிரியமும் அவர்களைத் தொடர்ந்து ஸெகியலும் வந்தனர். தாமஸ் எழுந்து நின்று உறுதியாக ராமுண்ணியிடம் பேசிக் கொண்டிருப்பதைக் காண அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்த மகிழ்ச்சி அவர்கள் கண்களிலும் முகங்களிலும் தெரிந்தது.

"தாமஸ் பெரியவரே! ஒன்பது நாட்கள் அன்ன ஆகாரமில்லாமல் கிடந்த உடம்பை வருத்தப்படுத்திக் கொண்டு மறுபடி மயக்கத்தில் ஆழ்ந்து விடாதீர்கள்’’ என்றார் ஸெகியல்.

"மயக்கத்திலிருந்து எழுந்து விட்டவன் மறுபடி மயக்கத்தில் ஆழ்ந்துவிட மாட்டான்’’ என்றார் தாமஸ்.

"புரிகிறது" என்றார் ஸெகியல்.

"தாத்தா, எனக்கு அந்த ஏசுவின் கதையைப் பூரணமாக சொல்ல வேண்டும் தாத்தா" என்று கட்டளையிட்டாள் மிரியம்.

"அதற்குத் தானே அம்மா – உன் பெயர் மிரியமா? ஏசுவிற்கு ரொம்பவும் பிடித்தமான பெயர்; அவர் தாயாரின் பெயரே மேரிதான். அவருக்கு வாய்த்த பெண் சிஷ்யைகளில் மிக முக்கியமானவரும் மேரிதான் – நான் அதற்குத் தானே புயலையும் மீறிப் பிழைத்திருக் கிறேன். வனம், வனாந்தரம், கடல், மலை எல்லாம் தாண்டி ஏசுவைப் பற்றி எனக்குத் தெரிந்ததைச் சொல்ல, சாட்சியாக நிற்க வேண்டும் என்றுதானே வந்திருக்கிறேன். உனக்கு மட்டும் இல்லை. உன்னைப் போல யார் வந்து சொல்லு என்று கேட்டாலும் சொல்லக் கடமைப் பட்டிருப்பவன் நான்."

"கதை கேட்க ஆவலாக இருப்பவர்கள், மற்றவர்களும் வந்த பிறகு மாலையில் சொல்லலாம்'' என்றார் ஸெகியல்.

‘‘எனக்கு மட்டும்..."

"ஏசு ஒவ்வொருவருக்கும் தனியாக, அவருக்கு மட்டும் என்று தனியாக, அவரவர் உள்ளத்தோடு பேசுகிறார். பேச்சின் சாரம் என்னவென்றால் 'எனக்கு மட்டும்' என்று ஆரம்பித்து, உலகிற்கு எல்லாம் என்று முடிவதுதான்...''

மிரியம் புரிந்து கொள்ள முயற்சிக்கிறவளாக நெற்றியைச் சுருக்கினாள்.

## அத்தியாயம் 16

எப்பொழுதுமே ஸெகியல் மாளிகையில் வியாபார விஷயமாக வருபவர்களும் பலவிதமான உதவி கேட்டு வருபவர்களுமாகக் கூட்டம் வேறே என்றிருக்கும். இப்பொழுது கேட்கவே வேண்டாம். அப்போஸ்தலர் தாமஸ் ஜெருசேலத்திலிருந்து சுவிஷேசச் செய்தி கொண்டு வந்திருக்கிறார் என்றும் அதைக் கேட்கப் போகிறவர் எல்லோருக்கும் சில சமயம் ஸெகியல் வீட்டு பஞ்சபக்ஷ பரமானம் ருசியாகக் கிடைக்கிறது என்றும் ஊரில் அநாமத்தாகவே செய்தி பரவவே, ஊரில் சாப்பாட்டுக்கில்லாதவர்கள் எல்லோரும் அங்கு குழுமத் தொடங்கி விட்டார்கள்.

தினமும் மதியத்தில் – அல்லது மதியத்திற்கு ஒரு நாழிகை முன் ஆரம்பித்து மதியத்துக்கு ஒரு நாழிகைக்கு அப்புறம் வரையில் தாமஸ், ஸெகியல் மாளிகையின் பக்கவாட்டில் ஆயிரம் பேர் நிம்மதியாக அமர்ந்திருந்து கேட்கக்கூடிய கொட்டகையில் ஏசு பிரசங்கம் செய்தார். முழுமனதுடன் ஏசுவை ஏற்றுக் கொண்டதாகச் சொன்னவர்களுக்கு – அவர்களாக வந்தவர்களுக்கு – புதன்கிழமையன்று பிரசங்கம் முடியும்போது

ஞானஸ்நானம் செய்வித்தார். இந்த ஞானஸ்நானத்தின் தாத்பர்யத்தை ஒவ்வொரு தடவையும் அலுக்காமல் விளக்கிக் கூறினார். மனிதன் அறிவினால் புதுப் பிறவியெடுத்து, மனதினால் செய்த பாவங்களுக்கு ஏசுவிடம் மன்னிப்புக் கேட்டுப் பெற்றுப் புது மனிதனாக வாழ்வதாகப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்வதே ஞானஸ்நானம் செய்து வைப்பதன் அர்த்தம் என்றார்.

சில சமயம் இந்த ஏழை எளியவர்கள் கூட்டத்தில் சில பிராமணர்களும் வந்து போனார்கள். முக்கியமாக வந்தவர்கள் செம்படவர்களும், பூமியில் உழுது நிலம் விளையப் பாடுபடுபவர்களும், தாழ்ந்த ஜாதியினர் என்று கருதப்பட்ட மக்களுமே.

அவர் பேச்சு கேட்பதற்கு சுவாரஸ்யமாக இருந்தது என்பது மட்டுமல்ல; அவர் செய்கைகளும் சுவாரசியமாக இருந்தன. முடம், நொண்டி, குருடு, ஊமை என்று வந்தவர்களை ‘‘உனக்கு நம்பிக்கை இருக்கிறதா?’’ என்று கேட்டு ‘‘நம்பிக்கையிருக்கிறது’’ என்று அவர்கள் சொன்னால், அவர்களை முழு மனிதர்களாக்கினார். ஊமைகள் பேசினர். கண் தெரியாதவர்கள் வந்து பணிந்து கண் தெரிகிறவர் களாகக் கோலையும் உதவிக்கு வந்த பையன், பெண்களையும் வேண்டாமென்று சொல்லிவிட்டுத் தாமாகவே உலகில் உள்ள தெருக்களில் நடந்து சென்றார்கள். கையும் காலும் நடுங்க நடுங்க தலை ஒரு இடத்தில் நிற்காமல், ஆடிக் கொண்டிருந்த மனிதனைச் சாதாரண மனிதனாக ஆக்கித் திருப்பி அனுப்பினார். பிசாசு பிடித்தவர்கள், வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள் என்று வந்தவர்களை "உனக்கு எதுவுமில்லை போ" என்று சொல்லி விரட்டிச் சொஸ்த மாக்கியனுப்பினார்.

மிரியம் அவர் விழித்தெழுந்து மயக்கம் தெளிந்து இந்த மாதிரி அதிசயங்கள் விளைவித்ததற்கு ஒரு வாரம் கழித்து, காலையில், அவரையே தயக்கமில்லாமல் கேட்டுவிட்டாள்.

"ஏன் தாத்தா! உங்களுக்கு இப்படியெல்லாம் வியாதியைக் குணப்படுத்தவும் ஊமை, குருடுகளைச் சரிப்படுத்தவும் சொல்லிக் கொடுத்தது யார்?" என்று கேட்டாள்.

"நான் இதெல்லாம் செய்யவில்லை. என்னை மீறிய ஒரு சக்தி செய்கிறது. தன்னை நம்புகிறவர்கள் யார் முன் வந்தாலும் அவர்கள் தங்கள் நம்பிக்கையினாலேயே குணம் அடைகிறார்கள். நம்பிக்கை யுள்ளவர்களின் நம்பிக்கையை அவர்களே உபயோகித்து குணமடைய ஆவணம் செய்வதற்கு வழி வகுத்துத் தந்தவர் ஏசுதான். அப்போஸ்தலர்கள் பன்னிரெண்டு

பேருக்கும் இந்தத் தன் சக்தியைத் தேவகுமாரன் பகிர்ந்து அளித்தார்'' என்றார் தாமஸ்.

''இந்துக்களிலும், யூதர்களிலும் நம்பிக்கையுள்ளவர்கள் இல்லையா? மாரியம்மன், கபாலி, வேங்கடாசலபதி, யுஹெவோ என்று நம்பித்தான் பலரும் செயல்படுகிறார்கள். அவர்கள் மட்டும் கூன், குருடு, முடமாகத் தொடர்ந்து இருப்பானேன்?'' என்று கேட்டாள் மிரியம்.

"மகளே! இந்த அதிசயங்கள் ஒன்றும் முக்கியமல்ல. ஏசுவிடம் நம்பிக்கை வைப்பதும் அன்பினால் முழு மனிதனாவதும்தான் முக்கியம்'' என்றார் தாமஸ்.

"அதுதான் எனக்கும் தோன்றுகிறது. அதிசயங்கள் விளைவிப்பவர் என்று உங்களுக்குப் பெயர் வந்து விட்டால், பிறகு நீங்கள் சொல்வதை யாருமே காதில் வாங்க மாட்டார்களே!''

"அதுவும் உண்மைதான். ஏசு சொன்னார் – உன்னிலும் சின்னவர்கள் உலக அனுபவம் இல்லாதவர் வாயிலாக உனக்கு உண்மைப் புலப்படும் என்று சொன்னார். எனக்கு இந்த உண்மையைப் பற்றி மிகவும் மகிழ்ச்சி. அதிசயங்கள் நிகழ்த்துவதைத் தெரிந்தே கட்டுப் படுத்திக் கொள்கிறேன். ஆனால், சக்தி இருக்கும்போது குருடன், நொண்டி, வியாதியஸ்தன் என்று பரிதாபமாக நிற்கும்போது எதுவும் செய்யாமலிருந்துவிட மனம் இடம் தருவதில்லை. அதுதான் கஷ்டமாக இருக்கிறது. ஒருவரிடமும் சொல்லாதே என்று ஏசு பகவான் சொல்லுவார். ஆனால் கால் பெற்றவன், கண் பெற்றவன், நோய் குணமாகப் பெற்றவன் பிறரிடம் சொல்லாமலிருப்பானா? செய்தி பரவி விடுகிறது."

அப்போஸ்தலர் தாமஸிடம் முதன்முதலில் அந்தப் பிரதேசத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது மிரியம்தான். தாய், தந்தையர், சகோதர சகோதரியர் அனுமதி பெற்றே அவள் ஞானஸ்நானம் பெற்றாள். கழுத்தில் தங்கத்தினால் செய்த சிலுவையைத் தான் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்துவிட்ட பிறகு அடையாளமாக அணிந்து கொண்டாள். அப்போஸ்தலருக்கு, பிரசங்கம் செய்வதற்கும் மற்றும் ஞானஸ்நானம் செய்விப்பதற்கும் மற்ற காரியங்களுக்கும் வெகுவாக உதவியது அவள்தான்.

மிரியத்திற்கு தாமஸ் பெரியவர் மயக்கம் தெளிந்து எழுந்தது முதல் ஒரே கவலை. அவர் மயக்கமாகக் கிடந்த நாட்களெல்லாம் காலை, மாலை இரண்டு வேளையும் வந்து விசாரித்துப் போய்க் கொண்டிருந்த வாதூலனையும், வள்ளுவனையும், அவர் மயக்கம் தெளிந்த நாள் முதலாகக்

காணவில்லை. தாமஸ் மயக்கத்திலிருந்து எழுந்ததற்கு மறுநாள் அவள் அக்கிரஹாரத்திற்குப் போய், தான் அதற்காக வந்ததாகக் காட்டிக் கொள்ளாமல் விசாரித்தாள். கிழவர் தாமஸைப் பற்றியும், தான் ஏசு கிறிஸ்துவின் மதத்தின் சேர்ந்துவிட்டது பற்றியும், சொல்லிவிட்டு, வாதூலன்தான் அவரைக் காப்பாற்றியது என்றும் பேச்சோடு சொன்னாள். வாதூலன் பத்து நாட்களுக்கு வள்ளுவனு டன் காஞ்சிபுரம் போயிருப்பதாக, அங்கு இருவரும் பல்லவ ராஜகுமாரன் சிவகுமாரனுடன் அவர் அதிதியாகத் தங்கியிருப்பதாக வும் வாதூலன் தாயார் சொன்னாள். மிரியத்துக்கு வேதனையாக இருந்தது. வாதூலனும் ஏசு கிறிஸ்துவின் பக்தனாகித் தன்னை மணக்க முன் வரலாமோ என்று மிரியத்துக்கு ஒரு யோசனை.

சட்டென்று பேச்சு தாமஸைப் பற்றி இருக்கும்போது "நீங்களும் ஒரு நாள் வந்து கேளுங்களேன். பல விஷயங்களில் மனதிற்கு இதம் தருவதாக இருக்கும் அவர் பேச்சு'' என்றாள்.

"எப்படியம்மா முடியும்? என் வீட்டை விட்டுக் கிளம்பினால் நான் என்ன செய்கிறேன் என்று கண்காணிக்க ஆயிரம் பேர்."

‘‘இந்த ஆயிரம் பேரும் உங்கள் புருஷனைக் கண்காணிக்காமல், கண்காணித்தாலும் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுகிறார்களே!" என்றாள் மிரியம் கபடில்லாமல்.

"பெண்ணாகப் பிறந்தவர்களுக்கு, அதுவும் பிராமணர்களிடையே பெண்ணாகப் பிறந்தவர்களுக்குக் கட்டுப்பாடு அதிகம். அதைமீறி எதுவும் செய்ய முடியாது. ஆபத்துதான். ஏதாவது செய்தால் சமூகமும் கைவிட்டு விடும், புருஷனும் கைவிட்டு விடுவான். அந்தரத்தில் நிற்க வேண்டியதுதான்.

"நீங்கள் தாமஸை சந்தித்து அவர் பேசுவதைக் கேட்டால் உங்கள் மகன் வாதூலன்கூடச் சந்தோஷப்படுவார் என்று தோன்றுகிறது." என்றாள் மிரியம்.

‘‘அப்படிக் கேட்கவேண்டும் என்கிற பொசிப்பு இருந்தால் நிச்சயம் நடக்கும்; பார்க்கலாம் மிரியம்" என்றாள் வாதூலனின் தாயார்.

மிரியம் அப்போஸ்தலர் தாமஸின் முன், தன் தகப்பன் ஸெகியலிடம், வள்ளுவனும், வாதூலனும் காஞ்சிபுரத்திற்கு, பல்லவ ராஜகுமாரன் அதிதிகளாகத் தங்கப் போயிருப்பதைத் தெரிவித்ததும் அவருக்கு அந்தச் செய்தி ஏற்கனவே தெரியும் என்று தெரிய வந்தது. தாமஸ் மயக்கம் தெளிந்து எழுந்தவுடனே, செய்தியை அறிவிக்க வள்ளுவன் வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார். அவருக்கு அப்போஸ்தலர் தாமஸைப் பற்றித் தன்

சிந்தனைகளை உருவாக்கிக்கொள்ள வள்ளுவன் உதவுவான் என்று தோன்றிற்று. அதற்காகவே, சுயநலத்துடன்தான், ஆளனுப்பினார். அவன் ஊரிலில்லாது போனது அவருக்குப் பெரிய ஏமாற்றம்தான். பத்து நாளில் வந்துவிடுவான் வள்ளுவன் என்று அவன் அம்மா சொன்னாள். வாசுகியும் போகயிருந்ததாகவும் போகவில்லை என்றும் தெரிந்தது.

ஸெகியல் காஞ்சிபுரத்திற்கு அப்போஸ்தலர் தாமஸ் பற்றிய செய்தியைச் சொல்லியனுப்பியிருந்தார். ராஜகுமாரனின் அதிதி களாகத் தங்கியிருந்தவர்களைக் காண அப்படியொன்றும் சிரமம் இராது. நல்ல ஆசாமியாகத்தான் பார்த்து அனுப்பியிருந்தார்.

"வாதூலனும் வள்ளுவனும் நாலைந்து நாட்களிலேயே வந்து விடலாம்'' என்றார் ஸெகியல் மிரியத்திடம்.

அந்தப் பெயர்கள் காதில் விழுந்தவுடனே இரண்டு தரம் ''வாதூலன்! வாதூலன்!" என்று சொல்லிக் கொண்டார் தாமஸ்.

"என்ன தாத்தா? அந்தப் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா நீங்க ள்..."

''மயக்கமாகிக் கிடந்தபோது என் கனவில் என்னிடம் வந்து 'உங்கள் வருகைக்காகத்தான் காத்திருக்கிறேன். என் பெயர் வாதூலன்' என்று ஒருவன் சொன்னான். நான் பதிலுக்கு ஏசு என் மனதில் தோற்றுவித்த வார்த்தைகளைக் கூறினேன். 'நானே உன்னைத் தேடித்தான் மயிலாப்பூர் வந்திருக்கிறேன்' என்று சொன்னேன். வாதூலன் என்று பெயர் கேட்டதும் அது எனக்கு நினைவிற்கு வந்தது' என்றார் தாமஸ்.

"அப்படியா? அவருக்காக இங்கே வரும்படிச் செய்ய அப்படியொன்றும் அவர் பெரிய மனிதரில்லையே!" என்றாள் மிரியம்.

"ஏசுவின் முன் யாரும் பெரிய மனிதர், சின்ன மனிதர் என்று இல்லையம்மா. எல்லோரும் ஒரே நிறைதான்" என்றார் தாமஸ்.

"நீங்கள் சொல்வதை அறிவினால் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால், உணர்ச்சியில், சாதாரண நடத்தைகளில், உலகப் போக்குகளில் அதை – எல்லோரும் சமம் என்பதை – நடைமுறையில் கொண்டு வருவது சிரமமான காரியம்தான்.''

"அந்தச் சிரமமான காரியத்தைச் சாத்தியமாக்குவதற்காகவே ஏசு அவதரித்தார். என்னைப் போன்ற எழுதப் படிக்கக்கூடக் கற்றுக் கொள்ளாத ஒரு ஆசாமியைத் தேர்ந்தெடுத்துக் கண்காணாத் தேசத்திற்குப் போய் அவர்கள் மொழியில் என் வருகையைப் பிரகடனப்படுத்து' என்று

அனுப்பியது இந்த அதிசயத்தை நிலை நிறுத்தத்தான். ஏசு நிகழ்த்திய அதிசயங்களிலெல்லாம் அதிசயமானது இதுதான். எல்லோரும் தெய்வத்தின் முன் சமம். யாரும் யாருக்கும் ஏற்றமும் இல்லை; தாழ்வும் இல்லை; என்றும் தேவனின் சாம்ராஜ்யத் தில் யாருக்கும் பணத்துக்காகவோ, பதவிக்காகவோ பிறப்பினாலோ உயர்வு, பெருமை கிடையாது என்றும் சொல்லவே ஏசு அவதரித்தார்."

"அப்படிச் சாத்தியமாகி விடுமானால் அதைவிடப் பெரிய விஷயம் உலகில் இருக்கவியலாது" என்றார் ஸெகியல்.

"முதலில் ஏசு தன் கொள்கைகளை யூதர்களுக்கு மட்டும்தான் – யூத குலத்தில் வந்த மெஸ்ஸையா என்றே தன்னைக் கருதிக் கொண்டிருந்தார். ஆனால், தேவனின் சித்தம் வேறாய் இருந்தது. 'உன் வாயிலாக நான் சொல்லப்போகிற விஷயம் உலகுக்கெல்லாம் பொதுவான மறையாக வேண்டும். அதற்குத் தகுந்த வழியில் உன் அப்போஸ்தலர்களைத் தயார் செய்து எல்லா இடத்துக்கும் அனுப்பு. எந்தெந்த ஊர்களை அவர்கள் அடைகிறார்களோ அந்தந்த ஊர் மொழி அவர்களுக்குத் தானாகவே, என் கிருபையால், பேசவரும். ஏசு என்கிற சுவிசேஷத்தை உலகில் பல பகுதிகளிலும் – யூதர்களுக்கு அப்பாற்பட்ட மக்களுக்கிடையேயும், பரப்பும் சக்தியாக உன் அப்போஸ்தலர்கள் விளங்க வேண்டும் என்று எனக்குத் தேவன் உத்தரவிட்டதால், தேவகுமாரன் சிலுவையிலே அறையப்பட்டு இறந்து எழுந்த பின் எங்களிடம் – நாங்கள் பதினொரு பேர் கூடியிருக்கையில் – தெரிவித்தார்.

பின்னர், எங்களை விட்டு ஏசுவைக் காட்டிக் கொடுத்து விட்டுத் தற்கொலை செய்துகொண்டு உயிர் நீத்த யூடாஸுக்குப் பதில் சீட்டுப் போட்டு வேறு ஒருவனைப் பன்னிரெண்டாவது அப்போஸ்தலனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம். எங்களிடையே சீட்டுப் போட்ட போது, என் பங்குக்கு இந்தியா என்று வந்தது. முதலில் அந்தத் தூரதேசத்திற்குப் போக, வர எனக்கிஷ்டமில்லை. மறுத்துப் பார்த்தேன். ஏசுவே என் முன் தனியாகத் தோன்றி, 'என்னைப் போலவே நீயும் பிரமாணம் எய்துவாய். அது இந்தியாவில்தான் நிறைவு பெறும். போ" என்று உத்தரவிட்டார். கால்நடையாகவே கிளம்பினேன். கிளம்பும் முன் லூக்கா என்கிற சிஷ்யன் – அவன் ஏசுவின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதிக் கொண்டிருந்தான் – என்னை விடப் பத்து மடங்கு நம்பிக்கையிலும், செயலிலும், தியாகத்திலும் பெரியவன் – எனக்கு மரத்தில் தீட்டிய ஒரு அழகிய படம் தந்தான். அந்தப் படத்தில் ஏசுவின் தாயார் மேரியையும், அவள் கையில் ஏசுவை ஒரு சிசுவாகவும் தத்ரூபமாகத் தீட்டியிருந்தான். அந்த மாதிரி பத்துப் படங்கள்

தீட்டி அவன் தன்கூட அப்போதிருந்து வந்த அப்போஸ்தலர்களுக்கும் தந்தான்... அடடா!...'' என்று ஏதோ திடீர் சிந்தனையில் ஆழ்ந்தார் தாமஸ்.

"என்ன தாத்தா?" என்று மெல்லிய குரலில் விசாரித்தாள் மிரியம்.

"அந்தப் படத்தை என்னை விட்டுப் பிரியாமல் வைத்திருந்தேன். இப்போது அதைக் காணவேயில்லை!"

"கடலில் புயலில் போயிருக்குமோ!"

"ஏசுவின் தாய் மேரி என்னை அப்படி அனாதையாக விட்டுப் போயிருக்கமாட்டாள்; போகவே மாட்டாள்; நான் மயக்கமாகக் கிடந்த இடத்தில் போய்ப் பார்த்தால் ஒருவேளை கிடைக்கலாம்."

"இத்தனை நாட்கள் கழித்தா?"

"எத்தனை நாட்கள் ஆனால், என்ன? உண்மை அழியாது. உள்ளது எப்படியும் கிடைக்கும். அந்த மிரியத்தை விட்டு விட்டேனேயானால் நான் ஏசுவின் காரியங்களைச் செய்யவே லாயக்கில்லாதவன். அதை மறந்துவிட்டதற்குப் பிராயச்சித்தமாக நான் மூன்று நாள், தண்ணீர் தவிர வேறு எதுவும் அருந்தாமல், உபவாசம் இருந்து மூன்று நாளும் உறக்கமில்லாமல் பிரார்த்தனை செய்வேன் – ஏசுவிடமும், அவர் தாயாரிடமும் மன்னிப்பு வேண்டி. அதன் பிறகு திருவான்மியூரா – அங்கே போய்ப் படத்தைத் தேடிப் பார்ப்போம்...." என்றார் தாமஸ்.

"முதலில் தேடி, படம் கிடைத்த பிறகு உபவாசம் இருக்கலாமே" என்றார் ஸெகியல்.

"தவறு செய்துவிட்டு தவறு என்று உணர்ந்தவுடன் உபவாசம் இருந்து பிரார்த்தனை செய்வதைத் தள்ளிவிட்டு, பிறகு என்று இருப்பது சரியல்ல. உபவாசம் இன்று முதல் தொடங்கும். அகண்ட பிரார்த்தனையும் என்னைப் பொறுத்தவரை, உடனேயே தொடங்கும். இன்று முதல் பிரசங்கங்களோ, மற்றபடி அதிசயங்களும் நிற்கட்டும். அதுவும் மிரியம் சொன்ன மாதிரி நல்லதற்குத்தானே!''

"இந்த வயசில் மூன்று நாள் உபவாசமும் தூங்காதிருப்பதும்...''

"தினமும்தான் சாப்பிடுகிறோம் – தினமும்தான் தூங்குகிறோம். மூன்று நாட்கள் என்பது பெரிய விஷயமல்ல. நாற்பது நாள்கூட ஊண் உறக்கமில்லாது மனிதன் இருக்க முடியும் அவசியமானால்....!

அவர் உறுதியைக் கண்டு ஸெகியலுக்குப் பயமாகவே இருந்தது. ஏதோ படமாம்! படத்தைத் தொலைத்துவிட்டதற்கா? அல்லது இத்தனை நாள் அதைப் பற்றி மறந்து விட்டதற்கா? கட்டாயப் பிராயச்சித்தமாம்! அதற்காகப் புயலில் தொலைந்துபோன – எத்தனையோ நாட்களுக்கு முன் தொலைந்துபோன – படம் கிடைத்துவிடும் என்கிறார். என்ன நம்பிக்கை இது! எங்கேயாவது அவரே ஒளித்து வைத்துவிட்டு, இப்போது கிடைத்துவிட்டது என்று இன்னொரு அதிசயத்திற்கு அடிகோலுகிறாரோ?

இந்த மாதிரிச் சிந்தனைகள் தனக்குத் தகாது என்று எண்ணினார் ஸெகியல்.

யூதர்கள் காலங்காலமாக இந்த மாதிரி அதிசயங்களிலும், அற்புதங்களிலும் நம்பிக்கை வைத்துத்தான் வந்திருக்கிறார்கள். பல காரியங்கள் இல்லை' என்று மனிதப் புத்திக்கு எட்டினாலும் அதே காரியங்கள் பலவும் 'உண்டு' என்று நம்பிக்கையினால் மட்டும் ஸ்தாபித்து விடுபவர்கள் அவர்கள். அதற்கு அனுசரணையாக அவர்கள் தங்கள் கடவுளைக்கூட ஒத்துழைக்க வைத்து விடுவார்கள்.

யூதர்கள் மட்டும்தானா? ஸெகியல் திரை கடலோடித் திரவியம் தேடியது மட்டுமில்லை . உலக அனுபவமும் ஏராளமாகப் பெற்றிருக்கிறார். நாசரேத்தில், அரேபியாவில், சில காலம் சீனாவில், இப்போது இந்தியாவில் என்று பலதரப்பட்ட மனிதர்களைச் சந்தித்திருக்கிறார். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், உயர்த்தப்பட்டவர் கள், தாழ்த்தப்பட்டவர்கள், அறிவில்லாதவர்கள், அறிவுள்ளவர்கள் – என்று பலதரப்பட்ட மனிதர்களைப் பார்த்திருக்கிறார். ஒவ்வொரு வருடைய வாழ்க்கைக்கும் ஆதாரமாக ஒரு நம்பிக்கை அமைந்திருக் கிறது. தேவர்கள், அசுரர்கள், நல்லது, தீயது என்று பாகுபாடு செய்து கொண்டார்கள். கடவுளே இல்லை என்று சொல்கிற நாத்திக வாதிகளுக்கும்கூட அடிப்படையில் வாழ்க்கை சரிவர அமைய ஒரு நம்பிக்கை வேண்டியதாக இருக்கிறது.

ஆனால், ஒருங்கே எல்லாக் குலங்களும் ஒரே நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதில்லை. வேறுவேறு நம்பிக்கைகளை கொண்டு 'என் தெய்வமே பெரியவர், என் தெய்வமே பெரியவர்' என்று இல்லாத கற்பனைகள் செய்துகொண்டு சண்டை பிடித்துக் கொள்கிறார்கள்.

வள்ளுவன் ஒன்று சொன்னான். "மனிதர்களைப் பற்றித் தெரிந்துகொண்ட பின் தெய்வங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். மனிதர்களைப் பற்றிய நம் அறிவே பூரணமாக இல்லை. தெய்வங்களைப் பற்றி அரைகுறைக் கவலைகள் படுவானேன்?" என்றான்.

உலகில் வாழ்வதற்கு என்று ஒரு தரும நெறியையும், ஒரு அன்பு வழியையும் கண்டு கொண்டுவிட்டால் மனிதனுக்கு வேறு எதுவும் தேவையில்லை. சமயச் சண்டைகள், பூசல்கள் எல்லாம் ஒதுங்கிவிடும். ஒவ்வொரு செயலிலும் மனிதன் தன் அன்பையே வளப்படுத்த வேண்டும். பிறரிடம் தனக்குள்ள அன்பை வெளிப்படுத்த வேண்டும். அதேபோல நியமங்களைத் தானாகவே விதித்துக்கொண்டு அத்தருமங்களை அவற்றின் எல்லைவரை பின்பற்ற வேண்டும். மற்றபடி, பொறி இன்பங்களில் ஈடுபட்டு அவற்றிற்கு அடிமைப்படக் கூடாது. இல்லறம் ஆனால், நல்ல மனைவி மக்களுடன் இருக்க வேண்டும். துறவறமானால் உலகைப் பூரணமாகத் துறந்தவனாக ஆசாபாசங்கள் இல்லாமல் இருக்கவேண்டும். சுலபமாக வாழும் வழிகள் இவை, என்றான் வள்ளுவன்.

ஸெகியல் தன் மனத்தில், வள்ளுவன் பல சமயங்களில் சொன்ன பல விஷயங்களை எண்ணிப் பார்த்தார். "எழுத்தறிவு, கல்வி என்றெல்லாம் தானாகச் சிரமப்பட்டுக் கற்றுக் கொண்டவன்தான் அந்த வள்ளுவன். சின்ன வயதுதான், என் வயதில் பாதிகூட இல்லை . என் உலக அனுபவத்தில் ஒரு கால்வாசிகூட அவனுக்குக் கிடையாது. எங்கிருந்து வந்தது அவனுக்கு இந்த ஞானம் எல்லாம்! அவனுக்கிருந்ததை அறிவு என்று சொல்லிக் குறைக்கக்கூடாது. அது பூரணமான ஞானம். அவர் அவனையே ஒரு தரம் கேட்டார். "எழுத்தறிவில்லாத எழுதப்படிக்கத் தெரியாத என் தாயார் சொல்லும் பழமொழிகளிலிருந்துதான் என் ஞானம் வருகிறது" என்றான். "அதுதான் மண்ணுக்கு மிகவும் உகந்த ஞானமாக இருக்கிறது.’’

எதிரிலிருந்த அப்போஸ்தலர் தாமஸ் பற்றியும் ஸெகியல் சிந்திக்காமல் இல்லை . "இவர் பின்பற்றும் ஏசுநாதர். இவர் சொல்வதிலிருந்தே கவனித்தால்கூட மகாத் தியாகம் என்கிற துன்பப்பட்டு உயிர் துறக்கிற சித்தாந்தத்தையே கொண்டவராகத் தோன்றுகிறார். ஏழைகளையும், தாழ்ந்தவர்களையும் உயர்த்து வதற்காகவே அவதரித்ததாக ஏசு கூறியதாக இவர் கூறுகிறார். ஏழைகளும் தாழ்த்தப்பட்டவர்களும் உலகில் அதிகம்தான். பிறர் – பெரும்பாலோர் உழைப்பைக் கொண்டே உலகில் பல காரியங்கள் நடைபெறுகின்றன. அது சரியல்லதான் என்றாலும் உலகில் ரொட்டிக்கு மட்டும் தேவையில்லை. வேறு மேன்மையாகக் கருதப்பட வேண்டிய பல உள்ளன என்றாலும், அடிப்படையாக ரொட்டியும் தேவைப்படுகிறதே! ரொட்டி மட்டும் போதுமா என ஏசு கேட்டதாகத் தாமஸ் சொல்கிறார். ரொட்டி தேவை என்று வைத்துக் கொண்டால் அந்த ரொட்டி சாத்தியமாவது பலர் உழைப்பினால்தான். வியாபாரம் பொருளீட்டுகிறது. வியாபாரம் செய்யப் பொருட்கள் பலவிதப்பட்ட கைவினைகளால் ஏற்படுகின்றன. உழைப்பவர்களை உயர்த்துவது இப்ப சக்தியாகச்

சாத்தியமில்லை. ஆனால், உழைப்பினால் உயர முடியும் என்று பலரும் நம்புகிறார்கள். வள்ளுவன் உழைப்பினால் சாதியையும் வென்றுவிடலாம் என்கிறான். ஆனால், அவன் இன்னொன்றும் சொல்கிறான். உலகில் ஏர் பிடிப்பவர்கள் தான் உயர்ந்தவர்கள்; அவர்களில்லாவிட்டால் உலகில் உணவே இராது. மற்றவர்கள், துறவிகள், வியாபாரிகள், அரசர்கள் எல்லோருமே ஏர் பிடிப்பவனைப் பின்பற்றுபவர்கள்தான் என்று அன்று சொன்னான். எவ்வளவு உண்மையான விஷயம் அது! உலகம் முழுவதுமே உணவுக்கு ஏர் பிடிப்பவனை நம்பித்தானே இருக்கிறது. அதை ஏன் மறந்துவிடுகிறோம்? என்று யோசித்தார் ஸெகியல்.

அவருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. வள்ளுவனையும் முழுதும் நம்பலாம் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால், வள்ளுவன் இந்தியர்களால் தாழ்ந்த குலத்தவனாகக் கருதப்பட்டவன். தாமஸை நம்புவதும் சரியான காரியம்தான். அவர் புது விஷயங்கள். பலவற்றைச் சொன்னார். எவரையும் ஆழ்ந்து சிந்திக்க வைக்கும் விஷயங்கள் வள்ளுவனின் கருத்துக்கள் சிந்தனையின் முடிவாகவும் தாமஸின் கருத்துக்கள் சிந்தனையின் ஆரம்பமாகவும் அவருக்குத் தோன்றின. இந்த வேறுபாடு தானாகக் கற்பித்துக் கொண்டதா? உண்மையிலேயே சரியானதுதானா?

யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது?

## அத்தியாயம் 17

வள்ளுவனுடன் காஞ்சிபுரம் போவதற்கு அப்பா என்ன சொல்வாரோ என்று எனக்குப் பயம். ஏற்கனவே அவனோடு நான் ஊர் சுற்றிக்கொண்டு என் பிராமணத்துவத்தை இழந்து கொண்டிருப்ப தாக அடிக்கடி சொல்லிச் சண்டை பிடிக்கிறார். என்ன பிராமணத் துவமோ – அது, தெரியவில்லை. என்னிடம் இல்லாது போய்விட்ட அந்தப் பிராமணத்துவம்தான் எது என்று எனக்குத் தெரியவில்லை.

பிறர் மனை விழைவதையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்ட என் தகப்பனாரைவிட, தன் மனத்தினால் எல்லாப் பெண்களையும் சகோதரிகளாகவும், தாய்மார்களாகவும் கருதுகிற வள்ளுவன் எவ்வளவோ தேவலை என்று எனக்குத் தோன்றியது. நல்ல வேளையாக நான் கிளம்புகிற சமயத்தில் வெங்கடராம தீட்சிதர் "சிவ சங்கரா – கேட்டாயா இந்த அநியாயத்தை'' என்று ஊர் வம்பு பேச வந்துவிட்டார்.

அம்மாவிடம் சொல்லாமல் போகவேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. அம்மாவிடம் விஸ்தாரமாக விஷயத்தைச் சொன்னேன்.

விஷயம் இது தான்.

பல்லவர் குலக்கொழுந்தான சிவகுமார மகாராஜாவே நேரில் வந்து காஞ்சிபுரத்தில் வித்வத் சதஸ் கூடுவதாகவும், அதில் தனது குறளின் ஆரம்பப் பகுதிகளை வள்ளுவன் அரங்கேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நான் இதுவரையில் சிவகுமார மகாராஜாவைப் பார்த்ததில்லை. படாடோபம் மற்றும் அந்தஸ்து பாராட்டுவது, ஆள், காவல், அமர்க்களம் என்று எதுவும் இல்லாமல் மிகவும் சாதாரணமாக என்னையும் வள்ளுவனையும் போலவே இருக்கிறார். வாள்வித்தை, குதிரையேற்றத்தில் எல்லாம் நல்ல பயிற்சியுள்ளவர் என்று கூடவந்திருப்பவர் சொல்கிறார். மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவான்மியூர் முதலிய இடங்களெல்லாம் திருவொற்றியூர்கூட அவர் ஆட்சிக்கு உட்பட்டவைதான். அவர் தாத்தா பாண்டி நாட்டில் சேனாதிபதியாக இருந்தவராம். வடக்கேயிருந்து யாரோ ஒரு கொடுங்கோலனுடன் சண்டையிட்டுக் கொண்டு, அந்த மகாராஜா சொல்வது பிடிக்காமல், அவரைத் தடுத்து நிறுத்தவும் திறனில்லாமல், வேறு செய்வதறியாது அங்கு தனக்கிருந்த சுகபோகங்களையெல்லாம் வெறுத்து உதறிவிட்டு சாதாரண மனிதனாக மதுரை வந்தடைந்த வாலிபனின் தைரியத்தையும், வாள் வித்தையையும், குதிரையேற்றத்தை யும் கண்டு மதுரை வீரராஜபாண்டியன் அவருக்கு அரண்மனைச் சேவகம் தந்தானாம். பாண்டிய நாட்டிலே பெண் எடுத்து ஒரு பிள்ளைக்குத் தகப்பனானார். பாண்டியர்கள் கைவசம் இருந்த தொண்டை நாட்டில் கலகங்கள் ஏற்படவே அதையடக்க அந்தக் கிழவரின் பிள்ளையைப் பாண்டியன் தன் கிழவயதில் அனுப்பி வைத்திருக்கிறார்.

அந்தக் கிழப் பாண்டியனின் காலத்துக்குப் பிறகு மதுரையிலேயே பலவிதமான கலகங்கள் உண்டாகி, யார் அரசன் என்பதே விரைவில் தீர்மானமாக வேண்டிய காலமாகிவிடவே, தொண்டைநாடு அனுப்பப் பட்ட கிழவன் பிள்ளை பசுபதிதேவன், பசுபதி தேவ பல்லவன் என்று பெயர் வைத்துக்கொண்டு காஞ்சிபுரத்திலிருந்து சுதந்திரமாக அரசாளவே ஆரம்பித்து விட்டான். "தொண்டை நாட்டைப் பெரும் சாம்ராஜ்யமாக்கக் கனவுகள் கொண்டிருக்கிறோம். அதற்குத் தகுதியான ராஜகுரு ஒருவர் தேவை. வள்ளுவரை ராஜகுருவாக்க எனக்கு ஆசை. வள்ளுவரின் அறிவும், ஆற்றலும் ஒரு சாம்ராஜ்யத்தைக் கௌடில்யர் போல ஸ்தாபிப்பதற்கு உதவ வேண்டும்" என்கிறார் சிவகுமார மகாராஜா.

சிவகுமார மகாராஜாவுக்கு வயது 20, 22 தான் இருக்கும். வள்ளுவன் சொல்வதை வேதவாக்காகக் கருதுகிறார். அவர் அப்பா பசுபதி உயிருடனிருக்கிறார். உண்மையில் அவர் தான் மஹாராஜா காஞ்சிபுரத்தில்.

ஆனால், சிவகுமாரனைத்தான் எல்லோரும் மஹாராஜா என்று அழைக்கிறார்கள். அவர்கள் சிவன் பெயரையே தங்கள் மதுரை வாழ்க்கையின் நினைவாக, பசுபதி சிவகுமாரன் என்று வைத்துக் கொணடாலும்கூட அவர்கள் ஜைனர்கள்தான் – வள்ளுவனைப் போலவே. அவர்களில் சிறிதும் ஜாதி மத வித்தியாசங்கள் கிடையாது. ஒவ்வொருவருக்கும் தம் தம் தர்மப்படி வாழவேண்டும் என்ற நினைப்பு பூரணமாக இருக்கிறது.

"பிராமணர்களிலும் அந்த மாதிரி வாழ்க்கை நடத்த வேண்டும் என்று ஒரு தாபம் இருந்துதானே இருக்க வேண்டும்'' என்றாள் அம்மா.

ஒருராஜ்யத்தின் மஹாராஜாவே – அது எத்தனை சின்ன ராஜ்யமாக இருந்தாலும் சரிதான் – வந்து கூப்பிட்டபோது வள்ளுவனால் தட்டிக் கழிக்க இயலவில்லை . தன் நூலில் இன்னும் ஒரு பகுதிகூடப் பூர்த்தியாகவில்லையே என்று சொல்லிப் பார்த்தான். தவிரவும் உயிருக்கு மன்றாடிக் கொண்டு ஸெகியலின் வீட்டில் மயக்கமாகக் கிடக்கும் தாமஸ் விழித்தெழுந்தால் அவரிடமிருந்து பல முக்கியமான செய்திகளை அறிந்து கொள்ள வேண்டுமென்று என்னைப் போலவே வள்ளுவனுக்கும் ஆசை. புது விஷயங்கள், அதுவும் புதிதாகத் தோன்றி யுள்ள அன்பு மதம் பற்றி விசாரித்து அறிந்துகொள்ள வள்ளுவனுக்கு விருப்பம் இருந்தும் சிவகுமாரன், "அவன் வராவிட்டால் தானும் காஞ்சிபுரம் போகவில்லை. வித்வத் சதஸ் எப்படியானாலும் வள்ளுவனுடனேயே தங்கி விடுகிறேன்" என்கிறான்.

''நீயும் வாயேன்" என்று வள்ளுவன் கூப்பிடுகிறான். "அப்பாவிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் உனக்கு இஷ்டமில்லை. அப்பாவிடம் எப்படிச் சொல்லவேண்டுமோ அப்படிச் சொல்லிவிடு. ஏழு நாள் சதஸ் இருக்கிறது. "போக ஒருநாள், வர ஒருநாள், ஆகப் பத்து நாட்களில் திரும்பி விடுவேன்" என்று அம்மாவிடம் நான் சொன்னேன்.

அம்மா விஷயம் மிகத் தெரிந்தவளாகப் பதில் சொன்னாள். "பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறுவதுபோல வள்ளுவனோடு சேர்ந்து உனக்கும் வித்வத் சதஸுக்கு அழைப்பு வந்திருக்கிறதாக்கும். இங்கே என்ன செய்கிறாய்? காஞ்சிபுரம் நல்ல ஊர். சத்சங்கம் நிறைந்த, அறிவாளிகள் பலர் இருக்கிற ஊர் என்று சொல்கிறார்கள். ஆனால், எனக்கென்ன தெரியும், அதையெல்லாம் பற்றி? நன்றாகப் போய் வா. ஜாக்கிரதையாகப் போய் வா. மஹாராஜா தயவு சுலபத்தில் கிடைக்காது. கிடைத்தால் நல்லதுதான். அப்பா போகிற இடங்களை யெல்லாம் நமக்குச் சொல்லிவிட்டா போகிறார்? நீ போயிருப்பது பற்றி அவர் கேட்டால் நான்

பதில் சொல்லிச் சமாளித்துக் கொள்கிறேன். வேறு யாருடனும் போகாமல் உன் சிநேகிதன் வள்ளுவனுட னேயே போகிறாயே, என்று எனக்குத் திருப்திதான்."

அம்மாவிடம் சொல்லிவிட்டுத்தான் கிளம்பினேன் என்று நான் சொன்னதில் வள்ளுவனுக்கு மிகவும் திருப்தி "உன்னால் உன் அப்பாவைத் திருப்திப்படுத்த முடியாது; முடியவில்லை என்பது ஒரு பக்கம் இருந்தாலும் உன் தாயார் கண்கலங்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அது மிக மிக முக்கியம்" என்று வள்ளுவன் பல தடவைகளில் வற்புறுத்தியது போலவே இப்போதும் வற்புறுத்தினான். முதலில் வாசுகியும் காஞ்சிபுரத்திற்கு வருவதாக இருந்தது. ஆனால், கிளம்பும் முன் வள்ளுவனின் தகப்பனார் பகவனுக்கு ஏதோ உடம்புக் கோளாறு ஏற்பட்டதனால் ஆதிக்குத் துணையாக அவள் மயிலாப்பூரில் இருப்பது நல்லது என்று ஆதி நினைத்ததால் பின்தங்கி விட்டாள். சிவகுமார மஹாராஜாவும், வள்ளுவனும், நானும் மஹாராஜாவுடன் வந்த குதிரை வீரனுமாகக் குதிரையேறி பத்து நாழிகைப் பொழுதில் காஞ்சிபுரம் அடைந்து விட்டோம்.

காஞ்சிபுரத்தையோ அரண்மனையில் எனக்கு அதில் நடந்த ராஜோபசாரங்களைப் பற்றியோ அல்லது வித்வத் சதஸ் பற்றிப் பூரணமாகச் சொல்வதோ எனக்கு இங்கு நோக்கமில்லை. இதைப் பழக்கம், முன் மாதிரிகளினால் எல்லோருமே, ஓரளவு யூகித்துக் கொள்ளலாம். அந்தச் சூழ்நிலையிலும் வள்ளுவன் பரபரப்பில்லாமல் எளிமையாக இருக்க முடிந்தது என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்கே என் தலை நிமிர்ந்து திரும்பி விடும்போல இருந்தது.

"சிவகுமாரனைப் பாரேன், அவன் எப்படி இவ்வளவு எளிமையாகக் காணப்படுகிறான். யார் வேண்டுமானாலும் அவனை அணுகலாம். அரசன் மக்களுக்கு எளிதில் அகப்படுகிறவனாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பிரஜைகளுக்கு அரசனால் பிரயோஜனம் இல்லை'' என்றான் வள்ளுவன்.

வள்ளுவன் தான் எழுதிக் கொண்டிருந்த நூலின் பல பகுதிகளைப் படித்துக் காட்டினான். வித்வத் சதஸ்ஸில் ஒரு நாள் சதஸ்ஸில் நூற்றுக்கும் மேற்பட்ட அறிஞர்கள், கல்விமான்கள், முதியோர்கள் பல தேசங்களிலிருந்தும் மற்றும் பல மொழிகளிலும் வல்லவர்கள் இருந்தார்கள். ராமாயணத்தை ஜைனப் பார்வையிலிருந்து கண்டு சொல்கிற, ராவணனை ராமனுக்குச் சமானமாக ஏற்றுக் கொள்கிற ஒரு காவியம் பிராகிருத மொழியில் அரங்கேற்றப்பட்டது. சதஸ்ஸில் பெரும்பாலான பகுதியை அது ஆக்கிரமித்துக் கொண்டது. எனக்கு மொழி தெரியாததனால் காவியம்

பூராவும் விளங்கவில்லை . அதன் ஆசிரியர் மகாவித்துவான் என்று வள்ளுவன் அவர் சொன்ன பகுதிகளில் சிலவற்றை எனக்குத் திருப்பிச் சொன்னான்.

சதஸ்ஸில் பேச்சு அநேகமாகப் பிராகிருதத்தில்தான். சிவ குமாரனுக்கும், வள்ளுவனுக்கும், மற்றவர்களுக்கும் பிராகிருதம் சரளமாகப் பேசவும், கவனம் செய்யவும் வந்தது. சமஸ்கிருதம் ஓரளவிற்கு இருந்தது. அசுவகோஷன் என்று ஒருவர் ஒரு பௌத்த காவியம் சொன்னார். பல இடங்களில் மிகவும் பிரசித்திபெற்ற வால்மீகியின் ராமாயணத்தைவிட நன்றாக இருப்பதாக எனக்குப் பட்டது. பின்பகுதி பூராவும் பௌத்த தருமத்தைப் போதிக்கும் வரட்டுச் சமய நாலாக இருந்தது; புத்தனின் துறவு வரையில் காவியமாக இருந்தது. அசுவகோஷர் காஷ்மீரத்திலிருந்து வருவதாகப் பலரும், கலிங்கத்திலிருந்து வருவதாகப் பலரும், உஜ்ஜயினியிலிருந்து வருவதாகச் சிலரும் சொன்னார்கள். உண்மையை அறிந்து கொள்ள இயலவில்லை. பல நாடகங்கள் எழுதியிருப்பதாகவும், பிராமணனாக இருந்து பௌத்தனாக மாறியதால் அவரை எப்போதும் யாராவது கொன்று விடச் சதி செய்து கொண்டேயிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். மர்ம மனிதரான அவரை வள்ளுவனாலேயே சந்தித்துப் பேச முடியவில்லை .

பிராமணர்கள் fணித்துக் கொண்டிருக்கும் தங்கள் மதத்தைக் காப்பாற்ற எதுவும் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஆனால், ஒரு அசுவகோஷனைக் கொன்று அதனால் பிராமணத்துவத்தை, சீர்திருத்துவது சரியா? சமூகப் பொறுப்புள்ளவர் களாகப் பிராமணர்கள் ஆகும் வரையில் பிராமணத்துவம் உருப்படப் போவதில்லை என்று எனக்குத் தோன்றியது.

"உண்மையும், ஆழமும் அப்படி ஒன்றும் சுலபமாக வருகிற விஷயங்கள் அல்ல" என்றான் வள்ளுவன். "தவிரவும் பிராம்மண னாகப் பிறந்து விட்டதனால் நீ குற்றம் செய்தவனாக உணருகிறாய். இது தவறு. பிராம்மணனாகப் பிறந்ததனால் குற்றமும் வருவதில்லை . உயர்வும் வருவதில்லை. உன்னையே முழு மனிதனாகக் கருதிக் கொள்ளும் பக்குவம் உனக்கு இன்னும் ஏற்படவில்லை."

பிராமணனாகப் பிறந்ததே நான் செய்த பெரிய குற்றமோ என்று என் மனதில் ஏதோ எப்போதும் குறுகுறுத்துக் கொண்டேயிருக்கிறது. அது உண்மைதான். என் பிராமணத்துவத்தை மீறி வெளியே நடந்துவிடவே நான் விரும்புகிறேன். உலகில் ஜனிக்கக் காரணமான என் தகப்பனாரே என் எதிரி என்று தோன்றுகிறது அவர் வழி போக்கு எப்படியானாலும் போகட்டும்; நான்

என் வழி போகலாமே என்று எண்ண என் பிராமணத்துவம் குறுக்கே நிற்கிறது. அதை மீறிவிட்டால் நல்லது. என் சின்னத்தனங்கள் நீங்கிவிடும்.

வித்வத் சதஸ் தொடங்கி ஐந்தாவது நாள் சிவகுமார மகாராஜாவே வள்ளுவனின் தமிழ் நூலைப் பற்றிக் குறிப்பிட்டு தமிழில் மக்கள் தெருவில், சந்தையில் பேசும் சாதாரண மொழியில் நூல்கள் இயற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசினார். வள்ளுவனுக்கு இருந்த அறிவையும், ஞானத்தையும் பற்றி விரிவாகக் கூறினார். எத்தனை விதங்களில் தனக்கு உரிய சமயத்தில் புத்திமதி கூறி, குறுகலான தர்மவழியில் நடக்க வைத்திருக்கிறான் என்று கூறினார். ராஜகுருவாக அவர் பதவி ஏற்கவில்லை ; தான் குரு என்று அவரை ஏற்றுப் பழகியதாகவும் பல்லவ ராஜ்யத்தை ஒரு புகழ்பெற்ற சாம்ராஜ்யமாக ஆக்குவதற்கு வள்ளுவனின் அறிவுரைகள் தனக்கு என்றும் உதவவேண்டும் என்றும் கூறினார். கூடிய சீக்கிரமே அவர் வந்து காஞ்சிபுரத்தில் தங்கி ராஜகுருவாகப் பதவி ஏற்று, ராஜ வம்சத்தினருடன் ஒருவராகத் தங்க வேண்டும் என்று தானும், தன் தகப்பனாரும் விரும்புவதாகவும் சொன்னார். இத்தனை புகழுக்குப் பின் சதஸ்ஸில் நின்ற வள்ளுவன் வயதில் மிகச் சின்னவனாகக் காட்சியளித்தது பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

வள்ளுவன் பட்டும், முத்தும் அணிந்திருக்கவில்லை. எப்போதும் போல இடுப்பில் வெளேரென்ற ஒரு வேட்டி. மேல்துண்டை இடுப்பில் வரிந்து சதஸ்ஸுக்கு மரியாதையாக அடக்கத்திற்கு அறிகுறியாக அணிந்திருந்தான். கழுத்தில் மகரகண்டியோ, காதில் குழையோ, எதுவும் இல்லை. கையில் மோதிரங்கள் கூட இல்லை. சுவடிகள் எதையும் சுமந்து வரவில்லை . மனப்பாடமாக இருந்த தன் கவிதைகளைச் சொன்னான்.

பீடிகையாக அவன் சொன்னது எனக்கு நினைவில் இருக்கிறது: "நான் ஒரு நூல் எழுதிக் கொண்டிருப்பது உண்மைதான். என் சிற்றறிவிற்கெட்டியவரையில் சின்னச் சின்ன, மனதில் தங்கக்கூடிய வகையில், எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் தமிழில் எழுதி வருகிறேன். வாழ்க்கையை எப்படி நியதிப்படி, விதிக்கப்பட்ட தருமங்களை ஏற்றுக்கொண்டு நடத்தவேண்டும் என்பது என் நூலின் அடிப்படை. மோட்சம், முக்தி என்று பல பெரியவர்கள் எழுதி இருக்கிறார்கள். வாழ்க்கையைத் தினசரி அளவில் சரியாக, தருமமாக நடத்திக்கொண்டு போவதுதான் மோட்சத்திற்கு வழி என்று தோன்றுகிறது. நான் ஜைன மதத்தில் பிறந்தவன். சில விஷயங்களில் ஜைனர்களுக்கும் குறுகிய மனப்பாங்குகள் உண்டு என்று எனக்குத் தெரியும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் மனசு குறுகிப்போய் விடுகிறது.

இதை, நாம் கல்விமான்கள், அறிவாளிகள் நிறைந்த சதஸ்களில்கூடக் காண்கிறோம். அப்படிப் பட்ட குறுகலான மனப்பாங்கு ஏற்படாமல் எதையும் சீர்தூக்கிச் சமன் செய்து நோக்கும் திருஷ்டியையும், அன்பு எனும் வழியையும், உண்மை என்னும் தத்துவத்தையும் நான் பெரிதாக மதிக்கிறேன். நான் உண்மை என்று கருதுவது மனிதர்களில் பலருக்கு நன்மை பயக்க வேண்டும். முக்கியமாக அது யாருக்கும் தீமை விளைவிக்கக் கூடாது என்றும் கருதுகிறேன்

"என் நூல் இன்னும் முற்றுப் பெறாத நூல். என் தாயார் சொல்கிற பழமொழிகளைக் கேட்டு அந்தப் பழமொழி வடிவத்திலேயே நூல் அமைத்தால் மனத்தில் வைத்துக் கொள்ளச் சிறப்பாகப் பயன்படும் என்று குறள் வெண்பா என்கிற செய்யுள் வடிவில் இதைச் செய்திருக்கிறேன். அறம், பொருள், இன்பம் மூன்றையும் குறிப்பதால் முப்பால் என்று பெயர் சொல்லலாம் என்று எண்ணம். மாதிரியாகச் சில பகுதிகளை மட்டும் சொல்லுகிறேன்" என்று –

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு"

என்று ஆரம்பித்தான்.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்!"

என்று தொடரும்போது சதஸ்ஸில் களை கட்டிவிட்டது என்று நிதர்சனமாக நான் கண்டேன். விஷயம் பெரியது, வயதில் சின்னவனே ஆனாலும், பதவியிலிருப்பவனோ, இருக்கப் போகிறவனோ ஆனாலும் கூட இங்கு ஏதோ வேறு எங்கும் காணக் கிடைக்காத சரக்கு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் தனித்தனியாக நிமிர்ந்து உட்கார்ந்து ஆழ்ந்து கேட்டனர்.

வள்ளுவன் சொன்ன குறள்கள் பூராவையும் இங்கு சொல்வதாக எனக்கு உத்தேசமில்லை . 400 குறள்கள் – ஒரு வரிசையில் இல்லாமல் எழுதியிருப்பதாகச் சொல்லி அதில் 100 குறள்கள் போலச் சொன்னான். அதை வரிசையாகப் பிரிப்பது போன்ற காரியங்களை இனிமேல்தான் செய்ய வேண்டும் என்றும் சொன்னான்.

சபையில் ஹாஹாகாரம் பெற்ற குறள்கள் சில எனக்கு நினைவிற்கு வருகின்றன.

– "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''

என்று சொல்லும்போதும் –

"கெடுப்பதூம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம்மழை"

என்று சொல்லும்போதும் –

"குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது''

என்னும் போதும் –

"அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" என்னும் போதும் –

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்னும் போதும் –

‘‘அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்னும் போதும் –

"வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்;
இசையொழிய வாழ்வாரே வாழாதவர்"

என்னும் போதும் –

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்
தமக்கின்னா பிற்பகற்றானே வரும்"

என்னும் போதும் –

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்

அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்னும் போதும் –

கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து

மெய்யறியாமை கொளல்"

என்னும் போதும் –

– இந்த மாதிரி எளிதில் மனத்தில் பதியக்கூடிய பொருள் வந்த போதெல்லாம் சபையின் ஹாஹாகாரம் எழுந்தது என்று எனக்குத் தோன்றியது.

எனக்கே அவன் குறள்களைக் கேட்கும்போது "இந்த என் நண்பன் வள்ளுவனிடம் இத்தனை சரக்கு இருக்கிறதா!" என்று வியக்கத் தோன்றியது.

வள்ளுவன் சற்றேறக் குறைய நூறு குறள்களைச் சொல்லி முடித்த பிறகு சதஸ்ஸில் பலரும் அவனைப் பிரச்சனைகள் கேட்டார்கள்.

ஒருவர், "இந்த மாதிரி குறள்களாக நூலில் எத்தனை இருக்கும்?" என்று கேட்டார்.

"நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. சிறிய நூல்தான் செய்ய உத்தேசம். எனக்கெட்டிய அளவில் சுமார் 1000 குறள்கள் எழுதலாம்."

"அதிகார அமைப்பு எப்படி அமையும்?"

"பத்துப் பத்துக் குறள்களாக அடுக்கலாம் என்று நினைப்பு."

ஜைன முதியவர் ஒருவர் எழுந்து. "சத்தாரி மங்கல வணக்கம் சொன்ன உங்கள் நூலின் நடுவில் மழை பற்றி வருவானேன்? அது நமது ஜைன மங்கலங்களில் ஒன்றாக இடம் பெறாத ஒன்றல்லவா?" என்று கேட்டார்.

"என் நூலை நான் ஜைன நூலாக இயற்றவில்லை. ஜைனத் தத்துவங்களை விளக்கப் பிராகிருதத்தில் சில சில நூல்கள் செய்ய உத்தேசமுண்டு. ஜைனர்களிடையே நாம் ஏற்றுக்கொள்கிற மங்கலங் களுக்கு அப்பாலும் சில மங்கலங்கள் உண்டே – அந்த மாதிரி மங்கலங் களில் ஒன்றாக நான் மழையைக் கருதுகிறேன். முக்கியமாக நாட்டின் சுபிட்சம், துறவிகளின் பற்றற்ற வாழ்க்கை , மழையை எதிர்நோக்கி இருக்கும் காட்டை உழுது

பண்படுத்திப் பொருள் விளைவிப்பவர்கள் கையில் இருக்கிறது. அவர்களையும் துறவிகளுடன் சேர்த்துப் பாட வேண்டும் என்று எனக்கு ஆசை. அதைப் பின்னர் ஒரு அதிகாரமாக வகுப்பேன். மழையும் மங்கலப் பொருள்களில் ஒன்று என்பதனால் அதை ஆரம்பத்திலேயே சொன்னேன்" என்றான் வள்ளுவன்.

சதஸ் முடித்த பிறகு எத்தனை பேர் வந்து வள்ளுவனிடம் பாராட்டிப் பேசினார்கள் என்று சொல்லி மாளாது. தமிழ் மொழியில் இவ்வளவு தெளிவாக, இவ்வளவு தீவிரமான ஆழ்ந்த சிந்தனைகளை எடுத்துச் சொல்ல முடியும் என்று எனக்கு இதுவரையில் தோன்றிய தில்லையே என்று பலரும் சொன்னார்கள். எனக்கு வள்ளுவனை என் நண்பன் என்று சொல்வதற்கு மிகவும் பெருமையாக இருந்தது. ஒவ்வொருவரும் வள்ளுவன் பெரும் புலவன் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். "சிவகுமார மகாராஜா தனது குருவாக வரித்துக் கொண்டிருக்கிற ஆசாமியாயிற்றே – ஒரு சாம்ராஜ்யத்தையே ஸ்தாபித்து உருவாக்கும் திறமை பெற்றவராயிற்றே" என்றும் சொன்னார்கள்.

இதில் விசேஷம் என்னவென்றால், வள்ளுவன் எப்போதும் போலத்தான் இருந்தான்.

## அத்தியாயம் 18

பத்து நாட்களில் திரும்பி விடலாம் என்று எண்ணிய நானும், வள்ளுவனும் பன்னிரெண்டாவது நாள்தான் திரும்ப முடிந்தது.

திரும்பியவர்களின் மூட்டை, முடிச்சுக்களை வள்ளுவன் வீட்டிலேயே போட்டுவிட்டு – என் வீட்டிற்குப் போய் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று மனத்தில் இருந்தாலும் அதை அதிகமாகப் பொருட்படுத்தாமல் – பிரயாணக் களைப்புத் தீர ஸ்நானம்கூடப் பண்ணாமல் வேறு துணிமணிகள்கூட அணிந்து கொள்ளாமல், உடனே நேராக ஸெகியலின், மாளிகைக்குக் கிளம்பி விட்டோம். கிழவர் தாமஸைப் பார்க்க இருவருக்கும் அவ்வளவு தாகம்.

என் தாகம் பிராமண குலத்திடம் எனக்கிருந்த அதிருப்தியினால் ஏற்பட்டது. நான் பிராமண குலத்தின் பிடிப்பையும், என் தகப்ப னாரின் சகித்துக்கொள்ள முடியாத போக்கையும் தப்பித்துவிட வேண்டும். என் வாழ்க்கையின் பலனைப் பூரணமாக அறிந்து, வள்ளுவன் சொன்னதுபோல் மனிதனாக – பிராமணனாக மட்டும் இல்லாமல் முழு மனிதனாக இருந்துவிட வேண்டும்

– அதற்கு இந்தக் கிழவர் மூலம் ஏதோ ஒரு வழி பிறக்கும் என்று எனக்கு அசட்டு நம்பிக்கை. அந்தத் தாகம் என்னை உந்தியது.

வள்ளுவனுக்கு என் மாதிரியான பிரச்சனைகள் இல்லை. அவனுக்குத் தாய், தந்தையர் மூலமாகவோ, மனைவி மூலமாகவோ எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லை. காஞ்சிபுரத்தில் வள்ளுவன் என்று நான் உபயோகித்த பேரைத் தெரிந்தாலும் உபயோகிக்காமல், ஏலாச்சாரி என்றும், குன்குண்டாச்சாரியார் என்றும் அழைத்தார்கள். அந்தப் பெயருடன் அவன் ராஜகுருவாகப் பல்லவ அரண்மனையில் தங்கியிருக்க வேண்டும் என்று அங்கு பெரிய மகாராஜா முதல் சிவகுமார மகாராஜாவரையில் எல்லோருக்கும் விருப்பம். அங்கு போய் ராஜகுருவாக இருப்பதா, வேண்டாமா? என்பதுதான் வள்ளுவனுக்குப் பிரச்சனை. ராஜகுருவாகப் போவதில் ஏற்படக்கூடிய கட்டுப்பாடுகள், பொறுப்புகள் தனது சுதந்திரத்திற்கு எப்படி ஊறு விளைக்குமோ – சுதந்திரம் பறிபோனாலும், மக்களுக்கு அந்தப் பதவியிலிருந்து கொண்டு நல்லபடியாகச் சேவை செய்யலாமே என்றும் ஒரு தாகம் இருந்தது அவனுக்கு.

நாங்கள் ஸெகியலின் மாளிகையை அணுகியபோது பந்தலில் வழக்கம்போலப் பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகச் சுமார் நூறு பேர் இருப்பார்கள். சந்தடி காட்டாமல் பிரசங்கத்தை ஆழ்ந்து கேட்டுக் கொண்டிருந்தவர் களின் கவனத்தைக் கலைக்காமல் கடைசிப் பகுதியில் ஓசைப்படாமல், திருடர்கள் போல உட்கார்ந்தோம்.

அப்போஸ்தலர் தாமஸ் சொல்லிக் கொண்டிருந்தார்:

"நான் உங்களிடையே ஓசைப்படாமல் திருடனைப் போல யாரும் அறியாமல் வரவில்லை . சகலரும் அறிய நண்பகலில் வந்து உங்களுக்கு மார்க்கத்தை எடுத்துச் சொல்கிறேன். உங்களுக்கு எட்டும்படியாக நீதிக் கதைகளைச் சொல்கிறேன். காத்திருக்கிறவர்கள் கேட்டுக் கொள்ளுங்கள். மனமிருப்பவர்கள் அறிந்து கொள்ளுங்கள். கோயில் களில் வியாபாரம் நடத்திப் பணம் சம்பாதிக்கவா என் கோயில்கள் கட்டப்பட்டன என்று தேவன் கேட்கிறான். இதே கேள்வியைத்தான் தேவகுமாரனாகிய நானும் கேட்கிறேன். 'வியாபாரம் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கட்டும்; கொழிக்கட்டும்: செழிக்கட்டும், என் கோயில்களில், என் காரியங்களில் வேண்டாம்' என்று தேவன் கூறுகிறான். தேவகுமாரனாகிய நானும் அதையே கூறுகிறேன்.

"அங்கே ஜெருசலேத்தில் மட்டுமல்ல, யூதர்கள் மத்தியில் மட்டும் தான் என்றில்லை; இன்று உலகில் இருக்கிற கோயில்கள் எல்லாம் வியாபார ஸ்தலங்களாகிப் போய்விட்டன என்பதை நாம் காண்கிறோம். கடவுளையே மலிவாக்கி, வியாபாரப் பொருளாக்கி விட்டார்கள். அப்படியாக்கிவிடக் கூடாது என்று ஏசுவும், ஏசுவின் சிஷ்யர்களான நாங்களும் சொல்கிறோம்.

“ஒருநாள் எங்கள் ஏசுவின் வார்த்தைகளைக் கேட்க ஜெரு சலேத்திற்கு அப்பால் ஒரு பெரிய கூட்டம் கூடியது. அருகில் இருந்த ஒரு குன்றின்மேல் ஏறி நின்று ஏசு தன்னுடைய மெதுவான கீச்சுக் குரலில் பிரசங்கம் செய்தார். இதில் விசேஷம் என்னவென்றால், அங்குக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் காதுகளிலும் இந்தப் பிரசங்கம் கணீரென்று ஒலித்தது. என்ன சொன்னார் எங்கள் ஏசு என்று கவனித்துக் கேளுங்கள். அதில் உங்களுக்கும் ஒரு செய்தி அடங்கியிருக்கிறது.

"ஏழை எளியவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனென்றால் சுவர்க்கம் அவர்களுடையது. இங்கு துயரப்படுபவர்கள் அதிர்ஷ்ட சாலிகள் – ஏனெனில் அவர் துயர் துடைக்கப்படும். தாழ்ந்தவர்கள் பாக்கிய சாலிகள்; உண்மையிலேயே அவர்களுக்கு இந்த உலகம் சொந்தமாகி விடும். தருமத்தை எண்ணித் தாகமும், பசியும் உள்ளவர்கள் புனிதர்கள். அவர்கள் தாகமும், பசியும் சமனமாகும். கருணை காட்டுபவர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்களுக்குக் கருணை காட்டப்படும். உள்ளத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைக் காண்பார்கள். அமைதி காப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள். அவர்களைத் தேவனின் குழந்தைகள் என்று உலகம் போற்றும். தருமவான்களாக இருந்து அதனால் இந்த உலகில் கஷ்டப்பட்டவர்கள், உலகில் அதிகாரிகளினால் சிறைப்படுத்தப் பட்டவர்கள் பாக்கியசாலிகள்; அவர்கள் தேவலோகத்தில் தேவனின் உண்மை வாரிசுகளாக வாழ்கிறார்கள். உங்களை எனக்காகக் குறை சொல்லி, உலகம் தூற்றிக் கஷ்டப்படுத்தும்போது என் பெயரைச் சொல்லிச் சந்தோஷப்படுங்கள் – ஏனென்றால் தேவலோகத்தில் அதனால் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய வெகுமதிகள் கனமானவை. இப்படித்தான் நமது முன்னோடிகளையும் தீர்க்கதரிசிகளையும் உலகில் கஷ்டப்படுத்தினார்கள்.

“நீங்கள் உலகத்தின் உப்பாக இருப்பவர்கள், உங்கள் உப்புத்தனம் போய்விட்டால் உணவுக்கு ருசியளிக்க எந்த உப்பைத் தேடிப் போவது? உங்கள் உப்புத்தனம் போய்விட்டால், உப்புப்போன உப்புதான் நீங்கள். தூர எறிந்து காலால் மிதிபட வேண்டியவர்கள். உப்புத்தனத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

“நீங்கள்தான் உலகின் வெளிச்சம். மலைமேல் இருக்கும் நகரத்தை யார் கண்களிலிருந்தும் மறைக்க முடியாது. யாரும் மெழுகுவர்த்தியைக் கொளுத்தி மூடி வைக்கமாட்டார்கள். வீட்டில் உள்ளவர்களுக் கெல்லாம் வெளிச்சம் தரும் அது. உங்கள் வெளிச்சம் உலகில் பிரகாசிக்கட்டும். உங்களுடைய நல்ல செயல்கள் மனிதர்கள் முன் தெரியட்டும். சுவர்க்கத்தில் உள்ள உங்கள் தகப்பனான தேவனை உயர்த்த உங்கள் காரியங்கள் எல்லாவற்றையும் செய்யுங்கள்.

"நான் வந்திருப்பது தீர்க்கதரிசியாக – தேவனின் காரியங்களை மறுக்கவோ அல்லது விதிகளை மீறி தேவனின் சட்டங்களை மீறவோ அல்ல. நான் எதையும் அழிக்க வந்தவன் அல்ல! உள்ளத்தைப் பூர்த்தி செய்து பூரணமாக்க வந்தவன். எல்லாம் பூரணமாகப் பூர்த்தியாகின்ற வரைக்கும் எதுவும், சுவர்க்கமும், பூமியும் முடியும் முன், அதனதன் விதியிலிருந்து, தர்மத்திலிருந்து தப்பிவிட முடியாது என்பதை உங்களுக்கு நான் மீண்டும் சொல்கிறேன். ஏற்கனவே சொல்லப்பட்ட விதிகளை மீறுங்கள், கட்டுப்பாடுகளைத் தகருங்கள் என்று சொல்பவன் ஸ்வர்க்கத்தில் மிகவும் சின்னவனாகக் கருதப்படுவான். ஆனால், அந்த விதிகள் நிரந்தரமானவை. கட்டுப்பாடுகள் தகர்த்தெறிய முடியாதவை என்று சொல்பவன் சுவர்க்கத்தில் முதன்மையாக நிற்பவன். ஏனென்றால் மற்றவர்களை விட உங்கள் தர்மமும், நற்செயல்களும் அதிகமாக இருந்தாலொழிய உங்களால் தேவனின் உலகத்தில் பிரவேசிக்க முடியாது.

'வெகு காலத்திற்கு முன்னேயே நீங்கள் யாரையும் கொல்லக்கூடாது என்கிற விதியைக் கேட்டிருக்கிறீர்கள். யார் எதைச் சொன்னாலும் அதற்கான நியாயத்தை, தண்டனையை ஏற்றேயாகவேண்டும். அது பழைய விதி அதையொட்டியே ஒரு புதிய விதியை உங்களுக்கு நான் அறிவிக்கிறேன். உங்களில் யார் உங்கள் சகோதரன் ஒருவனிடம் கோபமாக இருக்கிறீர்களோ – காரணமில்லாமல் கோபமாக இருக்கிறீர்களோ – அவன் நியாயம் விசாரிக்கப்பட்டுத் தண்டனைக் குள்ளாவான். தப்ப முடியாது என்று நான் சொல்கிறேன். அயோக்கியன் என்று தன் சகோதரனைச் சொல்பவன் நியாய விதிகளின் தீர்ப்புக்கு உள்ளாவான். முட்டாளே என்று சொல்பவன் நரகத் தீயில் தள்ளப்படுவான். இங்கு கோயிலுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொண்டுவரும்போது உன் மனதில் உன் சகோதரன் எவனிடமும் கோபதாபங்கள் எதுவுமிருந்தால் கோயில் காணிக் கையைச் செலுத்துமுன் அந்தக் கோபத்தைச் சமாதானமாகத் தீர்த்துக் கொண்டு வந்து காணிக்கையைச் செலுத்து, மற்றபடி கோயில் காணிக்கையை மட்டும் – உன் சகோதரனுடன் சமாதானமாகாமல் – செலுத்துவது போதாது.

உன் எதிரியுடன் உடனே சமாதானமாகிப் போய் விடு. அல்லது காலங் கடந்துவிடும்.

பிறர் மனைவியோடு சோரம் போகாதே என்று முன்னர் சொன்னார்கள். இப்போது நான் சொல்கிறேன். எப்போது பிறர் மனைவியைப் பற்றி நீ நினைத்தாயோ அப்போதே நீ சோரம் போகிற குற்றத்தைச் செய்துவிட்டாய் என்று நான் சொல்கிறேன்.

உன் வலது கண் குற்றம் செய்தால் அதைப் பிடுங்கி எறி, குற்றம் செய்த கண் போய்விடுவது மேல். இல்லாவிட்டால் குற்றம் பெருத்து உன்னைப் பூராவுமே நரகத்தில் தள்ளிவிடும். உன் வலது கரம் தவறு செய்தால் அதை வெட்டி அகற்றிவிடு.

உன் பேச்சில் தேவனின் பெயரை வீணாக இழுக்காதே. உன் பேச்சு ஆதாரம் இல்லை என்பதோடு நிற்கட்டும்.

முற்காலத்தில் கண்ணுக்குக் கண், காலுக்குக் கால், கைக்குக் கை என்று வழி செய்தார்கள். இன்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். உனக்குத் தீங்கு செய்யப்பட்டால், பதில் தீங்கு செய்யாதே. உன் வலது கன்னத்தில் உன் எதிரி அடித்தால், இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு. உன் மேல் குற்றம் சாட்டி உன்மேல் சட்டையை ஒருவன் பிடுங்க முயற்சித்தால் அவனிடம் உன் போர்வையையும் நீயாகவே கொடுத்துவிடு. உன்னை ஒருவன் ஒரு மைல் நடக்க வைத்தால், நீ அவனுடன் இரண்டு மைல் நடக்கத் தயாராக இரு. உன்னைக்கேட்டு வருபவனுக்கு இல்லை என்று சொல்லாதே. உன்னைக் கடன் கேட்டால் கூட மறுக்காதே. இருப்பதைக் கொடுத்துவிடு.

அண்டை அசலாரிடம் அன்பு செலுத்து, உன் விரோதிகளைத் தண்டி என்று முன்காலத்தில் சொன்னார்கள். ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் உங்கள் எதிரிகளையும் நேசிக்க வேண்டும். உங்களைச் சபிப்பவர்களையும் நீங்கள் ஆசிர்வதிக்க வேண்டும். உங்களைத் தவறாக நடத்தித் துன்புறுத்துகிறவர்களுக் காகவும், நீங்கள் அவர்கள் நலனைக் கருதித் தேவனைப் பிரார்த்திக்க வேண்டும். ஏனெனில் தேவன் அனுப்பிய சூரியன் நல்லவர்கள், கெட்டவர்கள் எல்லாருக்கும் பொதுவாகக் காய்கிறது. மழைகூட நல்லவர்கள் கெட்டவர்கள் என்று பிரித்துப் பார்ப்பதில்லை.

உங்களை நேசிப்பவர்களை மட்டும் நீங்கள் நேசித்தால் அதில் ஆத்மலாபம் என்ன? சாதாரண மனிதர்களும், வியாபாரிகளும் கூடத்தான் அப்படிச் செய்கிறார்கள். உங்கள் சகோதரர்களை மட்டும் அணைத்துக் கொள்வதால்

உங்களுக்குக் கிடைக்கிற ஆத்மலாபம் என்ன? உலகில் உள்ள எல்லோரும்தான் தங்களுக்கு வேண்டியவர் களை மட்டும் நேசிக்கிறார்கள்.

மனிதன் பூரணமானவனாக இருக்க வேண்டும். அது தான் லட்சியம். சுவர்க்கத்தில் உள்ள தேவன் பூரணமானவனாக இருக்கிற மாதிரி உலகில் மனிதன் பூரணமானவனாக இருக்க வேண்டும்.

பிறருக்குக் கொடுப்பது உலகுக்குத் தெரியும்படியாகக் கொடுக்காதீர். உலகறிய தானதருமம் செய்ததற்கு உங்கள் தேவன் பலன் தரமாட்டான். ஊர்கூட்டி எல்லோரும் அறிய எதையும் தானதருமமாகச் செய்யாதீர். மனிதர்களிடையே பெருமையையும் புகழும் அடைவதற்காக எதையும் செய்யாதீர். யாருக்கும் எதுவும் கொடுக்கும்போது இடது கைக்குத் தெரியாமல் வலது கை கொடுக்கட்டும். ரகசியத்தில் செய்யப்பட்டதும் சுவர்க்கத்தில் உள்ள நம் தேவனாகிய தகப்பனுக்குத் தெரியும்.

"பிரார்த்தனை செய்வதையும் ஊரறியச் செய்யாதீர். தேவனைப் பிரார்த்திக்கும்போது அதிக வார்த்தைகளை உபயோகிக்காதீர்."

"மனிதர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கும் மனப்பான்மை உங்களுக்கு வந்துவிட்டால் உங்களையும் தேவன் சுலபமாக மன்னித்து விடுவான்."

"உங்களுக்காக என்று உலகத்து ஐசுவரியங்களைத் தேடிப் பத்திரப்படுத்திக் கொள்ளாதீர்! திருடர்கள் புகுந்து அவற்றைக் கொண்டு போய்விடுவார்கள். அல்லது பூச்சியும், கரையானும் அரித்துவிடும். அல்லது அவற்றைத் துரு சாப்பிட்டு விடும். சுவர்க்கத்தில் சேர்க்கிற ஐசுவரியங்களைத் தேடுங்கள். அதைத் திருடர்கள் கொண்டுபோக மாட்டார்கள். துரு அரிக்காது. பூச்சியும் புழுவும் சாப்பிட்டு விடாது. தவிரவும், எங்கு உன் சொத்து இருக்கிறதோ அங்கேதான் உன் உள்ளமும் இருக்கும்.

"ஒரு மனிதனால் இரண்டு யசமானர்களுக்குச் சேவை செய்ய முடியாது. இரண்டு யசமானர்கள் இருந்தால் ஒருவனை நேசிப்பதும், ஒருவனை வெறுப்பதும் இருக்கும். தேவனையும் சாத்தானையும் யசமானாகக் கொண்டு இருவருக்கும் மனிதனால் சேவை செய்ய முடியாது.

ஆகவேதான் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். எப்படி வாழ்க்கை நடத்துவது, நாளைக்கு எப்படிச் சாப்பிடுவது, எதை உடுப்பது என்று எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டே இருக்காதீர் கள். மனித உடல் மனித உடையைவிட உயர்வானது; உணவைவிட உயிர் உயர்வானது. பட்சிகளைப் பார் – அவை நிலத்தை உழுவது மில்லை; விதைப்பதுமில்லை. ஒரு கவலையும் இல்லாமல் இருக்கின்றன.

சுவர்க்கத்துத் தேவன் அவற்றிற்கும் உணவை அளிக்கிறான். நினைத்து நினைத்துப் பாடுபட்டாலும் உங்கள் உயரத்தை நீங்கள் ஒருபோதும் உயர்த்திக் கொள்ள முடியுமா? முதல் விஷயமாக சுவர்க்கத்தைப் பற்றிக் கவலைப்படுங்கள். நாளையைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டே காலங் கழிக்காதீர் – இன்றைய விஷயம், இன்றைய தீங்கு இன்றோடு போகட்டும்.

"பிறரைப் பற்றி அவர்கள் என்ன செய்கிறார்கள் எப்படிச் செய்கிறார்கள் என்று எண்ணியே காலத்தைக் கழிக்காதீர். அடுத்தவன் கண்ணை மறைக்கும் சிறு துரும்பைப் பார்த்துக்கொண்டு இருக்காதீர். உங்கள் கண்ணை மறைக்கும் உத்தரத்தை அப்புறப்படுத்தி விட்டு, மற்றவன் கண்ணை மறைக்கும் துரும்பைத் தேடுங்கள்.

"கேளுங்கள் – கொடுக்கப்படும். தட்டுங்கள் – கதவு திறக்கப்படும். தேடுங்கள் – நீங்கள் தேடுவது நிச்சயம் கிடைக்கும். யார் கேட்டாலும் தரப்படுவான்; தேடுபவன் நிச்சயமாகக் கண்டு கொள்வான். கதவு தட்டுபவனுக்கு நிச்சயமாகக் கதவு திறக்கப்படும்."

"மனிதர்கள் உன்னை எப்படி நடத்த வேண்டுமென்று நீ எண்ணுகிறாயோ, அந்த மாதிரியே நீ மற்ற மனிதர்களை நடத்து, உனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று எண்ணுகிறாயோ அந்த மாதிரியே நீ மற்ற மக்களுக்குச் செய்." இதுதான் எல்லா விதிகளின் சாராம்சம். தீர்க்கதரிசிகள் சொன்னதும் இதுதான்.

பெரிய கதவு திறந்திருக்கிறது என்று அதன் மூலம் சென்றாயானால் அழிவும், நரகமும் நிச்சயம். தருமத்தின் வழி குறுகலானது. நிச்சய மானது. அந்த வழியைத் தெரியாமல் தவிப்பவர்கள் நம்மிடையே அதிகம்.

"பொய்க் கொள்கைகளை ஏற்க மறுத்துவிடுங்கள். திராட்சைக் கொடியில்தான் திராட்சை பழுக்கும். வேறு முள் செடியிலும், பழமே இல்லாத கொடிகளிலும் திராட்சை அறுவடை செய்ய இயலாது. கல்லின் மேல் சரியான அஸ்திவாரம் அமைத்துக் கட்டிய வீடு மழையில் கரையாது; காற்றில் விழாது. அப்படிப்பட்ட வீடு கட்டிக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லுகிறேன்."

"ஒருவனின் ராஜ்யத்தை உலகில் ஸ்தாபிப்பதற்காக அவதரித்த ஏசு ஆரம்ப காலத்தில் குன்றின் மேல் ஏறிச் செய்த பிரசங்கத்தை, என் நினைவிலிருந்து சற்றுச் சுருக்கமாகச் சொன்னேன். அவரைச் சுற்றி நின்று கேட்ட அவர் சிஷ்யர்களான எங்கள் பன்னிருவருக்கும் இந்த வார்த்தைகள் வேதவாக்காக, எங்கள் வாழ்க்கையையே மாற்றி அமைப்பனவாக

அமைந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏசுவின் காரியங்களையும், வார்த்தைகளையும் பூரணமாக நம்பி, சகலத்தையும் துறந்துவிட்டு, அவரோடு புறப்பட்டு விட்டவர்கள் நாங்கள்."

ஆனால், இந்த வார்த்தைகள் சாதாரண ஜனங்களிடையே உண்டாக்கிய பாதிப்பு எங்களுக்கேகூட ஆச்சரியமாக இருந்தது. கோயில் பூசாரிகளைப்போல, யூதமத அதிகாரிகளைப்போல அல்லா மல், நுனி நாக்கிலிருந்து பேசாமல், உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து தேவனின் மனத்தையும் போக்கையும் அறிந்தவராகப் பேசுகிறார் ஏசு என்கிற நினைப்பு அங்கிருந்தவர்களிடையே ஏற்பட்டது. ஆயிரக்கணக் கான மக்கள் கூடியிருந்து மௌமனமாக இந்த வார்தைகளை மனதில் வாங்கித் தங்கள் வாழ்க்கையை அதன் வேகத்தில் சீர்திருத்தியமைத்துக் கொள்ள முயன்றார்கள்.

“தேவகுமாரனே ஒரு தரம் சொன்னது போல ஒரு விவசாயி விதைகளை வாரியிறைக்கிறான். சில விதைகள் கல்லின் மேல் விழுகின்றன. அவை முளைக்காது போய்விடும். சில பண்படுத்தாத பூமியில் விழுகின்றன. அவை முளைத்தாலும் நிழலுக்கு மத்தியிலே வீணாகிப் போய்விடும். சில பண்பட்ட பூமியில் விழுந்து முளைத்துக் காய்த்துப் பூத்துப் பலன் தருகின்றன. அந்த மாதிரி வார்த்தைகள் செயல்படுவதும், செயல்படாததும் சொல்லின் திறத்தில் மட்டும் இல்லை, சொல்லை வாங்குபவனின் பண்பாட்டிலும் இருக்கிறது."

இப்படித் தன் பிரசங்கத்தைத் தாமஸ் முடிக்கும் போது சாதாரண மாக இந்த மாதிரிப் பிரசங்கங்களுக்கு வரும்போதும் கூட்டம் முடிந்த பின் ஏற்படுகிற சந்தடியோ, சப்தமோ இல்லாமல் ஒவ்வொருவரும் உட்கார்ந்த இடத்திலேயே ஒரு பத்து விநாடிகள் அல்லது இருபது விநாடிகள் அமர்ந்து அமைதியாகக் காதில் விழுந்ததைத் தங்கள் அறிவுக்கெட்டிய வரையில் சிந்தித்து விட்டு அந்தச் சிந்தனையின் வேகம் முகத்தில் தெரிய எழுந்து கிளம்பினார்கள்.

யார் யார் வந்திருக்கிறார்கள் பார்க்கலாமே என்று எழுந்து வந்தால் ஓரத்தில் நின்ற என் கண் முன் பல தெரிந்த முகங்கள் பட்டன. ஆனால், நான் எதிர்பாராத ஒரு முகம் என்னை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது.

என் அம்மா அந்தப் பிரசங்கத்தைக் கேட்க வந்திருக்கிறாளே! அது எப்படி?

அதற்குள் அம்மாவும் என்னைப் பார்த்துவிட்டாள்.

# அத்தியாயம் 19

"இப்பதான் வரயா வாது?'' என்று கேட்டுக் கொண்டே அம்மா என்னை அணுகியதும் எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அம்மாவைக்கூடப் பார்த்துப் பேசாமல் இங்கு யாரோ, எங்கிருந்தோ வந்த ஒரு கிழவரை முக்கியமானவராகத் தேடிக்கொண்டு நான் வந்தது, எனக்கே ஒரு குற்றமாகத்தான் பட்டது.

என் அருகில் நின்ற வள்ளுவன்தான் பதில் சொன்னான்: ''நேரே இங்கேதான் வந்தோம் அம்மா. வாதூலன் வீட்டுக்குப் போய் உங்களைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்றுதான் சொன்னான். நான்தான் முதலில் அவனால் உயிர் பிழைத்த அந்தக் கிழவரைப் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போகலாம் என்று சொன்னேன். இங்கு நாங்கள்வரும்போது பாதிப் பிரசங்கம் முடிந்துவிட்டது. பிற்பகுதியைத் தான் கேட்டோம்."

அம்மா சொன்ன பதில் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. "எனக்கே புரிகிற மாதிரிப் பெரியவர் சொல்லுகிறார்" என்றாள் அம்மா. பிறகு அது யார் என்று என்னைக் கேட்பவள் போல என்னைப் பார்த்தாள். நான் சொன்னேன். "இதுதான் வள்ளுவன்.''

"அப்படித்தான் நினைத்தேன்!" பிறகு அம்மா வள்ளுவன் பக்கம் திரும்பி, "நான் உங்களைப் பார்த்ததில்லையே தவிர உங்களைப் பற்றிதான் சதா வாதூ பேசிக்கொண்டிருக்கிறான்'' என்றாள்.

"நீ இங்கே எப்படி வந்து சேர்ந்தாய்? நம் தெருவிலிருந்து இங்கு வருவதற்கு உண்மையில் மூன்று தெருக்கள்தான் தாண்ட வேண்டும் என்றாலும் முன்னூறு காததூரம் இருப்பது போலல்லவா! உன்னை நான் ஸெகியலின் மாளிகையில் பார்ப்பேன் என்று நினைக்கவே யில்லை அம்மா'' என்றேன்

"அந்தப் பெண் மிரியம்தான், 'வந்து கேளுங்களேன்' என்று சொன்னாள். இரண்டு, மூன்று நாட்களாக வந்து அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். உன்னைப்பற்றி எல்லா விவரங்களை யும் பெரியவர் என்னிடமும், மிரியத்திடமும் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார். சில சமயம் உனக்காகவேதான் இங்கு மயிலாப்பூருக்கு வந்திருப்பது போலவும் பேசுகிறார்.''

"அப்பா ..."

"அப்பாவுக்குத் தெரிந்தால் கொன்று போட்டு விடுவார். அப்பா சங்கர சாஸ்திரிகளோடு மாயவரம் போயிருக்கிறார். மாயவரம் கோயிலில் ஏதோ விசேஷமாம். பத்து நாட்களாகும் திரும்பி வர. அதிகமும் ஆகலாம்."

"வள்ளுவனுடன் நான் காஞ்சிபுரம் போயிருப்பது தெரிந்ததும் என்ன சொன்னார்?" என்று சற்றுப் பீதியுடனேயே கேட்டேன்.

என்ன சொல்வார்! பிராமணக் குதர்க்கம் தெரிந்ததுதானே. 'ராஜசேவகத்தில் பள்ளு, பறை என்று பார்க்கக் கூடாது என்றார்' என்று சொன்ன பிறகு, சொல்லத் தகாததைச் சொல்லி விட்டோமோ என்று நாக்கைக் கடித்துக் கொண்டார்.

வள்ளுவன் சொன்னான்: "இந்த மாதிரி, சமயத்துக்கு விட்டுக் கொடுத்து, வளைந்து கொடுக்கத் தெரிந்திருப்பதனால்தான் பிராமணர்கள் முன்னேற முடிகிறது'' என்று கூறி, நகைத்துவிட்டு, "லாபம் வராத விஷயத்தில்தான் பிராமணத்துவம் என்றெல்லாம் பார்ப்பார்களே தவிர, லாபம் என்று வந்துவிட்டால் அதையெல்லாம் மூட்டை கட்டித் தூர வைத்து விடுவார்கள். மற்றவர்கள் ஏமாந்து கோட்டை விட்டு விடுவார்கள்'' என்றான்.

பிறகு, ''என்னைப் பள்ளு, பறை என்று சொல்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. நான், உண்மையில் நிலத்தில் உழுது பாடுபட்டுச் சாகுபடி செய்து உணவு கிடைக்கச் செய்து உலகைக் காப்பாற்றுபவர்கள் இந்தப் பள்ளுப் பறைகள்தான் என்று சொல்லி அவர்களைத்தான் எந்தச் சமூகமும் முதல் மனிதர்களாகப் போற்ற வேண்டும் என்று சொல்கிறேன்.''

"நீங்கள் சொல்வது உண்மைதான்" என்றாள் அம்மா. அதுவும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பிராமணர்களிடையே அதிருப்தி எனக்கு மட்டும்தான் என்று இல்லை. அம்மாவுக்கும் உண்டு என்று எனக்குத் தெரியும். ஆனால், இவ்வளவு தூரம் வழியை விட்டுப் போய்ச் சிந்திக்க அம்மாவுக்கும் தெரிந்திருந்தது எனக்கு அதிசயமாக இருந்தது. மிரியத்தின் பங்கு இதில் கொஞ்சம் இருக்க வேண்டும் என்றும் தோன்றியது. ஏனென்றால் நான் அம்மாவிடம் இதையெல்லாம் பற்றி ஒரு தடவைகூடப் பேசியதில்லை .

அச்சமயம் மிரியமும், வாசுகியும் எங்களைத் தேடிக் கொண்டு வந்தார்கள். என்னையும் வள்ளுவனையும் பார்க்க வேண்டும் என்று பெரியவர் விரும்புவதாகவும், முடியுமானால் உடனே வருவது நல்லது என்றும் சொன்னாராம்.

"இரு அம்மா" என்று சொல்லிவிட்டு நானும் வள்ளுவனும் உள்ளே இருந்த, கிழவருக்காக ஒதுக்கி விடப்பட்டிருந்த வலது பக்க அறைக்குள் சென்றோம். அம்மாவும், மிரியமும், வாசுகியும் பேசிக் கொண்டு நின்றது எனக்கு அதிசயங்களிலெல்லாம் அதிசயமாகத் தோன்றியது. இதுவே ஏசு விளைவித்த அதிசயங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளலாம் போலத் தோன்றியது.

நாங்கள் உள்ளே போன போது அப்போஸ்தலர் தாமஸ் மண்டியிட்டுக் கண்மூடிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். சந்தடி செய்யாமல் இருவரும் சற்று நின்றோம். தியானத்தில் ஒரு கால் நாழிகைக்கும் அதிகமாகவே இருந்தார் தாமஸ். பிறகு கண் விழித்ததும் முதலில் வள்ளுவனைத்தான் வரவேற்றார். "உங்களைப் பற்றியும், உங்கள் அறிவு, புத்திசாலித்தனம், ஞானம், எல்லாம் பற்றியும் ஸெகியலும் மற்றவர்களும் எனக்குப் பலவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்."

"அவர்கள் என்னை நண்பனாக ஏற்றுக்கொண்டு விட்டவர்கள். என்னுடைய குறைகள் எதுவும் அவர்கள் கண்களில் படுவதில்லை. பட்டாலும் அவர்கள் அவற்றை மனத்தில் வாங்குவதில்லை'' என்றான் வள்ளுவன்.

‘‘உங்களை, 'என் ஏசுவைப் பின்பற்றி என் சிஷ்யனாக இருங்கள்' என்று சொல்ல எனக்குத் தகுதியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு வேளை ஏசுவே இங்கு வந்திருப்பாரேயானால் உங்கள் கவனத்தைக் கவரத்தக்க அளவில் அவரால் எதையும் சொல்லிச் செய்திருக்க முடியும். எனக்கே நம்பிக்கை ஏற்படாத விஷயத்தில் நான் ஒன்றும் செய்ய முடியாதவன்" என்றார் தாமஸ். "மற்றதெல்லாமும் நான் செய்கிறேன் என்று சொல்வது அதிகப் பிரசங்கித்தனமாகும். நான் எதுவும் செய்யவில்லை, என்னாலாகக் கூடியவரை என்னைச் செய்யச் சொல்லி, சொல்லச் சொல்லி, தேவகுமாரன் ஏசு என்னிடம் வாங்கிக் கொள்கிறார்." என்றார் தாமஸ்.

"நீங்கள் இன்று சொன்னதில் – பிரசங்கம் பாதி நடந்து முடிந்த பிறகுதான் நானும், வாதூலனும் வந்தோம் – சில விஷயங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. 'உங்கள் நண்பர்களை நேசியுங்கள், என்று சொல்வது சுலபம். ஆனால், நான் சொல்லுகிறேன் – உங்கள் எதிரிகளையும் நேசியுங்கள்' என்று சொன்னவன் தேவகுமாரனாகத் தான் இருக்க முடியும். மேலும் 'உனக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்ய முற்படுங்கள்! தீங்கு செய்யாதீர்கள்!' என்று ஏசு சொன்னதாகச் சொன்னீர்கள். இதையெல்லாம் பற்றி நான் வெகுகாலமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பவன். உலகம் இந்த மாதிரி உயரிய, மேன்மையான சிந்தனைகளை மேற்கொண்டு

நடத்திச் செல்லப் பக்குவம் பெற்றிருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை" என்றான் வள்ளுவன்.

"உலகம் பக்குவப்பட்ட பிறகு, இதையெல்லாம் எடுத்துச்சொல்ல தேவகுமாரன் வர வேண்டும் என்பதில்லையே'' என்றார் தாமஸ்.

"எப்படிப்பட்ட உண்மை அது!'' என்று நான் எண்ணிக் கொண்டேயிருக்கும் போது வள்ளுவன் சொன்னான்: "மேன்மையான சிந்தனைகளோ, தத்துவங்களோ ஞானமோ இங்கு ஒருக்காலும் அருகியிருந்ததில்லை. அவற்றிற்குப் பஞ்சமே கிடையாது. எங்கள் ஜைன மதத்தில் உயிருள்ள எதற்கும் அன்பு செலுத்துவதுதான் தலையாய கடமை என்று சொல்லி, உண்மை என்பதுகூட அது எங்கா வது யாருக்காவது தீங்கு விளைவிக்குமானால் அது உண்மையாகாது என்று சொல்லியிருக்கிறார்கள். பௌத்த மதத்தில் புத்தர், ஆசையை அழித்து விடு. உன் சகல துக்கங்களும் பட்டுப்போய் விடும்' என்று சொன்னார். இந்துக்கள், பிராமணர்கள் மற்றும் பல ஜாதியினர் என்று வழக்கத்தில் பிரித்துக் கொண்டிருந்தாலும்கூட, எல்லா மனிதர்களுமே ஒரே பிருமத்தின் உலகில் தோன்றும் சாயைகள் தான் என்றும் விரி வாகவே சொல்கிறார்கள். இன்னும் அந்த மாதிரி எத்தனை யெத்தனையோ சிந்தனைகள். உங்கள் ஏசுவின் வழி உலகில் எப்படிப் பயன்படுத்தப்படப் போகிறது, எப்படி மக்களால் பயன்படப் போகிறது என்று பார்க்க வேண்டும்" என்றான் வள்ளுவன்.

"ஏசுவைப் பின்பற்றுபவர்கள் என்ன எப்படிச் செய்யப் போகிறார்கள் என்று எண்ணும்போது எதிரேயுள்ள ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளை எண்ணிப் பார்க்கும்போது, எனக்கும் கவலையாகத்தான் இருக்கிறது என்று சொல்வது ஏசுவிற்குத் துரோகம் செய்வதாகாது என்றுதான் எண்ணுகிறேன். உங்கள் பயம் நியாயமானது. தேவகுமாரனே சொன்னமாதிரி நான் மனிதன் மனதில் அமைதியை நிலைநாட்டத்தான் வந்தேன். இருந்தாலும் கூர்மையான வாளாகவே வந்தேன். வாள் இருக்கும்போது வாள் வீசுவதும் துண்டாடுவதும் நியாயமாகவே போய் விடுகிறது" என்று தாமஸ் சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

பிறகு சொன்னார், "இதோ பாரேன். நானே இங்கு வந்திருக்கிறேன். ஏசுவின் பெயரையும், கொள்கைகளையும், மதத்தையும் பரப்ப எனக்கு என் ஏசுவிடம் முழு நம்பிக்கையும் இருக்கிறது என்றாலும் அவர் தயவால் அதிசயங்கள் நிகழ்த்த இயலுகிறது. செத்தவர்களைப் பிழைப்பிக்க முடியும். கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி, முடத்தை சொஸ்தப்படுத்த முடியும். பையில் எதுவுமில்லாமல் ஆயிரம், இரண்டாயிரம் பேருக்கு உணவு அளிக்க முடிகிறது. அவர் தயவால் என்னால் முடியும். இதெல்லாம் போதாது.

மிரியம் என்கிற அந்தச் சின்னப் பெண் சொல்கிறமாதிரி இதெல்லாம் சின்ன விஷயங்கள் – செப்பிடு வித்தைகள். தண்ணீரின் மேல் நடப்பது அவசியமா என்ன? படகில் சுலபமாகப் போய்விடலாமே! முக்கியமான விஷயம் என்னவென்றால், மனித ஆத்மாவைச் சுத்தப்படுத்துவது எப்படி; மனிதர்களுக்கிடையே உறவுமுறைகளை அன்புடன் ஸ்தாபித்து, அன்பு வழியில் எல்லோரும் செல்லுமாறு செய்வது எப்படி என்பதுதான். தேவனை நினைத்து மன்னிப்புக் கேள், உன் பாவங்கள் மன்னிக்கப்படும் என்று சொன்னால் பாவம் செய்வதற்கு அனுமதி தருவதாகவே நினைத்துவிடுகிற மனிதர்களிடையே நாம் வாழ்க்கை நடத்துகிறோம். பிறப்பே பாவத்தில் தொடங்குகிறது. ஏராளமான பாவங்களைச் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கி றோம். எங்கள் ஏசுதான் முன் நின்று எங்கள் பாவங்களுக்கெல்லாம் தன் ஆத்ம தியாகத்தால் மன்னிப்பு வாங்கிக் கொடுத்துவிட்டாரே என்று சொல்கிறவர்கள் மத்தியிலே நாம் இருக்கிறோம். எனக்குத் தெரிகிறது. இருந்தும் ஏசுவின் ஆளுகைக்குக் கீழ் வந்தபின், அவர் உபதேசங்களைக் கேட்டு, அதிசயங்களைக் கண்டு, அவருடன் உண்டு, உடுத்தி, நடந்து, பேசி சகஜமாகப் பழகிய பிறகு அவர் தெரிந்து செய்த மகாத் தியாகத்தை நேரில் கண்டு, அதன்பின், மரித்து எழுந்து மீண்டும் எங்களிடையே நடந்து இதைச் செய், இப்படிச் செய் என்று சொன்ன தையும் கேட்ட பிறகு, நான் ஏசுவின் ஆளுகையைத் தப்ப விரும்பினா லும் தப்பமுடியாது. காடு, மலை, வனம், வனாந்தரங்களைக் கடந்து போக்குப் போக்கென்று முன்பின் தெரியாத மக்கள் இடையே வந்தது. இந்தியா என்கிற தேசம் ஏசு செய்தியைப் பரப்ப என் பங்காகச் சீட்டு விழுந்த பின் எனக்கு மனமில்லாவிட்டாலும் கூட என்னையே கட்டுப் படுத்திக் கொண்டு வந்துள்ள என் அப்போஸ்தலத்தனம்கூட ஆயிரத் துக்கும் மேற்பட்ட ஆண்டு மறைந்துவிடும். நான் கொண்டாஃபர்ணஸ் ராஜாவிடம் இருந்ததோ, மலையாளப் பகுதியில் கோயில் எழுப்பி மதப் பிரசாரம் செய்ததோ, பிராமணர்களையும் அவர்கள் அதிசயங் களிலும் வென்று ஞானஸ்நானம் செய்வித்ததோகூட உலகிற்கு, உலகில் சரித்திரம் எழுதுபவர்களுக்கு, எத்தனையோ காலம் மறந்துவிடப் போகிறது என்று எனக்குத் தெரியும்" என்று கூறி நிறுத்தினார் அப்போஸ்தலர் தாமஸ்.

வள்ளுவன் எதுவும் சொல்லவில்லை. ஏனெனில் அப்போஸ்தலர் தாமஸ் என்ன சொல்ல வந்தார் என்பதும், அது இன்னும் சொல்லிப் பூர்த்தியாகவில்லை என்பதும் தெரிந்தது. எனக்கே அவர் பேச்சைக் கேட்பதே ஒரு பெரிய தேவகானத்தைக் கேட்பதுபோல இருந்தது. அவரையே பார்த்துக்கொண்டு பயபக்தியோடு நின்றேன் நான்.

‘‘நாங்கள் பன்னிருவர் ஏசு சென்றவிடமெல்லாம் அவருடன் சென்றோம். ஸைமன் என்பவர்தான் அவருடைய பிரதான சிஷ்யர் என்பது ஆரம்பம் முதலே, ஏசுவும் வற்புறுத்தியது எங்களுக்குத் தெரிந்த விஷயம். ஒரு சமயம் 'நீயே ஏசு என்கிற மனிதனை எனக்குத் தெரியாது என்று மூன்று தரம் கோழி கூவுமுன் ஒரே இரவில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்' என்று சொன்னார். வேறு ஒரு சமயம், 'எனது கொள்கைகளைப் பரப்ப அஸ்திவாரக் கல்லாக நான் ஸைமனை எண்ணுகிறேன். அதனால் பீட்டர் [கல்] என்று அவனுக்குப் பெயர் சூட்டுகிறேன்" என்று சொன்னார் ஏசு. ஸைமன் என்கிற பீட்டரின் அப்போஸ்தல அலுவல் ரோமாபுரி போன்ற மேலைநாடுகளில், அன்றைய நாகரிக உலகின் மத்தியில் நடைபெற வேண்டும் என்று, எங்கள் அப்போஸ்தல அலுவல்களைச் சீட்டுப் போட்டுப் பார்க்கும் போது விழுந்தது. ஏசுவின் கொள்கை மயமாக ரோமாபுரிதான் ஆகப் போகிறது என்பது சற்றும் தீர்க்க தரிசனம் இல்லாத எனக்கும்கூடத் தெரிகிறது. அதற்காக என் உழைப்பெல்லாம் வீண் போய்விடும் என்றோ , இந்தக் கீழை நாடும், பாரதமும் ஏசுவைப் பற்றிய வரையில் விழலாகிப் போய்விடும் என்றோ எண்ணவில்லை நான். ஒவ்வொரு வருக்கும் என்று ஒரு கடமையிருக்கிறது. அது காரணமாக ஒரு விதி ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்லி நிறுத்தினார் தாமஸ்.

வள்ளுவன் சொன்னான்: "அந்தக் கடமையை அறம் என்று நாங்கள் சொல்கிறோம். பிராமணர்கள் தருமம் என்று சொல்கிறார்கள். பௌத்தர்கள் வழி என்கிறார்கள் விதி என்பதிலும் இங்கு எல்லோருக் கும் பொதுவாக நம்பிக்கை உண்டு.’’

"என் கடமை, என் விதி என்று நான் நினைப்பதை எனக்குச் சுட்டிக்காட்டி அசைக்க முடியாததாகச் செய்துவிட்டுப் போய்விட்டார் ஏசுபிரான். அதை நான் தப்ப முடியாது. தப்பவும் விரும்பமாட்டேன். அதேபோல உங்கள் தருமம், விதி என்பதும் விதிக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். தாங்கள் ராஜகுருவாக, ஜைனரேயானா லும் ஜைனத்தை மீறி எல்லா மனிதர்களுக்கும் ஒரு பொதுவான வாழ்க்கை முறையை ஸ்தாபிக்கப் பிறந்தவர் என்பதும் எனக்கு நிதரிசனமாகவே தெரிகிறது. நாம் இருவரும் ஒருவிதத்தில் மகத்தான தோல்வியை அடையப் போகிறவர்கள். நமக்குள் சண்டையும் இல்லை, வேற்றுமையும் இல்லை’’ என்று சொல்லி நிறுத்தினார், தாமஸ்.

"என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது’’ என்றான் வள்ளுவன்.

"தெரிந்து கொள்வீர்கள் என்றுதான் விஸ்தாரமாகச் சொன்னேன்."

"வாதூலனை என்னிடமிருந்து பிரித்து நீங்கள் அழைத்துக் கொள்ளப் போகிறீர்கள்!"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இத்தனை பெரிய விஷயங்களில் நான் எங்கே நடுவில் வந்தேன்? எனக்கும் இவர்கள் பேசிக் கொண்டிருப்பதற்கும் என்ன சம்பந்தம்? புரியவில்லை.

"வாதூலன் என்கிற இந்த வாலிபனைத் தேடித்தான் நான் இங்கே இந்தியாவின் கீழைக் கடற்கரையில் மயிலாப்பூர் வந்திருக்கிறேன் என்றே சொல்லவேண்டும். அவனை நான், கிழக்கு நோக்கி எங்கள் நாட்டிலிருந்து பயணம் கிளம்பும்போதே கண்டுவிட்டேன். கனவில் என்று சொல்லமாட்டேன். எது கனவு, எது நிஜம் என்று யார் சொல்வது? எனக்கு இப்போது அறுபத்தி ஐந்து வயதாகிறது. என் மகாத் தியாகம் அவன் மூலம்தான் நிறைவேறப் போகிறது. ஆனால், ஏசுவின் மகாத் தியாகம் யூதாஸினால் நிறைவேறிய மாதிரி இல்லை. மற்ற சிஷ்யர்களால் நிறைவேறிய மாதிரி வேண்டுமானால் சொல்ல லாம். வாதுலா! உனக்கு அடுத்த வாரம் ஞானஸ்நானம் செய்து வைத்து விடுகிறேன். அதே தினம் உன் தாயாரும் ஞானஸ்நானம் பெறுவார்கள். அவர்களுக்கும் ஏசுவின் வழியைப் பின்பற்ற வேண்டிய மனப்பக்குவம் வந்துவிட்டது. நீங்களிருவரும் என் வருகைக்காகத்தான் காத்திருக்கிறீர்கள். வள்ளுவனோடு நீ பழகி மனப்பக்குவம் அடைந்ததெல்லாம் இதற்காகத்தான். ஆனால், வள்ளுவன் வழியை உன்னால் பின்பற்ற முடியாது. ஏசு வழியை உன்னால் பின்பற்ற முடியாது. ஏசு வழியை என் மூலமாகப் பெறலாம்'' என்றார் தாமஸ்.

எனக்குப் பிராமணர்களிடையே விசுவாசம் குறைவுதான். வள்ளுவன் போன்ற கீழ்ச்சாதி என்று கூறப்பட்ட நண்பனுடன் சுற்றிக் கொண்டிருந்தேன் என்பதும் உண்மைதான். ஆனால், அதற்காக எங்கேயோ. ஏதோ சொன்ன ஏசுவைப் பின்பற்ற முடியுமா? நான் பின்பற்றத் தயாராகத் தாமஸுடன் வந்துவிட்டாலும், அம்மா வருவாளா?

எனக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது. அப்படியெல்லாம் நடந்துவிடக் கூடாதே என்று பயமாகவும் இருந்தது. மயிலாப்பூர் பிராமணர்கள் என்ன சொல்வார்கள்? ஒரு பிராமணப் பெண்மணியும், அவள் பிள்ளையும் ஏசுவின் மதத்தில் சேர்த்து விட்டால் பிராமணர்கள் என்ன சொல்வார்கள் – என்ன செய்வார்கள் என்று நினைக்கவே பயமாக இருந்தது. என்னையும் அம்மாவையும் கொன்று போட்டுவிடுவார்கள். அப்போஸ்தலர் தாமஸையும் கொன்று விடுவார்கள்.

அவர் மகாத் தியாகம் என்று எதைச் சொன்னார்? தன்னையே தியாகம் செய்துகொள்ளத் தயாராக. என் மூலமே அந்தத் தியாகம் நிறைவேறவேண்டும் என்று நினைப்பது போல அல்லவா இருந்தது!

வள்ளுவனைப் பார்த்தேன் நான்.

"ஏசுவையும், அவர் வாழ்க்கையைப் பற்றியும், அவர் உபதேசங்களைப் பற்றியும், அவர் மரணம் பற்றியும், அவர் துயர்கள் பற்றியும் இன்னும் விரிவாக நீங்கள் சொல்லக் கேட்க வேண்டும் என்று எனக்கு ஆர்வம்'' என்றான் வள்ளுவன்.

"நான் வேறு எதைப் பற்றிப் பேசப் போகிறேன், எனக்கு வேறு என்ன தெரியும்? ஏசுவின் பிறப்புக்கும், உபதேசங்களுக்கும் அதிசயங்களுக்கும், மரணத்துக்கும் சாட்சியாக வந்து பிறந்தவன் நான். அதையே என் அதிர்ஷ்டமாகவும் சொல்லலாம். அதையே என் மகா துரதிருஷ்டமாகவும் கொள்ளலாம். வாதூலனுக்கு இருக்கிற பதவியும், அறிவும்கூட எனக்குக் கிடையாது. செத்துப்போன லாஸரஸ் என்கிற தன்னிடம் அன்பு வைத்த ஒரு மனிதரை உயிர்ப்பித்தார் ஏசுபிரான். அவன் செத்துப் பிழைக்கும் முன் அவன் சகோதரியின் மகனாக நான் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும்போது 'வா என்னோடு!' என்று கட்டளையிட்டு அழைத்தார். வந்துவிட்டேன். அப்போது எனக்குப் பதினைந்து வயதிருக்கும். அப்போதே அவருக்கு ஐந்தாறு சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் மீனவர்கள். மீன் பிடிக்கிற தொழிலை விட்டுவிட்டு மனிதர்களைப் பிடிக்க வாருங்கள் என்று அழைத்து வந்தார். மனிதர்களைத் தூண்டில் போட்டு இழுக்கும், வித்தையில் நிபுணர் எங்கள் ஏசு. எங்களுக்கு அந்த வித்தையில் கொஞ்சம் கொஞ்சம் பகிர்ந்து தந்தார். ஆனால், ஒன்று – 'யார் என்னைப் பின்பற்ற வேண்டுமானாலும் தந்தை, தாய், சுற்றம், சொத்து, சுதந்திரம் என்று பாராட்டிக் கொண்டு திரும்ப முடியாது. இரண்டு யசமானர்களுக்கு யாரும் சேவை செய்ய முடியாது. என்னைப் பின்பற்றுபவன் எனக்கு மட்டும் சேவை செய்பவனாக இருக்க வேண்டும்' என்றார். ஒரு சிஷ்யன் அவரை யூதப் பூசாரிகளிடமும், கோயில் அதிகாரிகளிடமும் காட்டிக் கொடுத்து விட்டான். மற்றவர்கள் அவர் வகுத்த வழியைத் தாண்டவில்லை. தாண்ட இயலாதவர்கள்" என்றார் தாமஸ்.

அதே நிபந்தனையில்தான் நானும் அவரைப் பின்பற்ற வேண்டும் என்று தாமஸ் நினைத்தார் என்பது தெளிவாகவே தெரிந்தது. அதற்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ என்று எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. வள்ளுவனுடன் பேசிக் கொண்டிருந்தாரே தவிர, உண்மையில் என்னுடன்தான் பேசுகிறார் போலும்.

தப்புவதற்கு ஏதாவது வழியிருக்கிறதா என்று பார்ப்பவன் போல சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு சொல்ல எதுவும் அற்று நின்றேன்.

# அத்தியாயம் 20

எங்கேயோ என்னை யாரோ கட்டி இழுத்துக்கொண்டு போவது போல இருந்தது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது.

வள்ளுவன் போகக் கிளம்பியவுடன், அப்போஸ்தலர் தாமஸிடம் மரியாதையாகப் 'போய் வருகிறேன்' என்றுகூடச் சொல்லாமல், பேசினால் அவர் பதில் சொல்லுவார். அந்தப் பதில் என்னை எப்படிப் பாதிக்குமோ என்று பயந்து கொண்டே நானும் வள்ளுவனு டன் அப்போஸ்தலர் தாமஸிடமிருந்து தப்பித்தால் போதும் என்று வெளியே வந்து விட்டேன்.

நான் தன்னுடன் வருவதைக் கண்ட வள்ளுவன் "நீ பயந்து, மறுத்து எதுவும் பயனில்லை வாதூலா... நடக்க வேண்டியது நடந்தே தீரும். என்னுடன் நீ இருப்பது இனி சாத்தியமில்லை. இதுவரையில் இணைபிரியாத தோழர்களாக இருந்துவிட்டோம். உன் நட்பு எனக்கு எந்தெந்த வகையில் உதவியிருக்கிறது என்று உனக்குத் தெரியாது. எனக்கு அதை எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் கிடையாது. பிரிய வேண்டிய காலம் வந்துவிட்டது. பிரிய வேண்டியதுதான்" என்றான் வள்ளுவன்.

என் மனத்தில் விசுவரூபம் எடுத்திருந்த அந்தக் கேள்வியைக் கேட்டேன். "அவர் மகாத் தியாகம் என்று சொன்னது உயிர் விடுவதைத்தானே?" என்று.

"அதைத்தான் என்று தோன்றுகிறது!"

''என் மூலம் தன் மகாத் தியாகம் நேரிடப் போகிறது என்கிறார். நான் அவர் பிழைப்பதற்குக் காரணமாக ஓரளவுக்காவது இருந்தேன். அவர் சாவதற்குக் காரணமாக இருக்க எனக்கு இஷ்டமில்லை."

"உன் இஷ்டம் என்பதெல்லாம் ஏது? எது விதிக்கப்பட்டிருக்கிறதோ அது நடக்கும். உன்னைக் காட்டி உன் சம்பந்தப்பட்டவர்களால்தான் மகாத் தியாகம் நிறைவேறும் என்று சொன்னாரே தவிர, உன்னால் நடைபெறும் என்று அவர் சொல்லவில்லை. அது பற்றிக் கவலைப்படாதே" என்று ஆறுதல் கூறினான் வள்ளுவன்.

"நானும் - அதை மகாத் தியாகம் என்று சொல்ல முடியாது. வெறும் தியாகம் என்று வேண்டுமானால் சொல்லலாம்.....! என் தியாகத்துக்கான காலம் வந்து விட்டது. சுதந்திர மனிதனாகக் கவலையேயில்லாமல் திரிந்து கொண்டிருந்த காலம் போய், ராஜகுருவாக அநாவசியமான பொறுப்புக்களை

ஏற்று, தமிழில் கவிதை செய்து சுகித்து ஆனந்தித்துக் கொண்டிருப்பது போல, பிராகிருதத்தில் மத நூல்கள் எழுதிக் கட்டுப்பட்டு இருக்க வேண்டிய காலம் வந்து விட்டது என்றுதான் தோன்றுகிறது.

"காஞ்சிபுரம் போவதாக நிச்சயித்து விட்டாயா!''

‘‘நிச்சயம் செய்வதும், நிச்சயம் செய்யாததும் என் கையில் இல்லையே. அப்போஸ்தலர் தாமஸ் வருகையும் நீ அவர் பிரதான சிஷ்யனாகப் போவதுமே கூட இந்த என் முடிவிற்கு காரணமாக அமையலாம் போல இருக்கிறதே! உன் விதியை எப்படி நீ தப்ப முடியாது என்று நான் சொல்கிறேனோ, அதே மாதிரி என் விதியையும் நான் தப்ப முடியாதுதானே! அவரவர் வழி போய்த்தானே ஆக வேண்டும்."

‘‘பெரியவர் தாமஸிடம் சொல்லாமல் கொள்ளாமல் வந்து விட்டேன். அவர் தப்பாக நினைத்து விட்டால் என்ன செய்வது என்றும் பயமாக இருக்கிறது" என்றேன்.

‘‘பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. உன் மனப் போராட்டம் அவருக்குத் தெரியாமலிருக்க நியாயம் இல்லை . அவருக்கும் மனமுண்டு. எத்தனையோ மனப்போராட்டங்கள் கடந்து மேலே வந்திருப்பவர் அவர். உனக்குக் குருவாக அவர் அமைவது உன் அதிர்ஷ்டமே" என்றான் வள்ளுவன்.

"என்ன பிரமாதமான யோசனைகள் நடக்கின்றன? ஏன் இப்படித் துக்கமாக முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறார் இந்தப் பிராமணர்? என்று கலகலவென்று நகைத்தபடியே கேட்டுக்கொண்டு வந்தாள் மிரியம்.

என்னையும் தன்னைப்போல சாமியாராக, கல்யாணம் செய்து கொள்ளாதவனாக, ஆயுள் பூராவும் பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறாரோ தாமஸ்? இந்தக் கேள்வியை நான் யாரைப் போய்க் கேட்பது? வாயைத் திறந்து கேட்க முடியுமா? நான் எதுவும் கேட்டுப் பதில் பெற்றிருக்கக்கூடிய வள்ளுவனும் நகர்ந்து கொண்டிருக்கிறான். இது எனக்கு மிகவும் இக்கட்டான நேரம் தான்!

மிரியத்துக்கு எதுவும் பதில் சொல்வது எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. பதில் சொல்லாமல் சமாளிப்பதும் சாத்தியமில்லை. அதற்குள் வள்ளுவனே பதில் சொல்லி விட்டான். "இந்த வாதூலனைத் தேடித்தான் ஜெருசலேத்திலிருந்து காடு, மலை, வனம், வனாந்திரங்களையும், கடலையும், புயலையும் தாண்டி இங்கு வந்திருப்பதாக அப்போஸ்தலர் தாமஸ் கூறுகிறார்."

"அதை என்னிடம் அப்பவே சொல்லிவிட்டார். அவருடைய அம்மாவுக்குப் பரமதிருப்தி. அவர் அப்பா அவரை உதவாக்கரை என்கிறார். அவர் யாருக்கோ உதவப்போகிறார் என்பது அவர் அம்மாவுக்கு மகிழ்ச்சியளிக்கிறது!''

"எதற்கு உதவப் போகிறேன் என்று அம்மாவுக்குத் தெரிந்தால் மகிழ்ச்சியெல்லாம் போய்விடும்'' என்றேன்.

"தன் வாழ்க்கை லட்சியம் நிறைவேற நீங்கள் தான் உதவப் போகிறீர்கள் என்று தாமஸ் சொன்னார்'' என்றாள் மிரியம்.

அதன் அர்த்தம் அவளுக்கே புரியவில்லை என்றால் அம்மாவுக்கு எங்கே புரிந்திருக்கப் போகிறது. நான் விரித்துச் சொல்லலாமோ என்று எண்ணியபடி பேசாதிருந்தேன். "அதெல்லாம் பற்றி எதுவும் யோசிக்கத் தேவையில்லை வாதூலா. ஒவ்வொருவர் ஒவ்வொரு காரியத்திற்காகப் பிறந்திருப்பவர்கள். லட்சியங்கள் நிறைவேறுவது முக்கியம். லட்சியமேயில்லாமல் வாழ்வதுதான் சரியில்லாத காரியம். பேசிப் பயனில்லை. நம் கையில் அகப்படாத விஷயங்களைத் தேடிக் கொண்டே இருக்கக் கூடாது'' என்றான் வள்ளுவன்.

சுலபமாகச் சொல்லிவிட்டான். உலகத்தின் கனம் எல்லாம் தோளில் ஏறி உட்கார்ந்தது போல இருந்தது. இனிமேல் என்னால் நிமிர்ந்து நடைபோட முடியாது என்று தோன்றியது. நான் வள்ளுவனுடன் அவன் வீட்டுக்கு என் சாமான்கள் மூட்டையை எடுத்து வரக்கூடப் போகவில்லை .

அம்மா வீட்டுக்குப் போய்விட்டாள் என்று தெரிந்துகொண்டு, அம்மாவுடன் அவசரமாகப் பேச வேண்டிய அவசியத்தைத் தெரிந்துகொண்டு, அக்கிரஹாரத்தில் என் வீட்டை நோக்கிக் கிளம்பினேன். 'என் வீடு' என்று சொல்லிக்கொள்ள எனக்கு அருகதை ஏது? என் அப்பா வீடு என்று சொல்லலாம். அதுவும் இனிமேல் சரியில்லை என்று தோன்றுகிறது.

அம்மாவும் வீட்டில் என்னுடன் மனம் விட்டுப் பேசு வதற்காகத்தான் காத்திருந்தாள். சாப்பாடுகூட முக்கியமில்லாமல் போய்விட்டது. பகல் பூராவும் ஒரு விநாடிகூட வீணாக்காமல் பேசினோம், பேசினோம் – அப்படிப் பேசினோம். இருவரும் அந்தரங்கத்தில் இருந்த விஷயங்களைப் பற்றி ஒளிவு மறைவில்லாமல் பேசவில்லை. சுற்றி வளைத்து மொத்தத்தில் மிரியம், வள்ளுவனின் மனைவி வாசுகி, இவர்களைப் பற்றியும் ஸெகியல், ஸெகியல் வீட்டிற்கு விருந்தினராக வந்திருக்கிற கிழவர் தாமஸ், அவர் ஏசுபிரானை பற்றிச் சொன்ன விஷயங்கள், எல்லாவற்றையும் பற்றி அம்மா

பேசினாள். நாலைந்து நாட்களாகவே அவள் தாமஸின் பிரசங்கங்களையும், அங்கு அவரைச் சுற்றி நடப்பவற்றையும், கவனித்து வருகிறாள். மிரியம் வந்து தினமும் அழைத்துப் போகிறாளாம் அப்பா மாயவரத்திற்குக் கிளம்பிய இரண்டாவது நாளே 'சந்தர்ப்பத்தை விட்டு விடக்கூடாது. வெளியுலகம், ஒன்று இருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்' என்று கிளம்பி விட்டாள் அம்மா. ஓரளவுக்குத் தெரிந்து கொண்டு விட்ட மாதிரியும் தெரிகிறது.

"உன்னைத் தேடியேதான் இவ்வளவு தூரம் வந்திருப்பதாகச் சொல்கிறார் கிழவர்!'' என்றாள் அம்மா.

"என்னைத் தேடியா?" என்று கேட்டேனே தவிர, நான் என் மனத்திலிருந்த பயத்தை அம்மாவிடம் சொல்லவில்லை. சொல்ல வாயெழும்பவில்லை. அப்படியெல்லாம் நடக்காதிருந்து விடவேண்டும் – அதைப் பற்றிச் சிந்திக்காதிருந்தால், தவிர்த்துவிடலாமோ என்று ஒரு நினைப்பு.

"ஏசு என்கிற குருவைப் பற்றி அவர் பேசுகிற போதெல்லாம் அந்த ஏசுவே உயிர் பெற்று என் கண் முன் நிற்பது மாதிரித் தோன்றுகிறது. மிரியமும் அப்படித்தான் உணருகிறாள். அவரைக் கேட்பவர்கள் எல்லாரும் அப்படித்தான் சொல்கிறார்கள். கிழவர் லேசுப்பட்ட கிழவர் இல்லை, இத்தனைக்கும் அவருக்கு எழுதப் படிக்கக்கூட அவ்வளவாகத் தெரியாதாம்!"

'எனக்கும் எங்க அப்பாவுக்கும் எழுதப் படிக்கத் தெரியும். என்ன லாபம்!' என்று சொல்ல வாயெடுத்தேன். சொல்லவில்லை அப்பாவைப் பற்றி இந்தச் சமயம் பேச வேண்டாம் என்று எண்ணினேன்.

"தமிழ் நன்றாகப் பேசுகிறாரே! எங்கே கற்றுக் கொண்டாராம்?" என்று கேட்டேன்.

‘‘அதையும் பிரசங்கத்திற்குப் பின் ஒரு நாள் யாரோ கேட்டார்கள். அது குருவின் அருள் என்று சொல்லி, தனது அப்போஸ்தல சிஷ்யர்களை உலகெங்கும் சென்று தன் பெயரைப் பரப்பச் சொன்ன ஏசு, நீங்கள் எங்கு எந்த அந்நியப் பிரதேசத்திற்குச் சென்றாலும், அந்த அந்நிய மொழி உங்களுக்குச் சரளமாக வரும் என்று சொல்லி அனுப்பினாராம். அவர் யாரிடமும் தமிழ் என்று தனியாகக் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை’’ என்றாள் அம்மா.

"இதுவும் ஒரு அதிசயம்தான்" என்றேன். "ஏசுபிரான் செய்த அதிசயங்களைப் பற்றி ஒரு நாள் விரிவாகச் சொன்னார் தாமஸ். கூன், குருடு, செவிடு

நீங்கியதும் நோய் தீர்ந்ததும், செத்தவர்கள் பிழைத்து எழுந்ததும் பற்றி நிறையச் சொன்னார். அதனாலேயே சாதாரண மக்கள் அவரை தேவனின் மகன் என்று ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்ததாகவும், யூத மத கோயில் பூசாரிகள் அவர் சாத்தானின் உதவியுடன், அதாவது தேவனுக்கு எதிரியாக உள்ள சாத்தானின் உதவியால் இதையெல்லாம் செய்கிறார் என்று சொல்லி, தங்கள் பழக்கவழக்கங்களை அவர் விரோதித்து தங்கள் பிழைப்பை அவர் கெடுத்து விடுவார் என்கிற பயத்தினாலேயே அவரைக் கொல்லச் சதி செய்தார்கள் என்றும் சொன்னார்."

"செத்துப் பிழைத்தவர்கள், கூன் குருடு நீங்கியவர்கள் பின்னர் என்ன செய்தார்கள் என்பது பற்றி ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டேன் நான். முக்கியமாக அம்மா எந்த அளவிற்கு இதையெல்லாம் புரிந்து கொண்டிருக்கிறாள் என்று அறிந்து கொள்வதற்காகவே கேள்விகள் கேட்டேன்.

"லாஸரஸ் என்ற செத்துப் பிழைத்த மனிதன் தாமஸுடைய தாய்மாமனாம். அவர் சாகக் கிடக்கும் போதே அவர் சகோதரிகள் இருவரும் ஏசுவுக்கு சொல்லியனுப்பினார்களாம். அப்போது ஏசுவுக்கு எதிராகச் சதி செய்து கொண்டிருந்தவர்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது. ஏசுவின் சிஷ்யர்கள் அவர் அங்குபோக வேண்டாம், போனால் யூத கோயில் அதிகாரிகள் ஏசுவைக் கொன்று விடுவார்கள். ஜெருசலேத்துக்கு இரண்டு மைலில் உள்ள ஊர் அது என்று சொன்னார்களாம். ஏசுவும் நாலைந்து நாள் யோசித்துவிட்டு காலந்தாழ்த்தியே கிளம்பினாராம். அவர் கிளம்புவதாக முடிவு செய்ததும், 'நாங்களும் உடன் வருகிறோம்; உங்களுக்கு நேருவது எங்களுக்கும் நேரட்டும்.' என்று அப்போஸ்தலர்கள் பன்னிருவரும், தாமஸ் உட்பட போனார்களாம். இதற்குள் லாஸரஸ் இறந்து போய் மூன்று நாட்களாகிவிட்டன. சாவுக் கட்டுகள் எல்லாம் கட்டி அவன் முகத்தையும் மூடிப் புதைத்து விட்டார்களாம். 'ஏசுவே! நீ இங்கிருந்திருந்தால் அவனைச் சாக விட்டிருக்கமாட்டாயே!' என்று மார்த்தா சொன்னாளாம். அதனாலென்ன? லாஸரஸ் மரித்ததும் என் பிதாவின் பெருமையை ஸ்தாபிப்பதற்காக,' என்று சொல்லி அவன் புதைக்கப்பட்டிருந்த கல்லறைக்குச் சென்று, கல்லறை மேல் அதை மூடியிருந்த கல்லைப் புரட்டிப் பிறகு, 'ஓ ! லாஸரஸ்! எழுந்து வா,' என்று கூறினாராம். சாவுக் கட்டுக்களுடன் எழுந்து வந்து லாஸரஸ், 'ஏசுவே! நீ கடவுளின் மகன்!' என்று சாட்சி கூறினானாம்!" என்றாள் அம்மா.

"அதெல்லாம் சரிதான். செத்த பின் உயிரூட்டப்பட்டுப் பிழைத்த லாஸரஸ் அதற்குப் பின் என்ன ஆனான்?"

"ஏசுவின் பக்தனாக, ஏசுவின் புகழைப் பாடிக் கொண்டு, ஏசுவின் சக்திகளுக்கு ஒரு சாட்சியாக, வழக்கமான வாழ்வு வாழ்ந்து கொண்டு நெடுங்காலம் இருந்ததாகவும் பின்னர் பீட்டர் என்கிற ஏசுவின் பிரதான சிஷ்யராக ரோமாபுரியில் கோயிலை ஸ்தாபித்ததும், ரோமாபுரிச் சக்கரவர்த்திக்கு ஏசுவைப் பற்றிச் சாட்சி சொல்ல அழைக்கப்பட்டுப் போனதாகத் தான் கேள்விப்பட்டதாகவும் தாமஸ் சொன்னார்.

"பாவம்! லாஸரஸ்!" என்றேன் நான்.

"அதேபோலக் கோயிலுக்குப் பக்கத்தில் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த பார்டிமிபஸ் என்கிற குருடனுக்குக் கண்கள் தந்து அவனை முழு மனிதனாக்கினாராம் ஏசு."

"பிச்சையெடுக்கும் அவன் பிழைப்பும் போயிருக்குமே! 'பாவம் குருடன்' என்று அனுதாபத்துடனாவது நாலு காசு போடுவார்கள். குருடு நீங்கிய பிறகு அவன் என்ன செய்வானாம்!" இப்படி அம்மாவை மடக்கிக் கேள்வி கேட்பது எனக்கு சுலபமாக இருந்தது. தாமஸை நேரிடையாக என்னால் இப்படிக் கேள்வி கேட்டிருக்க முடியாது என்று தான் தோன்றியது.

"ஏசுவுக்கு சாட்சியாக அவனும் பிரயோசனப்பட்டான் என்பதுடன் அவன் வாழ்க்கையைப் பற்றி வேறு எதுவும் சொல்லவில்லை அப்போஸ்தலர்'' என்றாள் அம்மா.

"தன் வாழ்க்கைப் பூர்த்தியே ஏசுவுக்குச் சாட்சி சொல்வதுதான் என்று எண்ணுகிறார் அப்போஸ்தலர் தாமஸ்."

"ஏசுவை நம்பி ஏசுவுக்குச் சாட்சியாக நிற்பதைத் தவிர வேறு பாக்கியம் எதுவும் எந்த மனிதனுக்கும் கிடைக்காது என்றுதான் அவர் முழுமனதுடன் நம்புகிறார்" என்று அம்மா சிறிது நேரம் கழித்துச் சொன்னாள்: ''தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும்போதுகூட அவர் தனக்கு ஏசுவைப் பற்றி ஏற்பட்ட சந்தேகங்களையும், அவற்றைத் தீர்க்க ஏசு எடுத்துக் கொண்ட வழிகளையும் பற்றி ஒரு சமயம் சொன்னார்."

"நீ மிகவும் கவனமாகத்தான் பெரியவர் சொல்வதைக் கேட்டிருக்கிறாய்!'' என்றேன் நான் சற்றுக் கிண்டலாகவே.

அம்மா தயங்கினாள். "மற்றவர்கள் பேசுவதைப்போல இந்தக் கிழவர் பேசவில்லையே! அவர் பேசுவது எதையும் கவனமாக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய அளவில்தான் பேசுகிறார் அவர். அவர் சொல்வது பசுமரத்தில் அடித்த ஆணியாய் மனத்தில் பதிந்து விடுகிறது.

மனத்திலிருந்து மறையவும் மாட்டேன் என்கிறது. ஒருதரம் அவர் சொல்வது கேட்பவர் மனத்தில் அப்படியே பதிந்து விடுகிறது."

“கேட்பவர் மனப் பக்குவத்தைப் பொறுத்தது என்று வள்ளுவன் சொல்லுவான்."

“இருக்கலாம். கேளு. ஏசு சிலுவையில் மரித்த பின் மூன்று நாளில் உயிர்த்தெழுந்து முதன்முதலாக விலை மாதாக இருந்து மனம் வருந்தி ஏசுவின் பக்தையாக மாறிய மாக்டலனா மேரியின் கண்களில்தான் பட்டாராம். 'என் சிஷ்யர்களுக்குச் சொல்லு, நான் உயிர் பெற்று விட்டேன் என்று சொல்லு' என்று சொன்னாராம். மற்ற சிஷ்யர்கள், அவர் உயிர் பெற்று விட்டதை நம்பியபோது இந்தத் தாமஸ் நம்பவில்லையாம். ஏதோ சும்மா கதை சொல்கிறாள்: வேண்டாதவர் கட்டிவிட்ட கதை என்று சொல்லி விட்டாராம். பின்னரும், 'ஏசு இறக்கும் போது அவர் விலாவில் ஈட்டியால் குத்தினானே ஒருவன், அந்தக் காயத்தில் விரலை வைத்துப் பார்த்தாலொழிய அதே ஏசுதான் உயிர்பெற்று வந்திருக்கிறார், என்று நான் நம்ப மாட்டேன் என்று தாமஸ் சொன்னதன் பேரில், சக சிஷ்யர்கள் எல்லோரும் 'சந்தேகப் படுகிற தாமஸ்' என்று அவருக்குப் பெயர் வைத்து விட்டார்களாம்.’’

"இதை அவரே சொன்னாரா?"

"ஆமாம். இதற்குச் சில நாட்களுக்குப்பிறகு பதினொரு சிஷ்யர்களும் ஒரு இடத்தில் சாத்திய ஒரு கதவுக்கப்பால் இருக்கும்போது, ஏசு அவர்கள் முன் தோன்றியதுடன் நில்லாமல், தாமஸையே நேரிடையாக அணுகி, 'நான் உயிர்பெற்று எழுந்ததை நம்பமாட்டேன் என்றாயே, இப்போது என்ன சொல்லுகிறாய்?' என்று கேட்டாராம். தாமஸ் பதில் தரவில்லை. இதோ அந்த ரோமானியன் குத்திய ஈட்டி பாய்ந்த இடம். கைவிரலை வைத்துப் பார்' என்று தாமஸின் வலது கையை ஏசுவே எடுத்து அவர் ஆள்காட்டி விரலை தன் விலாவில் ஈட்டி பாய்ந்திருந்த காயத்தில் வைத்து, 'பார்த்துக்கொள்' என்று சந்தேகத்தை நிவர்த்தி செய்தாராம்..."

இதைச் சொல்லும்போது அம்மாவுக்கு அழுகையே வந்துவிட்டது.

ஏசு மகான்தான் சந்தேகமில்லை. ஒரு சிஷ்யனின் சந்தேகத்தைப் போக்குவதற்காக ஈட்டிக் காயத்தைக் காட்டி விரலை வைத்துப் பார் என்று சொல்கிற அளவுக்கு....

எனக்கு மிக மிக மனக் குழப்பமாக இருந்தது.

# அத்தியாயம் 21

வழக்கமாக, வீட்டிலிருக்கப் பிடிக்காத நேரமெல்லாம் நான் வள்ளுவனைத் தேடிப் போய்விடுவேன். இது ஒரு பத்து பதினைந்து ஆண்டுகளாகவே பழக்கம். அப்பா சொன்னது உண்மைதான். அவனோடு ஊர் சுற்றிக் கொண்டு, பலவிதமான விஷயங்களைப் பற்றியும் பேசி சிந்தித்து விவாதித்துக் கொண்டிருப்பது எனக்கு மிகவும் பிரியமான காரியம். இந்த வள்ளுவனுக்குத்தான் எத்தனை விஷயங் கள் எப்படித் துல்லியமாகத் தெரிகின்றன என்று ஆச்சரியத்துடன், வாயைப் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருப்பேன்.

விவாதம், சிந்தனை என்று சொன்னேனே தவிர வள்ளுவனுடன் விவாதம் செய்யக்கூடிய அளவுக்கு எனக்கு அறிவு, உலக ஞானம் போதாது என்பதை நான் ஆரம்ப நாட்களிலேயே உணர ஆரம்பித்து விட்டேன். அறிவு, உலக ஞானம் என்பதை வள்ளுவன் ஒருபோதும் ஒப்புக் கொண்டதில்லை. அவனுக்குத் தானாகத் தேடி நூலறிவு பெற்றுக்கொண்ட கல்வி ஞானம் கொஞ்சம் உண்டுதான். தமிழ், சமஸ்கிருதம், பிராகிருதம் என்கிற மூன்று மொழிகளிலும் படிக்க வேண்டிய நூல்களையெல்லாம் படித்திருக்கிறான். அதைத்தவிர வேறு யார் யாரிடம் என்னென்ன கேட்டு அறிந்து கொள்ளலாமோ அத்தனையையும் கேட்டுக் கேட்டு அறிந்து கொண்டிருக்கிறான். புத்தனைப் பற்றியும், மஹாவீரனைப் பற்றியும் மற்றும் ஹிந்து மத முனிசிரேஷ்டர்கள், ரிஷிகள் பற்றியும் அவனுக்குத் தெரிந்தது இந்த உலகில் வேறு யாருக்குமே தெரியாது என்று எண்ணுகிறேன்.

தனக்கு குருவாக அவன் யாரையும் சொல்லி நான் கேட்டதில்லை. "பல குருமார்களிடம் நான் பாடம் கற்றிருக்கிறேன்" என்று சில சமயம் சொல்லுவான். “இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன். கற்று முடிய வில்லை ," என்பான். ஓரோர் சமயம், "என் தாயார்தான் என் முதல் குரு. என் தகப்பனார் இரண்டாவது குரு" என்பான். ஆதியும், பகவனும் உண்மையிலேயே அடக்கமும், அறிவும் உள்ளவர்கள். நான் வள்ளுவ னின் அம்மாவுடன் பல சந்தர்ப்பங்களில் பலப்பல விஷயங்களைப் பேசியிருக்கிறேன். சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி அவன் வாயிலிருந்து பழமொழிகள் உதிரும். அம்மாவுடைய பழமொழிகளைத் தொகுத்தது போல ஒரு நூல் எழுத முயன்று கொண்டிருக்கிறேன்' என்று ஒரு சமயம் சொன்னான் வள்ளுவன். அந்நூலிலிருந்து பல பகுதிகளைத் தான் காஞ்சிபுரம் வித்வத் சதஸ்ஸில் அவன் அரங்கேற்றினான்.

அறிவு, சிந்தனை, ஞானம் என்று சொல்கிறதனால் வள்ளுவனை மிகவும் அகம்பாவ மமதை கொண்டவன் என்று ஒருவரும் நினைக்க முடியாது. இத்தனை அறிவும், ஞானமும் இருந்தால், பிராமணனாக இருந்தால் எத்தனை படாடோபமாக, அமர்க்களமாக, தலை குனியா திருக்கப் பழகி விடுவான் ஒருவன். அகங்காரம் என்கிற விஷயமே வள்ளுவனிடம் கிடையாது. ஒரு ஏழைத் துறவியைப் போன்றவன் அவன். துறவு மனப்பான்மையுடன் குடும்பப் பாசமும், அந்தக் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்கிற அன்பும் இருந்தன அவனுக்கு. அவனே ஒரு சமயம் என்னிடம் சொன்ன மாதிரி, "அடக்கம் அமரருள் உய்க்கும். அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்.'' இன்னொரு சமயம் அவன் இயற்றிய குறளில் ஒன்றைச் சொன்னான். "எல்லார்க்கும் நன்றாம் பணிதல். அவருள்ளும் செல்வர்க்குச் செல்வம் தகைத்து."

நேற்று அப்போஸ்தலர் தாமஸ் சொன்ன பல விஷயங்களைத் தன் சிந்தனையில், தான் உணர்ந்தவையாக வள்ளுவன் பலதரம் என்னிடம் சொல்லியிருக்கிறான். ஏசு மலைமேல் ஏறிச் செய்த பிரசங்கத்தின் சில கருத்துக்கள் எனக்கு மிகவும் உயர்வாகப்பட்டது என்றால் எனக்கு அவற்றில் சில பற்றி ஏசுவின் கருத்துக்கள் என்று எனக்கோ அவனுக்கோ தெரியாவிட்டாலும்கூட, அவன் சொல்லியிருக்கிறான். உதாரணமாக, " அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை இகழ்வாரைப் பொறுத்தல் தலை," என்றும், ‘‘ஒருத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்" என்றும், "மிகுதியின் மிக்கவை செய்தாரைத் தரம் தன் தகுதியால் பெற்றுவிடல்" என்றும் பல சமயங்களில் சொல்லியிருக்கிறான்.

தாமஸ் சொன்னதைக் கேட்டு தாமஸின் சிஷ்யனாக முன்வர மாட்டான் வள்ளுவன். அதை வெளிப்படையாக நேற்றே தான் தாமஸே சொன்னார். அவர் தீர்க்கதரிசனமாக வள்ளுவன் ராஜகுருவாகப் பிறந்தவன் என்பதையும், எங்களுடன் தனியாகப் பேசும்போது உணர்த்தினாரில்லையா! எனக்கு என் பிராமண குலத்தில் ஏற்பட்டிருக்கிற சலிப்பு, உலகம் தாழ்ந்த ஜாதியாகக் கருதினாலும் வள்ளுவனுக்கு அவன் பெருமை ஜாதி, மதத்தினால் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் அவன் பெற்றோர் தான் என்று எனக்குத் தோன்றியது. இருவரும் எத்தனை சீரும் சிறப்புமாகச் சமுதாயத்தில் தங்கள் அசௌகரியங்களை உணர்த்தாமல், அவற்றைப் பாராட்டிப் பெரிசு படுத்தாமல் அடக்கமாக வாழ்கிறார்கள்.

என் தாயாருக்கு நான் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே விஷயம் தெரிகிறது. என் அப்பாவுக்குத்தான் ஏதோ கண்ணை மறைக்கிறது. அப்படி

ஒன்றும் கல்விமானும் அல்ல – அறிவாளியும் அல்ல. ஏதோ பூஜை, புனஸ்காரம் என்று பண்ணி வைக்கப் படித்துக் கொண்டிருக்கிறார். பண்ணியிருக்கிறார். மனப்பாடமாக சந்தை பிசகாமல் சொல்லத் தெரியும். எனக்கும் இரண்டும் தெரியும். இது பிராமணனுக்கு அடிப்படைத் தகுதி. அதற்குமேல் சிந்திக்கத் தெரியவோ, விவாதத்திற்கான படிப்போ போதாது. வள்ளுவனுடன் பழகி நான் அறிந்து கொண்டிருக்கிற அறிவுகூட அவருக்குக் கிடையாது. ஆனால், அதற்குப் பதிலாய், "நான் பிராமணன். என்னைத் தட்டிக் கேட்பார் யார்?" என்கிற மமதை அகங்காரம் இருக்கிறதே! அது அளவு கடந்து இருக்கிறது.

அது மட்டுமல்ல. வள்ளுவன் போன்றவர்களால் பிற பெண்டிரைத் தாயாராக காண முடிகிறது. என் அப்பாவால் என் நினைவு தெரிந்து அப்படி நினைக்க முடிந்ததில்லை . ஒரு சமயம், "எப்பொழுதுமே அவர் போக்கு அப்படித்தான். என்னப்பா சொல்வது" என்று யாரிடமோ அம்மா குறையாகவும், அதைத் தவிர்க்க முடியாததாகவும், கருதிச் சொல்லிக் கொண்டிருந்தது நினைவுக்கு வருகிறது. 'பிறனில் விழையாமை' என்று வள்ளுவன் தன் குறள்களில் ஒரு முழு அதிகாரமே எழுதுவேன் என்று சொல்லி இரண்டொரு குறள்களைச் சொன்னான். "எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத் துணையும் தேரான் பிறனில் புகல்" என்றும் ‘‘பிறன்மனை நோக்காப் பேராண்மை சான்றோர்க்கு, அரண் அன்றே ஆன்ற ஒழுங்கு’’ என்றும் இரண்டு குறள்கள் இயற்றி வள்ளுவன் சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. இந்த அதிகாரத்திற்கு என் தகப்பனாரைப் பாட்டுடைத் தலைவராகக் கருதிக் கொள்ளலாம் என்றால் அது மிகையல்ல.

என் தகப்பனிடம் மரியாதையாகவும், நான் பிறந்த குலத்தையும், வம்சத்தையும் பற்றிப் பெருமையாகவும் நினைக்க வேண்டும் என்று தான் எண்ணுகிறேன். முடியவில்லையே! அதற்கு சந்தர்ப்பம், என் சூழ்நிலை இடம்தர மாட்டேன் என்கிறதே – என்ன செய்ய?

பெரியவர் ஸெகியலைப் பற்றிப் பெருமையாக நினைக்கத் தோன்றியது. ஏன்? அவர் நம்மிடையே, இந்த மண்ணிலே பிறக்காதவர். வியாபார நிமித்தம் இங்கு வந்து தங்கியிருப்பவர். பெரும்பொருள் ஈட்டியிருக்கிறார் என்பதற்காகவா அவரைப் பற்றிப் பெருமையாக நினைக்கத் தோன்றுகிறது. "அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்’’ என்று வள்ளுவன் சொன்னது போல, தீதின்றி வருகிற பொருள் ஸெகியலினுடையது. அப்படி வந்த பொருளை அவர் தன்னைத் தேடி வருபவர்களுக்கு தரம் அறிந்து, இடம் அறிந்து உதவி செய்யச் செலவழிக்கிறார். வீட்டிற்கு யார் பசி என்று வந்தாலும் சோறு போடுகிறார்,

மற்ற உதவி கேட்டு வந்தால் முடியுமானால் உதவி செய்கிறார். முகம் சுருக்கி "முடியாது போ" என்று சொல்லி விடுவதில்லை .

அம்மாதிரி மனசுள்ள யாரையாவது இந்தப் பிராமணத்துறையில் சொல்லிவிட முடியுமா? ஜாதி, மதம் என்று இத்தனை பார்க்கிறவர்கள் எந்த பிராமணனுக்காவது, எந்த சமயத்திலாவது உதவியிருக்கிறார்கள் என்று சரித்திரம் உண்டோ ? யாராவது ஏதாவது கேட்டு வந்து விட்டால் "போ போ," என்று மனங்குன்றப் பேசி விரட்டியடித்து விடுவார்கள். அவர்கள் ஒன்று சேர்வது எல்லாம் வேறு யார் தலையையாவது தடவுவதற்குத்தான்.

இப்ப சமீபகாலமாகத் தான் இப்படியா? பிராமணக் குலத்தின் சரித்திரமே இப்படித்தானா என்று எனக்கு சொல்லத் தெரியவில்லை. ஏதோ ஒரு காலத்தில், ஆரம்ப காலத்திலாவது. அவர்கள் உண்மையிலேயே மேற்குலத்தவராகத் தானே இருந்திருக்க வேண்டும்? இப்போது அளவு கடந்த சிறுமைகளை அவர்களே தேடிப் போகிறார்கள். பெருந் தன்மையான விஷயம் எதையும் அண்ட விடமாட்டேன் என்கிறார்கள். நான் பிராமணனாக இருப்பது பற்றி எனக்கு வெட்கமாக இருக்கிறது.

அம்மா மனம் வருந்துவாளே என்கிற ஒரு கவனம் தான் – அந்த நினைப்பு இல்லாவிட்டால், இன்றே கூட நான் தாமஸிடம் போய் ஞானஸ்நானம் செய்து கொண்டு விடுவேன். அவர் என்னிடம் அதை எதிர்பார்க்கிறார் என்பதும், வள்ளுவனிடம் எதிர்பார்க்கவில்லை என்பதும் தெரிகிறது. ஏன்?

உண்மையில் வள்ளுவன் தான் தன் மதத்தை மாற்றிக் கொள் வதற்குத் தயாராக இருப்பவனாக இருக்க வேண்டும். சமூகத்தில் அவனைத் தாழ்ந்த குலத்தவனாகக் கருதுகிறார்கள். மீனவர்கள் போல சமூகத்தில் வள்ளுவர்களுக்கும் நிரந்தரமான ஸ்தானம் எதுவுமில்லை. பிராமணனாகப் பிறந்த எனக்கு பிறப்பினாலேயே உயர்ந்தவனாகக் கருதுவதற்குரிய தகுதி வந்துவிட்ட மாதிரி இருக்கிறது. ஆனால், எனக்கு என் மனத்திலே அமைதி இல்லை. அமைதியைத் தேடிக் கண்டாக வேண்டும். வள்ளுவனுக்கு எங்கிருந்தாலும் மனத்தில் ஒரு அமைதி. அடக்கம் இருக்கிறது. உண்மையில் சொல்லப்போனால் இந்தப் பிராமணர்களைவிட அவன்தான் பெரியவன்.

ஆனால், நான் சொல்லி யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்களே – என்ன செய்ய? யோசனையில் ஆழ்ந்திருந்தேன். அம்மா பகலில் வீட்டு வேலைகள் எல்லாம் ஆன பிறகு சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்தவள், "நீ அப்போதே வள்ளுவனைத் தேடிப் போயிருப்பாய்

என்று எண்ணினேன். இங்கேயே படுத்துக் கொண்டிருக்கிறாயே!’’ என்றாள். திண்ணையில் அம்மாவும் உட்கார்ந்தாள்.

நானும் எழுந்து உட்கார்ந்து கொண்டு வேட்டியைச் சரிப்படுத்திக் கொண்டு, "என்னமோ யோசனை. வள்ளுவனைத் தேடிக் கொண்டு போகவில்லை – இன்னும்." என்றேன்.

"நாளைக்கு மறுபடி பிரசங்கத்திற்குப் போய்வருவாயில்லையா? போகும்போது என்னையும் கூப்பிடு. நானும் வரேன். வழக்கமாக மிரியம்தான் வந்து கூப்பிட்டுக் கொண்டு போவாள்" என்றாள் அம்மா .

"அப்போஸ்தலர் தாமஸ் உன்னைச் சரியாகத் தான் பிடித்துக் கொண்டு விட்டார் போல இருக்கிறது." என்று கேலியாக சொல்கிற மாதிரி சொன்னேன்.

"பின்னே என்னடா வாதூ! இந்த நாயிலும் கேடுகெட்ட வாழ்வு வாழப் பிடிக்கவில்லை. உலகில் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு, வேறு ஒரு விதமான உயர்வுமில்லாமல் வருகிற தாழ் மானங்களையெல்லாம் சகித்துக்கொண்டு இங்கு வாழ்வதைவிட இதையெல்லாம் விட்டு விட்டு, பிறருக்கு நம்மாலான உதவிகளைச் செய்து கொண்டு, மனநிம்மதியுடன் வாழலாமே என்று தோன்றுகிறது எனக்கு" என்றாள் அம்மா.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நான் சிந்திக்கிற மாதிரியே தான் அம்மாவும் சிந்திப்பதாகத் தெரிந்தது. ஆனால், என்னைவிட அதிகமாகப் புண்பட்ட மனதுக்கு, எனக்கேற்பட்ட சந்தேகங்கள் எதுவும் தோன்றவில்லை என்றும் தெரிந்தது. தவிரவும், தன் மகா தியாகத்திற்கு நான் காரணமாக இருப்பேன் என்று தாமஸ் சொன்னது அவளுக்குத் தெரித்திராதோ!"

"தன் வாழ்க்கை லட்சியம் பூர்த்தியாகத் தான் அவர் இங்கு வந்திருப்பதாகவும், பத்துப் பனிரெண்டு மாதங்களிலே தாயும், மகனுமாகிய என்னாலும், உன்னாலும் அவர் லட்சிய பூர்த்தி வரும் என்று நம்புவதாகவும் அவர் என்னிடம் சொன்னார்."

எனக்கு மீண்டும் தூக்கி வாரிப் போட்டது. அம்மாவிடமும் தாமஸ் சூசகமாக விஷயத்தைச் சொல்லியிருக்கிறார் என்பது தெரிந்தது.

‘‘உன்னாலும், என்னாலுமா? எனக்குப் புரியவில்லையே!’’ என்றேன்.

"உனக்கும் புரிகிற அளவு தான் எனக்கும் புரிகிறது. ஆனால் அப்போஸ்தலர் தாமஸின் நினைப்பும் மனமும் பரிசுத்தமானவை. நமக்குத் தெரிந்த மற்றவர்களைப் போல இல்லை" என்றாள் அம்மா.

"நாம் இருவரும் கொஞ்சநாள் அப்பாவோடு மாயவரத்திற்குப் போய் இருக்கலாமா?" என்று, என் பிரச்னைகளுக்குப் பதில் கிடைக்குமா என்கிற நோக்கில் கேட்டேன்.

அம்மா யோசித்து நிதானமாகப் பதில் சொன்னாள். "மாய வரத்துக்கு அப்பாவைத் தேடிக் கொண்டு போவானேன்? அவரே வேறு யாரோ ஒரு அவயத்தைத் தேடிக்கொண்டு போயிருக்கிறாராம். இந்த அவயம் அலுத்துவிட்டது. வேறு யாரோ ஒரு அவயத்தைத் தேடிப் போயிருக்கிறார். அநேகமாகத் திரும்பமாட்டார் இந்தப் பக்கம் என்று எண்ணுகிறேன்." என்றாள் அம்மா.

இது எனக்குப் புதுச் செய்தி. "அப்படியா!" என்று கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

"காசி, காஞ்சிபுரம் என்று போய்விடலாம் என்று தோன்றுகிறது" என்ற அம்மா, "ஓடிப்போய் என்ன லாபம்! நம் மனத்தின் சுளுக்குகளை நாம் தானே அவிழ்த்து நேராக்க வேண்டும். எங்கே போனாலும் உடலோடு உள்ளமும், மனமும் கூடத்தானே வரும்!" என்றாள்.

"வரும்'' என்றேன் நான்.

"என்ன செய்வது என்பது பற்றி இன்னும் இரண்டொரு நாள் யோசிக்கலாம். என்ன இருக்கிறதோ, இல்லையோ – நமக்கு அவகாசம் நிறையவே இருக்கிறது. நாமும் அவசரப்படவில்லை . உன் அப்பாவும் அவசரப்பட மாட்டார். அப்போஸ்தலர் தாமஸும் அவசரப்பட மாட்டார். நீயும் வள்ளுவனைக் கலந்து ஆலோசித்து... அவன் மிகவும் புத்தியுள்ளவனாகத்தான் தோன்றுகிறான்."

"அது சரி. அவன் ஏற்கனவே என்னைத் தாமஸிடம் ஒப்புவித்து விட்டான் போலத் தோன்றுகிறது'' என்றேன்.

"அப்படியா?" என்ற அம்மா, "பராபரியாகக் காதில் விழுந்தது. வள்ளுவன் பற்றிக் காஞ்சிபுரத்தில் நல்ல பெயராமே! அவரைக் காஞ்சிபுரம் பல்லவ அரசர் ராஜ குருவாக இருக்க, ஒரு சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கத் தனக்கு உதவ வேண்டும் என்று அழைக்கிறாராமே! உன் காஞ்சிபுரம் பயணத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!''

"வள்ளுவனுக்கு ராஜோபசாரம் நடந்தது.''

"அதில் உனக்குப் பொறாமையா என்ன?" என்றாள் அம்மா.

"பொறாமை இல்லை. அதில் எனக்கும் பங்கு இருந்ததே! அவனுக்கு ராஜோபசாரம் நடந்தது – அவன் தோழனாக, பூவோடு சேர்ந்த நாரும் என்பது போல நானும் பயன் பெற்றேன். எனக்குக்கூட பாதக்குறடு, சால்வையெல்லாம் தந்தார் ராஜா."

"அவையெல்லாம் எங்கே?’’

"வள்ளுவன் வீட்டில் இருக்கின்றன."

"அப்புறம்?’’

"அப்புறம் என்ன? ஒன்பது நாள் வித்வத்சதஸ் கூடிற்று. சமஸ் கிருதம், தமிழ், பிராகிருதம் என்று பல மொழிகளில் பலர் நூல்கள் இயற்றி வாசித்தார்கள். பிரசங்கங்கள் செய்தார்கள். கேட்டுக் கொண்டிருந்தேன்.’’

"வள்ளுவன்?’’

"வள்ளுவன், தான் தமிழில் இயற்றிக் கொண்டிருக்கிற முப்பால் என்கிற நூலில் பல பகுதிகளை வாசித்துக் காட்டினான். மிகவும் சிறப்பாக அவன் நூலியற்றிக் கொண்டிருக்கிறான் என்று பெரும் புகழ் தான் அவனுக்கு."

“நீ!’’

"நான் அவனோடுகூட வந்த பெருமைதான். கேட்டுக்கொண்டிருந் தேன். அவ்வளவுதான்.’’

"ராஜா உன்னிடம் பேசினாரா இல்லையா."

"ராஜா எல்லோருடனும் பேசிய மாதிரி என்னுடனும் பேசினார். 'வள்ளுவனை நண்பனாகப் பெற்றிருக்கிற நீ பாக்கியசாலி' என்றார். 'அது எனக்கு ரொம்ப நாளாகத் தெரியுமே' என்றேன்."

அம்மா எதுவும் பதில் சொல்லவில்லை. சற்று நேரம் கழித்து நான் சொன்னேன். "ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். ஒருநாள் ராஜாவிடம் ஸெகியல் பற்றியும், அவர் வீட்டுக்கு வந்திருக்கிற தாமஸ் பற்றியும், அவர் கொண்டு வந்திருக்கிற புது ஏசுவின் செய்தி பற்றியும் குறிப்பாகச் சொன்னான். ராஜாவுக்கு அந்த விஷயத்தில் மிகவும் சுவாரஸ்யம். வள்ளுவன் சொல்லாத பல விஷயங்களை என்னிடம் இருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்டு அறிந்து கொண்டார். நாங்கள் கிளம்பி வருகிற சமயத்தில் சீக்கிரமே அவரே வந்து அப்போஸ்தலர் தாமஸை

சந்திக்க விரும்புவதாகச் சொன்னார். அவராகத்தான் சொன்னார்!" என்றேன் நான்.

அம்மா சொன்னாள். "அப்போஸ்தலர் தாமஸ் தான் குண்டா ஃபணங்ஸ் என்று வடமேற்கு மாகாணத்து ராஜா ஒருவரைச் சந்தித்து அவரை ஏசு பக்தனாக மாற்றியதாகவும், ராஜகுடும்பத்தினர் அது தாளாமல் ராஜாவையே கொன்று விட்டுத் தாமஸையும் ஊரைவிட்டுத் துரத்தி விட்டார்கள் என்றும் சொன்னார். ராஜாவின் வரவைப் பற்றி தாமஸ் என்ன நினைக்கிறாரோ?" என்றாள் அம்மா.

"நானோ, வள்ளுவனோ ராஜாவைக் கூப்பிடவில்லை. அவராகவே தான் வரேன் என்றார். தவிரவும் இந்த ராஜா அப்படி சுலபமாக மதம் மாறி விடுபவர் என்று தோன்றவில்லை . அவர் ஜைன மதத்தைச் சேர்ந்தவர். அதனால் தனக்கு ராஜகுருவாக வள்ளுவன் வரவேண்டும் என்கிறார்" என்றேன்.

"பார்க்கலாமே! நம் கையில் என்ன இருக்கிறது. நம் சொந்த விஷயங்களையே நம்மால் முடிவு செய்ய இயலவில்லை. திணறுகிறோம்.'' என்றாள் அம்மா.

எவ்வளவு உண்மை அது!

## அத்தியாயம் 22

வள்ளுவனை மறுநாள் அப்போஸ்தலர் தாமஸின் பிரசங்கத்தைக் கேட்கப் போன போது தான் பார்த்தேன். அதுவரையில் நான் வள்ளுவனைப் பார்க்காமல் ஒருநாள், ஒரு பொழுதுகூடக் கழித்ததில்லை. எனக்கே ஆச்சரியப்பட நேரமில்லை. அப்போஸ்தலர் தாமஸ் மண்டியிட்டு பிரார்த்தனை மனதிற்குள் சொல்லி விட்டுக் கூடியிருந்தவர்களை நோக்கிப் பேச ஆரம்பித்தார். அவர் பேச ஆரம்பித்த பிறகு எனக்கு மட்டுமில்லை – அங்கிருந்த மற்றவர்களுக்கும் உலகமே, வெளி உலகும், அதன் பிரச்சனைகளும் – மறைந்து போய்விட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

பிராமணர்களும், மற்றவர்களும் பிரசங்கம் என்று சொல்வதன் தாத்பர்யமே இதுதானே!

அப்போஸ்தலர் தாமஸ் சொன்னார். குழந்தைகளும், பெண்டுகளும், மனிதர்களும் புரிந்து கொள்ளும்படியாக எளிய வார்த்தைகளில் ஏசு பிறந்த கதையையும், வளர்ந்த கதையையும், இறந்த கதையையும் கோர்வையாகச் சொன்னார் பின்வருமாறு:

"கலிலிப் பிரதேசத்திலுள்ள நாஸரத் என்கிற ஊரில் ஜோஸஃப் என்று ஒரு மர வேலை செய்யும் தச்சர் இருந்தார். அவர் டேவிட் அரச வம்சத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனைவியின் பெயர் மேரி. கல்யாணம் அப்போது தான் ஆகியிருந்தது. மேரிக்கு இன்னும் கன்னிமை கழியவில்லை.

"கன்னி மேரியை தேவனின் தூதனாகிய கேப்ரியல் அணுகி ஒரு இரவு, "நீ தேவனின் சிரத்தைக்குப் பாத்தியமாகிறாய். உன் வயிற்றில் தேவனின் திருக்குமாரன் அவதரிக்கப் போகிறான்" என்று தெரிவித்தான். புருஷனை அறியாத எனக்கு தேவகுமாரன் பிறப்பது எப்படி சாத்தியம் என்று தேவதூதனையே கேட்டாள் மேரி. தேவனால் சாதிக்க முடியாத காரியமும் உண்டோ என்று கேட்டுவிட்டு அந்த நற்செய்தியை அவள் கணவனிடமும் தெரிவித்து விட்டுப் பிறக்கப் போகிற குழந்தைக்கு ஏசு என்று நாமமிடு. அவன் ராஜ்யம் உலகமெங்கும் வியாபிக்கும், என்று சொல்லி விட்டுத் தேவதூதன் மறைந்து விட்டான்.

"ரோமன் சீஸர் ரோமாபுரியில் அரசாண்ட காலத்தில் யூதர்களின் அந்தப் பிரதேசமெல்லாம் அவன் ஆட்சிக்குட்பட்டிருந்தது அவரவர் குடும்பத்துக் கிராமத்தில் மக்கள் ஒவ்வொருவரும் வரிசெலுத்திப் பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற சீஸரின் உத்தரவுக்கிணங்கி ஜோஸஃப் தேவகுமாரனைக் கர்ப்பமுற்றிருந்த தன் மனைவி மேரியுடன் தன் முன்னோனாகிய டேவிடின் ஊரான பெத்தலஹேமுக்கு வந்தான். அங்கு அவர்கள் வந்திருக்கும்போது மேரிக்குப் பிரசவிக்கும் அறிகுறிகள் தோன்றின. அவர்களுக்கு எந்த விடுதியிலும் இடமில்லாததால், மாட்டுக்கொட்டிலில் தங்க இடம் தந்திருந்தார்கள். அந்தக் கொட்டிலில் ஏசு பிறந்தார்.

"ஏசு பிறந்த இடத்தையும், கிராமத்தையும், அடையாளத்தையும் தேவதூதர்கள் மூலம் அறிந்த சில இடையர்களும். மூன்று கீழ்த்திசை மகரிஷிகளும் வந்து கொட்டிலில் புதிதாகப் பிறந்து மேரியின் பக்கத்தில் கிடந்த சிசுவைத் தொழுது போனார்கள். டேவிட் என்கிற ராஜாவின் வம்சத்தில் பிறந்த ஏசு யூதர்களின் அரசனாவான் என்ற பேச்சு எங்கும் அடிபடுவதைக் கேட்ட ராஜா ஹெராட் என்பவன் தன் பதவிக்கு ஆபத்து வந்துவிடப் போகிறதே என்று பெத்தலஹேமில் அந்தச் சமயத்தில் பிறந்த குழந்தைகளையெல்லாம் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட உத்தரவிட்டான். அந்த உத்தரவு நிறைவேற்றப்படுமுன் மேரியும், குழந்தை ஏசுவும், தகப்பன் ஜோஸஃப்பும் தப்பி எகிப்திற்கு ஓடி விட்டார்கள் – தேவதூதனின் உதவியால். ஹெராட் அரசன் இறந்த பின்தான் அவர்கள் மூவரும் ஜுடேயாவுக்குத் திரும்பினார்கள்.

"அவர்கள் திரும்பி வந்த பின் பல வருஷங்கள் நாஸரத்தில் ஏசு தன் தகப்பனிடம் தச்சு வேலையைக் கற்றுக்கொண்டு, அதில் வல்லவராக இருந்தார். பின்னர் யூதர்களையெல்லாம் ஞானஸ்நானம் செய்விக்கப் பிறந்த ஜான் என்பவர் ஞானஸ்நானம் செய்வித்துக் கொண்டு ஜோர்டன் நதிக்கரையில் இருந்தபோது, ஜானும், ஜீஸஸும் சந்தித்தனர். ஜான் எல்லோர் முன்னிலையிலும் நான் கிறிஸ்து அல்ல, கிறிஸ்துவைப் பற்றி ஜனங்களுக்கு அறிவித்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் செய்விக்க வந்தவன் நான். இதோ இந்த ஏசுவே கிறிஸ்து. அதாவது யூதர்களுக்கு அனுப்பப்பட்ட நெடுங்காலமாக எதிர்பார்க்கப்பட்ட மெஸ்ஸையா. நான் மேலும் ஜலத்தினால் உங்களைப் புரோக்ஷிக்கின்றேன். இவர் உங்களை தேவனின் பரிசுத்த ஆத்மாவினாலேயே ஸ்நானம் செய்விக்கப் போகிறார்' என்று சொல்லி ஏசுவிற்கு ஞானஸ்நானம் செய்து வைத்தார்.

"ஏசு, பரிசுத்த ஆவிநிரம்பிய வரமனிதனாகக் காட்டுக்குள் புகுந்து நாற்பது நாட்கள் அன்ன ஆகாரமில்லாமல் தபஸ் இருந்தார். சாத்தான் வந்து 'இந்தக் கல்லை ரொட்டியாக உண்ணலாமே' என்று சொன்ன போது மனிதன் ரொட்டியினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை என்று பதிலளித்தார். சாத்தான் அவரை உலகச் சக்ரவர்த்தி யாக ஆக்குகிறேன் என்று சொன்ன போது, 'எனக்கு வேண்டிய ஐசுவரியங்கள் எல்லாம் என்னிடமே இருக்கின்றன' என்றார்.

சாபத்னாம் என்கிற ஊரில் யூதர்களின் கோயிலில் பிசாசுகளினால் அடிமைப்படுத்தப்பட்ட மனிதன் ஒருவன் இருந்தான். அந்தப் பிசாசை விரட்டியடித்தார் ஏசு. கோயிலில் குழுமியிருந்தவர்கள் ஆச்சரியப் பட்டுப் போனார்கள். பலம் மிகுந்த பிசாசுகளும் இவர் சொல்வதைக் கேட்டு பயந்து ஓடுகின்றனவே. இவர் யார் என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டார்கள்.

"ஸைமன் என்ற ஒருவனின் தாய் மிகவும் நோய்வாய்ப்பட்டுக் கஷ்டப்பட்டாள். அவளை ஏசு முன் கொண்டு வந்து கிடத்தி அவள் நோயைத் தீர்க்கும்படி வேண்டிக் கொண்டார்கள். ஏசு குரல் எடுத்து அவளைப் பீடித்திருந்த நோயைக் கோபித்துக் கொண்டார். உடனே அவள் நோய் அவளை விட்டு நீங்கி விட்டது.

"அஸ்தமிக்கும் வரையில் அன்று நோயாளிகளும், பிசாசு பிடித்தவர்களும் வந்து ஏசுவை அணுகி சௌக்கியமுற்று வீடு திரும்பினார்கள். ஊரெல்லாம் ஏசுவின் பிணிதீர்க்கும் திறமையையும், அதிசயத்தையும் பற்றியே பேச்சாக இருந்தது.

"சென்னாஸரத் ஏரிப்பக்கம் ஏசு வந்தபோது ஏரியில் இரண்டு மீன் பிடிக்கும் கப்பல்கள் நிற்பதைக் கண்டார். மீன் பிடிப்பவர்கள் கப்பலிலிருந்து கடலில் இறங்கித் தங்கள் வலைகளை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஸைமன் என்பவனின் கப்பலில் புகுந்து கப்பலை ஏரியில் சிறிது தூரம் செலுத்தச் சொன்னார். கரையில் இருந்தவர்களுக்கு உபதேசம் செய்தபடியே, 'உன் வலைகளை வீசு – மீன்கள் கிடைக்கிறதா பார்!' என்றார். இரவு பூராவும் மீன்களுக்காக வலை விரித்துவிட்டு எதுவும் கிடைக்காமல் இப்போது தன் வலைகளைச் சுருட்டியிருந்த ஸைமன் அவர் சொல்வதைத் தட்டாமல் வலையை விரித்தான்! என்ன ஆச்சரியம்! வலை கொள்ளாமல் வலையே கிழிந்துவிடும் போல மீன்கள் நிரம்பி வழிந்தது. எல்லோருமாகச் சேர்ந்து இழுத்தும் வலையை மீன்களுடன் கரை சேர்க்க முடியவில்லை, மீன்களின் சுமை அவ்வளவிருந்தது. ஸைமனும், ஸெபஸ்டியன் பிள்ளைகளான ஜேம்ஸும், ஜானும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

"மீன்களைப் பிடித்து என்ன லாபம்? மனிதர்களை வலை வீசிப் பிடிக்கச் சொல்லித் தருகிறேன். என்னுடன் எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்து விடுங்கள்'' என்று அவர்களை அழைத்தார் ஏசு. அவர்கள் மறுவார்த்தையே பேசாமல் அவருடன் கிளம்பி விட்டார்கள்.

‘‘பின்னர் சில நாட்களுக்குப் பிறகு ஏசு போய்க் கொண்டிருக்கிற போது எதிர்ப்பட்ட ஒரு மனிதன் வெண் குஷ்டத்தினால் அழுகிச் சொட்டிக் கொண்டிருந்தான். அவன் ஏசுவைக் கண்டதும், 'தேவ குமாரனே – நீ மனது வைத்தால் என்னைக் காப்பாற்றி என் குஷ்டத்தை அகற்ற முடியும்' என்றான். 'நீ நம்பினால் உன் குஷ்டம் இப்பவே போய்விடும்' என்றார் ஏசு. 'நான் உன்னைக் காப்பாற்றினேன் என்று யாரிடமும் சொல்லாதே. உன் நம்பிக்கைதான் உன்னைக் காப்பாற்றி யது என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார் ஏசு.

"பின்னர் ஏசு ஒரு நொண்டியைச் சொஸ்தப்படுத்தினார். ஏசு பாபிகளிடையே சல்லாபிக்கிறார். அவர்களுக்காகவே தன் அதிசயங் களை நடத்துகிறார் என்று வதந்தியைக் கிளப்பி விட்டார்கள் அவரைப் புரிந்து கொள்ளாத யூதர்கள். அதற்குப் பதில் சொல்லுகிற மாதிரி, 'நான் பாபிகளை ஆதரிக்கவே வந்தேன். தர்மவழி நிற்பவர் களுடன் நான் போகவில்லை. வியாதியுள்ளவனுக்குத் தானே வைத்தியம் தேவை' என்றார்.

"யூதர்களின் விடுமுறை நாட்களிலும் ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் அவர் உழைக்கிறார் என்பதை ஒரு குற்றமாக வைதீக யூதர்கள் சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்வதுபோல, ஒரு ஆட்டுக்குட்டி விடுமுறை நாட்களில் கெட்டுப் போய் விட்டால், விடுமுறை என்று அதைத் தேடாமல் விட்டு

விடுவானா இடையன்? மனிதர்களுக்காகத் தான் விடுமுறையே தவிர, விடுமுறைக்காக அல்ல மனிதர்கள்'' என்று சொன்னார்.

"இதற்குள் நான், நீ என்று ஏராளமான சிஷ்யர்கள் சேர்ந்து விட்டார்கள் ஏசுவுக்கு. அவர்களில் பன்னிரெண்டு பேரைத் தனக்கு மிகவும் உகந்தவர்கள் என்று பெயர் சொல்லி அறிவித்து அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்றும் பெயரிட்டார் ஏசு. வரிசையில் சொல்லப் போனால் – ஸைமன் [அவரைப் பீட்டர் என்றும் ஏசு கூப்பிடுவார்], அவர் தம்பி ஆண்ட்ரூ , ஜேம்ஸும், ஜானும், ஃபிலிப்பும், பார்த்தலோமி யும், மாத்யூவும், தாமஸும் – தாமஸ் என்று அடியேன்தான் [என்னை தாமஸ் இரட்டையன் என்று சொல்வார்கள். ஏனெனில் என்னோடு இரட்டையாகப் பிறந்த ஒரு சகோதரன் இருந்தான்] அல்ஃபியஸின் மகன் ஜேம்ஸ், ஜெனட்ஸ் எனப்பட்ட இன்னொரு ஸைமன், ஜேம்ஸின் சகோதரனான யூடாஸ், மற்றும் பன்னிரெண்டாவதாக யூடாஸ் இஸ்காரியட். [இவன்தான் ஏசவைக் கடைசியாக யூத குருமார் களுக்கும், கோயில் அதிகாரிகளுக்கும் காட்டிக் கொடுத்தவன்]. இந்தப் பன்னிரெண்டு பேரும் அநேகமாக ஏசுவுடன் கூடவே இருந்தோம். அவர் எங்கு சென்றாலும் அவருடனேயே சென்றோம். அவர் சொல்வதையெல்லாம் கேட்டோம். செய்வதையெல்லாம் பார்த்தோம். எங்கள் வாழ்வே ஏசு நிரம்பிய வாழ்வாயிற்று.

"அந்தப் பிரதேசம் பூராவும் ஊர் ஊராகச் சென்று திரள்திரளாகக் கேட்க அந்த ஜனங்களுக்கு தேவனின் ராஜ்யம் பூமியில் ஸ்தாபிதமாகி நிலைக்கும் நாள் வந்து கொண்டிருக்கிறது என்கிற நற்செய்தியைத் தெரிவித்தார் ஏசு. பன்னிரெண்டு அப்போஸ்தலர்களும் அவர்களைத் தவிர ஏசுவுடன் அவர் வார்த்தைகளில் ஆசை கொண்டு அவர் நன்மையில் கருத்துக்கொண்டு பல ஸ்திரிகளும் எங்களுடன் இருந்தார்கள். அவர்களில் மேரி மாக்டலேனா, ஜொவன்னா, ஸூஸன்னா, இன்னும் பலர் முக்கியமானவர்கள். மேரியை பிசாசுகள் பிடித்து அவதியுறுத்தின. அவற்றை விரட்டியடித்து அவளைப் பரிசுத்த மாக்கினார். அவள் விலை மாதாக வாழ்ந்தவள் என்றாலும் அவள் தன் செய்கைகளை வெறுத்து மன்னிப்புக்கேட்டு வந்து பரிசுத்தமாக்கி விட்டவள் என்றார் ஏசு.

"ஒரு நாள் அவர் தாயாரும், சகோதரர்களும் அவரைத் தேடி வந்தனர். கூட்டத்தில் அவர்களால் அவரை அணுக முடியவில்லை . 'உங்களைப் பார்க்க உங்கள் தாயாரும் சகோதரர்களும் வந்திருக்கிறார் கள்' என்று யாரோ சொன்னதும் என் தாயாரும், சகோதரர்களும் யார் தெரியுமா? இதோ என்னைச் சுற்றி தேவனைப் பற்றி உண்மையை விசாரித்து அறிந்து கொண்டு என்னுடனே இருக்கிற நீங்கள் தான்' என்றார் ஏசு.

"நீரின் மேல் நடப்பதும், எழுந்த புயலை அடக்குவதும், தண்ணீ ரை மதுவாக்குவதும் ஐந்து ரொட்டித் துண்டுகளை ஐயாயிரம் பேர் சாப்பிடக் காணும்படியாகப் பண்ணுவதும் அவருக்கு மிகவும் சகஜமான சாதாரணமான காரியங்கள். அவரைத் தொட்டுப் பிரார்த்தித்துக் கொண்டவர்களுக்கும் அவரேகூட அறியாமலே வியாதி சொஸ்தமாகியது. கவலைகள் தீர்ந்தன. பன்னிரெண்டு ஆண்டுகள் ரத்தப்போக்கினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் அவர் கருணையினாலும் தன் நம்பிக்கையினாலும் உடனேயே குணமானாள். நாலைந்து சந்தர்ப்பங்களில் இறந்து போய் புதைக்கப்பட்டவர்களையும் அவர் உயிர்ப்பித்து நடமாட விட்டார்.

"ஒருநாள் சில குழந்தைகள் சப்தம் போட்டுக்கொண்டு அவரை அணுகின. சுற்றியிருந்தவர்கள் குழந்தைகள் அவரை அணுகவொட்டாது விரட்டினார்கள். தன்னைச் சுற்றியிருந்தவர்களைக் கோபித்துக் கொண்டார் ஏசு. 'குழந்தைகளையும் குழந்தைகளைப் போன்றவர்களை யும் என்னை அணுக விடுங்கள். ஏனென்றால் அவர்கள் தான் தேவனின் ராஜ்யத்தின் பிரஜைகள்' என்றார்.

"லாஸரஸ் என்று ஒருவன் – அவன் என்னுடைய உறவினன் தாய்மாமா உறவு – இறந்து எட்டு நாட்களுக்குப் பிறகு உயிர் கொடுத்துக் கூப்பிட்டு எழுப்பி உயிர் தந்தார். இதனாலெல்லாம் ஏசுவின் புகழ் தேசமெல்லாம் பரவியது கண்டு யூத போதகர்களும், கோயில் அதிகாரிகளும் எங்கே தங்களுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று பயந்து ஏசுவைக் கொல்ல சதித்திட்டங்கள் வகுத்தனர். ஜெருசலேத்துக்குப் போனால் அவரைக் கைது செய்து விடுவார்கள் என்று இருந்த நிலையில், 'தேவன் எனக்கு விதித்தது நிறைவேற வேண்டும். நான் கிளம்புகிறேன்,' என்றார் ஏசு. அவருக்கு நடப்பது நமக்கும் நடக்கட்டும் என்று நாங்கள் அனைவரும் கிளம்பினோம்.

"ஆலிவ் மலையை ஒட்டிய ஒரு கிராமத்திலிருந்து ஒரு கழுதைக் குட்டியைப் பிடித்து வர தன் சிஷ்யர்கள் இருவரை அனுப்பினார் ஏசு. யாராவது கேட்டால் எங்கள் பிரபுவுக்கு வேண்டும் என்று சொல்லுங்கள் என்றார். அந்தக் கழுதைக் குட்டியின் மேல் ஏறிக்கொண்டு அவர் ஜெருசலேத்தை அடைந்தார்.

ஜெருசலேத்துக்கு ஏசுவைப் பல சமயங்களில் சந்திக்கும் சந்தர்ப்பம் பலருக்கு ஏற்பட்டதுண்டு. ஜெருசலேத்துக்கு வந்த போதெல்லாம் கேட்க விரும்புகிறவர்களுக்கு அவர் கோயிலிலேயே பிரசங்கங்கள் செய்ததுண்டு. ஒரு சமயம் கோயிலில் வியாபாரம் செய்பவர்களையும் பணமாற்றுபவர்களையும் சவுக்கால் அடித்து விரட்டியிருக்கிறார். 'என்

பிரபுவாகிய தேவன் சொல்கிறான் – என் கோயில் புனித ஸ்தலமாக இருக்க வேண்டும். அதில் இப்போது திருடர்களும் அயோக்கிய வியாபாரிகளும் வந்து விட்டார்கள் என்று வருத்தப்படுகிறான் என்றார்.

ஜெருசலேத்தை நாங்கள் அணுகும்போது யூடாஸ் இஸ்கேரியட் என்கிற பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூடாஸ் இஸ்கேரியட் யாருக்கும் தெரியாமல் யூதர் வைதிக கோஷ்டியின் தலைவனான காயிஃபாஸ் என்பவனிடம் தான் முத்தமிட்டு ஏசு இன்னான் என்று காட்டுவதாக ஏற்பாடு செய்து கொண்டு அதற்குக் கூலியாக முப்பது வெள்ளிகள் பெற்றுக் கொண்டான். ஏசுவின் உயிரின் விலை முப்பது வெள்ளிகளாக அவர்கள் மதித்தனர்.

"ஜெருசலேத்தில் கடைசி இரவுச் சாப்பாடு முடிந்த பிறகு, ஏசு எங்கள் ஒவ்வொருவர் காலையும் நீர்விட்டுக் கழுவினார். பீட்டர் மறுத்தபோது, "இது அவசியம். நான் யசமான், நீங்கள் சிஷ்யர்கள். நான் பெரியவன்; நீங்கள் சின்னவர்கள் என்று எண்ணுகிறீர்கள். அது அப்படியில்லை. ஆண்டை அடிமை என்று யாரும் கிடையாது. குரு சிஷ்யர் என்றும் யாரும் கிடையாது; உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும் யாரும் கிடையாது. உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரும் சரிநிகர் சமானமாகக் கடவுளின் குழந்தைகள். இதைத் தெரிந்து கொள்ள வேண்டும் நீங்கள். அனுப்பியவனைவிடப் பெரியவனாகி விட முடியாது அனுப்பப்பட்டவன். இவற்றை நீங்கள் சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு உங்களைத் தேர்ந்தெடுத்த நானே உங்கள் கால்களைக் கழுவுகின்றேன். யாரை நான் அனுப்பு கிறேனோ அவனை ஏற்று உபசரிப்பவன் எவனும் எனக்கு உகந்தவன். என்னை ஏற்பவன் எவனும் நான் அனுப்புபவன் எவனையும் ஏற்கத் தயாராக இருப்பவன் – தெரிகிறதா?

‘‘இன்று உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான். வேறு ஒருவன் என்னைக் கோழி கூவுமுன் மூன்று தரம் மறுதளிக்கப் போகிறான். ஒருவன் என்னையே சந்தேகிக்கப் போகிறான். அதெல்லாம் தெரிந்து தான் என் பிதா விதித்ததை ஏற்க நான் ஜெருசலேம் வந்துள்ளேன்." என்று சொல்லிவிட்டு, 'நீ செய்ய வேண்டியதை சீக்கிரமே செய்' என்று யூடாஸ் இஸ்கேரியட்டை விளித்துச் சொன்னார் ஏசு.

"அவரைச் சிறைப்பிடிக்க வந்த யூத வீரர்களுக்கு யூடாஸ் இவர் தான் ஏசு' என்று சொல்லுகிறமாதிரி அவர் உதடுகளில் முத்த மிட்டான். பீட்டர் உருவிய கத்தியை 'யாரையும் எதிர்க்காதே நடக்க வேண்டியது நடக்கட்டும்' என்று தடுத்தார் ஏசு. 'யூத வீரர்கள் ஏசுவை யூதர்களின் வைதீகத் தலைவன் முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். ஏதோ விசாரணைபோல ஒன்று

நடந்தது. பீட்டர் ஒருவர்தான் அந்த விசாரணையின்போது அங்கிருக்க, மற்றவர்கள் ஒதுங்கிக் கொண் டோம். தான் செய்துவிட்ட குற்றத்திற்குப் பிராயச்சித்தமாக யூடாஸ் இஸ்கேரியட் அத்திமரக் கிளையில் தூக்குப் போட்டுக் கொண்டு ஏசுவை விற்றதால் கிடைத்த முப்பது வெள்ளிக் காசுகளைத் தூர எறிந்து விட்டு உயிர் துறந்தான்.

"யூதத் தலைவர்கள் ஏசுவைத் தண்டிப்பதற்கு பிலேத் என்கிற அரசியல் அதிகாரியின் முன் கொண்டு போய் நிறுத்தினார்கள். ரோம சாம்ராஜயத்துக்கு எதிராக அவர் சதி செய்வதாகச் சொல்லி தன்னை அவர் யூதர்களின் அரசன் என்று சொல்லிக் கொண்டதாகச் சொல்லி, அவரை விசாரித்து பிலேத் அவர் குற்றம் நிரூபிக்கப்படவில்லையே என்று சொன்னதற்கு, யூதத் தலைவர்கள் ஏசுவைத் தண்டிக்கா விட்டால் ஊரில் கலகம் விளையும் என்றார்கள். சிலுவையில் அறைந்து அவர் உயிரை வாங்க அவர்கள் துடிக்கிறார்கள் என்று தெரிந்ததும் 'ஏசுவை மன்னிக்கட்டுமா திருடன் பாரபாஸை மன்னிக்கட்டுமா?' என்று கேட்டான் பிலேத். பாரபாஸ் கொலை, கொள்ளையடித்துக் கொண்டு சிலுவையில் அறையத் தண்டனை விதிக்கப்பட்டவன். அவனை விடுவித்துவிட்டு ஏசுவை சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும் என்று கோயில் அதிகாரிகளின் தூண்டுதலால் வைதிக யூதர்கள் கேட்டனர்.

"கனமான சிலுவையைத் தூக்கிக் கொண்டு ஏசு போர் வீரர்கள் புடைசூழ, தலையில் முள்ளால் ஆன ஒரு கிரீடத்துடன், சிலுவையின் மேல், 'நாஸரத்தின் மகன், ஜீஸஸ், யூதர்களின் அரசன்' என்கிற ஸ்லோகத்துடன் வழி நெடுக ஊரார் நடத்தி அழைத்துச் செல்லப் பட்டார். கொல்கத்தா [மண்டையோடு] என்று சொல்லப்பட்ட குன்றின் மேல் ஏசுவும், அவருடன் வேறு பெயரில்லாத குற்றவாளி களும் சிலுவையில் அறையப்பட்டார்கள்."

"பிதாவே, அவர்களை மன்னியுங்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாது.' என்றார் ஏசு. அவர் சிலுவையில் அறையப்படும்போது மக்கள் கூடியிருந்து வேடிக்கை பார்த்தார்கள். நாங்களும் அந்தக் கும்பலில் இருந்தோம். எப்படிக் காப்பாற்றுவது ஏசுவை என்று எங்களுக்குத் தெரியவில்லை. மேரி மக்தலேனாவும், அவர் தாயார் மேரியும், மற்றும் பல சிஷ்யர்களும் சிஷ்யைகளும் இருந்தார்கள் அந்தக் கும்பலில். 'உலகைக் காப்பாற்ற வந்தவனே – உன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லையே!' என்று சிலர் கேலி செய்தனர். கூடச் சிலுவையில் அறையப்பட்ட ஒருவன் அவரைக் கேலி செய்தான். மற்றவன், 'நாம் குற்றம் செய்து மாட்டிக் கொண்டவர்கள்; தண்டனை அனுபவிக்கிறோம். ஒரு குற்றமும் செய்யாது இப்படித் தண்டிக்கப்பட்ட

அவரை கேலி செய்யாதே' என்று கேலி செய்தவனைத் தடுத்தான். ஏசு அவனைப் பார்த்து 'நீயும் நானும் இன்று பொழுது முடியும் முன் தேவனின் முன் சுவர்க்கத்தில் இருப்போம், கவலைப்படாதே.' என்றார்.

"அன்று மூன்று மணி நேரத்துக்கு அசாதாரணமான இருள் உலகைக் கவ்வி இருந்தது. கடைசியில் அந்த இருள் நீங்கும் சமயத்தில், 'பிதாவே என்னை மறந்து விட்டாயா, என்று ஏசு உரத்த குரலில் கேட்ட தருணத்தில் அவர் உயிர் பிரிந்தது. அவர் இறந்துவிட்டாரா என்று பார்ப்பதற்காகத் தன் வேலால் ஒரு ரோமானிய வீரன் அவர் விலாவில் குத்தினான்

"ஜோஸஃப் அரிமத்தேயா என்கிறவர் ரகசியமாக ஏசுவின் பக்தராக இருந்தார். அவர் பணக்காரர். பிலேத்தின் அனுமதியுடன் அவர் ஏசு வின் சடலத்தைப் பெற்று அதைத் தனக்குச் சொந்தமான கல்லறையில் அடக்கம் செய்தார். மூன்றாவது நாள் தான் உயிர் பெற்றுக் கல்லறையிலிருந்து எழுந்து விடுவேன் என்று ஏசு சொல்லியிருந்த சமாச்சாரம் உலகுக்கெல்லாம் தெரியும்.

‘‘மூன்றாவது நாள் முதலில் ஏசுவின் கல்லறைக்குச் சென்றது மேரி மக்தலேனாதான். அங்கு ஏசுவின் சடலம் இல்லை. மேரிமக்தலேனா முன் மறுஉயிர் பெற்ற ஏசு முதலில் தோன்றினார். அவள் அப்போஸ் தலர்களுக்கு தான் மறு உயிர் பெற்ற ஏசுவைக் கண்டதைத் தெரிவித்தாள். இறந்துபோன யூடாஸ் இஸ்கேரியட் போக, மற்ற பதினோரு அப்போஸ்தலர்களும் கலிலியின் ஏற்கனவே ஏசு சொல்லி யிருந்த ஒரு மலைக்குச் சென்றார்கள். அங்கே ஏசு அவர்களுடன் வந்து கலந்து கொண்டார். 'சுவர்க்கத்திலும் பூமியிலும் எதுவும் செய்ய எனக்கு சக்தியளிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தியை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். உலகில் உள்ள எல்லாத் தேசத்து மக்களிடையேயும் நீங்கள் சொல்லுங்கள். எல்லோருக்கும் – உங்களை நம்பி வருகிறவர்கள் எல்லோருக்கும் ஞானஸ்நானம் அளியுங்கள் – தேவன் பெயரால், தேவனின் மகனான என் பெயரால், பரிசுத்த ஆவி பெயரால் ஞானஸ்நானம் செய்வித்து ஏசுவின் பக்தர்களாக மனிதர் களைச் சேருங்கள். உங்களுக்குத் தெரிவித்ததையெல்லாம் நீங்கள் அவர்களுக்கும் அறிவியுங்கள். நீங்கள் எங்கே சென்றாலும், என்ன செய்தாலும், நான் உங்களுடன் – உங்கள் ஒவ்வொருவருடனும் – இருப்பேன்! உலகம் முடியுமட்டும் உங்களுடன் இருப்பேன்,' என்று மறு வாழ்வு பெற்ற ஏசு எங்களுக்குத் திடமாகச் சொல்லியனுப்பினார்.

"நான் உங்களிடையே ஏசுவுக்கு சாக்ஷியாக வந்து நிற்கிறேன். இங்கு நானாக வந்ததாக எனக்குத் தோன்றவில்லை. இங்கு என் காரியம் பூர்த்தியாக வேண்டுமென்று ஏசு என்னை அனுப்பியிருக் கிறார். என்

காரியம் என்று தனியாக ஒன்றும் கிடையாது. எல்லாம் ஏசுவின் காரியம்தான். அவனன்றி நான் என்று ஒரு ஆசாமியே இல்லை. எனக்கென்று தனியாக எதுவும் ஒரு வாழ்வு இருப்பதாக நான் எண்ணியிருக்கவில்லை. ஏசுவினால்தான் என் வாழ்வைக் காண்கிறேன். அவர் மறுபடி உயிர் பெற்று எழுந்தார் என்பதை நான் முதலில் நம்பவில்லை . கடைசித் தடவையாக அவர் என் முன் தோன்றியபோது 'உன் சந்தேகத்துக்கு மருந்தாக உன் விரலை என் விலாவில் உள்ள காயத்தில் – இது அந்த ரோமாபுரி வீரன் எனக்கு செத்த பின் அளித்த பரிசு – காயத்தில் விரல் வைத்துப் பார்' என்று, அவர் கூவியபோது, நடுங்கிய என் கரத்தைப் பிடித்து என் விரலை நீட்டச் சொல்லி அந்தக் காயத்தில் வைத்தார். இந்த விரல் இதுவரையில் அந்தக் காயத்துக்குள் போயிற்று" என்று தன் வலது கை ஆள்காட்டி விரலைத் தூக்கி இரண்டாவது அணுவரையில் காட்டினார் அப்போஸ்தலர் தாமஸ்.

எங்கேயோ பல நூறு மைல்களுக்கப்பால், பல ஆண்டுகளுக்கு முன் மண்டையோட்டு மலையில் சிலுவையில் அறையப்பட்ட அந்த ஏசு எங்களிடையே அந்த தென்னம் ஓலை வேய்ந்த பந்தலில், தனித் தனியாக ஒவ்வொருவர் பக்கத்திலும் வந்து நிற்பது போன்ற ஒரு எண்ணம் ஏற்பட்டது. எனக்கு மட்டும்தான் என்று நான் முதலில் எண்ணினேன். பிறகு பலரையும் விசாரித்தபோது அவர்களுக்கும் அப்படித்தான் என்று கேள்விப்பட்டேன். அம்மாவோ, வள்ளுவனோ இதற்கு விதிவிலக்கல்ல.

அப்போஸ்தலர் தாமஸ் அவர் பிரசங்கத்தை முடித்து விட்டு இறங்கி மிரியமுடன் ஸெகியலின் மாளிகையில் தன் அறைக்குப் போய்விட்டார். பிரசங்கம் செய்து முடிந்தவுடன் தன் அறையில் போய் அரைநாழிகை நேரம் பிரார்த்தனை செய்வார் அவர் என்று மிரியம் சொல்லியிருந்தாள்.

அதனால் அவரைத் தேடிக்கொண்டு போகாமல் நான் வள்ளுவனுடன் அவன் வீடு வரையில் போனேன். அம்மா, வீட்டுக்குத் தனியாகத் திரும்பிப் போயிருப்பாள் அல்லது மிரியத்துடன் போயிருப்பாள்.

எனக்கு எதுவும் தீர்மானிக்கும் முன் வள்ளுவனிடம் பேச வேண்டும் என்று தோன்றியது. அதற்காகத் தான் போனேன்.

# அத்தியாயம் 23

வள்ளுவன் உதவுவான், என் பிரச்சனைகளுக்குப் பதில் தந்து எனக்கு உபயோகமாக இருப்பான் என்று நம்ப முடியவில்லை. முதல் வார்த்தைகள் பரிமாறிக் கொள்வதற்கு முன்னதாகவே கழண்டு கொள்ள முயற்சி செய்தான். இப்படி எப்போதும் இதற்கு முன் வள்ளுவன் இருந்ததில்லை. எனக்குக் கவலையாக இருந்தது.

"இந்த மாதிரி விஷயங்களில் அவரவர் யோசித்து எந்த முடிவுக்கு வருகிறார்களோ அது அவரவர்களுக்கு சரி. ஒரு அளவுக்குத்தான் என் அறிவு உனக்குப் பிரயோசனப்படும். உன் அறிவு மட்டும் பிரயோசனப்படும்'' என்றான் வள்ளுவன்.

"எந்த வழி திரும்புவது என்று தீர்மானித்து நடக்க நீ எனக்கு உதவலாமே."

"உதவலாம். உதவ முடியுமா என்று பார்க்கிறேன்.''

"அப்போஸ்தலர் தாமஸ் சொல்கிற ஏசுவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' என்றேன்.

"அவர்கள் – அதாவது யூதர்கள் – மதத்தைச் சீர்திருத்தி அவர்கள் வழிகளைப் பயன்படுத்தி, அவர்களைப் புதிய ஆன்மிக வழிகளில் நடத்திச் செல்ல வந்த மகான் என்பதில் சிறிதும் சந்தேகத்துக்கிட மில்லையே! அப்போஸ்தலரின் நம்பிக்கையிலும் எந்த இடத்திலும் ஓட்டைகள் எதுவும் இருப்பதாகவும் சொல்வதற்கில்லை. ஏசு என்கிற மனிதனின் நேர்முகப் பாதிப்பிற்கு உள்ளானவர் அவர் என்பதில் சந்தேகத்திற்கிடமேயில்லை. ஏசுவுடன் கூட, அவர் போன இடங்களுக் கெல்லாம் போயிருக்கிறார்; அவர் பேசியது எல்லாம் கேட்டு இருக்கிறார். ஏசுவினாலேயே இந்த விஷயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்ட பன்னிரெண்டு பேரில் ஒருவர். ஏசுவின் மகத்துவத்தில் ஒரு பகுதி அவரிடமும் உள்ளது என்பதில் என்ன சந்தேகம்?'' என்றான் வள்ளுவன்.

‘‘நீ ஏசுவின் மதத்தில், மார்க்கத்தில் சேர்ந்து விடுவாயா?'' என்று கேட்டதற்குத் தயங்காமல் பதிலளித்தான் வள்ளுவன். "ஏசு மார்க்கத்தில் சேருவது என்பது வேறு; அதில் நல்ல கொள்கைகள் இருக்கின்றன என்று காண்பது வேறு. என்னைப் பற்றிய வரையில், ஏசு மார்க்கத்திலும், புத்த மார்க்கத்திலும், ஏன் பிராமண மதத்திலேகூட சில பல நல்ல விஷயங்கள் இருக்கின்றன. எல்லா மதத்திற்குமாக மாறி மாறித்தான் அவற்றை அனுபவிக்க வேண்டும் என்பதில்லையே. என் ஜைன மார்க்கத்தில் எனக்கு

அவ்வளவு அதிருப்தி கிடையாது. அதில் இருந்துகொண்டே மற்ற மார்க்கங்களில் உள்ள நல்லதுகளைப் பரிந்து கொள்ளலாம். அதில் உள்ள நல்லதுகளை இதில் கொண்டும் வரலாம்."

நான் பதில் சொல்லவில்லை.

வள்ளுவன் மேலும் சொன்னான்: "உனக்கு உங்கள் பிராமண மதத்தில் உள்ள அதிருப்தியும், குறைபாடுகளும் எனக்கு வெகு காலமாகவே தெரியும். முக்கியமாக உன் தகப்பனாரின் போக்கு உன்னை மிகவும் பாதித்துள்ளது என்றும் தெரியும். இதிலெல்லாம் ஒன்றும் சிந்திக்காதவர்கள், பழமையே பாராட்டிக்கொண்டு அதிகக் கஷ்டப்படாமல் காலந்தள்ளி விடுபவர்கள் அதிருஷ்டசாலிகள் என்று பொதுவாகக் கருதப்படுகிறார்கள் உலகத்தில் பெரும்பாலோர் எந்தவித மாறுதலுக்கும் இடம் தருவதில்லை . சிந்திக்கத் தெரிந்தவன், தன் சிந்தனைகளின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு பூரணமான அளவில் அவற்றைத் தொடர்ந்து சென்று, மாறுதல் எதையும் ஏற்றுப் புரட்சியாக வாழ முடியும். புரட்சிகரமாக, மாறி வாழ்வதில் அன்றாட கஷ்டங்கள் நிறையவே இருக்கும். அந்தச் சிரமங்களை முடிந்த வரையில் சமாளித்துக்கொள்ள வேண்டியது தான்."

"கடைசியாக ஒரு கேள்வி. தன் மகாத் தியாகம் என்னால் தான் நிறைவேற வேண்டும் என்கிறாரே அப்போஸ்தலர் தாமஸ் – அதை நினைத்தால்தான் கஷ்டமாக இருக்கிறது’’ என்றேன். அதற்கு நீ என்ன சொல்கிறாய்? அதற்கு என்ன அர்த்தம் என்று தெரிந்தும் நான் தாமஸைப் பின்பற்றி அவர் சிஷ்யனாவது நல்லதா, அல்லதா?"

"அவர் தன் மகாத்தியாகம் என்று சொல்வதை நான் புரிந்து கொள்கிற விதம் இதுதான். ஏசுவைப் பின்பற்றுகிற அவர் தனக்கும் ஏசுவைப் போல பலியாகிற காரியம் நடைபெற்றாலொழிய தன் வாழ்க்கை பூர்த்தியாகாது என்று எண்ணுகிறார். ஏசுவின் கதையை இன்று சொன்னாரே – தன் முடிவைப் பூரணமாக அறிந்து கொண்டு தானே ஏசு ஜெருசலேம் சென்று, தானாகவே தானே மாட்டிக் கொண்டிருக்கிறார். தேவனின் சித்தம் இப்படி என்று தனக்கே காரணம் சொல்லிக் கொள்கிறார். தேவகுமாரனின் சித்தப்படி இந்த மாதிரி ஒரு முடிவை நோக்கித்தான் அப்போஸ்தலர் நடை போடுகிறார். அப்படி அவர் வாழ்வு பூர்த்தியாகும் என்று தான்....’’

"அவர் நினைப்பு எனக்கும் தெளிவாகவே தெரிகிறது. இதில் என் பங்கு இருந்து விட்டால் என் வாழ்நாளில் பாக்கியை நான் எப்படி நிம்மதியாய்க் கழிக்க முடியும்? இப்போது உள்ள மாதிரியேதானே நிம்மதியில்லாமல் போகும்?"

"நிம்மதி, நிம்மதியில்லாமை எல்லாம் நாமாக ஏற்படுத்திக் கொள்பவை தானே! உன்னைப் பற்றிய வரையில் சுத்தமாக இருந்து விட்டால், அதற்கப்புறம் என்ன விளைகிறது என்பதற்கு நீ எப்படிப் பொறுப்பு? தவிர்க்க முடியாததை ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். தப்ப முடியாதே! பல்லக்குத் தூக்குபவனையும், பல்லக்கில் சவாரி செய்பவனையும் பார்" என்றான் வள்ளுவன்.

"சரி" என்று கிளம்பும்போது காஞ்சிபுரத்தில் மகாராஜா எனக்கென்று அளித்த சால்வை, பாதக்குறடு மற்றும் சில விலையுயர்ந்த பொருள்களை வாசுகி கொண்டுவந்து தந்தாள். "அம்மாவை விசாரித்தேன் என்று சொல்லுங்கள். அம்மாவைக் கேட்டுக்கொண்டு அம்மா சொல்லுகிறபடி செய்யுங்கள்" என்று சொன்னாள் வள்ளுவனின் மனைவி. உண்மையில் அவள் புத்திமதிதான் எனக்கு மிகவும் உபயோகமாக இருந்தது.

அம்மாவுக்கு சந்தேகமேயில்லை. "நமக்காகவேதான் இங்கு வந்திருக்கிறேன் என்று அப்போஸ்தலர் தாமஸ் சொல்லுகிறார் வாதூலா. எனக்கு அதில் சந்தேகமே இருக்கவில்லை . நான் அவரிடம் இன்று மதியத்திலேயே சொல்லிவிட்டேன். வருகிற புதன்கிழமையன்று மற்றவர்களுடன் நீயும், நானும் கிறிஸ்தவர்களாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறோம்" என்றாள் அம்மா தீர்மானமாக.

"வீடு, வாசல், உற்றார், உறவினர், மாடு, கன்றுகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்ற விரும்புபவன் என்னோடு வந்துவிட வேண்டும் என்று ஏசு சொன்னதாக அப்போஸ்தலர் தாமஸ் சொல்கிறார். அப்படிப் போய்விடப் போகிறோம்'' என்றேன்.

"இதில் வருத்தப்படவோ குறைபடவோ ஒன்றுமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது" என்றாள் அம்மா தீர்மானமாக.

அம்மா தந்த தைரியம் தான் எனக்குத் துணை நின்றது. வள்ளுவன் தந்த பலத்தையும், அறிவையும் விட அம்மாவின் அன்பினால் பிணைக்கப்பட்டிருக்கிறோம் என்கிற நினைப்புத்தான் என்னை அப்போஸ்தலர் தாமஸை அணுகி அவரை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லத் தைரியத்தைத் தந்தது.

அப்போஸ்தலர் தாமஸிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வது என்று அம்மாவும், நானும் தீர்மானித்துத் தெரிவித்தவுடன் அது நிறைவேற்றிவிடப்பட்டதாக யாரும் நினைத்துவிடக்கூடாது. அடுத்த வாரம் ஞானஸ்நானம் செய்விக்காமலே இருந்துவிட்டார் தாமஸ். அதற்கடுத்த

வாரமும் நடத்துவதில்லை என்று தீர்மானித்து விட்டார். எங்கள் மனத்தில் வலிமை கூடுவதற்காகவே இப்படித் தள்ளிப் போடுகிறார் என்று எங்களுக்குத் தோன்றியது.

ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு ஏசுவைப் பின்பற்றுபவர்கள் ஆகிவிடுவது என்பது பற்றித் தீர்மானம் ஆனவுடன் அம்மாவும் நானும் எங்களுக்கு வேண்டிய சொல்ப சாமான்களை எடுத்துக் கொண்டு ஸெகியலின் வீட்டிற்குப் போய்விட்டோம். தீர்மானித்த பிறகும் பிராமணத் தெருவில் என் அப்பாவுக்குச் சொந்தமான வீட்டில் போய் வசிப்பது என்பது பொய்க்கு இடந் தருவதாகி விடும் – தளைகளை அறுத்துக்கொண்டு விட வேண்டும் என்று தீர்மானித்து எங்கு தங்குவது என்று யோசிக்கும்போது மிரியம், நாங்கள் அவர்களுடன் அவர்கள் வீட்டிலே தங்கலாம் என்று சொன்னாள். ஸெகியலும் வற்புறுத்தினார். அப்போஸ்தலர் அது நல்லதுதான் என்றார். அப்படியே நடந்தது.

தினசரிப் பிரார்த்தனைகளும், பிரசங்கங்களும் ஒழுங்காக நடந்தன. எங்கேயோ, எப்படியோ ஏற்பட்டுவிட்ட ஒரு தாகத்தை, அறிவு மட்டும் பூர்த்தி செய்யாத ஒரு தாகத்தை, தாமஸின் வார்த்தைகள் என்னுள் பூர்த்தி செய்வதாக நான் உணர்ந்தேன். என் நேரம் எல்லாம் தாமஸுடனேயே கழிந்தது. வள்ளுவனையும் மற்றும் முற்பிறவியில் எனக்குத் தெரிந்தவர்களையும் சந்தித்தாலும்கூட அவர்களுடன் சௌக்கியம் விசாரிப்பதற்கு மேல் அதிகமாகப் பேசிக்கொண்டு நிற்க எனக்கு நேரம் இல்லை . என் நாட்கள் நிறைந்திருந்தன.

தாமஸுக்குப் பணிவிடை செய்வது என்பதில் எனக்கு ஒரு திருப்தி ஏற்பட ஆரம்பித்தது. ஸெகியலுடைய குடும்பத்துடன் அம்மா ஒன்றி விட்டாள். எனக்கு அது சாத்தியமாக இல்லை. நான் அப்போஸ்தலர் தாமஸின் பிரார்த்தனைகள், பிரசங்கங்கள், அவர் சொல்கிற வார்த்தை கள், செய்கிற செயல்கள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டேன். அதுவரை அவருக்கு மிரியம் செய்து கொண்டிருந்த பணிவிடைகளைக் கூட நான் செய்வதையே அப்போஸ்தலர் விரும்பினார்.

அதையொட்டி ஒரு தரம் நான் ‘‘ஏசுபிரான் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?" என்று அப்போஸ்தலர் தாமஸையே கேட்டேன்.

"ஏசுபிரான் மட்டுமல்ல. அவருடைய அப்போஸ்தலர்களாகக் கிளம்பிய நாங்கள் பன்னிருவரும்கூடத் திருமணம் செய்து கொள்ள வில்லை. அதற்குக் காரணம் வீடு, வாசல் என்று ஏற்பட்டுவிட்டால், நாங்கள் உலகில் செய்வதற்கு என்று வந்த காரியங்கள் சிறிது தடைப்படுமோ, வேறு

குடும்பக் கவலைகள் சூழ்ந்து விட்டால் தேவகுமாரனின் திருக்கதையைப் பரப்புவதில் தடங்கல் ஏற்படுமோ என்கிற பயம்தான். மற்றவர்கள் திருமணம் செய்து கொள்வதையோ, குழந்தைகள் பெற்றுக்கொண்டு சாதாரண மனிதர்களாகப் பொருளீட்டி வாழ்வதையோ, ஏசுவோ, நாங்களோ குறை கூறுவதும் இல்லை. தடுத்ததும் இல்லை. அதற்கு மாறாக நாங்களேதான் திருமணங்களுக்கும் சாட்சிகளாக நிற்கிறோம். நடத்தியும் வைக்கி றோம்" என்றார் தாமஸ்.

அப்போது அதுபற்றி அதிகமாக விசாரிப்பது உசிதமாக எனக்குப் படவில்லை. அதோடு நிறுத்திக்கொண்டு விட்டேன்.

இன்னொரு சமயம் அவர் மகாத் தியாகம் என்று கூறுவதைப் பற்றியும் விசாரித்து விட்டேன். அதற்கும் தெளிவாகவே தாமஸ் பதில் தந்தார். "தேவன், தன் குமாரனை உலகில் உள்ள பாவிகளின் பாவங்களைப் போக்குவதற்காகப் பலியாகி, உய்யும் வழியைக் காட்டுவதற்காக உலகில் மக்களுக்கு மத்தியிலே அனுப்பினார். ஏசுவாகிய தேவகுமாரன் எங்களில் பலரை உலகம் உய்ய வழிகாட்டி, உலகில் உள்ள பாவிகளால் தண்டிக்கப்பட்டு உயிரைத் துறக்கும் அளவில் மகாத் தியாகத்தை மேற்கொள்வது பற்றி முன்னுதாரணமாக நிற்கிறார்! தியாகம் என்பது தாமாக விரும்பிச் செயல்பட்டு சாதிப்பது. மகாத் தியாகம் என்பது தான் கொள்கைகளையும், லட்சியங்களையும் பூரணமாக ஏற்று, முடிகிற வரையில் ஸ்தாபிக்க உயிரையும் தந்து பூர்த்தி செய்து விடுவதைத்தான் மகாத்தியாகம் என்று நாங்கள் கூறுகிறோம். இதனால் தேவனின் கோயில் பூமியில் ஸ்தாபிதமாகிறது. அப்போஸ்தலர்களாகிய நாங்கள் மட்டுமல்ல, எங்களைப் பின்பற்றி உலகின் கோபதாபங்களுக்கு இலக்காகி உயிர்துறக்கப் போகிறவர்கள் பல்லாயிரக்கணக்கில் எதிர்காலத்திலும் தோன்றுவார்கள். 'எனக்காகச் சகலத்தையும் துறந்து இறுதியில் எனக்காகவே உயிர் துறப்பவன் என் நண்பர்களில் சிறந்தவன். அவன் சுவர்க்கத்தில் என் வலது பக்கத்தில் வீற்றிருப்பான்' என்று ஏசுவே சொல்லியிருக்கிறார். மனிதனாகப் பிறந்து விட்டவர்கள் சாவுக்கு அஞ்சியே காலந் தள்ளுகிறார்கள். சாவைக் கொள்கைக்காகவும், லட்சியத்துக்காகவும் எதிர் கொள் பவனை உலகில் எல்லோருமே போற்றுகிறார்கள் – கிறிஸ்தவர்கள் என்கிற நாம் அதை நேசிக்கவே நேசிக்கிறோம்.''

"உங்களைப் போன்றவர்களின் மகாத் தியாகங்களினால் தேவனின் கோயில் அஸ்திவாரம் உலகில் பலமாக அமையும் என்பது உண்மைதான். ஆனால், அதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருக்கும் துக்கம், கஷ்டம் என்று விளையாதா?'' என்று கேட்டேன் நான்.

"என் மகாத் தியாகத்தில் உன் பங்கைக் கேட்டு அறிந்துகொள்ள நீ விரும்புகிறாய் என்று எண்ணுகிறேன். உன் மூலம்தான் என் மகாத் தியாகம் விளையும் என்பது எனக்குத் தெரிகிறது. அதை நோக்கியே நான் விழைகிறேன் என்றுகூடச் சொல்வேன். அதில் உன்பங்கு –

குறைப்படவோ குற்ற உணர்ச்சியைப் பரிபாலிக்கவோ – ஒன்றுமில்லை, உன் காரணமாக ஏற்படும் என் மகாத் தியாகம் என்றாலும் அதில் உன் பங்கு ஒன்றும் இல்லை. ஒன்றுமேயில்லை. நீ என் மகாத் தியாகத்தைப் பற்றி எண்ணிப் பெருமையே படலாம். வருத்தப்பட வேண்டியிராது. நாங்களெல்லாம் ஏசுவின் மகாத் தியாகத்தில் நேரடியாகப் பங்கு பெற்றவர்கள். அதைப் பற்றி நாங்கள் வருத்தப் படுவதேயில்லை. பெருமையே படுகிறோம். ஏசுவைக் காட்டிக் கொடுத்த யூடாஸ் தற்கொலை செய்து கொண்டான். ஏசுவை கோழி கூவுமுன் மூன்று தடவை மறுத்த பீட்டர் ஏசுவின் ஆலயம் மேற்கே எழும்புவதற்கு அஸ்திவாரமாக அமைந்தார். ஏசுவின் பணியைப் பெருமையாகக் கருதி நாங்கள் செய்து வருகிறோம்'' என்றார் தாமஸ் பெருமிதத்துடன்.

கடைசியாக இன்னொரு சந்தேகத்தையும் அவரிடம் கேட்டேன் நான். "ஏன் நீங்கள் ஏசு சிலுவையில் அறையப் பட்டதைக் கொண்டாடுகிற அளவில் ஏசு மறுபிறப்புப் பெற்றதைக் கொண்டாடுவதில்லை?

யோசித்துத் தான் பதில் சொன்னார் தாமஸ். "மறுபிறப்பு, மறுவாழ்வு என்பது எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஒரு விஷயம். உலகில் உள்ள மனிதர்கள் எல்லோருக்கும் மறுபிறப்பு, மறுவாழ்வு என்று ஒன்று சாவுக்குப் பின் உண்டு. அம் மறுவாழ்வில் தேவனின் குமாரர் களாக ஆகப் போகிறார்களா, அல்லது சைத்தான் குமாரர்களாக ஆகப் போகிறார்களா என்பது அவரவர் உலகில் செய்த கருமாக் களைப் பொறுத்தது. ஆகவே கருமாக்களும் அவற்றின் அர்த்தமும் முக்கியம் என்பதனால் ஏசு சிலுவையை ஏற்றுக் கொண்டதும், உயிர் துறந்ததும் முக்கியமாகிறது. 'அவரவர் சிலுவையைச் சுமந்துகொண்டு என் பின்னால் வாருங்கள்' என்று ஏசுவே சொன்னார். அதனால்தான் சிலுவையில், அறையப்பட்டு அவர் உயிர் நீத்தது முக்கிய விஷயமாகக் கருதப்படுகிறது'' என்று சொல்லிவிட்டு "வேறு சந்தேகங்கள் இருந்தாலும் கேட்டுத் தெரிந்துகொள்வதிலும் தவறில்லை. எனக்கே 'சந்தேகப்பட்ட தாமஸ்' என்று தான் பெயர்'' என்றார்.

ஸெகியல் வீட்டில் செய்த பிரசங்கங்களுடன் திருப்திப்பட்டு விடாமல் தாமஸ் என்னையும், நேரமிருந்தால் என் அம்மா, மிரியம், ராமுண்ணி இன்னும் பலரையும் அழைத்துக்கொண்டு திருவல்லிக் கேணி, திருவொற்றியூர், கந்தக்கோட்டம், அடையாறு, திருவான்மியூர், மற்றும்

கடற்கரையை ஒட்டிய சில இடங்களிலும் சைதாப்பேட்டை, ஆலந்தூர், பெரியமலை முதலிய இடங்களில் எங்கே பத்திருபது பேர் கூடி நின்றாலும் ஏசுவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விடுவார். மிரியமும், அம்மாவும் நானும் அவர் சொல்லித் தந்த பாட்டுக்களை மனப்பாடம் செய்து இசையுடன் பாடுவோம். யாராவது ஏசுவின் மதத்தில் சேர வருகிறேன் என்று முன் வந்தால் "யோசித்துச் செய் தம்பி. இன்னும் ஒரு வாரம் கழித்துப் பூரணமாகவே யோசித்து விட்டு இங்கு வந்து சேர்" என்று ஸெகியலின் விலாசத்தை தருவார். யாரையும் மதம் மாற்ற அவர் அவசரப்படவில்லை. ஏசுவின் போதனைகளை எளிமையாகச் சொல்லித் தந்து, வந்தவன் அதைக் கொண்டே ஞானஸ்நானம் செய்விக்க முன் வந்தார். சிலசமயம் அபூர்வமாக அவரை நம்பி வந்த கூன், குருடு, போன்றவர்களை சொஸ்தம் செய்தார். ஒவ்வொரு தடவையும் இதை "நான் செய்ய வில்லை; உங்கள் நம்பிக்கைதான் செய்கிறது," என்றார். வெண் குஷ்டக்காரர்களை காக்காய் வலிப்புக்காரர்களை குணமாக்கினார். சிலரைப் பிடித்திருந்த பிசாசுகளை ஓட்டினார். அவர் பெயரும் புகழும் வெகுவாகவே பரவியிருந்தது.

அம்மாவுக்கும் எனக்கும் ஞானஸ்நானம் செய்வித்து எங்கள் மறுவாழ்வுக்கு சாட்சியாக எங்கள் பெயரை மாற்றி வைத்தார். அவயம் என்கிற என் தாயார் தேவபாக்கியம் என்று பெயர் பெற்றாள். எனக்கு அவர் தன் பெயரையே சூட்டினார் தாமஸ் என்று. என்னை எல்லோரும் சின்னத் தாமஸ் என்று கூப்பிட்டார்கள்.

எனக்கு ஞானஸ்நானம் ஆகி இரண்டு மாதங்களில் திருமணமும் செய்து வைத்தார் அப்போஸ்தலர் தாமஸ். மணப்பெண் வேறு யார் – மிரியம் தான். அதைச் சாத்தியமாக்கியது என் தாயார். அவள் நோய்வாய்ப்பட்டபோது என் விருப்பத்தை மிரியத்திடமும் மிரியத்தின் சம்மதத்துடன் தாமஸிடமும் கூறியிருக்கிறாள். அப்போஸ்தலர் தாமஸ் தானே ஸெகியலுடன் பேசி அவரைச் சம்மதிக்க வைத்துவிட்டார். என் கல்யாணம் எளிமையாக, மைலாப்பூரில், கடற்கரையில் மீனவர்கள் குடிசைகளுக்கு மத்தியில் உயரமாக எழும்பிக் கொண்டிருந்த ஏசு ஆலயத்தில் நடந்தது. என் பக்கத்தில் என் அம்மாவைத் தவிர உறவினர் கிடையாது. வள்ளுவனும் அவன் மனைவியும், அவன் பெற்றோரும் வந்திருந்தார்கள். ஸெகியலின் உறவினர், பலரும் கூடியிருந்தனர். ஆடம்பரமின்றி நடந்தது அந்தத் திருமணம். மிரியம் என்னைப் பார்த்த நாள் முதல் என்னையே தன் கணவனாக வரித்து விட்டதாகச் சொன்னாள். நானும் அப்படியேதான் அவளைக் கண்ட நாள் முதலாக அவளிடம் அடிமைப்பட்டு விட்டேன் என்று சொன்னேன்.

பெரிய தாமஸும், சின்ன தாமஸும் ஊரெல்லாம் சுற்றினோம். ஸெகியல் தன் மகளின் சௌகரியத்துக்காக எங்களுக்கு ஒரு தோட்டத்தின் மத்தியில், ஆலயத்துக்கு அருகில் ஒரு வீடு கட்டிக் கொடுத்து நிலபுலன்களையும் போதுமானது வாங்கிக் கொடுத்தார். மிரியம்தான் அவற்றைப் பார்த்துக் கொண்டாள். அப்போஸ்தலர் தாமஸின் காரியங்களைக் கவனிப்பதற்கே எனக்கு பொழுது போதவில்லை . என் மனதில் பழைய சந்தேகங்கள். பிரச்சனைகள், முடிச்சுகள் ஒன்றுமில்லை. வாழ்க்கை நிறைந்திருப்பது போலத்தான் இருந்தது. ஏக்கங்கள், குறைகள் எதுவும் என்னைப் பாதிக்கவில்லை. பாபங்கள் என்று கருதுவதைச் செய்யாமலிருக்கப் பழகிக் கொண்டேன். அப்படித்தான் என் வாழ்க்கை முறையைச் சொல்ல வேண்டும். புண்ணியங்கள் செய்தேன் என்று சொல்ல முடியாது. தினமும் என் சஞ்சலங்களைப் போக்கி விட்ட ஏசுவைப் போற்றிப் பாராட்டினேன்.

தாமஸை மகான் என்றோ, அப்போஸ்தலர் என்றோ நினைப்பதைவிட, நான் அறியாத தாத்தாவைப் போலவே மதிப்பது மிகவும் சுலபமாக இருந்தது. மிரியம் உண்டாகியிருந்த ஐந்தாவது மாதம் 'என் பேத்தியை நான் பார்க்காமலே போகிறேன் என்று சொல்லிக்கொண்டே அம்மா உயிர் துறந்து விட்டாள். அச்சமயம் தாமஸ் அங்கில்லை. இருந்திருந்தால் என் அம்மாவை உயிர்ப்பித்திருந் தாலும் இருக்கலாம். அவர் ஆலந்தூர் பக்கத்தில் இருந்த பெரிய மலையில் மேல் பகுதியில் ஒரு கோயில் கட்டுவதில் ஈடுபட்டிருந்தார். நானும் அவருடன்தான் இருந்தேன். ஒருநாள் இரவு நான் பெரியமலை ஆலய வேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பியபோது, ஒருநாள் அவர் மலைமேல் இருந்த குகையில் பிரார்த்தனையில் இருக்கப் போவ தாகவும், மறுநாள் நான் வர வேண்டாம் என்றும், மூன்றாவது நாள் வந்தால் போதும் என்றும் சொன்னார் அப்போஸ்தலர்.

வந்தபோது அம்மா இடப்பக்கம் மார்பில் நொந்தது என்று படுத்தாள். இரவு பூராவும் மார்பு வலித்தது என்று புரண்டு புரண்டு படுத்தாள். லிஸ்ஸத் வந்து பார்த்து, மருந்து கொடுத்துச் சரியாகிவிடும் என்றாள். ஆனால், சரியாகவில்லை. மறுநாள் காலையில் அம்மா எங்களிடம் விடைபெற்றுக் கொண்டாள். நான் போக முடியாமல் அப்போஸ்தலர் தாமஸுக்கு ஆள் அனுப்பினேன். தாமஸ் இருந்த குகையைக் கண்டுபிடிக்க இயலவில்லை என்று நான் அனுப்பிய ஆள் வந்து விட்டான். ஆலயத்துப் புதிய பிரசங்கி மத்தேயுதான் முன்நின்று சடங்குகளை நடத்தினார். நான் அம்மா இறந்து நாலு நாட்களுக்குப் பிறகுதான் அப்போஸ்தலர் தாமஸை மீண்டும் பார்த்தேன்.

அதற்கு நாலு மாதங்களுக்குப் பிறகு மிரியத்துக்குப் பெண்குழந்தை பிறந்தது. தாமஸ் அதற்குத் தன் கையாலேயே ஞானஸ்நானம் செய்வித்து தேவபாக்கியம் என்று அதன் பாட்டியின் பெயரையே சூட்டினார்.

அன்று இரவில் நாங்கள் இருவரும் தனித்து இருக்கும் போது, "நான் வந்த காரியம் நிறைவேறிவிட்டது" என்றார் பெரியவர் தாமஸ்.

நான் துணுக்குற்றேன்.

# அத்தியாயம் 24

அப்போஸ்தலர் தாமஸின் கடைசி நாட்களைப் பற்றி இப்போது நாற்பது வருஷங்களுக்குப் பின் நினைக்கும்போதுகூட எனக்குக் கை கூசுகிறது. மனம் இருட்டுகிறது. கால், கை வெலவெலத்துப் போகிறது.

தன் மகாத் தியாகத்தை எதிர்பார்த்து, அதற்குத் தயாராகவே தான் பெரியவர் தாமஸ் எப்போதுமே இருந்திருக்கிறார் என்பது எனக்குத் தெளிவாகவே தெரிந்த விஷயம். அவர் அப்படியிருக்க முடியும். என்னால் முடியவில்லை.

அப்போஸ்தலர் பெரியமலையில் தன் கையாலேயே கட்டிக் கொண்டிருந்த ஆலயம் பூர்த்தியாகவில்லை. "நீ தான் உன் கையாலேயே பூர்த்தி செய்ய வேண்டும். நான் கல்லில் ஒரு சிலுவையை அமைத்துச் செதுக்கிக் கொண்டிருக்கிறேன். அது முடிந்தவுடன் என் காரியம் முடிந்துவிடும். எப்படி, ஏன் என்று நீ விசாரிக்காதே. கண்டுகொள்ளாதே. என் சின்னத்தாமஸ். என்னை வேலெடுத்துக் குத்திக் காயப்படுத்தி, சாக அடிக்கப் போகிறவனை, நீ முன் கூட்டியே மன்னித்து விடு. யார் என்று தெரியவரும்போது உனக்கு அவனை மன்னிப்பது முடியாது போலத்தான் இருக்கும். கஷ்டமான காரியத்தைச் செய்ய வேண்டியவர்கள் இந்த ஏசுவின் பக்தர்களாகிய நாம். அதை மனதில் வைத்துக்கொள். போய் வருகிறேன் சின்னத்தாமஸ், போய் வருகிறேன் மிரியம். தேவபாக்கியம் – என் அன்பே – என் கடைசி நாட்களில் என் உயிருக்கும் பிடிப்பாக இருந்த சின்னக் குழந்தை தேவபாக்கியம். என்னை மறந்து விடாதீர்கள் என்று சொல்லத் தேவையில்லை. உலகமெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு என்னை மறந்து விடும். நீங்கள் உங்கள் உயிருள்ள வரையில் என்னை மறக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். போய் வருகிறேன்." என்று வீட்டில் சொல்லிக்கொண்டே கிளம்பினார் பெரியவர் தாமஸ்.

என்னைத் தன்னுடன் தனியாகச் சற்று வர வேண்டும் என்று கூப்பிட்டார். முதலில் ஸெகியல் வீட்டுக்குப் போனோம். அங்கிருந்த வர் ஒவ்வொருவரிடமும் தனியாக விடைபெற்றுக்கொண்டார் தாமஸ். ஆனால், அங்கு ஸெகியலிடம் தவிர வேறு யாரிடமும் தன் மகாத் தியாகத்தைப் பற்றி அவர் பேசவில்லை என்றாலும் அதை அவர் எதிர்பார்த்திருந்தார் என்பது எல்லோருக்குமே தெரியும். அவர் எதிர்பார்த்ததையும் தாண்டி திரும்பி உயிருடன் வரமாட்டாரா என்று ஒரு அல்ப ஆசையும்கூட இருந்தது. எல்லோரும் கண்களில் நீருடன் விடை தந்தனர். அவர் ஒருவர் தான் கண்கலங்காதவர்.

ஸெகியலுடன் தனியாகப் பத்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந் தார். என்ன பேசினார் என்று எனக்குத் தெரியாது. நான் உள் அறையில் லிஸ்ஸத்துடன் பேசிக் கொண்டிருந்தேன். லிஸ்ஸத் என் அப்பாவை அகஸ்மாத்தாகப் பார்த்ததாகவும், அவர் பிராமண வழக்கப்படி எனக்கும், என் தாயாருக்கும் கடசிரார்த்தம் பண்ணி பிராயச்சித்தம் பண்ணி எங்களை அடியோடு மறந்து விட்டதாகச் சொன்னதாகவும் சொன்னாள். எதற்காக அவர் இப்போது இங்கே வந்தாராம் என்று கேட்டேன். பிராமணர்கள் கூட்டம் போட்டு அவரை வரவழைத்திருப்பதாகத் தெரிகிறது. எனக்குத் தெரியும். பிராமணர்களிலேயே வேறு நல்ல குணங்கள் அதிகம் இல்லா விட்டாலும் ஒரு கட்டுமானம் உண்டு. நல்லதைவிடத் தீயது செய்ய ஒன்று கூடிவிடுவார்கள். அது அவர்கள் சுபாவமாகிப் போய்விட்டது. என்ன செய்ய?

வள்ளுவனையும் பார்க்க வேண்டும் என்றார் அப்போஸ்தலர். அவன் காஞ்சிபுரத்திற்கும் மைலாப்பூருக்கும் இடையே போய் வந்து கொண்டிருக்கிறான் என்று நான் கேள்விப்பட்டிருந்ததால், கிடைத்தால் பார்க்கலாம் என்று போனோம். நல்ல வேளையாக வள்ளுவன் வீட்டிலேயேதான் இருந்தான். அவனைத் தாமஸ் கட்டித் தழுவிக் கொண்டார். "என் லட்சியம் நிறைவேறும் காலம் வந்துவிட்டது. நான் போகிறேன். ஒரு வாரம் பத்து நாளைக்குள் உன் உதவி உன் பழைய நண்பனுக்குத் தேவையாக இருக்கும். கூட இருந்து அவன் தவறு ஏதும் செய்யாமல் பார்த்துக் கொள் வள்ளுவா" என்றார் தாமஸ். அப்போதும் அவருக்கு என் நினைவுதான் என்று காண, என் மனம் கசிந்தது.

"நீங்கள் எதிர்பார்ப்பது நடைபெறாமலே தடுத்து விடலாமே! இதோ பாருங்கள் தாமஸ். எனக்கு மட்டும் நாலு பேரை பல்லவராஜா மெய்க்காப்பாளராக அனுப்பியிருக்கிறார். அவர்களில் மூன்று பேரை உங்களுடன் அனுப்புகிறேன்." என்றான் வள்ளுவன்.

"எல்லாம் தெரிந்த நீயே இப்படிச் சொல்கிறாயே! வள்ளுவா! இதை எதிர்நோக்கித்தானே இந்தியாவுக்கே நான் வந்தேன். என் வாழ்க்கை பரிபூரணமாவதே இதனால் தானே! தவிர்த்துவிடலாம் என்கிறாயே! தவிர்க்க வேண்டுமானால் என்னாலே முடியுமே. இந்த மகாத் தியாகத்தை நான் விரும்பி ஏற்றுக் கொள்கிறேன். நீயே சொன்னாயே – ஒருநாள்... இந்த உலகம் நேற்று இருந்தவனை இன்று காணவில்லை என்ற புகழ் படைத்தது என்று போக வேண்டிய சமயத்தில் போய் விடுவது நல்லதுதான். போக வேண்டியதை உணருகிறேன். போய் விடுவேன். ஆனால், இந்த சின்னத் தாமஸ் அசட்டுத்தனமாக ஏதாவது செய்து, மிரியமும், சின்னத் தேவ

பாக்கியமும் கஷ்டப்படப் போகிறார்களே என்பதுதான் என் கவலை," என்றார் தாமஸ்

"என்னாலான மட்டும் தவறு எதுவும் நடந்துவிடாமல் பார்த்துக் கொள்கிறேன்" என்று வள்ளுவன் வாக்களித்தபின் தான் தாமஸ் அங்கிருந்து கிளம்பினார். நான் அவருடன் பெரியமலை வரை நடந்தேன். ஏசுவின் தத்துவங்களைப் பற்றி வழி நெடுக என்னுடன் பேசி வந்தார். வழியில் தென்பட்ட பத்துப் பன்னிரெண்டு அன்பர் களிடம் விடைபெற்றுக் கொண்டார். பெரிய மலையில் தான் செய்து முடித்தவரையில் ஆலயத்தில் வேலைகள் பூர்த்தியாகியிருப்பதையும், இன்னும் பூர்த்தியாக வேண்டிய வேலைகளையும் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

"இன்று வெள்ளிக்கிழமை. வருகிற செவ்வாய்க்கிழமை அன்று நண்பகலில் இங்கு வா. இங்கே அதோ அந்தக் குகையில் நான் தயார் செய்த கல் சிலுவை கிடைக்கிறது பார். அதில் இருப்பேன். வந்து ஆவன செய். ஸெகியலையும், மற்றவர்களையும், நண்பகலில் புறப்பட்டு ஒரு நாழிகை கழித்து இங்கு வரச் சொல்லியிருக்கிறேன். போய் வா," என்று என்னைக் கட்டிப் பிடித்து உச்சி முகர்ந்தார். எனக்குப் பேச முடியவில்லை. கண்கள் குளமாக இருந்தன. துடைத்து விட்டார். "இதற்கெல்லாம் கண் கலங்காதே. யாரை நீ சந்தேகித்தாலும் சரிதான். என்றும், எதுவும் அசட்டுத்தனமாகச் செய்து விடாதே. அவனை நான் மன்னித்து விட்டேன். தேவனும், தேவ குமாரனும் அவனை மன்னித்துவிட வேண்டும் என்று பிரார்த்தனை செய்வேன். நீயும் அதையே எண்ணிப் பிரார்த்தனை செய்" என்றார்.

பிறகு பூர்த்தியாகாத ஆலயத்தில் இருவரும் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தோம். "போய் வா, என் சின்னத்தாமஸ். என் பெயரையாவது இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு நினைவில் வைத்திருப்பார்கள். உன் பெயர்கூட ஒருவருக்கும் நினைவிருக்கப் போவதில்லை. அவ்வளவு தூரம் என்னால் பார்க்க முடிகிறது. மிரியத்திடம் சொல்லு. என் பேத்திக்கு எனக்காக ஒரு முத்தம் கொடு. போய் வா நண்பா !'' என்றார் பெரியவர் தாமஸ்.

அவர் நின்றுகொண்டிருப்பதைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே, தயக்கத்துடன் வார்த்தை, எதுவும் சொல்ல மாட்டாமல் திரும்பினேன்.

அதற்குப் பின் நடந்தவற்றை மிகவும் சுருக்கமாகச் சொல்கிறேன். விரிவாக ஏதோ, எங்கேயோ நடந்ததைப் போலச் சொல்ல மனசில்லை.

அடுத்த நாலு நாட்களும் எப்படிப் போயின என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. அழுதுகொண்டேயிருந்தேன் என்றும் சொல்ல முடியாது. நான் அழுதால் மிரியம் சமாதானப்படுத்தினாள். மிரியம் அழத் தொடங்கினால் நான் சமாதானப்படுத்தினேன். தேவபாக்கியம் அழுதால் நாங்கள் இருவரும் அழுகையை நிறுத்தி விட்டு குழந்தையின் அழுகையைத் தேற்ற முற்பட்டோம்

காலை, மாலை, நண்பகல் என்று பார்க்காமல் ஸெகியல் வந்து போய்க் கொண்டிருந்தார். அவர் அப்போஸ்தலரைப் பற்றியோ, ஏசுவைப் பற்றியோ ஒரு வார்த்தையும் பேசுவது கிடையாது. இத்தனை பேர் ஞானஸ்நானம் பெற்றும் அவர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள கடைசிவரை மறுத்துவிட்டார். "நான் புது யூதனாக மாற விரும்பவில்லை. பழைய யூதனாகவே சாக விரும்புகிறேன்' என்று தாமஸிடமே ஒரு தரம் என் காதிலும் படச் சொல்லிவிட்டார். ஆனால், எங்கள் எல்லோரையும் விடவே அதிகமாக அப்போஸ்தலரை அவர் நேசித்தார் என்பது எங்களுக்குத் தெரியும். குணம் என்னும் குன்றேறி நிற்பவர் அவர். அவர் ஏசுவின் ஆளாக இருந்தால் என்ன – வேறு எதுவாகத்தான் இருந்தால் என்ன? மனித சிருஷ்டியில் தனிப்பட்ட ஒருவர்.

வள்ளுவனும் அடிக்கடி வந்து போனான். அவன் மூலம் தான் எனக்கு என் அப்பாவின் மேல் பிராமணர்கள் கூடி சுமத்தியிருந்த கடமை தெரிய வந்தது. அவருக்கே இதில் சிறிதும் இஷ்டமில்லைதான். ஆனால், சமூகம் கட்டாயப்படுத்துகிறது என்று என்னிடம் சொன்னார்'' என்று வள்ளுவன் சொன்னபோது என் கண்கள் துளிர்த்து விட்டன. வாழை இலை நறுக்கக்கூட கத்தியை எடுக்கப் பயப்படுபவர் என் தகப்பனார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். கோழைத் தனத்தினால் சண்டைகளைத் தவிர்ப்பவர் அவர். கொள்கைகளினால் அல்ல. அவர் கையில் ஒரு வேலைக் கொடுத்து அனுப்பி இருக்கிறார்கள். பாவம் தான்!

'என் மூலமாக, என் மூலமாக' என்று அப்போஸ்தலர் சொன்னது புரிகிறது இப்போது. என் நாடியே இப்போது என் மூலமாக, என் மூலமாக என்று துடிக்கிறது! ஆனால், நான் என்ன செய்ய? மன்னித்து விடு என்கிறார் பெரியவர். பல விஷயங்களையும் மன்னிக்க முடியாமல் தானே நான் ஏசு மதத்தில் சேர்ந்து கொண்டேன் – அப்போஸ்தலரின் அழைப்பை ஏற்று ஏசு மதத்தினனாக ஆனதினால் எதையும் மன்னிக்கும் பக்குவம் எனக்கு வந்துவிட்டதா? மன்னிக்க முடியும் என்று தோன்றவில்லை. எப்படிப்பட்ட தவறு! எப்படி மன்னிக்க முடியும்? ஆனால், தாமஸ் சொல்லியிருக்கிறார். மன்னிக்காமலும் உயிர் வாழ முடியாது.

யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். யோசனைகளுக்கு எதுவும் முடிவு தோன்றவில்லை. முன்னெல்லாம் என்றால் வள்ளுவனைத் தேடி ஓடியிருப்பேன். இப்போது வள்ளுவனாலும் எனக்கு உதவ முடியாது என்று தோன்றுகிறது.

செவ்வாய்க் கிழமையும் வந்தது. அன்று வானம் சாதாரணமாக அந்தப் பருவத்தில் ஏற்படாத வகையில் இருண்டு மூட்டம் போட்டிருந்தது. என் மனம் போல இந்த நாளும் இருண்டு கிடக்கிறதே என்று நான் கிளம்பத் தயாராக இருந்தேன் - என் அப்போஸ்தலர் தாமஸைப் பார்க்க. மிரியம் 'சாப்பிட்டு விட்டுப் போ' என்றாள். 'சாப்பாடு இப்போது கொள்ளாது' என்று சொல்லிப் பிரார்த்தனை செலுத்திவிட்டுக் கிளம்பினேன். பெரிய மலையின் அடிவாரத்தை நான் அடையும்போது என் நடை தள்ளாடியது. என் உடம்பிலிருந்த பலமெல்லாம் ஒழுகி எங்கேயோ போய்விட்டது போல இருந்தது. வழியில் எதிர்பட்ட ஒருவன், "கையில் வேலுடன் ஒரு ஆசாமியைப் பார்த்தேன். அவர் உன் தகப்பனார் என்றும், அப்போஸ்தலரைக் காப்பதற்காக மலை ஏறிப் போவதாகவும் சொன்னார்" என்றான். என்ன பொய்! என்ன பொய்! அந்தச் சமயத்திலும் பொய் சொல்லத் தான் வந்தது என் அப்பாவுக்கு. ஆனால், அது முழுப் பொய்யும் அல்லவே! அப்போஸ்தலரைக் கொன்றாலும் அவர் லட்சியத்தைக் காப்பாற்றத் தானே செய்கிற செய்கை அது!

- முக்கால்வாசி மலை ஏறிய பின்தான் என் அப்பாவைப் பார்த்தேன். கையில் அந்த வேல்கம்பு இருந்தது. வேலின் முனையில் புது ரத்தம் கறையாக இருந்தது. அந்த ரத்தத்தை விட்டு என் கண்களை அகற்றி என் அப்பாவைப் பார்க்க முடியவில்லை.

"வாதூலா!" என்றார் அவர்.

"என் பெயர் தாமஸ்'' என்றேன் நான்.

மன்னிக்க முடியாது என்று நான் நினைத்த குற்றத்தைச் செய்து விட்டு வந்து நிற்பவனிடம் என்னால் பேச முடிந்தது என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

"தாமஸ்!'' என்று ஒரு அசாதாரணமான குரல் கொடுத்துவிட்டு, என் அப்பா என்று நான் நினைத்தவர் ரத்தம் தோய்ந்த அந்த வேலைக் கீழேபோட்டு விட்டு மலையில் இறங்கி ஓடி விட்டார். நான் அந்த வேலை கையில் ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டு பெரியவர் தாமஸ் வெள்ளிக்கிழமையன்று காட்டிய குகைக்குள் சென்றேன். அப்போஸ்தலர் தான் கல்லில் செதுக்கிய

சிலுவையைக் கட்டிக் கொண்டு குப்புற விழுந்து கிடந்தார். உயிர் நாடியில்லை. அவர் கையில் அன்று அவர் இழந்து விட்டுத் தேட வேண்டும் என்று சொன்ன, அந்த மரத்தில் தீட்டிய மேரித் தாய் – ஏசுக் குழந்தை படத்தைக் கட்டியணைத்துக் கொண்டிருந்தார். அதில் இரண்டு சொட்டு ரத்தம் விழுந்திருந்தது.

நான் அவர் பக்கத்தில் மண்டியிட்டு, எனக்குத் தெரிந்த, அவர் சொல்லித் தந்திருந்த பிரார்த்தனைகளையெல்லாம் சொன்னேன். பிரார்த்தனைகள் சொல்வதை நிறுத்திவிட்டு வேறெதும் செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆயுள் பூராவும் அப்படியே மண்டியிட்டு, உலக சிந்தனையேயில்லாமல் மரத்துப் போன மாதிரி இருந்து விட்டால் தேவலை என்று தோன்றியது.

ஒரு நாழிகை நேரம் கழித்து, ஸெகியல் மற்றும் மிரியம், ஸெகியலுடன் மற்றவர்கள், வள்ளுவன் எல்லோரும் வந்தார்கள். சாவுச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் நடந்தன. அப்போஸ்தலர் தாமஸின் சடலத்தை மைலாப்பூர் கடற்கரையில் அவர் விரும்பிக் கட்டி முடித்திருந்த ஆலயத்தில் அடக்கம் செய்வதாக முடிவு செய்யப்பட்டு எடுத்துப் போகப்பட்டது.

அதற்குப் பிறகு நாற்பது ஆண்டுகள் நான் உயிருடன் இருந்து விட்டேன். அந்திக் காலம் நெருங்கிவிட்டதையுணர்ந்து, இதை யெல்லாம் உலகினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எழுதி வைக்கிறேன். யாரிடம் நான் எழுதுவது கிடைத்து எப்படி உபயோகப் படப் போகிறதோ – எனக்குத் தெரியாது. இதையெல்லாம் நினைத்துப் பார்த்து எழுதியதில் துன்பமும் இருந்தது – இன்பமும் இருந்தது. ஆனந்தக் கண்ணீரும், வருத்தக் கண்ணீரும் என் கண்களை அடிக்கடி மறைத்தன. எனக்காகவே தான் இதையெல்லாம் எழுதிக் கொள்கிறேனோ என்று கூடச் சிலசமயம் எனக்குத் தோன்றுகிறது.

நான் பெரியமலையைவிட்டு இறங்குவதில்லை. கால்களில் நடமாடத் தெம்பில்லை. நான் ஒரு வேலையும் செய்வதில்லை. எல்லாவற்றையும் நினைத்துப் பார்ப்பதைத் தவிர.

நண்பகல் சாப்பிடுகிற நேரம் வந்துவிட்டது. மிரியம் வந்து, "வா, தாத்தா," என்று என் விரலைப் பிடித்து சாப்பிட அழைத்துப் போகிறாள். இது என் பெண் வயிற்றுப் பேத்தியின் பெண்,

இன்னும் ஒரு விஷயம் சொல்லிவிட்டால் இந்த என் கதை பூர்த்தியாகி விடும்.

அப்போஸ்தலர் தாமஸின் மகாத் தியாகத்திற்குப் பத்து ஆண்டு களுக்குப் பிறகு காலண்டர்படி அவர் இறந்த அதே தினத்தில் என் மகள் தேவபாக்கியம், "தாத்தா வந்திருக்கிறார்" என்று ஒரு அநாதைக் கிழவனை அழைத்து வந்தாள். அந்த அநாதைக் கிழவனுக்கு உணவளித்துப் பராமரித்து நோய் குணப்படுத்தி, தோட்டத்தில் வேலை செய்யவிட்டதெல்லாம் என் மனைவி மிரியம்தான். நாலு ஆண்டுகள் கழித்து அந்தக் கிழவன் சாகுந் தறுவாயில் ஞானஸ்நானம் செய்ய விரும்பினார். ஆலயத்துப் பிரசாரகரை அனுப்பி ஞானஸ்நானம் செய்விக்கச் சொன்னோம். அவர் இறந்துவிட்டார். அவர் இறந்தபின் தான் அவர் என் தகப்பனாரே தான் என்றும், அவர் தான் அப்போஸ்தலர் தாமஸை வேலால் குத்திக் காயப்படுத்திச் சாக அடித்தவர் என்றும் தெரிய வந்தது. மிரியம் பதறினாள். என்னிடம் பதட்டம் இல்லை. அதெல்லாம் மனதிலிருந்து போய் வெகுநாட்களாகி விட்டன.

"பாவிகளுக்கெல்லாம் என் மூலம் மன்னிப்புக் கிடைக்கும். அதற்கு நானே வழி" என்று ஏசு சொன்னதாக அப்போது தாமஸ் சொன்னார். என் தகப்பனுக்கு மன்னிப்புக் கிடைத்திருக்கும் என்றே நம்புகிறேன்.

எனக்கும் மன்னிப்புக் கிடைக்கும் என்றே நம்புகிறேன். அந்த நம்பிக்கையை எனக்கே சொல்லிக் கொள்வதுடன் கதையாகிப்போன இந்த விஷயங்களைச் சொல்வதை முடித்துக்கொள்கிறேன். நினைப் பதை முடிக்க முடியாது; சொல்வதை முடிக்க நிச்சயமாக முடியும்.

வேறு சொல்ல எனக்கு ஒன்றுமில்லை!

**முற்றும்**